"நவீனம்" வெளியீடு—2

ஜனகுமாரி

அல்லது

மாய மங்கையின் மர்மச் செயல்

★

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAINALAI ADIGAL LIBRARY
MADRAS-1
சென்னை-1

நாகை. என். பாலசுப்ரமணியம் அவர்கள்
இயற்றியது

★

"நவீனம்" பதிப்பகம்
வேப்பேரி :: சென்னை.

பதிப்புரிமை] 1936 [விலை ரு. 2.

அத்தியாயங்கள்

1. அவசரமான அழைப்பு
2. நிபந்தனை! நிபந்தனை!
3. மலர்ந்ததும் உதிர்ந்த மலர்
4. ஆழ்ந்த சிந்தனை
5. ஆச்சரியமான சந்திப்பு
6. பிழைத்தது எப்படி?
7. வியப்பைத் தந்த உரையாடல்
8. மறைந்திருந்து அறிந்த மர்மங்கள்
9. கொலை!
10. போலீஸ் ஆராய்ச்சி
11. உருவப் படம்
12. வலையில் பட்ட மான்
13. விஸ்வ மேனன்!
14. மேனனின் மருத்துவ மகிமை
15. நண்பனா? பகைவனா?
16. கனவா? நினைவா?
17. உயிர் காப்பான் தோழன்
18. அந்தரங்கத்தின் அஸ்திவாரம்
19. தெய்வ நாயகம் பிள்ளை
20. சாகஸ மொழி
21. மறைந்திருந்த காதல்
22. மர்ம மாது
23. இருவருக்கும் ஆச்சரியம்
24. பதிவிரதா சிந்தனை
25. ஜாலப் பேச்சு
26. பரஸ்பர நிலைமை
27. பழைய புலியும் புதிய கிலியும்
28. இசையின் இன்பம்
29. இருதயத்தோடு இருதயம்
30. ஜனகம் உரைத்த உண்மை
31. ஆச்சரிய மருந்து
32. மர்ம விளக்கம்
33. தீயவர் முடிவு
34. குடும்பக்ஷேமம்
35. இகசுகம்.

பதிப்புரை

நவீனத்தின் இரண்டாவது வெளியீடாக திருவாளர், நாகை. என். பாலசுப்ரமணியம் அவர்கள் எழுதிய "ஜனககுமாரி" என்னும் இச் சிறந்த துப்பறியும் நாவலைத் தமிழுலகத்திற்குத் தருகிறோம். இந்நாவல் சிந்தனைக்கு வேலை தரும் ஒரு சிறந்த நாவல். படிப்போர் உள்ளத்தைக் கவர்ந்து சென்று முடிவில் இன்பம் பயக்க வல்லது. இது இந்நாவலாசிரியரின் இரண்டாவது முயற்சியின் பயனாக வெளி வருகிறது. அன்பர்கள் இதனை ஆதரிப்பதன் மூலம் இதன் ஆசிரியரை மேலும் பல நாவல்கள் எழுத ஊக்க மளிப்பார்களென நம்புகிறோம். இந்நாவலை "நவீனம்" மூலம் வெளியிட உதவி புரிந்த திருவாளர். பாலசுப்ரமணியம் அவர்கட்கு எமது நன்றி.

பதிப்பாசிரியர்.

முகவுரை

இஃது, 'வில்லியம் லீச்வீ' என்ற நாவலாசிரியர் எழுதிய 'வெள்ளாடையில்' என்ற நவீனத்தை யொட்டி எழுதப் பெற்றது. உலகநீதியை வழுவிய வஞ்சகர் மோசக்கருத்துடன் செய்கின்ற காரியம் தற்செயலாக நலம் பயந்து விடும் நிலைமையை இது எடுத்துக் காட்டுகிறது. முடிவென்ன வென்பதில் ஒரு பெரிய உற்சாகத்தையும் உணர்ச்சியையும் தூண்டிவிடுகின்ற மேனாட்டு நவீனகத்தின் சாயலை ஓரளவு இதில் காணக்கூடும். சில சமயம் விஞ்ஞானிகளுக்கும் ரசவாதிகளுக்கும் புதிய எண்ணத்தைக் கிளர்ந்துவிடத்தக்க கதைகளை நாவலாசிரியர்கள் எழுதிவிடுகிறார்கள். அதனைத் தழுவி, சித்த நூல்களில் உண்மையான ஆராய்ச்சி யனுபவ முள்ளவர்களின் சிந்தையில் ஒரு புதிய கிளர்ச்சியைச் செய்யக்கூடிய அம்சங்கள் இதில் காணக்கிடக்கும்.

கதைகள் பலதிறப்பட்டுப் பல பொருள்களை மூலமாகக் கொண்டிருப்பது இயல்பு, நவீனம், கதை நாடகம், சரித்திரம் என்பவற்றுள் இஃது நவீனமென்ற பிரிவிலடங்கும். எனவே அதற்குரிய நடையும் போக்கும் பொருட்செறிவும் பெற்றிருக்க வேண்டும், நவீனத்தின் இயல்பிற்கிசைய இதனைப் படித்தின்புறுமாறு கேட்டுக் கொள்கிறேன். இனி காலதேச வர்த்தமானத்துக்கிசைய அறம் பொருள் இன்பம், வீடென்னும் அரும்பெரும் பொருட்கள் பொருந்துமாறு மேன்மேலும் கதைகள் எழுதி இனிய தொண்டாற்றுவதற்கு நேயர்களின் அன்பையும் ஆதரவையும் வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,

என். பாலசுப்ரமணியம்,

ஆக்கியோன்.

திருத்துறைப்பூண்டி
13—9—1936.

ஜனகுமாரி

அல்லது

மாய மங்கையின் மர்மச்செயல்

1. அவசரமான அழைப்பு

அவளுக்குச் சுமார் நாற்பது வயதுதானிருக்கும். ஆடையும் அணியும் அணிந்திருந்த வகையைப் பார்த்தால், அவள் ஒரு மகாப்பிரபுவின் குடும்பத்தில் வேலைக்காரியாயிருக்க வேண்டுமெனத் தோன்றியது. கவலை சூழ்ந்து மாசடைந்திருந்த அவளது முகத்தில் வேர்வைத்துளிகள் முத்துமுத்தாகப் பெருகி வழிந்திருந்தது. வந்தவள் வந்தனம்செய்யவோ உட்காரவோ நினைக்கவில்லை.

"தாங்கள்தானே வைத்தியர்?" என்று அவசரத்துடன் கேட்டாள் அந்த வேலைக்காரி.

நான், "ஆம். என்ன சமாச்சாரம்?" என்று கேட்டு, அவளுடைய பதிலை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

"ஹூம்; உடனே வெளியே நிற்கிற மோட்டாரில் ஏறுங்கள். ஒரு நிமிஷங்கூட தாமதம் செய்வதற்கில்லை. எனது அருமை எஜமானி நம்பத்தகாத ஆபத்தான நிலைமையில் இருக்கிறாள்! ஜல்தியாகப் புறப்படுங்கள்!" என்று அவள் என்னைத் துரிதப்படுத்திய பொழுது அவளது கண்களிலிருந்து சில நீர்த்துளிகள் புலபுலவென்று கொட்டின.

"உனது அருமை எஜமானியா? யார் அவள்? அவளுக்கு என்ன வயதிருக்கும்? என்ன சீக்கு? எத்தனை நாளாக?" என்று நான் தொழில் ஜாடையில் கேள்விகளை எழுப்பினேன்.

"வைத்தியரே, என் புத்தியே சுவாதீனத்திலில்லை. என்னை ஒன்றும் கேட்காதீர்கள்! ஹா! ஹா!! ஐயோ! என்னால் இப்பொழுது ஒன்றுமே சொல்லமுடியாது! சீக்கிரமாக வந்து காரில் ஏறுங்கள்! எல்லாவிஷயமும் அங்கேபோய் தெரிந்து கொள்ளலாம்! இதுவரையில், ஐயோ—! ஆ! கடவுளே, அவள் இருக்கிறாளா? போய்விட்டாளா?" என்று சொல்லி கண்ணீர் சிந்தினாள் வேலைக்காரி.

மேலும் கேள்விகள் எழுப்ப நான் விரும்பவில்லை. அவசரமான சந்தர்ப்பங்களில் டாக்டர்கள் நோயாளிகளைப் பார்ப்பதற்கு முன் வீண்கேள்விகளைப் கேட்டுக்கொண்டிருப்பது பெருந்தவறல்லவா? ஆதலின், நான் எனது மருந்துப்பெட்டியை வேலைக்காரன் மூலமாக மோட்டாருக்கு அனுப்பிவிட்டு அவளுடன் புறப்பட்டேன். வெளியே தயாராக நின்ற மோட்டார் வண்டியில் நாங்கள் இருவரும் ஏறினோம்; சிலநிமிஷங்களில் புரசைவாக்கம் கந்தப்ப முதலித்தெருவிலிருந்த ஒரு மாடி வீட்டில் வண்டி நின்றது. என்னுடன் வந்தவள் சீக்கிரம் வண்டியை விட்டு இறங்கினாள். நானும் இறங்கினேன். வேலைக்காரப் பெண்ணும் நானும் அவ்வீட்டு முகப்பில் செல்லவும், ஒரு வேலைக்காரன் கதவைத்திறந்துகொண்டு வெளியே வந்தான். அவன், என்னை மாளிகையினுள் அழைத்துச்சென்று ஒரு புத்தக அறையில் அமரச்செய்தான்.

"வைத்தியரே, தாங்கள் இங்கேயே சற்று நாழி இரும். நான்போய் எஜமானரை அனுப்புகிறேன்," என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றாள் வேலைக்காரி.

நான் அப்புத்தக அறையைச் சுற்றிப்பார்த்தேன். அழகிய கண்ணாடி பீரோக்கள் பலவற்றில் அரிய பெரிய நூற்கள் அழகாக அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. வைத்தியம், ரசாயனம், வானம், தாவரம், பௌதீகம் முதலிய பல சாஸ்திரநூல்கள் அப்பீரோக்களில் திகழ்ந்தன. ஒரு பெரிய மேஜையும் அதன்மேல் பல இலக்

கிய நூல்களும் கிடந்தன. இவைகளையெல்லாம் கண்ட நான் ஆச்சரியமடைந்தேன். "இவ்வீட்டில் வசிக்கும் புண்ணியவான் ஒரு பெரிய அறிவாளியாக இருக்கவேண்டும்! இல்லாவிட்டால், இத்தகைய அரிய நூல்களை இப்படிப் பாதுகாக்கவேண்டிய அவசியமில்லையே!" என்று நான் சிந்தித்துக்கொண்டிருந்தபோது திடீரென்று அறைக்கதவு திறக்கப்பட்ட சப்தம் கேட்கவே, அப்பக்கமாகத் திரும்பிப்பார்த்தேன்.

சுமார் ஐம்பத்தைந்து வயதுடைய ஒரு மனிதன் புன்னகையுடன் தோன்றினான். அடர்ந்த அவனது புருவமும், நரைத்தும் நரைக்காமலுமிருந்த அவனது தடித்த மீசையும், அந்த வயோதிகப் பருவத்திலும் அவனுக்கு ஓர் அழகைக் கொடுத்தது. பரந்த அவனுடைய நெற்றியைக்கொண்டு அவன் பரந்த நோக்கமுடையவனாயிருக்கலாமென விளம்பலாம். ஓர் இராணுவ சிப்பாயைப் போல அவன் நிமிர்ந்து நடந்துவந்தான். அருகில் வந்தபின் தனது பிரகாசமான விழிகளால் என்னைக் கூர்ந்து நோக்கினான்.

"தாங்கள்தான் டாக்டர் இராஜேஸ்வரரோ? வாருங்கள். நான் விரும்பியபடி தாங்கள் உடனே இங்கு விஜயம் செய்ததற்காக நான் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்," என்று சொல்லிக்கொண்டே மேஜையோரத்திற்கிடந்த நாற்காலியில் உட்கார்ந்தான் அவ்வயோதிகன்.

"ஆம். அவசரமான சந்தர்ப்பங்களில் டாக்டர்கள் தங்கள் கடமைகளைக் கூட இழந்துவிட்டு நோயாளிகளைக் கவனிக்க வேண்டும் அல்லவா? எங்கே நோயாளி? நான் பார்க்கட்டும்," என்று நான் கூறினேன்.

"நோயாளியா—? அதிருக்கட்டும், அதைவிட மற்றொரு முக்கியமான சமாசாரத்தை முன்னிட்டே நீர் இவ்விடம் அழைக்கப்பட்டிருக்கிறீர்," என்றான் அம்மனிதன்.

"இருக்கட்டும்; இறக்கும் தருவாயிலுள்ள ஒரு நோயாளியைக் கவனிப்பதைவிட மற்றொரு முக்கியமான சமாசாரம் எப்படியிருக்க முடியும்?" என்று நான் ஆச்சரியத்துடன் உசாவினேன்.

"நீர் சொல்வது நியாயந்தான். ஆயினும் நாம் இருவரும் ஒருவரை யொருவர் நன்கறிந்து கொண்டபின்னரே நீர் நோயாளியைப் பார்க்க முடியும்," என்று அவன் என் விழிகளைப் பார்த்துக் கொண்டே உரைத்தான்.

"நீர் சொல்வது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. இறந்து கொண்டிருக்கும் ஒரு நோயாளியை மீட்க முயல்வதைவிட மற்ற எது தான் இவ்வுலகத்தில் முக்கியமானதாக இருக்க முடியும்? பேஷ்! நீர் என்னை நன்கு தெரிந்து கொள்ள என்னிடம் ஒன்றுமில்லை. டாக்டர் A. இராஜேஸ்வரன், (எம். பி. பி. எஸ்.,) பிரத்தியோக மருத்துவ சாலை, வெள்ளாழத் தெரு, புரசைவாக்கம். இதுதான் என்னுடைய விலாசம். என்னிடமிருந்து நீர் இன்னும் என்ன தெரிந்து கொள்ள வேண்டும்? " என்றேன் நான்.

" இல்லை. உம்மை நான் இன்னும் நன்றாகத் தெரிந்து கொண்ட பிறகே மற்றக் காரியங்கள்," என்று மீண்டும் பழைய பல்லவியே பாடினான் அக்கிழவன்.

" உமது வியாதியஸ்தர் குணமடைந்திருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். இல்லாவிட்டால், நீர் இவ்வளவு தூரம் என்னைத் தாமதப்படுத்துவதற்குக் காரணமில்லை! " என்று நான் எரிச்சலுடன் உரைத்தேன்.

" அதுவும் சரிதான்! முன்னைக்கு இப்பொழுது கொஞ்சம் சௌக்கியந்தான். இருந்தாலும் நம்பிக்கையில்லாத நிலைமையில்தான் இருக்கிறாள். டாக்டர், கொஞ்ச நேரம் சம்பாஷணை செய்தால் எனது மூளை சரியாகத் திருந்திவிடும். இறக்கும் தருவாயிலுள்ள நோயாளியின் காரணமாக என் மனம் மிகவும் கலங்கி யிருக்கிறது," என்றான் அவன்.

இதுவரையில் அவன் பேசிவந்த வகையைக் கண்டு நான் வியப்படைந்தேன்.

சிறிது நேரம் மௌனம் அந்த அறையில் நிலவியது.

" டாக்டர் இராஜேஸ்வரரே, இவ்வுலகத்திலேயே அதிக வரும்படியுள்ளவர்கள் யார் தெரியுமா? வக்கீல்களும் டாக்டர்களுமே!

நான் சொல்வது தெரிகிறதா?" என்று ஒரு மாதிரியாக என்னைப் பார்த்துக் கேட்டான் அவன்.

மேற்படிக் கேள்வியின் சரியான அர்த்தம் எனக்கு விளங்கவே இல்லை. வைத்தியம் பார்ப்பதற்காக அழைக்கப்பட்ட நான், வீண் அபத்தமான சம்பாஷணையில் ஈடுபட்டிருப்பதை நினைக்க எனக்குச் சொல்லமுடியாத விசன முண்டாயிற்று. அதனால் அவனது கேள்விக்கு எவ்விதமான பதிலும் கூறாது மௌனம் சாதித்தேன். அவனா விடுகிற பேர்வழி?

"என்ன ஸார்! ஒன்றும் சொல்லாமலிருக்கிறீர்? இன்னும் சொல்லப்போனால், டாக்டர்களும் வக்கீல்களும் தகுந்த லஞ்சம் கொடுத்தால், எந்த விதமான காரியத்தையும் முடிக்கத் தயாராயிருக்கிறார்கள். எனக்குத்தெரிந்த வரையில் ஈஸ்வரனாயிருந்தாலும் லஞ்சங் கொடுத்தால் செய்யாத காரியத்தையும் செய்வான். ஏன்? நான் சொல்வது சரிதானே?" என்று இறுமாப்போடு உசாவினான் கிழவன்.

அவனுடைய விசாலமான உண்மைப் பிரசங்கத்தில் நான் மதிமயங்கித் திகைப்படைந்தேன். அவன் சொல்லியது உண்மை! யாராலும் அதை மறுக்க முடியாதுதான். அச்சமயம், அங்கு மாட்டியிருந்த காலண்டருக்கு மேல் அமைந்திருந்த கடிகாரம் 'டாங்டாங்' என்று ஒன்பதடித்தது. 1930-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 16-ந் தேதி புதன்கிழமை என்று பெரிய கொட்டை எழுத்துகளில் காணப்படும் அந்தக் காலண்டரைப் பார்த்துக் கொண்டே சற்று நாழி மௌனமாக இருந்தேன் நான்.

"என்ன ஸார்! எல்லாவற்றிற்கும் மௌனம் சாதிக்கிறீர்?" என்று மீண்டும் கிண்டினான் கிழவன்.

"தாங்கள் சொல்வது முற்றும் உண்மை. லஞ்சம் வாங்காத உத்தியோகஸ்தரே இல்லை. இருந்தாலும் லஞ்சம் வாங்காத ஒரு சில உத்தியோகஸ்தரும் இல்லாமலில்லை," என்று அழுத்தந் திருத்தமாக நான் உரைத்தேன்.

"அத்தகைய உத்தமர்களில் தாங்களும் ஒருவராக இருக்கக் கூடுமோ?" என்று தைரியமாகக் கேட்டான் கிழவன். அக்கேள்வியில் நான் பேராச்சரியப்பட்டேன்.

"இம் மனிதன் யார்? ஏன் இவ்வித அசம்பாவிதமான கேள்வி களை எல்லாம் கேட்கவேண்டும்?" என்று நான் வியப்பும் வெறுப்பும் கொண்டேன். பேச வாயெடுப்பதற்குள் அவன், "அத்யாவசிய மான செலவுகள் போக, அகாவசியமாகக் குவிந்துகிடக்கும் செம் பொற் களஞ்சியங்களையுடைய மகாப்பிரபுகளில் தாங்களும் ஒரு வரா?" என்று உசாவினன்.

"இல்லை, நான் சாதாரணமான செல்வமுடையவன்தான்!" என்று நான் அவனுடைய குறும்புத்தனமான கேள்விக்கு விடை பகர்ந்தேன்.

"பார்த்தீரா? 'லஞ்சம் வாங்காத எந்த உத்தியோகஸ்தனும், ஏழை களின் இரத்தத்தை உறிஞ்சி எடுக்காத எந்தப் பணக்காரனும், ஏராளமாகச் செல்வம் சேர்க்கமுடியாது' என்பது உண்மை. இவ் வுலகம் உள்ளவரையில் அது முடியாத காரியம். இருக்கட்டும், நீர் தான் கொஞ்சம் பெருந்தொகையை லஞ்சமாக வாங்கிக்கொண்டு ஒரு காரியத்தைச் செய்யமாட்டீரா?" என்று திடீரென்று ஒரு வினை வைக் கிளப்பினன் கிழவன்.

எனது திகைப்பு மேலும் அதிகரித்தது. 'துணிகரமாகப் பல அசம்பாவிதமான கேள்விகளைக் கேட்கும் இவன் யார்?' இதே கேள்விதான் என் மண்டையை உடைத்தது.

"பெரியவரே, லஞ்சம் வாங்கும் வழக்கம் என்னிட மில்லை," என்று நான் உண்மையை உரைத்தேன்.

எனது விடையில் அவன் திருப்தியடைந்தவனாகக் காணப்பட வில்லை. மீண்டும் சிறிது நேரம் மௌனம் நிலவிற்று.

"நல்லது. இராஜேஸ்வரரே, உமக்கு நூறாயிர ரூபாய் லஞ்சமாகக் கிடைத்தால், ஓர் அற்ப காரியத்தைச் செய்யத் துணியமாட்டீரோ?" என்றான் அம்மனிதன்.

"ஹூம் நூறாயிரமா? நீர் சொல்வது எனக்கு அர்த்தமாக வில்லையே!" என்றேன் நான்.

"ஆம். நூறாயிர ரூபா! பத்தாயிரம் பவுன்!! இந்தக் காலத்தில் இவ்வளவு பெருந்தொகையை நீர் எப்பொழுது பார்க்கப்போகிறீர்?" என்றான் அவன்.

"நீர் குறிப்பிடுவது இலட்ச ரூபாயைத்தான்! எந்த வேலையைப் பூர்த்தி செய்வதற்காக இலட்ச ரூபாய் கூலி?"

"வேலை யொன்றும் பிரமாதமானதல்ல. ஒரேநாள் வேலை! மிகச் சுலபம்! மிகச் சுலபம்!!"

'பணமென்றால் பிணமும் வாயைத்திறக்கும்' என்பார்கள். அது முற்றும் உண்மை. கடவுளின் இருப்பே பொய்யென்று நிரூபிக்கப்பட்டாலும், இவ்வுண்மை பொய்யென நிரூபிக்கப்பட முடியாது. பத்தாயிரம் பவுன் என்றால் சாமான்யமா? என்ன? பவுன் ஒன்றுக்குப் பத்துரூபாய் வைத்தாற்கூட ரூபா இலட்சமாயிற்று. இந்தக் காலத்தில் இலட்ச ரூபா வென்பது லேசான தொகையா? இலட்ச ரூபாவைக்கொண்டு இவ்வுலகத்தில் என்ன செய்ய முடியாது? ஒரு முறை விஜயம் செய்த டாக்டருக்கு இலட்சரூபா கூலியென்றால் அவனுடைய அதிர்ஷ்டத்தை என்னவென்று சொல்வது?

"மிகச் சுலபமென்றால் எனக்கு விளங்கவில்லை. எந்தக் காரியத்தைப் பூர்த்தி செய்தால் இலட்ச ரூபா வெகுமதி கிடைக்கும்?" என்றேன் நான்.

"என்னுடைய அபிப்பிராயம் உம்மைத் திடுக்கிடச் செய்யுமோ என்று நான் அஞ்சுகிறேன். ஆனால் உமக்கு எவ்விதமான ஆபத்தும் விளையாதென்பது சர்வ நிச்சயம். ஆனால், நான் உம்மிடம் அறிவிக்கப் போகும் விஷயம் இன்றைக்குள் நிறைவேற வேண்டும்!" என்றான் கிழவன்.

"அக்காரியம் என்ன என்றுதான் கேட்கிறேன்?" என்றேன் நான்.

"அவசரப் படாதீர்! நாம் இருவரும் இங்குப் பேசிக்கொள்ளும் சமாசாரம் எவ்விதத்திலும் வெளியே தெரியக்கூடாது. தெரிகிறதா?" என்றான் அவன்.

"அந்த விஷயத்தில் உங்களுக்குச் சந்தேகமே வேண்டா?" என்றேன் நான்.

என்னெதிரே அமர்ந்து என்னை பையபைய வசிகரித்து வந்த அந்த 'பலே' பேர்வழியிடமிருந்து எப்படியாவது தப்பிவிட வேண்டு

மென்று நான் நினைத்தேன். என்றாலும், என்னால் அவனை விட்டு நீங்க முடியவில்லை. ஆழ்ந்த கருத்துடன் அமர்ந்திருந்த கிழவன் என்னை நோக்கினான்.

"டாக்டரே, தாங்கள் ஒரு பிரமச்சாரி! தங்களுக்கு இன்னும் விவாகமாகவில்லை. அல்லவா?" என்றான் கிழவன்.

"ஆம். விவாகம் செய்து கொள்ளும் நோக்கம்கூட எனக்கு இல்லைதான்!"

"என்ன? விவாகம் செய்துகொள்ளும் நோக்க மில்லையா—? இலட்ச ரூபா லஞ்சத்துக்குக்கூடவா?" என்றான் கிழவன்.

அதுகேட்ட எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை.

"என்ன யோசனை? இலட்ச ரூபா பரிசாகப் பெறுவதோடல்லாமல் அழகிற்சிறந்த யௌவன ரூபவதியொருத்தியை மணந்துகொள்ளவும் கஷ்டமாகவா இருக்கிறது?" என்று மீண்டும் கேட்டான் கிழவன்.

"ஆச்சரியமான கேள்வி! ஆனால், நான் இதுவரையில் எந்தப் பெண்மணியையும் காதலிக்கவுமில்லை; எந்த ஸ்திரீயினுடைய காதலுக்கும் இலக்காகவுமில்லை!" என்றேன் நான்.

"இலட்ச ரூபாய் ஒரு சிறிய தொகை யென்று எண்ண வேண்டா. ஒரு ஐ. ஸி. எஸ். மாப்பிள்ளைக்குக்கூட இவ்வளவு பெரிய தொகையை எந்தப் பார்ப்பனனும் ஸ்திரீதனமாகக் கொடுத்ததில்லை! நீரோ சாதாரண பிராமணரல்லாத வாலிபர். படிப்பும் சாதாரணம்; உத்தியோகமும் பயனற்றது. பார்ப்பனரல்லாத சமூகத்தில் இவ்வளவு பெருந்தொகையைச் சீதனமாகப் பெற ஒரு நாளும் முடியாது. நீர் மணம் செய்துகொள்ள வேண்டுவது இன்றியமையாத கடமை. பொழுது சாய்வதற்குள் உம் மனைவியை நீர் இழந்துவிட்டாலும்கூட மணஞ் செய்யப்படவேண்டுவது அத்யாவசியம்!" என்று அர்த்த புஷ்டியுள்ள வாக்கியத்தைக் கூறினான் கிழவன்.

"என்ன சொன்னீர்? பொழுது சாய்வதற்குள் எனது மனைவியை இழப்பேனா?" என்று திக்பிரமையுடன் வினவினேன்.

"முழுவதும் கேட்டால்தானே விளங்கும். கொஞ்சம் கவனியும், இம்மாளிகையின் மேன் மாடியில் என்னுடைய புதல்வி வியாதி

யடைந்திருக்கிறாள். அவள் இனிப் பிழைப்பாளென்று நம்புவதற்கில்லை. கடந்த ஒருவாரமாக இரண்டு பெரிய டாக்டர்கள் அவளுக்குச் சிகிச்சை செய்து வந்தார்கள். அவர்களால் முடிந்த வரையில் கஷ்டப்பட்டார்கள். கஷ்டப்பட்டு என்ன செய்வது? விதியை வெல்ல முடியுமா? 'இனிமேல் அவள் தப்புவது கஷ்டம்' என்று கையை உதறி விட்டார்கள். எனது குமாரி ஓர் அயோக்ய இளைஞனைப் பரிபூரணமாகக் காதலித்து வந்திருப்பதாகத் தெரிகிறது. அவள் உணர்வற்றுக் கிடந்தபோது அவ்வாலிபனுடைய பேரைச்சொல்லி அடிக்கடி கூவினாள். அந்த அயோக்ய வாலிபனை அவள் திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்று நான் முன்னமேயே தடை செய்ததே அவளது நோயின் உச்சத்துக்குக் காரணமென்பதை நான் இப்பொழுது உணருகிறேன். இந்தச் சமயம் எனது புத்திரியின் இஷ்டப்படி அதே பையனுக்கு விவாகம் செய்துகொடுக்க நினைத்தும், அவனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. காதல் காரணமாக எனது குமாரி உயிர் விடுவதை நினைக்க எனது மனம் அனலிலிட்ட மெழுகு போல உருகுகிறது. டாக்டர் இராஜேஸ்வரரே, நான் அவளுடைய காதலின் போக்கைச் சிறிதும் தடை செய்யாது, அவள் விருப்பத்திற்கு இணங்கி இருப்பேனாயின், இப்பொழுது அவள் உயிர்விடப்போவதில்லை. அவள் பிழைக்கமாட்டாளென்பது உண்மை. எனவே, நான் அவள் சம்பந்தமாகச்செய்த பாபத்தின் பிராயச் சித்தமாக, இன்றே அவள் தீக்கிரையான போதிலும், விவாகம் செய்யப்படவேண்டுவது அத்யாவசிய மென்று கருதுகிறேன். ஆதலின், நீர் அவளுடைய காதலனின் ஸ்தானத்திலிருந்து அவளை விவாகம் செய்துகொள்ளவேண்டும். அவளுடைய கடைசி காலத்துச் சந்தோஷம் உம்மாலேயே உண்டாக்கப்படவேண்டும். இதை நீர் மறுக்கவே கூடாது," என்று நீண்ட வசனத்தைப்பொழிந்தான் அப்பேர்வழி.

அவனுடைய முடிவைக்கேட்ட எனக்கு எப்படியிருக்கு மென்று நினைக்கிறீர்கள்?

"என்ன? என்ன? இறந்து கொண்டிருக்கும் ஒருத்தியைமணந்து கொள்ளவா?" என்று பிரக்ஞையில்லாமல் வினவினேன் நான்.

"ஆம். எனது குமாரி உணர்விழந்திருப்பதால் உம்மை இன்னு ரென்று அறிந்துகொள்ள முடியாது. தனது காதலனாகவே உம்மை நினைத்து ஆனந்தமடைவாள். அவளது கடைசி காலத்து ஆன்ம சாந்தியைச்செய்ய நீர் மறுக்காதீர்," என்றான் அம்மனிதன்.

பிரமையினால் அறிவு மயங்கித்திகைத்தேன். நூதனமான ஓர் உலகத்தில் பயங்கரமான கனவுகண்டவனைப்போல விலவிலப்படைந் தேன். பேசவோ சிந்திக்கவோ என்னால் முடியவில்லை.

"மற்றொரு விஷயமும் நீர் கவனிக்கவேண்டும். நான் மேற் குறிப்பிட்ட விஷயம் நூதனமானதாகவும், ஆச்சரியமானதாகவும், இவ்வுலகத்திலேயே எங்கும் நிகழாத பேரதிசயமாகவும் இருக்க லாம். ஆனால், எனது மனோவியாகூலம் ஒழியவும், எனது குமாரியின் ஆன்மா சாந்தியடையவும் நான் வேறு என்ன செய்யக்கூடும்? இலட்ச ரூபா நஷ்டத்தைப் பார்த்தால் முடியுமா? எனது மூர்க்கத் தனமான புத்தியினால் எனது செல்வக்குமாரி ஜனகம் - எனது ஆருயிர் புதல்வி ஜனகுமாரி, மண்ணுக்கு இரையாகிக்கொண்டிருக்கி றாள்! இராஜேஸ்வரரே, கடவுள் சாட்சியாகச் சொல்கிறேன்: எனது செல்வ மகளின்பொருட்டு எனது சொத்து முழுவதையுமே தியாகம் செய்யச் சித்தமாயிருக்கிறேன். எப்படியாவது அவள் திருப்தியுற வேண்டும்!" என்று கிழவன் கூறிக்கொண்டுவந்தபொழுது அவ னுடைய விழிகளிலிருந்து சரசரவென்று நீர் வழிந்தது.

"பெரியவரே, நீர் சொல்கிறபடி உமது புத்திரியை நான் கல் யாணம் செய்துகொள்ள முடியாது. இறந்துகொண்டிருக்கும் ஒருத் தியை மணப்பதால் யாருக்குப்பயன்?" என்று பரிதாபத்தோடு உரைத்தேன் நான்.

"ஹா! நம்பிக்கைத்துரோகம்! நம்பிக்கைத் துரோகம்!! வாலிப வைத்தியரே, உம்மை நம்பியே நான் இதுவரையில் திருப்தியடைந் திருந்தேன். என்னையும், எனது செல்வியின் ஆத்மாவையும் சாந்தி செய்வதற்கு நீர் கொஞ்சம் கருணைகாட்டியே ஆகவேண்டும்!" என்று கெஞ்சினான்.

"நிச்சயமாக நம்பும். என்னால் முடியாது," என்று நான் தீரமாகப் பதிலளித்தேன்.

“ முடியாதா ? முடியாதா ? நான் குறிப்பிட்ட தொகை உமக்குப் போதுமானதாயில்லை போலும்! அப்படியானால் இரண்டு இலட்ச ரூபா தருகிறேன், காரியத்தைப் பூர்த்தி செய்யும்! ரூபா ஒன்றல்ல இரண்டல்ல, இரண்டு இலட்சம்! இப்படி என்னைப் பாரும் வைத்தியரே, உம்மண்டை மயிர் உதிர உதிர உழைத்தாலும் இரண்டு இலட்ச ரூபாவைக் கண்ணால் கூட பார்க்கவே முடியாது! நல்ல சந்தர்ப்பம்! வேறொரு வாலிபன் அடையும்படி உம் அதிர்ஷ்டத்தை இழந்துவிட வேண்டா!” என்று சொல்லி என் மனத்தைக் கரைத்தான் கிழவன். கிழவனின் வாக்கியப் போக்கு மென்மேலும் எனது ஆச்சரியத்தை அதிகரிக்கச் செய்தது.

“ நீர் செய்வதாகக் கருதியிருக்கும் கல்யாணம் சட்டப்படி நடக்குமா ?” என்றேன் நான்.

“ மற்றொரு முறை அப்படிக் கேட்காதீர். சட்ட ரீதியான சுயமரியாதைக் கல்யாணங்கூட வல்ல, சட்ட ரீதியான வைதீகக் கல்யாணம் செய்துகொடுக்கவே தீர்மானித்திருக்கிறேன். சீக்கிரம் இசையும்,” என்றான் கிழவன்.

“ அப்படியே வைத்துக்கொண்டாலும், மற்றொரு இளைஞனைக் காதலித்த உமது புதல்வியை நான் மணப்பது பாபமல்லவா ?” என்றேன் நான்.

“கோடிக் கணக்கான மக்களைத் தங்களது குறைபாடான வைத்திய முறைகளால் டாக்டர்கள் கொன்று கொண்டு வருகிறார்களே, அது பாபமல்லவா? வைத்தியம் என்பதற்கு என்ன பெருமை? ஆயிரம் பேரைக் கொன்று ஐம்பதுபேரைக் காப்பாற்றுவதுதானே! உம்மைப் போன்ற இருபதாம் நூற்றாண்டின் ஆரோகண நாகரிக உலகத்திற் பிறந்த வாலிபர்கள் ‘பாபம்’ என்று வாயால் சொல்வதே கர்நாடகமாகும். எனது குமாரி இறக்கும் தருவாயிலும் திருமணம் செய்யப்படவேண்டுமென்பதற்குத் தக்க காரணங்களிருக்கின்றன. எனது குமாரியை மணந்துகொள்வதால் திரண்ட நிதியையும் அடைவதோடல்லாமல் குன்றத்தனை புண்ணியத்தையும் செய்தவராவீர்,” என்றான் அந்தப் பேர்வழி.

"அந்தக் காரணங்கள் தான் என்ன? சொல்லக்கூடாதா?" என்றேன் நான்.

"இதென்ன, உமது விசித்திரமான கேள்வி? நீர் முதலிலேயே எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறீர். இந்தச் சம்பவத்தைப் போல இதுவரையில் இந்தத் தமிழ் நாட்டிலல்ல, இவ்வுலகத்திலேயே நிகழ்ந்திராதென்பது நிச்சயம். இரண்டு இலட்ச ரூபாயையும் பெற்றுக் கொண்டு எவ்விதமான கேள்வியையும் கேட்காமல் திருமணம்செய்து கொள்ள உமக்குத் தலையைவலிக்கிறதா என்ன?" என்று உரைத்தான் கிழவன்.

"இங்கிலையில் எப்படிச் சட்டரீதியான திருமணம் நடக்க முடியும்?" என்றேன் நான்.

"டாக்டரே, வீணாக நீர் உமது மண்டையை உடைத்துக் கொள்ளவேண்டா. எல்லாப்பொறுப்பும் என்னைச் சார்ந்ததாகும். நீர் சட்டரீதியான கல்யாணத்தைச் செய்துகொண்ட மறுக்ஷணத்தில் ரூபா இரண்டு இலட்சத்தையும் பெறுவீர்! இது நிச்சயமான விஷயம்," என்று சொல்லிக்கொண்டே மேஜை டிராயரைத் திறந்து பெரியதொரு கரன்ஸிநோட்டுக்கட்டை எடுத்து மேஜையின் மீதுவீசியெறிந்தான் கிழவன். பச்சை சிகப்பு கறுப்பு முதலான நிறங்களில் பத்து, ஐம்பது, நூறு முதலிய நோட்டுகளாகச் சேர்ந்து கிடந்த அந்தப் பணத்தோகையைப் பார்த்தேன். நிஜமாகவே பார்த்தேன். கண்களைக் கசக்கிக்கொண்டுகூடப் பார்த்தேன். அவைகள் எல்லாம் நிஜ ரூபாய்கள்தான்! ஐந்தாவது ஜியார்ஜ் சக்கரவர்த்தியின் தலை அந்த நோட்டுகளின் மீது அச்சிடப்பட்டிருந்தது. ஏகதேசத்தில் அவ்வளவு ரூபாய் நோட்டுகளை நான் இதற்குமுன் பார்த்ததில்லையென்பதை வெட்கத்துடன் ஒப்புக்கொள்கிறேன்.

"இப்படிப்பாரும், வைத்தியரே, 'நீர் ஜனகத்தை மணந்து கொள்ளும் பக்ஷத்தில் இவ்வளவு ரூபாய் நோட்டுகளும் உமது கையில் வைத்து அழுத்தப்படும்' என்பது உண்மை," என்றான் கிழவன்.

பணத்திற்கு 'ஆவ் ஆவ்' என்று அலைந்து நிற்கும் பிசாசுக் கூட்டமாகிய மனிதவர்க்கத்தில் அடியேனும் ஒருவனல்லவா? அவ்

வளவு ரூபாய்களையும் கண்ட எனது கண்களை நான் நம்பவே இல்லை. மாடமாளிகை கூடகோபுரங்களும், அழகில் நிகரில்லாத அரம்பையர் திலகங்களும், இதே ரூபாய்களால் விலைக்கு வாங்கப்படுவார்கள். உயிரை விலைக்கு வாங்கவும், அக்கிரமத்தை உலகில் நிலைநாட்டவும், தேசத்தைக் கூறை குச்சுகளாக மாற்றவும், மனிதர்களை எறும்பும் துரும்புமாக இளைக்கச்செய்யவும் இதே பணத்தினால் முடியும்! பிரபுகளின் இஷ்டத்திற்குச் சிறிதும் தலைவணங்காத ஒரு வீர புருஷனைச் சுட்டுப் பொசுக்கவும் இதே பணத்தினால் முடியும்! ஜனங்களால் புறக்கணிக்கப்படும் ஆலயங்களையும், கடவுள் தேவர் முதலியோரையும், வைகுந்தம் கைலாசங்களையும், அழியாமல் காத்து நிலைநாட்டி வீரகர்ஜனை செய்யவும் இதே பணத்தினால் முடியும்! இந்தப் பொருளில்லாவிட்டால் என்ன இல்லை? 'இவ்வுலகமே இல்லை' என்கிறார் திருவள்ளுவர். இவ்வுலகமே இல்லாவிட்டால் இவ்வுலகங் காரணமாகத் தோன்றும் கடவுளும், வேதங்களும், சாஸ்திரங்களும், குருமார்களும், அடிமைகளும், ஆசாரியர்களும், சிஷ்ய கோடிகளும் எங்ஙனம் இருக்க முடியும்? எனவே, பொருளில்லாதவன் எதைக் காண்கிறான்? சுத்த சூன்ய வுலகம் அல்லது நாஸ்திக வுலகத்தையே இமை கொட்டாது நோக்குகின்றான். ஐயோ! இந்த லோகத்தில் ஏழைமக்கட்கு ஒன்றுமே இல்லாதபோது கடவுள் மாத்திரம் எப்படித் தோன்றுவார்? 'நலிந்தோர்க்கில்லை நாளும் கிழமையும் மெலிந்தோர்க் கில்லை மெய்யும் கடவுளும்.' உண்டானபோது கோடானு கோடி! சுத்த சூன்யமல்லாத ஆஸ்திகவுலகத்தை ஏழைகளைக் காணச் செய்ய வல்லமையுடையது ஒன்றுண்டானால், அது பணத்தைத் தவிர வேறெதுவுமில்லை.

அந்தக் கிழவன் தன்னம்பிக்கையுடனும் உறுதியுடனும் என்னை ஊன்றிக் கவனித்தான். அவனுடைய பார்வை என்னைப் பயமுறுத்தியது. "இந்த மாயா ஜாலக்காரன் யார்? பணத்தை வீசியெறிந்து என்னை இப்படி மயக்குகிறானே! இவன் மனிதன்தானா அல்லது மனிதவுருவில் வந்த பிசாசோ?" என்று நான் நினைத்தேன்.

எனது உணர்வற்ற பார்வை கரன்ஸி நோட்டுகளின் மீது விழுந்து கிடப்பதை அவன் நன்கு கண்டுகொண்டான். அவன் கண்களும் முகமும் பிரகாசமடைந்தன.

"வாலிபரே, இருபதாம் நூற்றுண்டின் வாலிபரே, நியாய வழி யாக அல்லது தருமம் என்று கருதப்படும் வழியாக உமக்கு இரண்டு இலட்ச ரூபாய்கள் ஒரு சில மணிநேரத்துக்குள் கிடைக்கக்கூடுமென்று கனவு காண வேண்டா! நியாயமாகச் சம்பாதித்து ஒருவனும் மகாப் பிரபுவாக முடியாதென்பதை நான் இரகசியமாகக் கூறுகிறேன். அநியாய மாகவும் அக்கிரமமாகவுந்தான் பொருள் சேர்க்க முடியும்! சீக்கிரம் கல்யாணத்துக்கு உடன்படும்! உடன்படும்!!" என்று வற்புறுத்தினுன் கிழவன்.

கிழவன் சொல்லியதில் உண்மை இல்லாமலில்லை. இவ்வளவு பெரிய தொகையை நான் எப்படி எந்தக் காலத்தில் திரட்டமுடியும்? ஹா! பணம் மயக்காத மனிதரில்லை. பணத்தில் மயங்காத மனித ரில்லை. என்ன ஆச்சரியம்! படித்துப் பட்டம் பெற்ற வைத்தி யனுகிய நான் பணத்திற்கு ஆசைப்பட்டு முகம் தெரியாத ஒரு பெண்மணியை விவாகம் செய்து கொள்ள இசைந்தேன்.

கிழவன் திருப்தியாகவும் சந்தோஷமாகவும் மூச்சுவிடத் தொடங்கினுன். அவனது பரந்த முகத்தில் தேஜஸ் வீசிற்று. வெளியே போட்டிருந்த கரன்ஸி நோட்டுக் கட்டுகளை யெடுத்து டிராயருக்குள் பத்திரப் படுத்தினுன்.

"சரி, எழுந்திரும், உமது கல்யாணத்திற்காக முன் கூட்டியே எல்லா விஷயங்களும் சித்தம் செய்யப்பட்டிருக்கின்றன," என்று சொல்லிக்கொண்டே இருக்கையை விட்டெழுந்தான்.

'எனது இருதயம் படபடவென்று அடித்துக் கொண்டது' என் செவிகளில் செவ்வையாக விழுந்தது. அவ்வயோதிகனின் ஆக்ஞைப் படியே நானும் இருக்கையை விட்டெழுந்து அவனைப் பின் தொடர்ந்து சென்றேன்.

2. நிபந்தனை! நிபந்தனை!

"எல்லாம் சித்தம் செய்யப்பட்டனவா?" என்று அங்கு நின்று கொண்டிருந்த வேலைக்காரன் ஒருவனை வயோதிகன் வினவினான்.

"ஆம். எல்லாம் சித்தம் செய்யப்பட்டன. மோட்டார்வண்டி வாசலில் நிற்கிறது!" என்று வேலைக்காரன் தெரிவித்தான்.

மணி பத்தடித்தது. நடுப்பகலுக்கு இன்னும் இரண்டுமணி நேரமே இருந்தது.

"வைத்தியரே, கடைசியாக உமக்கொரு வார்த்தை சொல்லுகிறேன்: இனிமேல் நிகழப்போகும் சம்பவங்களைக் கண்டு ஆச்சரியமோ, திகிலோ, சந்தேகமோ, பயமோ அடைவதில் பயனில்லை. அவைகள் எல்லாம் விவாகத்திற்குப் பிறகு உமக்கு விளக்கி வைக்கப்படும்," என்று இரகஸியமாக உரைத்தான் கிழவன். மடியிலிருந்து இரண்டு கையுறைகளை (Gloves) என்னிடம் கொடுத்து, "இந்த ரப்பர் கையுறைகள் உமது விரல்களுக்குக் கொஞ்சம் பெரியவையாய் இருக்குமென்று கருதுகிறேன். ஆனாலும், இவைநீர் அணிந்து கொள்ள வேண்டுவது முக்கியம். நீர் ஜனககுமாரியைத் திருக்கழுக்குன்றம் சுப்ரமண்யசுவாமி கோவிலில் கல்யாணம் செய்துகோள்வீர்!" என்று கிழவன் அந்தரங்கமாகக் கூறினான்.

அவனுடைய கட்டளைப்படியே அந்தக் கையுறைகளை அணிந்து கொண்டேன். இருவரும் வெளியே வந்து மோட்டாரில் ஏறியுட்கார்ந்தோம். மோட்டார் வாயுவேகமனோவேகமாகப் பறந்து சென்றது.

கோவிலினருகே வண்டி நின்றது. நாங்கள் இருவரும் வண்டியை விட்டுக் கீழிறங்கி மலைமீது சென்றோம். என்ன ஆச்சரியம்? அங்கே திருமணத்துக்கு வேண்டிய எல்லாச் சாமக்கிரியைகளும் சித்தம் செய்யப்பட்டிருந்தன. மணவறையில் வாழைமரம், தோரணம் முதல் மேளவாத்தியம் வரையில் அனைத்தும் சேகரிக்கப்பட்டிருந்தனவென்றால் இன்னும் என்ன சொல்லவேண்டும்? புரோகிதர்களும் தயாராக அமர்ந்திருந்தார்கள்.

"வாருங்கோ வாருங்கோ! அமரணும் அமரணும்! என்ன விவாகத்தை இப்படி ரொம்பச் சுருக்கிட்டீரே? அகத்திலேயே விமரிசையாகச் செய்யலாமே!" என்று சொல்லிப் பார்ப்பனர்கள் பல்லைக் காட்டினார்கள்.

"பொதுவாக, கல்யாணத்தை உத்தேசித்து ஏராளமான பொருளைச் செலவிடுவது மூடத்தனமும், வீண் விரையமும், பயனில்லாத காரியமுமாகுமென்பதை உத்தேசித்தே விவாகத்தை இந்த முறையில் செய்ய முடிவு செய்தேன்!" என்றான் வயோதிகன்.

அதற்குப் பிராமணர்கள் சிரித்துக்கொண்டு மௌனம் சாதித்து வெட்கத்தைப் போக்கிக் கொண்டார்கள். அந்தக் கோவிலைச் சுற்றியுள்ள பொதுஜனங்களிற் பலர் அங்கு வந்து கூடினர்.

சிறிது நேரத்தில் மற்றொரு மோட்டார் வண்டியும் வந்து சேர்ந்தது. அந்த வண்டியிலிருந்து இரண்டு பெண்மக்களும் ஓர் ஆண்மகனும் இறங்கி வந்தனர். பெண்மணிகள் இருவரில் ஒருத்தியைத் தான் நான் பார்க்க முடிந்தது. அவள்தான் என்னை வைத்தியத்திற்கென்று பொய் சொல்லி அழைத்து வந்த வேலைக்காரி. மற்றவளை நான் சரியாகப் பார்க்க முடியவில்லை. பனாரிஸ் பட்டுத்துணியினால் அவள் தலைமுதல் பாதம்வரையில் மூடப்பட்டிருந்தாள். செந்தாமரை மலர் போன்ற திவ்ய பாதத்தை யன்றி அவளது எந்த அவயவத்தையும் என்னால் பார்க்க முடியவில்லை. பிரகாசமான அந்தப் பாதத்தின் அழகொளியைக் கொண்டு அவள் மிகவும்அழகி என்று நிச்சயமாக யூகிக்கமுடிந்தது. நடமாடுவதற்கு வலிமையுள்ள அவள் இறந்துவிடுவாளென்பதற்குக் கொஞ்சமாவது ஆதாரம் இல்லை. அப்பெண்மணி கொஞ்சம் பலவீனமடைந்திருந்ததைத் தவிர வேறு எவ்வித மான ரோகத்தாலும் பிடிக்கப்பட்டவளாகத் தோன்றவில்லை.

பின்னும் சற்று நேரத்தில் மேளவாத்தியம் கோஷிக்கப்பட்டது. என்னை மணவரையில் அமரச்செய்து சடங்குகள் செய்தார்கள்.

"ஸ்வாமிகளே, கல்யாண மந்தரங்களைக் கொஞ்சம் சுருக்கமாக உபயோகப்படுத்திச் சீக்கிரம் விவாகத்தை முடிக்கவேண்டும்," என்று கிழவன் புரோகிதர்களுக்கு எச்சரிக்கை செய்தான்.

சிறிது நேரத்தில் ஓமப்புகை மண்டபம் முழுவதும் சூழ்ந்து கொண்டது. சமஸ்கிருத ஸ்லோகங்கள் பொழியப்பட்டன.

ஜனங்கள் ஆரவாரத்துடன் என்னைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். கிழவன் ஜனக குமாரியின் அருகிற் சென்று, "ஜனகம், எனது செல்வி, இன்று உனது திருமணம் நடைபெறும் வைபவ நாள். நீ காதலித்த வாலிபனுக்கே விவாகம் செய்யப்படுகிறாய். நன்றாகக் கவனி," என்று அவளுடைய காதுகளில் உரைத்தான். அதற்கும் முட்டாக்கினுள்ளிருந்த அழகின் திலகம் ஜனக குமாரி எவ்வித பதிலும் சொல்லவில்லை.

பின்னும் சற்று நேரத்தில், ஜனக குமாரியை எனது வலப்புறத்தில் அமரச்செய்தார்கள். வைதீக முறையில் எனது விவாகம் ஆரம்பிக்கப்பட்டது. அப்பொழுதும் தலையிலிருந்து கால்வரையில் அவள் மூடப்பட்டுத்தானிருந்தாள். இறுதியாக நான் அவளுக்கு மாங்கல்ய தாரணம் செய்தேன். மேளவாத்தியம் கோஷிக்கப்பட்டது. அக்ஷதைகளும் மலர்களும், புஷ்பஏடுகளும், ரோஜா நீரும், பன்னீரும் வருஷிக்கப்பட்டன.

மணமகனும் மணமகளுமாகிய நாங்களிருவரும் மாலையும் மோதிரமும் மாற்றிக் கொண்டோம். பார்ப்பனர்கள் திரண்ட வரும்படியுடன் தத்தம் வீடு புகுந்தார்கள். மற்றவர்கள் சர்க்கரை பழம் தாம்பூலத்துடன் தத்தம் இல்லம் சென்றார்கள். நானும் ஜனக குமாரியும் இப்பொழுது ஒரு மோட்டாரில் ஒன்றாக அமர்த்தப்பட்டோம். வேலைக்காரியும் கிழவனும் எங்கள் காரிலேயே ஏறிக்கொண்டனர். கார் முன்போலவே வேகத்துடன் சென்னையை நோக்கிச் சென்றது.

சுமார் மாலை நான்கு மணியிருக்கலாம். கந்தப்ப முதலித் தெரு மாளிகையின் முன்னால் கார் நின்றது. நானும் வயோதிகனும் முதன் முதல் காரை விட்டுக் கீழிறங்கி வீட்டுக்குள் சென்றோம். என்னைப் புத்தக அறையில் அமரச் செய்து விட்டுக் கிழவன் ஜனக குமாரியை அழைத்துக் கொண்டு மேன் மாடிக்குச் சென்றான். சில நிமிஷங்களில் வயோதிகன் புத்தக அறைக்குத் திரும்பினான்.

"வாலிபரே, இன்று சர்வ முகூர்த்த நாள்! வேண்டிய கல்யாணங்கள் அனுஷ நக்ஷத்திரத்திலும் திரிதியைத் திதியிலும் நிகழ்ந்திருக்கின்றன. ஆனால் உமக்குத் திதியும் லக்னமும் மாத்திரம் மாறி விட்டதே யன்றி நக்ஷத்திரம் அனுஷந்தான்! சரி, மேற்கொண்டு-

இப்பொழுது பேசுவதற்கு முன், கொஞ்சம் காப்பி சாப்பிடும்,'' என்று கிழவன் சொல்லிக்கொண்டிருந்த பொழுது, வேலைக்காரி ஒரு வெள்ளித் தம்ளரில் காப்பிக்கொண்டு வந்து மேஜைமீது வைத்து விட்டுச் சென்றாள்.

"வேண்டா! வேண்டா!! திருக்கழுக்குன்றத்தில் சாப்பாடு அதிகமாகப் போய்விட்டது!'' என்றேன் நான்.

"இல்லை! வெறுந் தண்ணீர்தானே! பரவாயில்லை, சாப்பிடும்!'' என்று கிழவன் வற்புறுத்தவும் நான் அந்தப் பானத்தை உட்கொண்டேன்.

"கூடிய வரையில் எல்லாக்காரியங்களும் இனிது நிறைவேறின. ஆனால், நான் சொன்னபடி உம் கைக்கு இரண்டு இலட்ச ரூபாவும் கிடைக்கவேண்டுமானால் மற்றொரு நிபந்தனையையும் நீர் நிறைவேற்றித் தீரவேண்டும்,'' என்று அலட்சியமாகக் கூறினான் கிழவன்.

"எ-ன்-ன? மற்றொரு நிபந்தனையா?'' என்று வியப்பினால் ஆவேசப்பட்டு உசாவினேன் நான்.

"பதறுதீர்! மற்றொரு நிபந்தனையாவது: உமது மனைவி பொழுது சாய்வதற்குள் இறந்து தீரவேண்டும்,'' என்று கூறினான் கிழவன்.

"ஹ! ஹா! பெரியவரே, நீர் சொல்வது எனக்குச் சரியாக விளங்கவில்லை! இயல்பாகவே அவள் இறந்துபோகாவிட்டாலும் சாகச்செய்யவேண்டுமா?'' என்று பிரமையுடன் கேட்டேன்.

"உமது கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லிக்கொண்டிருக்க எனக்கிஷ்டமில்லை. இரண்டு இலட்சரூபாவும் உமது கைக்குக் கிடைப்பதற்குள் ஜனக குமாரி இறந்துவிடவேண்டும்! அவ்வளவுதான் சங்கதி,'' என்று தைரியமாக உரைத்தான் கிழவன்.

"அப்படியானால் அவளைக் கொல்வதற்காக எனக்கு இரண்டு இலட்சம் லஞ்சம் கொடுக்கிறீரா?''

"அதெல்லாம் எனக்குத் தெரியாது ஸ்வாமி, சூரியன் அஸ்தமனமடைவதற்குள் ஜனகம் சாகவேண்டும்! எவ்விதத்திலும் செத்துவிடுவாள்!''

" எவ்விதத்திலும் செத்துவிடுவாளா ? ஹா ! பழிகாரனே, உன் வார்த்தை எனக்குச் சரியாகப்புரியவில்லை !"

" வைத்தியரே, நான் சொல்வதைத் தப்பர்த்தப் படுத்தலாகாது. நீர் உமது நிலைமையைச் சரியாக உணர்ந்துகொள்ளவில்லை. ஒருவரைக் கொல்வது மன்னிக்கத்தகாத குற்றம். எனவே, அதற்காக நான் லஞ்சம் கொடுக்கிறேன் என்பது புத்திக்கு ஒவ்வாத விஷயம்," என்றான் கிழவன்.

நான் அவனுக்குப் பதில் சொல்ல உணர்வு பெற்றிருக்கவில்லை.

"இளைஞரே, நீர் காலத்தை இழந்து விடவேண்டா. எனது பயங்கரமான செய்கைக்காக நான் அஞ்சவில்லை. எனது செய்கையை ஒருவரும் கண்டு பிடிக்க முடியாது. அப்படி முடிந்தாலும் நிரூபிக்கச் சரியான சாக்ஷியங்கள் கிடைக்கா. ஆகவே, நீர் என்னைச் சட்டபூர்வமாக ஒன்றும் செய்ய இயலாது," என்றான் அவன்.

"உமது குமாரியின் மோசடியான கல்யாணத்துக்கும் அவளது அசம்பாவிதமான மரணத்துக்கும் காரணம் நீரே!" என்றேன் நான்.

"ஒய், இராஜேஸ்வரரே, அநாவசியமான வார்த்தைகளை உபயோகிக்க வேண்டா. எனது செயல்கள் வேறானவை, அவைகள் எனக்குச் சொந்தம்."

"அதைப் போலவே என் மன சாக்ஷி எனக்குச் சொந்தம். நீர் எனக்குத் தருவதாகவாக்குறுதி யளித்த இரண்டு இலட்ச ரூபாவுக்கு இந்தப் பெரிய கொலைக்குற்றத்தை நான் சுமக்கவேண்டுமென்று ஒரு போதும் எதிர்பார்க்கவில்லை."

அவனது கண்கள் சிவந்து இரத்தமாயின.

"ஆனல், நீர் ஒப்புக்கொண்ட காரியத்தை மறுக்கிறீரா?"

"பெரியவரே, கொலை புரிவதாக நான் ஒருபோதும் ஒப்புக்கொள்ளவில்லை. மணம் செய்து கொள்ளும்படிக் கூறினீர்; செய்து கொண்டேன். கொலை! ஹா! ஆனல், இனிமேல் என் கடமை என்ன தெரியுமா? ஜனக குமாரியின் உயிரைக் காக்க எனது உயிரைத் துச்சமாகக் கருத வேண்டியதேயாகும்."

"அவளுக்கு உதவி செய்ய நீர் முன்வருவீரானால், ஆச்சரியமும், திகிலும், அச்சமுமடைவீர்! அதைத் தவிர நீர் அடையக்கூடிய பயன் வேறொன்றுமில்லை."

"இல்லை. நிச்சயமாக ஜனககுமாரியை என்னால் காப்பாற்ற முடியும்."

"அப்படியானால் என்னை எதிர்க்க உத்தேசமா?"

"நான் ஒரு பட்டம் பெற்ற இரண வைத்தியன். உமது குமாரியின் சிகிச்சைக்காக அழைக்கப்பட்டிருக்கிறேன். ஆகவே, ஜனககுமாரியின் படுக்கை அறையில் உம்மைப் பிரவேசியாது தடுப்பதற்குப் போலீஸார் உதவியை என்னால் பெறமுடியும்."

"அதுதான் முடியாத காரியம்; மனோராஜ்யம்!"

"முடியும்! அதை நான் செய்து முடிப்பேன்!"

"மீண்டும் சொல்கிறேன்: நிதானமாக எதையும் சிந்தித்துப் பாரும்!"

"சிந்திப்பதென்ன? ஏதோ ஓர் இரகசிய காரணத்தை முன்னிட்டு சூரியாஸ்தமனத்துக்குள் ஜனக குமாரி இறந்துவிட வேண்டுமென்று நினைக்கிறீர். உமது சொந்தக் கைகளினாலேயே உமது குமாரியைக் கொல்லத் துணிந்திருக்கிறீர். ஆனால், டாக்டர்கள் பரிசை செய்தால் என்ன செய்வதென்று பயப்படுகிறீர் அல்லவா?"

"முற்று முண்மை. டாக்டர் ஸர்ட்டிபிகேட்டுக்காகவே (Doctor Certificate) இரண்டு இலட்ச ரூபா லஞ்சம் கொடுக்கத் துணிந்தேன்."

"மிருகம்! நரபக்ஷணி! தன் குமாரியைத் தானே கொலை புரியும் வழக்கம் மிருக ஜாதியில் கூட இல்லையே!"

"இருக்கலாம், ஆனால், பணத்திற்குப் பேயாய் அலைந்து முன் பின் பாராத ஒரு மங்கையை மணந்த கொடுஞ் செய்கையை விட இது பாபமான செய்கையல்ல."

"உமது மாயா ஜால இந்திர ஜாலங்களால் மதி மயங்கிப் பாப கர்மஞ் செய்ய உடன்பட்டேனென்பது வாஸ்தவம். ஆனால், அம்

மாய வலையிலிருந்து இப்பொழுது மீண்டு விட்டேன். இப்பொழுது சத்தியத்திற்காகத் தியாகம் செய்வதே எனது லக்ஷியம்.''

"இராஜேஸ்வரரே, நீர் எனது மருமகன். எனக்குச் சத்துருவாக இருக்க வேண்டா!''

"உமது மருமகன் தான், உமது குமாரியைக் காக்க என்னைத் தவிர சுதந்தரமுடையவர் வேறு யார்?''

"அதிலென்ன சந்தேகம்? இருந்தாலும் உமது மனைவியைக் காக்க நினைப்பதில் பிரயோஜனமில்லை.''

"ஏன்?''

"நீர் ஜனகத்தைக் கண்டதுண்டா? ஜனகத்தை நீர் காப்பாற்ற வேண்டுமென்கிற பந்தவ்வியம் உமக்கு எப்படி ஏற்படமுடியும்? நீர் அவளுடைய உண்மைக் காதலனா?''

"காதலனல்லாவிட்டாலும், பேராபத்திலிருக்கும் ஜீவனைக் காக்க வேண்டுவது மனிதனின் கடமை. அதை நான் செய்தே தீரு வேன்.''

"விடும், விடும் அவ்வார்த்தையை. அது உம்மால் முடியாத காரியம்.''

"எப்படி முடியாத காரியம்?''

"அவளுக்கு இன்னும் ஒரு மணி நேரந்தான் ஆயுள் இருக் கிறது.''

"உமது நினைப்பு அப்படியிருக்கலாம். ஒரு முறை அவளை நான் பார்த்து விட்டால் போதுமானது. அவளைப் பிழைக்கச் செய்ய என்னால் முடியுமென்பது நிச்சயம். அவளுடைய மரணத் துடன் என்னையும் பிணைக்கும் அந்தரங்கந்தான் எனக்கு விளங்க வில்லை.''

"ஒரு சமயம் அவளைப் பிழைக்கச் செய்ய உம்மால் கூடும். ஆயினும், அவள் அஸ்தமனத்துக்குள் இறந்து போக வேண்டுவது அத்தியாவசியம்''

"அவளுடைய உயிருக்கும் உமக்கும் குறுக்கே நான் நின் றால் உம்மால் எப்படி முடியும்?''

"அப்படியானால் இரண்டு இலட்ச ரூபாவையும் இழப்பீர்!"

"ஒரு தம்படி, ஒரு பைசாக் கூட எனக்கு வேண்டுவதில்லை. ஜனகத்தின் உயிரே எனக்குத் தேவை!"

"நீர் பலவந்தப் படுத்துகிறவரையில்—"

"ஓய்! நீர் சொல்வது எனக்கு விளங்கவில்லை. புரியும் படியாகச் சொல்லித் தொலையும்"

"ஒரு நாளைக்குத்தானே புரியும். அந்நாள் இன்றாக விருப்பினும் இருக்கலாம். நாளையாக விருந்தாலு மிருக்கலாம்! நான் மறுபடியும் எச்சரிக்கை செய்கிறேன். நீர் என்னுடன் ஒத்துப் போவதே நன்மை."

"யாருக்கு நன்மை—உமக்கல்லவா?"

"வாலிபரே, துடிக்காதீர். உமக்கும் அதில் நன்மையிருக்கிறது. எனது சதியாலோசனை ஒன்றில் நீர் சம்பந்தப்பட்டிருக்கிறீர். ஜனகத்தைக் கல்யாணம் செய்து கொண்டதற்காக ரூபா இரண்டு இலட்சம் கொடுப்பதற்கு எனக்கிஷ்டமில்லை."

"போதும் நிறுத்தும். நீர் என்னுடன் கலந்த எல்லா விஷயத்தையும் போலீஸுக்குத் தெரிவித்தால் ஒரே நிமிஷத்தில் கைது செய்யப்படுவீர்."

"டாக்டரே, பனங்காட்டு நரியா சலசலப்புக்கு அஞ்சப்போகிறது?" என்றான் அந்த அகோர வீரபத்ரன்.

இன்னும் அந்த மாளிகையில் தங்கி அவனுடன் தர்க்கமிட்டுக் கொண்டிருக்க நான் விரும்பவில்லை. அந்தப் பேர்வழியைச் சந்தித்த போதே அவன்மீது எனக்குச் சந்தேகம்தோன்றியது. என்னசெய்யலாம்! புத்தி சூன்யத்தால் அவனிடம் அகப்பட்டுக்கொண்டேன். தன் புதல்வியைத் தானே கொல்லும் மனிதனை யாராவது கண்டிருக்கிறீர்களா? ஜனக குமாரிக்கு மரண சர்ட்டிபிகேட் வேண்டுமென்று கேட்கிறான். ஜனகம் நோயாளி அன்று; திடசரீரத்தோடுகூடிய யுவதி. லாகிரி வஸ்துவைக்கொண்டு அவளுடைய அறிவை மயக்கியிருக்கவேண்டும். பிணியில்லாத மங்கையைப் பிணியுடையவள் என்று பொய்யுரை தந்து எனக்குக் கல்யாணம் செய்துகொடுப்பானேன்? பிறகு அஸ்த

மனத்துக்குள் அவள் சிவலோகப் பிராப்தியடையவேண்டுமென்று வற்புறுத்தலாகச் சொல்வானேன்? அவன் பேசுவதும் நடத்துவதும் எனக்குத் திகிலேயும் பேராச்சரியத்தையும் எழுப்பி மூளையைக் குழப்பிற்று. பைத்தியம் பிடித்தவனைப்போல் நிலைகலங்கியிருந்தேன்.

"இராஜேஸ்வரரே, விரோதபாவத்திலிருந்து மீளுவதற்கு இன்னும் நமக்கு வழியிருக்கிறது. நாம் இருவரும் ஒத்துப்போகாத வரையில் நம்மிருவருக்குமே அபாயம் விளைவது நிச்சயம். எனது புதல்வியை மணந்துகொண்டதால், எனது எஸ்டேட்டிற்கு நீர் வார்ஸுதாரரானீர். ஆதலின், எல்லாவற்றையும் தீர யோசியும்," என்ருன் கிழவன்.

"எஸ்டேட்டிற்கு வார்ஸுதாரனு? ஆச்சரியம்!" என்று வியப்படைந்தேன்.

அக்கிழவன் ஒரு பெரிய ஜமீன்தாரர் என்பதற்கு அவனது ஆடம்பர வாழ்க்கையும் மாளிகையும் தட்டு முட்டுச் சாமான்களுமே சாக்ஷியாக விருந்தன. எனது நிலைமையை நினைக்க நினைக்க ஆச்சரியம் அதிகப்பட்டுக்கொண்டே சென்றது. ஒரு சாமான்ய வைத்தியன் ஒரு பெரிய ஜமீன்தாரருக்குச் சிறந்த மருமகனுகவும், பெரிய எஸ்டேட்டிற்கு வார்ஸுதாரனுகவும் ஆவதற்கு இதுவரையில் எங்கேயாவது அழைக்கப்பட்டிருக்கிருனு?

"பெரியவரே, நீர் எனது மாமனுராக வந்துவிட்ட வரையிலும், நான் உமது வார்ஸுதாரனுக வந்து விட்ட வரையிலும் மிகவும் சந்தோஷமேயாகும். உம்முடைய பெயரென்ன?" என்றேன் நான்.

"எனது பெயர் இலவம்பேட்டை ஜமீன்தார் இந்திரலிங்கம் பிள்ளை!"

"சந்தோஷம்! பிரபுவே, மற்ருேர் ஆசையை மாத்திரம் தயவு செய்து பூர்த்தி செய்ய வேண்டுகிறேன். உமது அருமைக் குமாரி ஜனகத்தைப் பார்க்க வேண்டுமென்று என் மனம் துடிக்கிறது," என்று நான் கெஞ்சினேன்.

"ஒரு யௌவன வாலிபன் தன் மனைவியைப் பார்க்க விரும்புவது சகஜம். இருந்தாலும் உம் விஷயத்தில் நீர் அவளைப் பார்க்க முடியாத அபவாதத்தைப்பெற்றிருக்கிறீர்," என்ருன் இந்திரலிங்கம்.

"உமது எச்சரிக்கை அவசியமற்றது," என்று நான் கோபத்துடன் உரைத்தேன்.

ஜனக குமாரியை—எனது முகம் தெரியாத மனைவியை, ஒரு முறையாவது தரிசிக்க வேண்டுமென்ற ஆசை எல்லை கடந்து வளர்ந்தது. இந்திரலிங்கத்தின் மாளிகை அந்தரங்கமும் சூதும் வஞ்சகமும் நிறைந்ததாக இருந்தது. அதை அக்கக்காகப் பரிசோதிக்க நான் தீவிர ஆர்வங்கொண்டேன்.

இந்திரலிங்கம் ஆழ்ந்த சிந்தனையுடன் அமர்ந்திருந்தான். நானும் மௌனமாக இருந்தேன்.

"இராஜேஸ்வரரே, நீர் ஜனகத்தைப் பார்க்க வேண்டுமென்று அடிதுடிக்கிறீர். ஆதலின், நீர் ஒரு நிபந்தனைக்கு உட்பட்டால் அவளைப் பார்க்கக்கூடும்," என்றான் கிழவன்.

"நிபந்தனை நிபந்தனையென்று பேசுவதை விட்டு விடும். உமது நிபந்தனை எனக்குத் தெரியும்! ஜனகத்தைக்கொன்று எனது கைப்பட ஒரு மரண அறிக்கைப் பத்திரமும் கொடுத்துவிட வேண்டும்! இதுதானே உமது நிபந்தனை?" என்றேன் நான்.

"இரண்டு இலட்சத்தோடு மற்றொரு அரை இலட்சத்தையும் சேர்த்தால் கூட நீர் அந்த நிபந்தனைப்படி நடக்கமாட்டீரா?" என்றான் அவன்.

"இந்திரலிங்கம், நிதானமாகப் பேசு. கழுதைக்கு வயதாகிறதைப்போல வயதாகி என்ன? புத்திவேண்டாவா? அயோக்கியனே, ஐம்பது இலட்சம் கொடுத்தாலும் அது முடியாத காரியம்! கொலை செய்யவும் மரண அறிக்கை கொடுக்கவும் ஆள் என்னையா பார்த்தாய்? கயவனே," என்று நான் சீறினேன்.

இந்திரலிங்கத்தின் முகம் சாம்பராக வெளுத்தது. அவனுடைய தோற்றம் எனக்குப் பேரச்சத்தை விளைவித்தது. ஜனகத்தைத் தரிசிக்கவேண்டுமென்ற ஆசை அதிகரித்தது.

"பிரபுவே, மாடிக்குச் சென்று ஜனக குமாரியைப் பார்த்துவிட்டுவருகிறேன், உத்தரவு கொடும்," என்று சொல்லி நாற்காலியை விட்டெழுந்தேன்.

"எனது நிபந்தனையை உதாசீனம் செய்து விட்டீரா?" என்றான் இந்திரலிங்கம்.

"ஆம். கொலைபுரிய என்னால் முடியாது," என்று வீரத்தோடு உரைத்தேன் நான்.

"அப்படியாயின், ஜனக குமாரியின் அறையில் நீர் நுழையக் கூடாது?" என்று கோபத்தோடு உரைத்தபடியே இருக்கையை விட்டெழுந்தான் கிழவன்.

இச்சமயம் அறைக் கதவைத் திறந்து கொண்டு வேலைக்கார னொருவன் உள்ளே பிரவேசித்தான்.

"எஜமானே, சுபேதார் வந்திருக்கிறார்," என்று பணிவோடு சொன்னான் வேலைக்காரன்.

"அப்படியா, உள்ளே வரச் சொல்," என்றான் இந்திரலிங்கம்.

3. மலர்ந்ததும் உதிர்ந்த மலர்

வேலைக்காரன் அறையை விட்டு வெளியே சென்ற சிறிது நேரத்தில் ஓர் உயர்ந்த பருமனுள்ள மனிதன் தோன்றினான். திடகாத்திர சரீரத்தையும் நல்ல அழகையுமுடையவனாக அவன் தோன்றினான். கிட்டத்தட்ட அவனுக்கு நாற்பத்தைந்து வயதிருக்கலாம். ஆம். அவன் எனது திருக்கழுக்குன்றம் கல்யாண வைபவத்தின்போது வந்திருந்தான். அவனும் இந்திரலிங்கமும் அத்யந்த சிநேகிதர்களாயிருக்க வேண்டும்.

"என்ன இந்திரலிங்கம் பிள்ளை, எல்லாக்காரியங்களும் சுபகரமாக முடிந்தனவல்லவா?" என்று வந்தவன் கேட்டுக்கொண்டே ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தான்.

"எல்லாம் சுபகரந்தான்," என்று அவனுக்கு இந்திரலிங்கம் பதிலளித்து விட்டு என்னை நோக்கி, "இராஜேஸ்வரரே, இவர்தான் சுபேதார் மகேந்திரம் பிள்ளை! எனது அத்யந்த நண்பர்," என்று சொல்லி அப்புதுமனிதனை எனக்கு அறிமுகம் செய்து வைத்தான். இதைப் போலவே, மகேந்திரனுக்கு என்னைச் சுட்டிக்காட்டி, "மகேந்திரா,இவர்தான் எனது மருமகப்பிள்ளை டாக்டர் ஏ. இராஜேஸ்வரன்-கைதேர்ந்த மருத்துவர்," என்று சொல்லி என்னை அவனுக்கு அறிமுகப்படுத்தினான்.

"இதற்கு முன்பே இவரைப்பற்றி நான் கேள்விப் பட்டிருக்கிறேன்," என்றான் மகேந்திரன்.

"இராஜேஸ்வரரே, சுபேதார் மகேந்திரம் பிள்ளை நமது கல்யாணத்திற்காகத் திருக்கழுக்குன்றத்துக்கு விஜயம் செய்தார். அங்குத்தாங்கள் இவரைப் பார்த்திருக்கக் கூடுமே!" என்றான் இந்திரலிங்கம்.

நான் விடையிறுப்பதற்குள் மகேந்திரன் இடைமறித்து, "ஆனால், பாவம் சந்தோஷமில்லாத திருமணம்! பாவம்! ஜனக குமாரிக்கு இவ்வளவு அற்பமான ஆயுளை விதிப்பதற்கு அந்தப்பிரமன்

எப்படி மனந்துணிந்தாளோ தெரியவில்லை! இந்திரலிங்கம்பிள்ளை, இப்பொழுது ஜனகம் எப்படியிருக்கிறாள்?'' என்று கேட்டான்.

"அந்த வயிற்றெரிச்சலை ஏன் கிண்டுகிறாய்? அவள் அதிகமாய் உயிரோடிருந்தாலும், இன்று நடுயாமத்துக்குமேல் ஒரு நிமிடங்கூட இருக்க முடியாது,'' என்று கூசாமலுரைத்தான் இந்திரலிங்கம். பதிலைச் சொல்லிக்கொண்டே அவன் தன் இருக்கையை விட்டெழுந்து உட்புறத்தை நோக்கிச்சென்றான். அவன் பைய அறையை விட்டு நழுவுவதைக் கண்ட நான் சந்தேகங்கொண்டு அவனைப் பின்தொடர உத்தேசித்து எழுந்தேன். அது கண்ட மகேந்திரன் என்னோடு பேச்சுக் கொடுத்தான்.

"இராஜேஸ்வரரே, எங்கே எழுந்திருக்கிறீர்? உட்காரும். மரணத்தோடு போராடிக்கொண்டிருக்கும் ஒரு மங்கையை மணக்க நீர் எப்படித் துணிந்தீர்?'' என்று கேட்டான் மகேந்திரன்.

"எப்படித் துணிந்தேன்? அதற்குக் காரணம் இந்திரலிங்கம் பிள்ளைதான்,'' என்று சொல்லிக்கொண்டே நான் நாற்காலியிலமர்ந்தேன்.

"இதோ பாரும் வைத்தியரே, இந்திரலிங்கத்தைப் போல் நல்ல மனிதன் கிடைக்கமாட்டான். நல்லவருக்கு நல்லவன்; கெட்டவருக்குக் கெட்டவன்,'' என்று இந்திரலிங்கத்தைப்பற்றி அடுக்கினான் மகேந்திரன்.

இந்திரலிங்கத்தினுடைய பயங்கரமான குணாதிசயங்களில் ஒன்றாவது மகேந்திரனுக்குத் தெரியுமென்று நான் நினைக்கவில்லை. தெரிந்திருந்தால், அவனைப்பற்றி இவ்வளவு தூரம் புகழ்ந்திருக்க மாட்டானல்லவா? ஆனால், வினையஸ்தனான மகேந்திரன் இந்திரலிங்கத்தைப்பற்றி ஒன்றும் அறியாதிருக்க முடியாதென்றும், நினைத்தேன். தற்செயலாக மகேந்திரனுடைய இடது கைவிரல்களைப்பார்த்த போது நான் பெரிய திகைப்படைந்தேன். ஏன்? அவனது வலது கைவிரல்களைப் பார்க்கிலும் இடது கைவிரல்கள் அதிக உறுதியாக இருந்ததோடு நகங்களையடுத்து சுமார் ஓரங்குல நீளம் வரையில் கறுத்துக் கருங்கற்போலக் காய்த்திருந்தன. அவ்விரல்களிலொன்றில் வைரமோதிரமொன்று தகதகவென்று பிரகாசித்துக்கொண்டிருந்தது.

மௌனமாக இருந்த நான் சுபேதாரை நோக்கி, "தோழரே, இன்றைய சம்பவத்தைப் போல விசித்திரமான சம்பவம் என் வாழ் நாளில் இதுவரையில் சம்பவித்ததே இல்லை. இதோ பாரும். நான் விவாகம் செய்து கொள்ளாமல் பிரமச்சாரியாகவே இருக்க நினைத் திருந்தேன். ஏனெனில், விவாகம் சில சமயம் வாழ்க்கையை நாசம் செய்துவிடுகிறது. அத்தகைய கொள்கையிலிருந்த நான், இன்று, இந்த உலகமே ஆச்சரியப்படும்படியான அல்லது நம்பத்த காத அதிசயமான திருமணத்தைச் செய்துகொண்டேன்," என்று கூறி வருந்தினேன்.

"செய்து கொள்ளக் கூடாது. ஏதோ தவறுதலாகச் செய்து கொண்டீர்! இனி வருந்தி பயன் என்ன?" என்றான் மகேந்திரன்.

நான் அதற்கு ஒன்றும் பதிலளிக்காது மௌனமாக இருந் தேன். மீண்டும் அவன், "இராஜேஸ்வரரே, ஒரே நாளில் மணம் செய்து கொள்வதும், அன்றைக்கே தன் புது மனைவிக்கு மரணக்கிரி யைச் செய்தலும் இயற்கை நிகழ்ச்சிக்கு விரோதமானதென்று நினைக்கவேண்டா. தைரியமாயிரும்." என்று தேறுதல் கூறினான் மகேந்திரன்.

இப்படி அவன் கூறியது அவன்பால் எனக்குச் சந்தேகத்தை எழுப்பிவிட்டது. இந்திரலிங்கத்தினுடைய பரஸ்பர தோழன் என் பதை அவன் வாக்கியமே காட்டிக் கொடுத்து விட்டது. எனவே, இந்திரலிங்கத்தினுடைய சதியாலோசனைகளில் மகேந்திரனும் சம் பந்தப் பட்டவன் என்பதை மெய்ப்பிப்பதற்கு வேறு சாட்சி வேண் டுமா?

"இயற்கையாக இருக்கலாம்! ஆனால்,நான் சம்பந்தப்பட்ட வரை யில் இயல்புக்கு மாறானதென்றுதான் சொல்வேன்," என்று எடுத் துச் சொன்னேன் நான்.

எனது வார்த்தையை அலக்ஷியமாகக் காதில் வாங்கிக்கொண்ட சுபேதார், மகேந்திரன் தனது சிகரெட் பெட்டியைத்திறந்து, தான் ஒன்று பற்றவைத்துக் கொண்டு, என்னிடம் ஒன்றைக் கொடுத்துக் குடிக்கும்படி வற்புறுத்தினான். எவ்வளவு மறுத்தும், அவன் வற் புறுத்தியதால் அச் சிகரெட்டை வாங்கிப் புகைத்தேன்.

"இங்கே கொஞ்சம் கவனியும், இராஜேஸ்வரரே, நீர் ஜனக குமாரியைப் பார்த்திருக்கிறீரா? அவளைப் பாராத கண்கள் பாபம் செய்தவைகளேயாகும். பரிசுத்தமான மல்லிகை மலரைப் போல அவள் தூய்மையாகக் காணப்படுகிறாள். கற்பின் அழகு அவளுடைய விழிகளில் குடிகொள்கிறது. அவளுடைய அழகை எடுத்துக் காட்ட அணிகளோ, ஆபரணங்களோ, அலங்காரமோ தேவையில்லை. அவள் அலங்காரம் செய்து கொள்ளாவிட்டாலும், இவ்வுலகத்தை அவள் அலங்கரிக்கிறாள். எண்ணத்திற்கு அதீதமான அழகை யுடையவளும், அழகின் மூலஸ்தானமும் ஜனககுமாரியே யாவாள்! ஹா! வைத்தியரே, ஜனகத்தின் சௌந்தரியத்தை என்னால் வர்ணிக்க முடியவில்லை.

"ஹா! 'வனப்புமிக்க வநிதை இன்று இறந்து விடுவாளே' என்று நினைக்கும்பொழுது யார் மனந்தான் உருகாது?" என்று ஜனககுமாரியைப்பற்றி வர்ணித்து என்மனத்தை இளகச் செய்தான் மகேந்திரன்.

அவனது வர்ணனையில் நான் மனமருண்டு ஜனககுமாரியின் நிலைமையைக் குறித்து விசனமடைந்தேன்.

"மகேந்திரபிரபுவே, அப்பேர்பட்ட பெண்மணி இவ்வளவு இளம்பிராயத்தில் இப்படிச்சாவதற்குக் காரணமென்ன?" என்று நான் பரிவோடு வினவினேன்.

"யாருக்கு ஸார் தெரிகிறது? நோயைப் பிரித்தறிவதற்கு வியன்னா டாக்டர்களே இன்னும் திண்டாடிக்கொண்டிருக்கும்பொழுது யார் என்ன செய்ய முடியும்? ஜனககுமாரியைச் சுமார் ஐந்தாறு வைத்தியர்கள் வந்து பார்த்துவிட்டுப் போய்விட்டார்கள். இந்திரலிங்கம் ஜனககுமாரிக்காக எத்தனை இலட்சம் வேண்டுமானாலும் வாரியிறைக்கத் தயாராயிருந்தார். ஆனால், விதி யாரை விடுகிறது?" என்றான் மகேந்திரன்.

"ஜனககுமாரியை இழந்துவிடுவது இந்திரலிங்கத்தின் துரதிர்ஷ்டத்தை முன்னறிவிக்கும் மணியோசையே யாகும்," என்று மனமிளகிக் கூறினேன் நான்.

"நன்று கூறினீர். ஆறு வருஷத்துக்கு முன் இந்திரலிங்கம்பிள்ளை மனைவி இறந்து போனாள். அதிலிருந்து ஜனககுமாரி இந்திரலிங்கத்தின் குடும்பத்தைத் திறமையாக நிர்வகித்து வந்தாள்!" என்றான் மகேந்திரன். மகேந்திரனுக்குப் பதிலளிக்க வாயெடுத்தேன். அதற்குள் என்ன நிகழ்ந்தது தெரியுமா? 'ஆ' வென்று பரிதாபமாக அலறிய ஒரு ஸ்திரியின் குரல் அவ்வீட்டின் மேன்மாடியிலிருந்து எழுந்தது. அச்சப்தம் ஜீவகாருண்யமுள்ள மனிதனின் காதுகளில் விழக்கூடிய தல்ல.

" அதென்ன—? அதென்ன? அலறுகின்ற சப்தம் கேட்கிறதே! யார் அது? " என்று உணர்விழந்து பரிதாபத்துடன் சுபேதாரை வினவினேன். மகேந்திரனும் திகிலடைந்தவன்போல் பாவனை செய்தான். மீண்டும், 'ஐயோ!' என்று ஒரு பெண்மணியின் குரலோசை கேட்டது. ஆனால், முன்னிலும் அவ்வொலி கொஞ்சம் பலவீனப்பட்டிருந்தது. 'நடு நிசிக்குள் ஜனககுமாரி இறந்து விடுவாள்," என்று ஜனகத்தின் பிதாவே சொன்னான். அதே பேர்வழி மேன்மாடிக்குப் போயிருக்கிறான். மேன்மாடியில்தான் ஜனகம் படுத்திருக்கிறாள். "ஏ! கோழை வாலிபனே, ஓடு சீக்கிரம்! கொலை! கொலை!" என்று என் மனம் என்னை உத்வேகப்படுத்தியது. இரத்தக் குழாய்களில் வேகமான இரத்த ஓட்டம் ஓடத்தலைப்பட்டது. எனது எதிரே அமர்ந்திருந்த சுபேதாரை நான் பொருட்படுத்தவில்லை. திடீரென்று எழுந்து மேன்மாடியை நோக்கி விரைந்தோடினேன். சுபேதார் என்னைத் தொடருகிறாரா இல்லையாவென்பதை நான் கவனிக்கவில்லை. நான் மேன்மாடியை அடைந்தபொழுது, கதவு சாத்திப் பூட்டப்பெற்ற ஓர் அறை முகத்தில் இந்திரலிங்கம் அகோர வீரபத்ரன்போல் குரூர முகத்தோற்றத்துடன் பயங்கரமாக நின்றுகொண்டிருந்தான். கண்களில் நெருப்புச்சுவாலை வீச, என்னை உறுத்துப் பார்த்துப் பல்லைக் கடித்தான்.

" ஏ கொடியனே, கதவைத் திற! இதே நிமிஷம் என் மனைவியைப் பார்க்கவேண்டும்," என்று பெருமூச்சு விட்டுக்கொண்டு கோபத்தோடு கர்ஜித்தேன் நான்.

" அது தான் முடியாது!" என்று இந்திரலிங்கம் குரூரமான குரலில் உறுமினான்.

"சற்று முன் அவள் கூச்சலிட்டதை நான் கேட்டேன். ஒரு ரண வைத்தியன் என்ற முறையிலும், அவளுடைய சொந்தக் கணவனென்ற முறையிலும் அவளைப் பார்ப்பதற்கு நான் அதிகாரம் பெற்றிருக்கிறேன். இந்த க்ஷணமே அவளைப் பார்க்கவேண்டும். உடனே கதவைத் திற," என்று வீரத்தோடு நான் கூறினேன்.

"பார்க்க முடியாதென்றால், அநாவசியமாகப் பிதற்றக்கூடாது! போ வெளியே!"

"அவளைப் பார்க்கவேண்டுவது என் கடமை!"

"அதென்னடா கடமை? இரண்டு இலட்ச ரூபாய்க்குத் தன்னைத் தானே விற்றுக்கொண்ட அற்பனுக்குக் கடமை என்ன வந்தது? ஜல்தி வெளியே போ," என்று இறுமாப்புடன் கூறினான் கிழவன்.

விபத்துக்குள்ளாகிய ஜனககுமாரியை எவ்விதத்திலும் காப்பாற்றவேண்டும் என்ற உணர்ச்சி என் உள்ளத்தில் உண்டாயிற்று.

"ஏ! அற்பனே, நியாயம் பேசவேண்டாம். எனக்கு வழியை விடு," என்று சொல்லிக்கொண்டு முன்னேறிச் சென்றேன். அவன் இரண்டடி பின் வாங்கிச்சென்று மேற்படி அறைக் கதவிற் சாய்ந்துகொண்டு என்னை வெருட்டிப் பார்த்தான். என் கண்களும் கோவைப் பழம்போலச் சிவந்தன. அவன் தனது கையில் ஒரு சுழல் துப்பாக்கியும் இருப்புத் தடியும் வைத்திருப்பதைக் கண்டவுடன், பேரச்சம் கொண்டு நான் இரண்டடி பின் வாங்கினேன். "ஏ! ஈரமில்லாத நெஞ்சையுடையவனே, ஜனககுமாரியின் நிலைமையைக் கவனி. உன் உயிர் பெரியதல்ல' என்ற எண்ணம் எனக்கு மறுபடியும் தோன்றவே, என் ஹிருதயம் கல்லைப்போல உறுதி அடைந்தது. அடுத்த நிமிஷம் இந்திரலிங்கத்தின்மீது நான் பாய்ந்து விழுந்தேன். எங்களிருவருக்கும் பலத்த கோரமான யுத்தம் நடந்தது. ஹா! கையிலிருந்த இருப்புத்தடியால் ஓங்கி எனது தலையில் புடைத்தான் இந்திரலிங்கம். 'படார்' என்று மறு கணத்தில் ஒரு வெடி சப்தமெழுந்தது. புகை எங்குப் பார்த்தாலும் சூழ்ந்துகொண்டது. நல்ல காலம்! குண்டு என்மீது பாயாமற் தப்பினேன். தலையில் விழுந்த காயத்திலிருந்து 'சொடசொட' வென்று இரத்தம் பெருகி

எனது உடுப்பை நனைத்துக்கொண்டிருந்தது. நான் மனோ உறுதியோடு மீண்டும் அவன்மீது பாய்ந்து கைத்துப்பாக்கியையும் இருப்புத்தடியையும் கைப்பற்றிக்கொண்டேன். எனது முகத்தை நோக்கிப் பலமாகத் தாக்கினான் அவன். என்வசமிருந்த இருப்புத் தடியினால் வலுக்கொண்டு அவனுடைய மண்டையிற் புடைத்தேன். 'ஆ ! ஆ !' வென்ற சப்தத்துடன் இந்திரலிங்கம் வேரற்ற மரம் போலக் கீழே சாய்ந்தான். இருப்புத்தடியினால் பூட்டை உடைத்துக்கொண்டு ஜனககுமாரியின் அறைக்குள் பிரவேசித்து உள் தாளிட்டுக்கொண்டேன். இதுவரையில் சுபேதார் மகேந்திரனோ வேறு வேலைக்காரர்களோ மாடிக்கு வரவில்லை.

அறையின் கீழ்க் கோடிச் சுவரோரமாக ஓர் அழகிய கருங்காலிக் கட்டில் கிடந்தது. அக்கட்டிலில், சுவர்ப்புறமாக முகத்தைத் திருப்பிக்கொண்டு, கைகளிரண்டையும் தலைக்கு மேல் கொண்டுவந்து பின்னிய வண்ணம் ஜனககுமாரி படுத்திருந்தாள். ஜனகத்தின் கைகளில் கட்டப்பட்டிருந்த கங்கணம் இன்னும் அவிழ்க்கப்படவில்லை. 'நாலா நீர்' சடங்கு நடக்கும் பொழுதல்லவா, கங்கணம் அவிழ்ப்பது எங்களது வழக்கம் ? நான் அவளுக்கிட்ட எனது முத்திரைமோதிரம் இன்னும் அவள் விரல்களில் பிரகாசித்துக் கொண்டிருந்தது. நான் புத்தக அறையிலிருந்தபோது ஜனகம் அலறியதற்குக் காரணமென்ன ? புத்தக அறையின் மேற்புறமாகத்தான் ஜனக குமாரியின் படுக்கையறை அமைந்திருந்தது. இதே அறையிலிருந்துதான் ஓசை யெழுந்தது. ஜனக குமாரியைத் தவிர ஓலமிட்டுக் கத்தக்கூடியவர்கள் அவ்வீட்டில் வேறு எவருமில்லை.

அப்பொழுது மாலைநேரமாதலின், அறையில் இருள் சூழ்ந்து ஒன்றையும் துலக்கமாகப் பார்க்கக்கூடாமல் தடுத்தது. உடனே மின்சார விளக்குப் பொத்தானைத் தட்டி, நான்கு விளக்குகளையும் ஏற்றிவிட்டதும், பூரணச் சந்திரனின் நிலவொளியைப் போல அறை முழுவதும் மின்சார வெளிச்சம் பிரகாசித்தது.

நீலநிறப் பட்டாடையால் ஜனகம் மூடப்பட்டிருந்தாள். சுவர்ப்புறமாக முகத்தைத் திருப்பிக் கொண்டிருந்ததாலும், கைகளைத் தலைமீது பின்னிக்கொண்டிருந்தபடியாலும் ஜனககுமாரியின் அழகிய

முகத்தை நான் பார்க்க முடியவில்லை. ஜனககுமாரியின் அறையில் என்னைப் பிரவேசியாது தடுத்ததன்னியில், என் உயிருக்கே உலை வைக்க நினைத்தானே பாவி! பொதுவாக என்னையும் ஜனகத்தையும் ஏதோ ஒரு மகாமர்மம் சூழ்ந்து கொண்டிருக்கிறது. பையப் பைய அவளது படுக்கையை நெருங்கி நிசப்தமாக அவளுடைய முகத்தின் ஓரமாகக் குனிந்து கவனித்தேன். சுவாசம் மிகவும் மெதுவாக ஓடிக்கொண்டிருக்கவேண்டுமெனத் தீர்மானித்தேன். திகிலிட்ட உள்ளத்துடன் அவளது கைகளைத் தொட்டுப் பார்த்தேன். ஜில் லென்றிருந்தது. முகத்தைச் சரியாக என்னால் காணமுடியாமலிருந்த படியால் அதை என் புறமாகத் திருப்ப நினைத்தேன். நோயாளி ஆபத்தான நிலைமையிலிருந்தாளாதலின், அவளுக்குச் சிரமம் கொடுக்க என் மனம் இடங்கொடுக்கவில்லை. ஆனால், மற்றொரு யுக்தி எனக்குத் தோன்றியது. அதாவது சுவரோரமாக கிடந்த கட்டிலைக் கொஞ்சம் இப்பாலிழுத்தால், சுவரோரமாக நான் நின்று கொண்டு அவளைச் செவ்வையாகக் காண முடியுமன்றோ? கட்டிலைப் பற்றி இப்பால் நகர்த்தினேன். கட்டில் மிகவும் கனமாக இருந்தபடியால், அதை இழுப்பதற்கு எனது முழு வலிமையையும் பிரயோகிக்க வேண்டியதாகவிருந்தது. அவ்வாறு மிகக் கஷ்டத்துடன் அம்மஞ்சத்தைப்பற்றி இப்பால் இழுத்தபோது, எனது நெஞ்சிலும் வாயிலும் ஒரு நூதனமான வலியும் எரிச்சலுமுண்டாயிற்று. 'விறு விறு' என்று வீங்கித் தடிப்பதைப் போலவும் தோன்றியது. அதிகமான சிரமத்துடன் கட்டிலைப்பற்றி இழுத்தபடியால், சிறுநரம்புகள் ஏதேனும் அறுந்து போயிருக்குமோ என்று சந்தேகித்தேன். இந்த வலியையும் எரிச்சலையும் நான் சிறிதும் பொருட்படுத்தவில்லை.

புதிதாக மணந்து கொண்ட எனது மனைவியைப் பார்க்கவேண்டுமென்ற பேராவலால் நான் சுவருக்கும் கட்டிலுக்கும் இடையில் சென்று நின்று கொண்டு, அவளுடைய முகத்தை மூடியிருந்த நீலப் பட்டாடையை விலக்கினேன். ஆ! என்ன ஆச்சரியம்! நான் கண்ட அதிசயத்தை எப்படி விளக்கிச் சொல்லுவேன்? அழகாவது அழகு! அழகை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? பரிபூரண சௌந்தர்யத்தை நீங்கள் எப்பொழுதாவது கண்டதுண்டா? 'அந்த அழகே திரண்டு

ஒரு பெண்ணுருவாக வடிவெடுத்து வந்திருக்கிறது,' என்று கூறும்படி விளங்கினாள் என் அருமை ஜனகம். என் கண்களை என்னால் நம்பவே முடியவில்லை. இப்படியும் ஒரு பெண் இவ்வுலகத்தில் பிறந்திருக்கிறாளா? 'பிரமனுடைய முழு திறமையும் ஜனக குமாரியைச் சிருஷ்டிப்பதில் செலவழிந்து விட்டிருக்கும்,' என்பது நிச்சயம். "இத்தகைய முழு அழகும் திரண்டு திகழும் பெண்ணரசி, எனக்கு மனைவியாகக் கிடைத்தது எனது பூர்வ புண்ணியந்தானோ?" என்று நான் வியப்படைந்தேன்.

கருத்தடர்ந்த அவளது கூந்தல் நெளி நெளியாக படர்ந்து படிந்து இரு செவி மருங்கிலும் ஒதுங்கிக்கிடந்தது. பிறைச்சந்திரனைப் போன்ற அவளது நெற்றியின் அமைப்பை நூறு வருஷம் பார்த்துக் கொண்டிருந்தாலும் சலிக்காது. ஜனக குமாரியின் வனப்பை எனது இரு கண்களுக்கும் விருந்தாக அளித்து மதிமயங்கி இருக்க முடிந்ததேயன்றிக் கம்பனைப் போல, ஷேக்ஸ்பியரைப் போல, காளிதாஸனைப் போல என்னால் வர்ணித்துச் சொல்லிப் பிறரையும் இரசிக்கச் செய்ய முடியவில்லை! வாசகர்களே, மன்னிக்க வேண்டும்.

"இதென்ன? கனவா? நனவா? நிஜமாகவே இவள் பெண்தானா? மாயா மனிதனாகிய இந்திரலிங்கத்தினுடைய மாயா விநோதத் திருவிளையாட்டா? ஹா! நரமாமிச பிண்டமே! அடே நயவஞ்சக இந்திரலிங்கனே! கொலைகாரா! என்ன காரியம் செய்தாயடா! இத்தகைய புனிதமான சுந்தர மங்கையை எப்படித்தான் மனந்துணிந்து கொலை புரிய முன் வந்தாய்?" என்று நான் எண்ணமிட்டேன்.

பதினைந்து அல்லது பதினாறு வயதுக்கு மேலிராத அம் மங்கையை நான் கூர்ந்து கவனித்தேன். என் மனம் கலங்கிக் குழம்பியது.

"ஜனகம்! ஜனகம்!! உனக்கு என்ன செய்கிறது?" என்று அவளுடைய கையைப்பற்றிக் கொண்டு, பரவசத்துடன் வினவினேன் நான். ஜனகம் வாய் திறந்தாளில்லை.

"ஜனகம்! வெட்கப்பட வேண்டா. உனக்கு என்ன செய்கிறது? உன் உடம்பிலுள்ளதை ஒளிக்காமல் என்னிடம் தெரிவி. நான் கைதேர்ந்த வைத்தியன். ஒரே நிமிஷத்தில் நோயை ஓட்டி

விடுகிறேன். சீக்கிரம் உன் வாயைத் திறந்து ஒரு வார்த்தை சொல்,'' என்று இளகி உருகிய நெஞ்சத்துடன் நான் உரைத்தேன்.

இதற்கும் அவள் மௌனமாக இருந்தாள். அவளுடைய விழிகள் என்னை நோக்கிய வண்ணமாகவே இருந்தன. ஆனால், திடீரென்று என் மனத்தில் ஒரு பேரச்சம் தோன்றியது. இன்னும் நன்றாகக் குனிந்து கூர்ந்து நோக்கினேன். அவளுடைய கண்கள் இரண்டும் திறந்தன திறந்தபடியே இருந்தன. கொஞ்சமாவது ஆடவில்லை, அசையவில்லை. அச்சத்துடன் அவளுடைய நாடியைப் பற்றிப் பார்த்தேன். ஆ! என்ன சொல்வேன்? நாடியில் ஒன்றுமே இல்லை. கை ஜில்லிட்டுப் பனிக்கட்டியைப் போலக் குளிர்ந்து விட்டது. மூக்கினிடம் கையை வைத்துப் பார்த்தேன். சுத்தமாக சுவாசம் நின்று விட்டது; மூச்சே இல்லை. இதற்கு மேல் என்ன வேண்டும்? ஜனக குமாரி இறந்து போய் விட்டாள். இந்திரலிங்கம் கருதியிருந்தபடி ஜனகம் சூரியாஸ்தமனத்துக்குள் மரணமடைந்தாள்!

சுமார் கால்மணி நேரம் வரையில் உணர்ச்சியே இல்லாமல் சோர்ந்து கீழே உட்கார்ந்து விட்டேன். ஜனககுமாரியை நான் இதற்கு முன் ஒரு போதும் பார்த்ததில்லை. எனக்கு இப்பொழுது இருபத்தைந்து வயதாகிறது. இது வரையில், என் மனத்தில் பெண்ணுலகத்தைப்பற்றி எவ்விதமான விகற்பமான எண்ணமோ புனிதமான எண்ணமோ ஏற்பட்டதில்லை. 'காதலிப்பதும் காதலைப் பெறுவதும் கிடைப்பதற்கரிய பெரும்பேறு,' என்று இளைஞர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். அது கண் கூடான உண்மை என்பதை இன்று தான் கண்டேன். ஜனககுமாரி பிணமாகி விட்டபோதிலும், அதே ஜனககுமாரியை நான் மனப் பூர்வமாகக் காதலிக்கிறேன்! பிணத்தைக் காதலித்தவனுண்டா? அந்த மாதிரி பயங்கரமான விதியை யாராவது பெற்றிருக்கக்கூடுமா? ஆ! கடவுளே, என்ன உனது சோதனை! ஜனகத்தின் கன்னத்தை எனது கைகளால் அன்போடு வருடினேன்.

"ஓ! ஜனகம்—ஜனககுமாரி! நீ உண்மையாகவே இறந்து போய் விட்டாயா? நீ பிணமா? பிணமாகவிருப்பது உண்மையென்

ருல், எனக்கு உன்மீது குறைவில்லாத நிறைந்த காதல் பொங்கி எழுவதற்குக் காரணமென்ன? புனிதவதியே, எழுந்திரு! பாக்ய வதியே, எழுந்திரு!" என்று பித்தனைப்போல நான் உளறிக் கொட்டினேன். நான் என்ன சொல்லி அழைத்தென்ன? போன ஜனகம் மீண்டு வரப்போகிறாளா?

உயிருள்ள ஸ்திரீ திலகத்தைப்போல, இமை கொட்டாது நோக்கிக் கொண்டிருந்த ஜனகம் எப்படி இறந்தாள்? கொலை செய்யப் பட்டிறந்தாளா? 'சூரியாஸ்தமனத்துக்குள் ஜனகம் இறந்து விடுவாள்; அதற்குமேல் அவள் உயிருடன் இருக்கக்கூடாது,' என்று இந்திரலிங்கம் சொன்னான். ஜனகத்தின் உயிரைக் கவருவதற்கு இரண்டு இலட்ச ரூபாய் லஞ்சம் கொடுக்கத் துணிந்தானே பாவி!

இந்திரலிங்கத்தின் சதியினால் இவ்வுலகத்தைப் பிரிந்த ஜனகத்தின் புருஷன் நானிருக்கிறேன். ஜனகத்தின் பழியைத் தீர்த்துக் கொள்ளாமல் விடப் போவதில்லை.

அவளுடைய கழுத்தில் நான் முடியிட்ட மாங்கல்யம் இன்னும் அதோ காணப்படுகிறது. ஆ! காலையில் கல்யாணம், மாலையில் கருமம்! என்ன அக்ரமம்! மாங்கல்ய தாரத்துடன் ஒரு மெல்லிய பொற் சங்கிலியும் கிடந்தது. அச்சங்கிலியை மெதுவாக வெளியே எடுத்தேன். அச்சங்கிலியின் அடியிலே ஒரு கேள்விக்குறி (?) பொன்னால் செய்து, பதக்கத்தைப்போலத் தொங்கவிடப்பட்டிருந்தது. கேள்விக்குறிப்பதக்கத்துடன் இதுவரையில் ஒருவராவது பொற் சங்கிலி அணிந்திருந்ததை நான் பார்த்ததில்லை. அச் சங்கிலியில் சிற்சில விடங்களில் வைரக்கல் வைத்து இழைத்திருந்தது. புத்தம் புதிதாக மெருகு கலையாமலிருந்ததால், அச்சங்கிலியை அவள் மிகச் சமீபநாளாகத்தான் அணிந்து வந்திருக்கிறாளென்று தெரிந்தது. இன்னும் அதைப்பற்றி விரிவான ஆராய்ச்சி செய்யக் கருதிச் சட்டைப்பைக்குள் வைத்துக் கொண்டேன்.

பிறகு, அவளுடைய அவயவம் ஒவ்வொன்றையும் கூர்ந்து ஆராய்ந்தேன். கொலை மாணம் என்பதற்குரிய எந்த ருஜுவும் கிடைக்கவில்லை. காயமாவது இரத்தக் கறையாவது எங்குமே காணப் படவில்லை. அவளது தொண்டைக்குக் கொஞ்சங் கீழே திரிசூலம்

போன்றதொரு சுடுகுறித் தோன்றியது. அந்தச் சுடுகுறியை வெகு நாழிகை வரையில் ஆராய்ச்சி செய்ததன்பேரில், அது வெகு நாளைக்குமுன் சுடப்பட்டிருக்கிறதென்ற முடிவுக்கு வந்தேன்.

ஒரு சமயம் பாஷாண திரவப் பொருளை நரம்புகளில் இன்ஜெக்ஷன் செய்து கொன்றிருக்கக் கூடுமோ என்று சந்தேகித்துக் கூர்ந்து பரிசோதித்தேன். இன்ஜெக்ஷன் செய்யப்பட்ட எந்த விதமான குறிகளையும் என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை.

இறுதியாக, அவளுடைய கண்மணிகளைக் கூர்ந்து கவனித்தேன். பொதுவாக இரண்டும் மாசடைந்திருந்தன. ஆனால், வலது விழியை விட இடது விழி கொஞ்சம் மங்கலாக காணப்பட்டதோடு குண்டூசியின் முனை யவ்வளவு ஒரு சிறு துவாரம் உடையதாகவிருந்தது. ஆச்சரியத்துடன் ஆழ்ந்து நோக்கினேன். அடுத்த நிமிடம் பயங்கரமான உணர்ச்சியொன்று என்னிடம் தோன்றியது. ஜனக குமாரி குரூரமாகக் கொலை செய்யப்பட்டு இறந்திருக்கிறாள்!

அக்கட்டிலினருகாமையில் ஒரு நாற்காலி கிடந்தது. அதன் மேல், நான் அவளுக்கிட்ட புஷ்பமாலையும், மற்றும் விலையுயர்ந்த ஆடையாபரணங்களும் கிடந்தன.

"சீ! என்ன அநியாயம்! கல்யாணமும் கருமச் சடங்கும் ஒரே நாளிலா நிகழ வேண்டும்? என்னைப் போல் உத்திருஷ்டமான துரதிர்ஷ்டன் இவ்வுலகத்திலிருக்கிறானா?" என்று நான் என்னையே இகழ்ந்து கொண்டேன்.

அவளுடைய தலையணையைத் தூக்கி, அதன் கீழ் ஏதாவதிருக்கிறதா என்று தேடினேன். எதிர்பார்த்தபடியே அதன்கீழ் ஒரு கடிதமிருக்கக்கண்டு ஆச்சரியத்துடன் எடுத்துப்பார்த்தேன். கடிதம் கசக்கப்பட்டிருந்ததாகையால், எழுத்தும் அரைகுறையாகத் தெரிந்தது. "லீலா ஜீவையைச் சந்தித்தேன்" என்று ஒரே வரிதான் கடிதத்தில் காணப்பட்டது. கிட்டத்தட்ட அது ஓர் ஆண் மகனின் கையெழுத்தைப் போலிருந்தது.

லீலாஜீவை என்பவள் யார்? லீலாஜீவை என்பவளை யார் சந்தித்தது? எழுதப்பட்டிருக்கும் விஷயம் வெளிப்படையாக ஒன்றையும் புலப்படுத்தவில்லை. எது எப்படியிருந்தபோதிலும்

கடிதம் ஜனககுமாரிக்குத்தான் கிடைத்திருக்கவேண்டும். லீலா ஜீவையை இரகசியமாகச் சந்தித்த ஒருவன், இக்கடிதத்தை எழுதி யிருக்கிறான் போலும். கடிதத்தை வாசித்த பின்பு, தலையணையின் கீழ் அதைப் பத்திரப்படுத்தி யிருக்கவேண்டும். இவைகளைத் தவிர அக்கடிதத்தால் வேறு என்ன விஷயத்தை யூகித்தறியமுடியும்?

மேலும், ஏதேனும் துப்புக்கிடைக்குமாவென்று நினைத்து அவ் வறையில் மூலை முடுக்கெல்லாம் தேடினேன். திடீரென்று எனக்கு ஒருவகையான தொண்டை வலி தோன்றியது. கண்கள் மறைந் தன. தலை கிறுகிறுவென்று சுற்றியது. கீழே சாய்ந்துவிடா திருக்க ஜனககுமாரியின் மஞ்சத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டேன். முகம் முழுவதுமே திருதிருவென்று பற்றி எரிந் தது. நாடி நரம்புகளெல்லாம் தளர்ந்து விலவிலத்து நடுங்கின. என்னால் கூடுமான வரையில் நிதானித்துக்கொண்டு எனது உதடு களைப் பரிசித்துப் பார்த்தேன். உதடுகள் வீங்கிப் பெருத்துப் புடைத்திருந்தன. எனது தொண்டை ஏதோ ஒரு மின்சார இயந் திரத்தில் அகப்பட்டுக்கொண்டு நெருக்கப்படுவதைப்போலத் தோன் றியது. மூச்சுவிடத் திணறினேன்.

எதிர்பாராத இந்த விபத்துக்குக் காரணமென்ன? என்னால் கொஞ்ச நாழிகை வரையில் ஒன்றையும் திட்டமாகத் தீர்மானிக்க முடியவில்லை. சில நிமிஷத்துக்குள் எனது விபத்துக்கு எது காரணமென்பதைக் கண்டுபிடித்துவிட்டேன். சுபேதார் என்னி டம் கொடுத்துப் புகைக்கச் சொன்ன சிகரெட்டுதான் அதற் குக் காரணம். அந்தச் சிகரெட் 'விஷசிகரட்'. பாம்பின் விஷம்போல நோயின் வேகம் தீவிரமாகப் பரவிற்று. சிறிது நேரத்தில் எனது உணர்ச்சி மாறிவிட்டது. ஏதோ சில பேய்க்கூட்டங்கள் என்னைச் சுற்றி வளைத்துக்கொண்டு கூத்தாடுவதைப்போல எனக்குத்தோன் றியது. ஆ! ஒன்றுமே தெரியாமல் மயக்கத்துடன் திடீரென்று தரையில் விழுந்தேன். சிறிது நேரத்தில் எனது முழு உணர்ச்சியை யும் இழந்துவிட்டேன்!

4. ஆழ்ந்த சிந்தனை

நூதனமான சப்தம் ஒன்று எனது செவிகளில் விழுந்தபோது பைய பைய நல்லுணர்ச்சி பெற்று விழித்துப் பார்த்தேன். என்ன ஆச்சரியம்! நான் எங்கிருந்தேன்? எங்கு வந்தேன்? ஆ! நடுக்கடலில் காற்றின் உதவியினால் செல்கின்ற ஒரு படகில் என்னைக் கிடத்தி, இரண்டு படகோட்டிகள் அதைச் செலுத்திக் கொண்டிருந்தார்கள்.

நான் எப்படிக் கடலுக்குக் கொண்டுவரப்பட்டேன்? யாரால் கொண்டுவரப்பட்டேன்? எதற்காகக் கொண்டுவரப்பட்டேன்? ஆம்! இந்திரலிங்கம் என்னும் மாயா மனிதனின் மாளிகையில் நான் மயங்கி விழுந்தது நன்கு நினைவிற்கு வந்தது. கந்தப்ப முதலித் தெரு இரகசிய மாளிகையின் மேன்மாடியிலும், புத்தக அறையிலும், திருக்கழுக்குன்றம் மலையிலும் நிகழ்ந்த சம்பவங்களெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக ஞாபகத்துக்கு வந்தன. அவைகள் எல்லாம் நிகழ்ந்தது எப்பொழுது? இதை எப்படி அறிய முடியும்? சூரிய பகவான் உச்ச வீதியில் சென்று கொண்டிருந்ததும், அலையோடு கூடிய சாகரத்தின் சீதளக் காற்றும் எனது அறிவைக் கொஞ்சம் தெளிவுபடுத்தின. ஆ! அவள் என் அகக் கண்ணில் தோன்றினாள். ஜனககுமாரி எனது நெஞ்சகத்தில் ஊசலாடினாள். பூரணச் சந்திரனின் குளிர்ந்த பிரகாசத்தைப் போலக் கண்களுக்கு இனிமையாகக் காட்சி அளித்த ஜனகத்தின் சுந்தரவதனம், எனது மனத்தை விட்டு அகலவே இல்லை. அவளை நினைத்தாலே சுவர்க்கப் பரவசமுண்டாகின்றது. அவள் எனது உள்ளக் கோவிலில் குடிகொண்ட பரதேவதையாகி விட்டாள். ஐயோ! அத்தகைய நேர்த்தியுடன் அவதரித்த பெண்களின் சிரோமணி மண்ணுக்கோ நெருப்புக்கோ இரையானாள் என்பதை நினைத்தபொழுது இந்த ஹிருதயம் துடித்த துடிப்பைக் கணக்கிட முடிந்ததா? "நயவஞ்சக இந்திரலிங்கமும் சுபேதாரும் ஒன்று கூடி, எங்கள் இருவரையும் கொன்றுவிடச் சதி புரிந்தனர். அவர்கள் சதியில் எனது அருமை மனைவி மாண்டு

MARAIMALAI ADIGAL LIBRARY

போக, நான் மாத்திரம் உயிர்தப்பினேன். இருளினும் கறுத்த பாப நெஞ்சத்தினர், அந்தப் பவளக் கொடியை எப்படிக் கொல்லத் துணிந்தனரோ? ஆ! ஜனகம், நீ பரிதாபமான ஓலத்துடன் இவ் வுலகைவிட்டு மறைந்தாய். உன்னைக் கொன்ற கொலைப்பாதகன் இன்னும் உயிருடனிருக்கிறான். இருக்கட்டும். உன் பழி தீர்க்க உன் அருமைக் கணவனாகிய நானிருக்கிறேன்!'' என்று நான் கண்களை மூடிக்கொண்டே சிந்தித்தேன்.

கடலின் பேரலை அடங்காத உக்ரத்துடன் மேலெழுந்து குதித்து அட்டகாசம் செய்தது. நன்றாக விழித்துப் பார்த்தேன். தொண்டையிலும் வாயிலும் இன்னும் வலி இருந்து கொண்டிருந் தது. பையக் கையை ஊன்றிக் கொண்டு எழுந்து உட்கார்ந்து சுற்றுமுற்றும் பார்த்தேன். மயக்கம் இன்னும் இருந்து கொண்டி டிருந்தபடியால் கரகரவென்று சுற்றுவதைப்போலத் தோன்றியது. படகோட்டிகள், எழுந்தமர்ந்த என்னை உற்று நோக்கி ஒருவர்க்கொரு வர் கண் சிமிட்டிக் கொண்டார்கள்.

"ஐயா, இன்று என்ன கிழமை?'' என்று நான் அவர்களில் ஒருவனை அன்புடன் வினவினேன்.

"வெள்ளிக்கிழமை!'' என்றான் அவன்.

"என்ன? வெள்ளிக்கிழமையா? புதன்கிழமை இரவு உணர்ச்சி இழந்த நான் வெள்ளிக்கிழமை பகல் சுமார் பன்னிரண்டு மணிக்கு உணர்ச்சி பெற்றிருக்கிறேனா? ஆ! என்ன ஆச்சரியம்! நாற்பத் தெட்டு மணிநேரம் மயங்கிக் கிடக்கும்படியான விஷமருந்தைக் கண்டுபிடித்துப் பிரயோகம் செய்த மகேந்திரனின் திறமையை என்னவென்று சொல்வது?'' என்று பலவாறு நினைத்து நான் ஆச்சரியப் பட்டேன்.

"நீங்கள் சென்னைப் பட்டணத்தை விட்டு என்று புறப்பட்டீர் கள்?'' என்று நான் அவர்களைக் கேட்டேன்.

"அந்த எளவெல்லாம் யாருக்கையா தெரியுது?'' என்றான் அந் தப் படகோட்டி.

"ஆனால், என்னை எங்குக் கொண்டு போகிறீர்கள்?'' என்றேன் நான்.

"அத்தைச் சொல்றத்துக்கு நாங்க ஆளல்ல," என்று கொடூரமாகப் பதிலளித்தான் அவன்.

படகோட்டி கூறிய பதிலைக் கேட்டு, நான் ஆச்சரியமடைந்தேன். அறிவு தடுமாறியது. மீண்டும் தொண்டை வலியும் வாய் வலியும் உண்டாயின. கீழே படுத்தேன். முன்போலவே உணர்ச்சி இழந்தேன்.

மீண்டும் எனது நல்லுணர்ச்சியைப் பெற்றுக் கண்களை விழித்துப் பார்த்த பொழுது, நான் படகில் இல்லை. கடலோரத்து மணலில் கிடந்தேன். மிகவும் சிரமத்துடன் எழுந்து உட்கார்ந்தேன். சூரியன் மேல் வானத்தில் ஊர்ந்து சென்றுகொண்டிருந்தான். சுமார் பதினொருமணி இருக்கலாம். நடுப்பகல் பன்னிரண்டு மணிக்குப் படகில் மூர்ச்சையான நான், மறுநாளோ என்னவோ பதினொரு மணிக்கு மூர்ச்சைத் தெளிந்திருக்கிறேன்.

படுபாவிகள் எனக்குச் செய்த சூழ்ச்சிகளைக் கண்டறிய முடியவில்லை. படகை வலித்துவந்தவர்களையும் காணோம். படகையும் காணோம். கொல்லப்படுவதற்கிருந்த நான் என்ன காரணத்தாலோ மீட்கப்பட்டிருக்கிறேன். இது செம்படவர்கள் இரக்கமோ, அன்றி இந்திரலிங்கத்தின் இரக்கமோ? சொல்ல முடியாது. தலையை நிமிர்த்திக் கடலைப் பார்த்தேன். கடல் கொந்தளித்துக் கொண்டிருந்தது. அமாவாசை பக்ஷமல்லவா? கரையோரத்திலிருந்து சுமார் ஒரு மைல் விஸ்தீரணம்வரையில் ஓர் இரும்புப்பாலம் போடப்பட்டு அதன்மீது ஜனங்கள் நடமாடிக்கொண்டிருந்தார்கள். பாலத்தின் ஓரமாகக் கப்பல் ஒன்று நின்றுகொண்டிருந்தது. எனது கஷ்டகாலத்தில் ஒரு நற்காலம்! நான் ஓர் ஊரின் ஓரமாக ஒதுக்கப்பட்டுக் கிடந்தேன்! அது எந்த ஊரென்பதை என்னால் அறியக் கூடவில்லை. மெதுவாகப் பல்லைக் கடித்துக் கொண்டு எழுந்தேன். சிறிது தூரம் நடந்து சென்று அது எந்த ஊர் என்று ஜனங்களை விசாரித்தேன். அது புதுச்சேரி என்றறிந்தபோது எனக்குப் பரமசந்தோஷம் உண்டாயிற்று. ஆம். அது புதுச்சேரிதான். இப்பொழுதுதான் எனக்கு ஞாபகம் வந்தது. இவ்வூருக்கு நான் இரண்டுமுறை விஜயம் செய்திருக்கிறேன். எனது தோழர் துரைசாமி ரெட்டியாரின் தங்கை

ஆனந்தவல்லி என்னும் பெண்மணிக்குக் கல்யாணம் நடந்தபோது: நான் ரெட்டியாரால் அழைக்கப் பட்டிருந்தேன். இனிப் பய மில்லை. சென்னை சென்றுவிடலாம். ஆனால், இந்த அலங்கோல மான நிலைமையில் துரைசாமி ரெட்டியார் என்னைப் பார்த்தால் என்ன நினைப்பார்? அவரைப் பாராமலேயே சென்னை செல்வதுதான் தகுதி. 'புதுச்சேரி' என்றவுடன் ஸ்ரீபாரதியாரின் ஞாபகம் வருகிறது. ஆ! அவருடைய இனிய கவிதாசுவை நிறைந்த தேசிய பாடல்கள் அனவரதமும் எனது உள்ளத்தைப் பரவசப்படுத்தி வருவனவாகும்!

பாலத்தின்மீது நான் ஏறி நின்றேன். ஒருமித்த காதலர்கள் அன்பு மீறி முத்தமிட்டுக் கொள்வதைப்போல நீணிறக்கடலும் நீல வானமும் ஒன்றிக்கிடந்தன. கலங்கியும் மாசடைந்துமிருந்த எனது மனத்திற்கு அந்த இயற்கைக் காட்சியும் ஒரு மருந்தாகா தது ஆச்சரியமே!

எனது மனைவியின் கொலைக்குக் காரணமென்ன? அழகில் நிக ரில்லாத ஜனகம் இந்தப் பால்ய பிராயத்திலேயே சுவர்க்க பதவி யடையவேண்டுமென்றதற்கு இந்திரலிங்கம் வைத்திருந்த அந்தரங்க மென்ன? லீலாஜீவை என்பவள் யார்? ஆம். லீலாஜீவை என்பவளைக் கண்டு பிடித்தால் எல்லாக் குட்டுகளும் வெளிப்படுமென்பது திண்ணம். ஜனககுமாரியின் தலையணையின்கீழ், இரகசியத்தால் மூடப்பட்டிருக்கும் லீலாஜீவை சம்பந்தப்பட்ட கடிதம் இருந்ததற்குக் காரணமென்ன? லீலாஜீவைக்கும் ஜனகத்திற்கும் இருக்கும் தொடர்பென்ன? இறந்து போக வேண்டுமென்று கருதப் பட்ட ஜனககுமாரி விவாகம் செய்யப்பட வேண்டுமென்று நிர் பந்தம் ஏற்பட்டதற்கு டாக்டர் ஸர்ட்டிபிகேட் மாத்திரம் காரணமாக இருக்குமா? வேறு ஏதேனும் உடனிருக்குமா? என்னுடையவறண்ட நிலைமையும்எனது இருப்பிடமும் இந்திரலிங்கத்திற்கு எப்படித்தெரிந் திருக்க முடியும்? மாடியில் நானும் இந்திரலிங்கமும் சண்டையிட்டுக் கொண்டிருந்தபொழுது சுபேதார் மகேந்திரனோ வேலைக்காரர் களோ இந்திரலிங்கத்திற்கு உதவி புரிய ஏன் முன்வரவில்லை? உள் தாளிட்டுக் கொண்டு அறையினுள் மூர்ச்சையடைந்த நான், எப்படிக் கடலுக்குக்கொண்டு வரப்பட்டேன்? இவை போன்ற பல கேள்விகள்

என் மனத்தில் தோன்றின. ஆனால், இவைகள் அனைத்திற்கும் லீலாஜீவையைக் கண்டு பிடிக்காமல் விடைகாண முடியாதென்பது நிச்சயம்.

ஜனக குமாரியிடமிருந்து கைப்பற்றிய வைரமாலையும் துண்டுக் கடிதமும் எனது மணிபர்ஸும் இன்னும் எனது சட்டைப் பையி லேயே இருந்தன. எனது சட்டைப் பைகளை இந்திரலிங்கமோ சுபேதாரோ, படகோட்டிகளோ சோதிக்காமல் விட்டதற்குக் காரணம் தெரியவில்லை. இது நிற்க.

எனது பூர்வகதையைக் கொஞ்சம் இவ்விடம் சொல்ல வேண்டுவது இன்றியமையாததாகிறது.

டாக்டர் வி. கோபாலன் (எல். எம். பி.,) எனது அந்தரங்க தோழனும் பள்ளித் தோழனுமாவான். அவன் சென்னையை விட்டுத் தனது சொந்த கிராமத்திற்குச் செல்ல வேண்டியதை முன்னிட்டு அவனுடைய பிரத்தியேக மருத்துவசாலையை என்னிடம் ஒப்புவித்துவிட்டுச் சென்றிருந்தான். புரசைப்பாக்கம் ஆனந்தாலாட்ஜில் முதன்முதல் கோபாலன் என்னைச் சந்தித்தான். வெகுநாள் பிரிந்திருந்த என்னைக் கண்டவுடன் குதூகலத்துடன் வரவேற்று, உபசரித்தான். சுமார் ஆறு வருஷத்துக்குமுன் கோபாலனிடம் நான்வாங்கியிருந்த ஐம்பதுரூபாகடன் ஞாபகத்துக்கு வந்தபோது, என்மனம் பட்டபாடு சாக்ஷாத் ஈஸ்வரனுக்கே தெரியும். ஆனால், அவன் அதைப் பொருட்படுத்தவில்லை. சுமார் இரண்டு வாரங்கள் வரையில் நான் கோபாலனுடைய விருந்தினனாக இருந்தேன். அவன் கிராமத்துக்குச் சென்ற பிறகு, அவனுடைய ஆஸ்பத்திரியில் வைத்தியனாயிருந்தேன். ஆஸ்பத்திரியை ஒப்புக்கொண்ட நான்காவது நாள்தான் இந்திரலிங்கத்தால் நான் அழைக்கப்பட்டுக் கல்யாணம் செய்யப்பட்டேன். கல்யாணம் செய்யப்பட்ட எனது மனைவி இறக்க, நான் கடலில் தள்ளப்பட்டிருக்கிறேன்.

கோபாலன் கிராமத்திலிருந்து சென்னைக்குத் திரும்பிவிட்டானா இல்லையா என்பது தெரியவில்லை. வைத்தியத்திற்காக வெளியேறிய நான் திரும்பாமையைக் குறித்து ஆஸ்பத்திரியில் கம்பவுண்டர் வேலைக்காரர்கள் என்ன நினைத்தார்களோ; தெரியாது.

ஆச்சாள்புரம் என்னும் அழகிய சிறு கிராமத்தில்தான் நான் பிறந்தேன். எனது பாட்டனார் காலத்திலேயே, அதாவது இளம்

பூரணம்பிள்ளை காலத்திலேயே எனது பிதுர்ராஜ்யம் க்ஷீண மடைந்தது. எனது தந்தை அம்பலவாணம் பிள்ளை காலத்தில் ஐந்துவேலி நிலமும் ஒரு பெரிய மாளிகையும் ஆச்சாள்புரத்திலிருந்தன. எனது தந்தை வெகு சீக்கிரத்திலேயே சிவலோகப் பிராப்தியடைந்தார். எனது தந்தை வம்சத்தைச்சேர்ந்த ஒரு பெண் குடும்பம், அதாவது அத்தைக் குடும்பம் யாழ்ப்பாணத்தில் வசித்து வருவதாகக் கேள்வி. அவர்களை நான் பார்த்ததே இல்லை. தந்தை வம்சத்தின் கதி அவ்வளவுதான். தாய்வம்சத்தார்களிற் சிலர் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களாகச் சிம்லாவில் வசித்து வருவதாகத் தெரிகிறது. இன்னும் பலர் திருச்சி, திருநெல்வேலி, சீர்காழி, சென்னை, திருவிடை மருதூர் முதலிய ஊர்களில் வசிப்பதாகக் கேள்வி. அவர்களையும் நான் பார்த்தது இல்லை. நான், எம். பி. பி. எஸ். பரீட்சையில் தேறி வீட்டுக்கு வந்தபோது நாலரை வேலி நிலம் காணாமற் போய்விட்டது. மாளிகையின் பேரில் ஐயாயிர ரூபா கடனிருந்தது. பட்டம் பெற்ற வைத்தியனாக நான் வெளிவந்தும், தக்க ராஜாங்க உத்தியோகம் கிடைக்காமல் கஷ்டப்பட்டு வருகிறேன். படிக்காமலிருந்தாலாவது ஐந்து வேலி நிலத்தை வைத்துக்கொண்டு சுகமாகக் காலங்கழித்திருக்கலாம். படிப்பிற்காகப் பணத்தை அள்ளி இரைத்துவிட்டு, இன்று வேலையில்லாமல் சந்திக்குச் சந்தி அலைந்துகொண்டும், தபாலாபீஸின் முகத்தில் விழித்துக்கொண்டுமிருக்கவேண்டியிருக்கிறது. வேலை இல்லாத் திண்டாட்டம் ஒழிந்து என்று சுபீட்சம் உண்டாகப்போகிறதோ தெரியவில்லை. வேலையில்லாமல் திண்டாடித் தெருவில் நிற்பதைவிட அப்பொழுது நடந்துகொண்டிருந்த காங்கிரஸ் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டுச் சிறை செல்லலாமாவென்று கூட நான் நினைத்தேன். எனது தாய் அம்புஜத்தாச்சி மாத்திரம் தனியாக ஆச்சாள்புரத்தில் வசித்து வந்தாள். என்னைப் பெற்றெடுத்து வளர்த்து ஆளாக்கிய அவளைச் சந்தோஷப்படுத்த என்னால் முடியவில்லை. இதுவும் நமது தேசத்தின் நீதி போலும்!

சென்ற எல்லாவற்றையும் சிந்தித்துக்கொண்டு பாலத்தின்மேல் நின்றேன். மணி பதினொன்று அடித்தது. சூரியன் தலைக்கு நேராக வந்தான். ஒரு வண்டியைப் பிடித்துக்கொண்டு ஒரு ஹோட்டலுக்குச் சென்று ஸ்நானம் செய்து சாப்பிட்டேன். எனக்கு ஒருவிதமான களைப்பு உண்டாயிற்று. வாடகைக்குப் பிடித்த அறையில் படுத்து அயர்ந்து உறங்கினேன். சுமார் மூன்று மணிக்கு எழுந்து

முகத்தைக் கழுவிக்கொண்டு காப்பியைச் சாப்பிட்ட பிறகு கொஞ்சம் உடம்பு சரிப்பட்டுவந்தது. எனது மணிபர்ஸில் பத்து ரூபாவும் ஆறே காலணுவுமிருந்தது. இதைக்கொண்டு நான் சென்னை சென்று விட முடியும்.

சுமார் நாலரை மணிக்குப் புதுச்சேரியை விட்டுப் புறப்படும் புகைத் தொடரில் சென்னைக்குப் பிரயாணமானேன். விழுப்புரம் வந்த பிறகு, திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸிற்காக வெகுநேரம் காத்துக்கொண்டிருக்க வேண்டியிருந்தது. சுமார் இரவு பன்னிரண்டு மணிக்கு எக்ஸ்பிரஸ் வந்து சேர்ந்தது. வண்டியிலேறிப் படுத்தேன். அவ்வளவுதான் தெரியும். சென்னை எழும்பூர் ஸ்டேஷனை அடைவதற்கு முன்னமேயே டிக்கெட் கலக்டர் என்னை எழுப்பி டிக்கெட்டை வாங்கிக்கொண்டார். எழும்பூரில் இறங்கி ஒரு வாடகை ரிக்ஷாவில் புரசைப்பாக்கம் வேளாளர்தெரு கோபாலனின் ஆஸ்பத்திரிக்குப் போய்ச் சேர்ந்தேன். சட்டைகளைக் களைந்தெறிந்துவிட்டு, 'அப்பாடி' என்று எனது நாற்காலியில் சாய்ந்தேன். வேலைக்காரர்கள் ஆச்சரியத்துடன் என்னை நோக்கிக்கொண்டு நின்றார்கள்.

"எசமான் பொதங்கிழமை போனீங்களே, இப்பதான் வாரீங்களா? சொல்லாமே போய்ட்டீங்களே!" என்றான் வேலைக்காரன் வேலன்.

"ஆம். கோபாலன் இன்னும் வரவில்லையா?" என்றேன் நான்.

வேலன்:— இல்லீங்க. எசமான் இன்னும் வரல்லே. ஆனுக்கா ஒருநாளு ஒரு அம்மாவந்து உங்களை தேடினாங்க.

நான்:—ஓர் அம்மாவா? யார்அவள்? எப்படி இருந்தாள்? ஓர் அடையாளம் சொல் பார்ப்போம்.

வேலன்:—சுமாரான ஒசரம். கொஞ்சம் ஒள்ளியா இருந்தாங்க. பாத்தாக்கா நல்ல அளகுன்னுதான் சொல்லணுங்க.

நான்:— அவளுடைய தலைமயிர் எப்படி இருந்தது?

வேலன்:— கறுப்பா நெளிஞ்சு நெளிஞ்சு இருந்துச்சிங்க.

நான்:—அவள் மாத்திரம் தனியாகவா வந்தாள்?

வேலன்:— இல்லீங்க அவுங்க அப்பாவோடு.

நான்:— என்ன? அப்பாவா? கூடவந்தவன் அவளுடைய அப்பாவென்று உனக்கெப்படித் தெரியும்?

வேலன்:— அந்த அம்மாவே சொன்னாங்க.

நான்:— அப்படியா? பேர் என்னவென்று விசாரித்தாயா?

வேலன்:— இருங்க, வாரேன் பேரு......சொன்னாங்க. ஞாபகத்துக்கு வரல்லே......ஆமாம் ஆமாம். பேரு இந்திரலிங்கம் பிள்ளையினு சொன்னாங்க.

நான்:— சரி; அவரைப்பற்றி ஓர் அடையாளம் சொல்!

வேலன்:— ஒசரமா கறுப்பா வலுத்த மனுசனா இருந்தாருங்க.

நான்:— தலை நரைத்திருந்ததா?

வேலன்:— இல்லிங்க, இல்லிங்க, கறுப்பு!

எனது வியப்புத் தன் எல்லையைக் கடந்து சென்றது. அங்க அடையாளத்தை எல்லாம் கேட்டால், சுபேதார் மகேந்திரன் மாதிரி இருந்தது. பேரோ இந்திரலிங்கம் என்பதாகத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. ஆம். மகேந்திரன்தான் வந்திருக்கிறான். ஆனால், தன் பெயரை இந்திரலிங்கமென்று தெரிவித்துப் போயிருக்கிறான். அவனுடன் வந்த ஸ்திரீ யாரென்று என்னால் அறியக் கூடவில்லை.

சுபேதாரும் அந்த நூதனஸ்திரீயும் என்னை எதற்காகத் தேட வேண்டும்? கடலிற் போட்டுக் கொல்லும்படி உத்தரவு செய்த பேர்வழி இங்குவந்து என்னை எதற்காக விசாரிக்க வேண்டும்? அந்த நூதன ஸ்திரீ ஒரு சமயம் லீலா ஜீவையாக இருப்பாளா?

"அதெல்லாம் கிடக்கட்டும். அவர்கள் என்னை ஏன் தேடி வந்தார்களாம், உனக்குத் தெரியுமா?" என்று வேலைக்காரனை நான் உசாவினேன்.

"அந்த அம்மாவுக்கு என்னமோ சீக்காம். அத்தைப் பாத்துக் கத்தான் வந்தாங்களாம்!" என்றான் வேலன்.

"சரிதான். அவர்கள் விலாசம் என்ன என்று தெரிவித்தார்களா?" என்றேன் நான்.

"தெரிவிச்சாங்க. தங்கசாலைதெரு 32-ஆம் நம்பர். பங்களாவெனு சொன்னாங்க," என்றான் வேலன்.

"தங்கசாலை வீதி 32-ஆம் நம்பர் வீடு! இருக்கட்டும், அங்குப் போய்ப்பார்த்தால் எல்லாம் தானே விளங்குகிறது," என்று எனக்குள் சொல்லிக்கொண்டே நாற்காலியை விட்டெழுந்தேன்.

---

5. ஆச்சரியமான சந்திப்பு

சுமார் ஒன்பது மணிக்கு வாடகை ஜட்காவில் தங்கசாலை வீதிக்குப்போய்ச் சேர்ந்தேன். 32-ஆம் நம்பர் வீடு ஒரு மெத்தை வீடாயிருந்தது. அங்குச்சென்று அவ்வீட்டில் இருப்பவர் யார் என்று ஒரு வேலைக்காரனை விசாரித்தேன். திவான்பகதூர் தெய்வநாயகம்பிள்ளை என்பவர் அங்கு வசிப்பதாகக் கூறினான். அந்த வேலைக்காரனிடம் என்னுடைய பெயர் பொறிசீட்டைக் (Visiting card) கொடுத்தனுப்பினேன். சிறிது நேரத்தில் வேலைக்காரன் திரும்பி வந்து, என்னை உள்ளே அழைத்துச் சென்று வெளிக்கூடத்தின் தென்புறமிருந்த அறையில் ஒரு நாற்காலியில் அமரச்செய்தான். அவ்வறை பலவித சித்திரப் படங்களாலும் அழகிய மரச்சாமான்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அவ்வறைக்கு உட்கூடத்திலிருந்து நேராக வருவதற்கும் மற்றொரு வாயிற்படி அமைந்திருந்தது. அந்த வாயிலின் வழியாகப் பின்னும் சிறிது நேரத்தில் ஒரு யௌவனமாது பிரவேசித்தாள்.

அவளுக்குச் சுமார் முப்பது வயதிருக்கலாம். உயர்ந்த பேரழகையும் கட்டான தேக அமைப்பையுமுடையவளாயிருந்தாள். பார்வைக்குப் பழைய நாகரிகத்தைப் பின்பற்றி நடப்பவள் போலத் தோன்றினாள். பச்சைப் பட்டுச் சேலையும், வெள்ளை ரவிக்கையும், வெள்ளைத்தோடும், நெளிந்த கருங்கூந்தலும், முத்துக் கோர்வை போன்ற பல்வரிசையும், குளிர்ந்த நோக்கமும் அவளது அழகை மிகுதிப் படுத்திக் காட்டின. புன்னகையுடனேயே அவள் உள்ளே வந்தாள். சிறிது நாணத்தோடு மெல்லியகுரலில், "வாருங்கள்!" என்று அன்புகனிய என்னை அழைத்தாள். அதற்கு நான் "ஆம்" என்று சொல்லிப் புன்னகை செய்தேன்.

ஒரு வாலிப டாக்டர் ஒரு பெரிய மனிதரின் மனைவியைத் தனியே சந்தித்துப் பேசுவதாகச் சிதம்பரத்துக்கும் மதுரைக்கும் இடையே உள்ள நாட்டினர் அறிவார்களானால் ஆச்சரியப்படுவார்க

ளென்பது நிச்சயம். கணவன், தந்தை, சகோதரன் முதலியோரல்லாத ஆண்மக்களிடம் பெண்மக்கள் பேசக்கூடாதென்பது மாத்திரமல்ல அவர்கள் இருக்குமிடத்தின் பக்கங்கூடப் போகக்கூடாதென்பது அந்தப் பக்கத்தாரின் அபிப்பிராயம். இச்செயல் அவநம்பிக்கையையும் வஞ்சக நெஞ்சத்தையும் காட்டுகிறது. அல்லாமலும், துன்மார்க்க நடத்தையை மறைமுகமாக வளர்ப்பதாகவும் ஆகிறது. பரிசாரகன் வேண்டியவனாயிருந்தால், இடைப்பந்தியிலிருந்தாலென்ன? கடைப்பந்தியிலிருந்தாலென்ன? ஆண்களுக்கும் பெண்களுக்கும் தங்கள் நடத்தையில் பூரணமான நம்பிக்கையிருக்கும் பக்ஷத்தில், இது போன்ற அநாகரிகமான சட்டங்களை வகுக்கவேண்டிய அவசியமில்லை. சென்னையில் இவ்வழக்கம் பெரும்பாலும் அநுஷ்டானத்தில் இல்லை. ஆண் பெண் என்ற விகற்பமில்லாமல் கள்ளங்கபடமின்றி சம்பாஷிக்கும் வழக்கமுண்டு. எனவே, நான் தெய்வநாயகம் பிள்ளையின் மனைவியிடத்தில் தனிமையாகப் பேசுவதைப்பற்றிச் சந்தேகமோ விகற்பமோ கொள்ளவில்லை. முகமன் கூறியபின், அந்தப் பெண்மணி விரித்திருந்தஇரத்தின ஜமுக்காளத்தின்மீது உட்கார்ந்தாள்.

"வைத்தியரே, தாங்கள் எனது அழைப்பைப் பெரிதாக நினைத்து இங்குவந்ததற்காகப் பெரிதும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்," என்று இனிமையாகக் கூறினாள் அவள்.

"ஒவ்வொருவர் அழைப்பிற்கும் காத்துக் கொண்டிருக்க வேண்டுவது வைத்தியனின் கடமையாகும். ஆனால், எதற்காக இங்கு நான் அழைக்கப்பட்டிருக்கிறேனென்பதை அறிய விரும்புகிறேன்," என்றேன் நான்.

"வைத்தியரே, எனக்குச் சொத்து சுகத்தில் குறைவில்லை இருந்தும், இடைவிடாமல் துக்கத்துக்கு ஆளாகிவருகிறேன். அதன் காரணந்தான் விளங்கவில்லை!" என்று சொன்னாள் அந்தப் பெண்மணி.

"அம்மா, தாங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லை. தாங்கள் சொல்வதைப் பார்த்தால் நோய் காரணமாகத் தாங்கள் துக்கப்படவில்லையென்று தோன்றுகிறது!" என்றேன் நான்.

"இல்லை, நோய்தான்!" என்றாள் அவள்.

"என்ன நோய்?" என்றேன் நான்.

"அதை அறியத்தான் தங்களை அழைத்தேன்," என்று கூறினாள் அவள். நான் சற்று நேரம் திக்குமுக்காடினேன். எனது கேள்வி முட்டாள்தனமான கேள்வியல்லவா?

"தங்களுடைய தேக நிலையைக்கொண்டு தாங்கள் பலவீனத்தால் ஒரு சமயம் கஷ்டப்படக் கூடுமோவென்று கருதுகிறேன்," என்று வெட்கத்துக்கு ஆற்றமாட்டாமல் நான் உளறினேன்.

"ஆனால், வைத்தியரே, எனது வியாதியைச் சொஸ்தப்படுத்த முடியுமென்று நினைக்கிறீர்கள்?" என்றாள் அவள்.

"ஏன் முடியாது?"

"பெண்மக்கள் அனவரதமும் மனங்கலங்கும்படிச் செய்து வரும் அந்தப் பெரிய நோயைத் தங்களால் தீர்க்க முடியுமென்று நான் நம்பவில்லை."

"அதென்ன பெரிய நோய்?"

"அதுதான்—" என்று சிறிது மெதுவாகச் சொல்லிக் கொஞ்ச நேரம் தாமதித்து, "காதல்!" என்று முன்னிலும் தணிந்த குரலில் கூறினாள்.

"காதலா—? காதல் என்பது ஒரு நோயா?" என்று கலக்கத்துடன் நான் உசாவினேன்.

"வைத்தியரே, காதல் ஒரு நோய் என்பதில் தினையளவும் சந்தேகமில்லை. தங்கள் வைத்தியசாஸ்திரத்தில் அந்த நோயைப்பற்றிச் சொல்லவில்லையா? அல்லது தாங்கள் படிக்கவில்லையா? காதல் உதித்த உள்ளத்தை அது வருத்துகிறது. ஆதலின், காதலர் வருந்துகின்றனர். வருந்துதல் நோய் அல்லவா?" என்றாள் அவள்.

மேற்கண்ட அவளுடைய நுண்ணிய வசனம் என்னைத் திடுக்கிடச் செய்தது. ஆனால், ரசமும் கருத்தும் அடங்கியதாகவிருந்தது. அவள் தனது கணவனைக் காதலித்து மணக்கவில்லையென்றும், வேறு எதன்பொருட்டோ மணந்திருக்கிறாளென்றும் நான் யூகித்தறிந்தேன்,

எனவே, அவளால் காதலிக்கப்பட்ட வேறொரு வாலிபனைக் குறித்து அவள் கவலையடைகிறாள் என்றும் நினைத்தேன். ஏனெனில், கணவனையுடைய ஒருத்தி காதல் ஒருநோய் என்று சொல்லி வர்ணித்து பேசவேண்டிய அவசியமில்லையல்லவா? அவளுடைய உள்ளக் கிடக்கையைத் தெளிவாக அறிய விரும்பிய நான், "அம்மா, தாங்கள் முற்றும் சந்தோஷத்தை இழந்து விட்டீர்கள் அல்லவா?" என்று வினவினேன்.

"உண்மை. நரம்பு சம்பந்தமான நோய்களைத் தீர்ப்பதில் தாங்கள் வல்லவர் என்று கேள்விப்பட்டுதான் நான் தங்களிடம் வந்தேன்!" என்றாள் அவள்.

"யார் மூலமாகக் கேள்விப்பட்டீர்கள்?" என்றேன் நான்.

"சென்ற வாரம் திருவல்லிக்கேணி கடற்கரையில் எனக்குத் தெரிந்த ஒரு ஸ்திரீ தங்களைப் பற்றிப் பிரஸ்தாபித்தாள்!"

"தங்களுடைய பெயர் என்னவோ?"

"என் பெயர் சுவர்ணாம்பாள்"

"சுவர்ணாம்பாள்! பேஷ்! கர்நாடகப் பேராயிருந்தாலும் நன்றாக இருக்கிறது.!" என்று நான் சிரித்துக் கொண்டே சொன்னேன்.

"பரிகாசமான பேராகத்தான் வைத்து விட்டனர்!" என்று அவளும் சிரித்துக் கொண்டே கூறினாள்.

"நரம்பு சம்பந்தமான வியாதியால் தாங்கள் துன்பப்படுகிறீர்கள் அல்லவா?" என்றேன் நான்.

"ஆம். எனது நோய் பயங்கரமானது. காதலுக்கும் வெகு தூரத்திற்கப்பால் என்னை வெருட்டியடிக்கிறது!" என்று அவள் வருத்தத்தோடு பேசினாள்.

"ஒரே ஒரு சங்கதி கேட்கிறேன், நீங்கள் கோபித்துக் கொள்ள மாட்டீர்களே?" என்றேன் நான்.

"ஐயோ, கோபம் என்ன வந்தது? வைத்தியர் என்ற தோரணையில் எந்தக் கேள்வியும் தாங்கள் கேட்கக் கூடும்!" என்றாள் சுவர்ணாம்பாள்.

"தங்களுக்கும் தங்கள் கணவனுக்கும் இடையில் ஒரு காதலன் தோன்றியிருக்கிறானா?" என்று தைரியத்துடன் வினவினேன் நான்.

"எனக்கும் என்கணவனுக்குமிடையில்" என்று அச்சத்துடன் கூறித் தன் உடம்பைக் கொஞ்சம் பின்னுக்கிழுத்தாள் சுவர்ணாம்பாள். சற்று நேரம் தாமதித்து, "இல்லை. இல்லை, வைத்தியரே, நான் சொன்னதை நீங்கள் தப்பர்த்தப் படுத்திக்கொண்டீர்கள்! நான் எனது சொந்தக் கணவனையே காதலிக்கிறேன். இது மறுக்கக் கூடாத உண்மை. ஆனால், அந்தக்கணவன் என்னைத் திரும்பிக் கூடப் பார்ப்பதில்லை!" என்று விசனத்துடன் அலறினாள்.

சுவர்ணாம்பாள் வாய்மொழி மென்மேலும் என்னைப் பைத்திய உலகத்துக்குத் தள்ளிச் சென்றது. பார்வைக்கு அவள் வஞ்சகியாக தோன்றவில்லை. வார்த்தைகளோ கர்நாடகம் பிடித்தவைகளாயிருந்தன. "என்னிடமிருந்து எதையேனும் கிரகிக்க இவ்வாறு பேசுகின்றாளா? என்னவோ?" என்று நான் எண்ணினேன்.

"அம்மா, தாங்கள் சொல்வது நிஜமாக இருக்கலாம். ஆயினும், காமாந்தகாரமான நெஞ்சத்தைப் பரிசோதிக்க முடியாது. வைத்திய நூற்களாலும் சாத்தியப்பட்ட விஷயமல்ல." என்று நான் விநயமாகக் கூறினேன்.

"என் அந்தரங்கத்தை வெளிப்படையாகத் தங்களிடம் கூறிவிட்டதற்காக தாங்கள் என்னை ஒரு முழுமுட்டாள் என்று நினைக்கக் கூடும். இது இயல்பான சங்கதிதான்!" என்றாள் சுவர்ணாம்பாள்.

சுவர்ணாம்பாளின் மனத்தைத் திருப்திசெய்யக் கூடாதவனாக நான் தோன்றினேன். அவளுடைய வருத்தம் பொறுக்கக்கூடாததாகத் தோற்றியது. நான் உண்மையாகவே அவளைப்பற்றித் தப்பபிப்பிராயப்பட்டுவிட்டேன். அவள் நரம்புத்தளர்ச்சி வியாதியால் வாதனைப்படுகிறாளா இல்லையா என்பதும் சந்தேகந்தான்.

"அம்மா, நான் தங்கள் மனம் வருந்தும்படி ஏதேனும் சொல்லியிருந்தால் மன்னித்துக்கொள்ள வேண்டுகிறேன். தங்களுடைய உண்மையான வியாதியைத் தெரிவித்தால் தக்கமருந்து கொடுக்கிறேன்," என்றேன் நான்.

"அதிருக்கட்டும் வைத்தியரே, ஒருத்தி தனது கணவனின் காதலை எப்படிப் பெறக்கூடும் என்பதைத் தாங்கள் தெரிவிக்க முடியுமா ?" என்று ஓர் ஆச்சரியமான கேள்வியை எழுப்பினாள் சுவர்ணாம்பாள்.

"கணவனுடைய காதலை மனைவி எப்படிப் பெறுவது ? இது ஓர் ஆச்சரியமான கேள்விதான். அன்புக்கு வசப்படாத மனிதருண்டா ? கற்பின் திலகமாகிய ஒரு பெண்மணி - தனது உள்ளத்தைக் கணவனுக்கே அர்ப்பணம் செய்யவேண்டும் என்ற விரதமுடைய பெண்மணி, தன் கணவனிடம் எவ்வெவ்விதம் நடந்துகொள்ளவேண்டுமென்று தீர்க்க யோசித்து அதன்படி நடந்துவருவாளானால், அவளுடைய கணவன் அவளுடைய இஷ்டத்துக்கு மசியாமல் போகமாட்டான். இதுதான் அதற்கு வழி," என்றேன் நான்.

"தாங்கள் சொல்லியதில் சிறிதும் வழுவாது எனது கணவனிடத்தில் நான் நடந்து வருகிறேனென்பது சத்தியம் !"

"அப்படி நடப்பது உண்மையாயிருந்தால், தங்கள் கணவர் தங்களது இஷ்டப்படி நடப்பார் என்பதும் சத்தியம்!"

"அதென்னவோ, எது எப்படியிருந்தபோதிலும், தங்கள் உதவியை நான் மிகவும் வேண்டுகிறேன்."

"எந்த நிமிஷமும் என் உதவி தங்கள் கையிலிருக்கின்றது."

"எனது நாயகருக்குத் தெரியாமல் நான் தங்களிடம் யோசனை கேட்கிறேனென்பது தங்களது ஞாபகத்திலிருக்கட்டும்!"

"தங்கள் நாயகருக்குத் தெரியாமல் ஒரு காரியத்தைச் செய்வது தவறு தான். ஆனால், அது நன்மையைத் தருமென்றால் அப்படி நடப்பதும் நியாயமேயாகும்.

'பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த

நன்மை பயக்கு மெனின்,'

என்கிறார் நாயனார். பொய் பேசுவது குற்றந்தான். ஆனாலும், அதே பொய்யானது குற்றமில்லாத நன்மையைச் செய்யும்பொழுது மெய்மையைச் சேர்ந்து புனிதமடைகிறது. இதுதான் அதன் அர்த்

தம். தங்கள் கருத்தும் இவ்விதிக்கு ஒத்திருக்குமாயின், நன்மை தான்.''

''இனித் தங்களிடத்திலேயே வைத்தியம் செய்து கொள்ள நான் தீர்மானித்திருக்கிறேன்!''

''அப்படியே ஆகட்டும். எனது தோழர் கோபாலனுடைய ஆஸ்பத்திரியில் நான் தற்காலிகமாக உத்தியோகம்பார்த்து வருகிறேன். அவர் ஊரிலிருந்து வந்த பிறகு நான் போய்விடுவேன்.''

''என்னைத் தனியே விட்டுவிட்டா—? வைத்தியரே, விட்டு விட்டா போய் விடுவீர் ? நான் நம்பவில்லை !''

''அம்மா, இந்த நிமிஷம் வரையில் தங்களை எனது நோயாளியாகவே நான் கருதியிருக்கிறேன்.''

''தயவு செய்து அப்படிச் சொல்ல வேண்டா. தாங்கள் என்னை சிநேகிதர்களிலொருத்தியாக நினைக்கக் கூடாதா ?''

''தங்கள் நட்பு எனக்குக் கிடைக்கும் பாக்கியத்தை என்னால் இழக்கமுடியாதென்பது நிச்சயம்!''

சுவர்ணாம்பாளின் வெண்மையான உள்ளத்தைக் கண்டு நான் ஆச்சரியப்பட்டேன். தனது நாயகனைப்பற்றி எவ்வளவு தூரம் கவலைப்படுகிறாளென்பதை அவளுடைய முகம் நன்கு நிரூபித்தது. அவள் என்னிடம் தெரிவித்தபடி அவளுடைய நரம்புத் தளர்ச்சிக்காக ஒரு மருந்துமுறை எழுதத் தொடங்கினேன். அவள் அதைக் கூர்ந்து நோக்கினாள். அவளது முகம் பூரணமாகப் பிரகாச மடைந்தது.

''வைத்தியரே, தாங்கள் எனக்கு உதவி செய்ய முன் வந்ததற்காக அநேக வந்தனம். இனித் தாங்கள் எனது குடும்ப சிநேகிதராயிருப்பீர்களென்றும் நம்புகிறேன்,'' என்றாள் சுவர்ணாம்பாள்.

''நானும் அப்படியே கருதுகிறேன். தங்கள் தேகத்தில் தாங்கள் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும்!'' என்று நான் சாதாரணமாகச் சொன்னேன்.

''ஆனால், வைத்தியரே, வைத்திய சாஸ்திரத்தில் எனக்கு நம்பிக்கையுண்டாவதில்லை. எனக்காக மருந்துமுறை எழுதிய

சிரமத்திற்காக நான் தங்களிடம் மன்னிப்புக் கேட்கக் கடமைப் பட்டிருக்கிறேன். ஏனெனில், அந்த மருந்தை நான் சாப்பிடப் போவதில்லை,'' என்றாள் அவள்.

''ஏன்?'' என்று நான் ஆச்சரியத்தோடு விழித்தேன்.

''எனக்கு நரம்பு சம்பந்தமான எவ்வித வியாதியும் இல்லை!'' என்று அலட்சியமாகக் கூறினாள் சுவர்ணாம்பாள்.

''என்ன? வியாதி ஒன்றும் இல்லையா?''

''வியாதி இருக்கிறது இல்லை என்பதைக்கூட வைத்தியராகிய தங்களால் கண்டு பிடிக்க முடியவில்லையா?''

''அட கஷ்டகாலமே! அப்படியானால் என்னை ஏமாற்றுவதற்கோ, அல்லது பரிகசிக்கவோ, அசட்டுப் பட்டம் சூட்டவோ இங்குத் தாங்கள் என்னை அழைத்தீர்கள் போலும்!''

''இல்லை. அப்படி நினைக்கவேண்டாம்! மன்னித்துக் கொள்ளுங்கள். கோபிக்கவேண்டாம்!''

''அம்மா! ஒரு வைத்தியனுடைய நேரம் விலைமதிக்க முடியாதது!''

''நான் தங்களைத் தங்கள் வீட்டில் வந்து தேடி என்னுடைய விலாசத்தைக் கொடுத்து வந்ததற்குக் காரணம் கெட்ட எண்ணமல்ல. நல்ல கருத்துதான்.''

''அதென்ன நல்ல கருத்து?''

''தங்களை நான் அறிமுகப் படுத்திக்கொள்ள வேண்டுமென்ற நல்ல நோக்கமேயாகும்!''

''அறிமுகப் படுத்திக்கொள்வதற்குத் தாங்கள் அனுசரித்தவழி சரிதானா?''

''இப்பொழுதுதான் அது பிழையென்று தெரிகிறது! தாங்கள் என்னை மன்னித்துக்கொள்ளவேண்டும்!'' என்று சொல்லி இரண்டு கண்ணீர்த்துளிகளை வரவழைத்தாள் சுவர்ணாம்பாள்.

''அது போகட்டும். தாங்கள் என்னை எதற்காக அறிமுகப் படுத்திக் கொள்ளக் கருதினீர்கள்?''

"வைத்தியரே, என்னைத் தாங்களுக்குத் தெரியாது. நான் தங்களை நன்கறிவேன். வெகுநாளைக்கு முன்னரேயே அறிவேன். தாங்கள் எனது இரத்தபாத்யமுள்ள எனது உறவினர்!" என்றாள் சுவர்ணாம்பாள்.

"என்ன—?"

"ஆம். சந்தேகப்படவேண்டா. தாங்கள் எனது தாயோடு கூடப்பிறந்த மாமன் புதல்வர்!"

"மாமன்—புதல்வனா? இதை என்னால் நம்பவே முடியவில்லை!"

"தங்களது தந்தையும் எனது தாயும் ஒரே தாயின் புத்திரர்கள்! தாங்கள் என்னைப் பார்க்காதிருந்ததற்குத் தக்கக் காரணங்களிருக்கின்றன!"

"என்ன காரணங்கள்?"

"தாங்கள் ஐந்து வயது சிறுவராயிருந்த பொழுது நான் எனது பெற்றோருடன் யாழ்ப்பாணத்துக்குச் சென்று விட்டேன். எனக்கு அப்பொழுது பத்துவயதிருக்கலாம். அந்த நாளிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பவே இல்லை!" என்றாள் சுவர்ணாம்பாள்.

அவளுடைய வார்த்தை என்னை வியக்கச் செய்தது. யாழ்ப்பாணத்தில் எனது வம்சத்தைச் சேர்ந்த உறவினர்களிருக்கிறார்கள். முக்கியமாக எனது அத்தைக் குடும்பமிருக்கிறது என்று நான் நன்கறிவேன். ஆதலின், சுவர்ணாம்பாளின் வார்த்தையில் உண்மை இருப்பதாக அறிந்தேன்.

"கடந்த இருபது வருடமாக ஏன் தாங்கள் இந்தியாவுக்கு வரவில்லை!" என்றேன் நான்.

"தங்கள் தந்தைக்கும் எனது தந்தைக்கும் ஏற்பட்டிருந்த மனஸ்தாபம் காரணமாகவே நாங்கள் உங்கள் வீட்டுக்கு வருவதை நிறுத்திவிட்டோம்!" என்றாள் சுவர்ணாம்பாள்.

"தங்களது கல்யாணம் எங்கு நடந்தது."

"எனது நாயகர் எனது தந்தை வழியைச் சேர்ந்த உறவினர். அவர் கொழும்பில் கவர்மெண்டு உத்தியோகஸ்தராயிருந்தார். அவருக்கும் எனக்கும் கொழும்பிலேயே விவாகம் நடைபெற்றது!"

"அப்படியா? எனது தந்தையின் பெயர் தங்களுக்கு ஞாபக மிருக்கின்றதா?"

"அதை எப்படி மறக்க முடியும்? எனது மாமாவாகிய உங்களது தந்தையார் பெயர் அம்பலத்தரசம்பிள்ளை! உங்களது அன்னையார் பெயர் அம்புஜாட்சி ஆட்சி! நமது பாட்டனார் பெயர் இளம்பூரணம் பிள்ளை! போதுமா?" என்று கூறி பரிகாசமாகப் பார்த்தாள் சுவர்ணம்பாள்.

"ஆச்சரியமான சந்திப்பு! இருபது வருஷங்களுக்குப் பின்னால் இரத்த பாத்யமுள்ள எனது உறவினரோடு பழகுவது ஆச்சரியம்! எனது அத்தை அவர்களை நான் பார்த்ததே இல்லை! அவர்களுடைய பெயரென்ன?"

"எனது அம்மாவின் பெயரா? வேதசௌந்தரி!" என்றாள் சுவர்ணம்பாள்.

"கிருஸ்துவ பேர்மாதிரியிருக்கிறதே!"

"வேதசௌந்தரத்தாச்சி! இப்பொழுது சைவாள் பெயர் மாதிரி இருக்கிறதா?" என்று சொல்லிச் சிரித்தாள் சுவர்ணம்பாள்.

"நீங்கள் இவ்வளவு வருஷத்துக்குப் பின்னால் என்னை எப்படி அடையாளம் கண்டு பிடித்தீர்கள்?"

"தங்களது வலது கண் புருவத்தின் ஓரமாக இருக்கிற மச் சந்தான் தங்களைக் கண்டு பிடிக்க உதவியாயிருந்தது. ஒரு நாள் தங் களைப் புரசைப்பாக்கம் ஹைரோட்டில் நடந்து செல்லக் கண் டேன். வெகு பிரயாசையுடன் அடையாளங் கண்டுபிடித்தேன். அப் பொழுது என்னோடு மற்றொருவர் வந்தார். அவரை விசாரித்த போது, தாங்கள் வேளாளர் தெருவிலிருக்கிறீர்கள் என்பது தெரிய வந்தது. அதற்குப் பிறகு தங்கள் ஆஸ்பத்திரிக்கு வந்து தேடி னேன். தாங்கள் ஊரிலில்லை. எனது விலாசத்தைக் கொடுத்துவிட்டு வந்தேன்!" என்றாள் சுவர்ணம்பாள்.

"சரிதான், தங்களது நாயகரை நான் பார்க்க விரும்புகிறேன். அவர் இப்பொழுது எங்கே போயி—" என்று அரைகுறையாக சொல்லிக் கொண்டிருந்த பொழுது, "அக்கா! அக்கா!! எங்கே

இருக்கிறாய்? மணி எத்தனையாகிறது பார்த்தாயா?" என்று இனிய குரலில் யாரோ பேசியது எனது காதுகளைப் பரவசப்படுத்தியது. ஆச்சரியத்துடன் சப்த மெழுந்த உள் வாயிற்படிப்பக்கம் பார்த்தேன். ஆ! எனது கண்கள் பரவசமடைந்தன! அங்கே ஓர் அழகி நின்றாள்! நானும் பார்த்தேன்; அவளும் பார்த்தாள்! நானும் பரவசமடைந்தேன்; அவளும் பரவசமடைந்தாள். அப்பெண்மணி யாரென்று நினைக்கிறீர்கள்? காலஞ் சென்ற ஜனக குமாரிதான்!

என்ன விந்தை! என்ன வியப்பு! ஜனகம் இறந்து போய்விட்டா ளென்றது உண்மை! அன்று இந்திரலிங்கத்தின் வீட்டில் பிணமாகக் கிடந்தாள்! உடம்பு ஜில்லிட்டிருந்தது. நாடி பேசவில்லை. சுவாசம் அறவே நின்று போயிற்று. கண்மணிகள் அசையவே இல்லை. இதற்குமேல் சாவுக்குறி வேண்டுமோ என்ன? அவள் இறந்தேகிடந்தா ளென்றது நிச்சயம்! உயிரோடு நிற்பதுவும் அதே ஜனகம்! அதி லும் சந்தேகமில்லை! இவை இரண்டையும் என்னைத்தவிர வேறு யாரும் நம்பமுடியாது. வெளியே சொன்னால் என்னைப் பித்தன் என் பீர்கள்!

என்னையே உற்று நோக்கிய உயிருள்ள ஜனககுமாரியை நான் இமைக் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தேன். அவள் ஜனகமே! சந்தேகமில்லை. வெள்ளை வெளேரென்று தூய்மையான வஸ்தி ரத்தில் சரஸ்வதி போலக் காட்சி அளித்தாள் அவள். அவளு டைய கழுத்தில் பொற்சங்கிலி பளபளவென்று பிரகாசித்துக்கொண் டிருந்தது. மாங்கல்ய சரடும் கிடந்ததா இல்லையா என்பதை அறிய என்னால் முடியவில்லை.

உருக்கிவார்த்த தங்கப்பதுமையைப் போல நின்றிருந்த ஜனகம்-மெய்மறந்து பரவசப்பட்டிருந்த அவள் தனது நல்லுணர்ச்சி அடைந்த போது வெட்கி நாணி ஓடிமறைந்துவிட்டாள். ஜனகம் மறைந்த பிறகு நான் எனது பார்வையைச் சுவர்ணம்பாள் பக்கமாகத் திருப்பி னேன். அவள் என்னை ஒரு விதமாகப்பார்த்தாள்.

"என்ன யோசிக்கின்றீர்கள்? 'அக்கா! அக்கா!' என்று அழைத் தது யார் என்று நினைக்கிறீர்கள்? அவள் எனது தங்கை கனகவதி!', என்றாள் சுவர்ணம்பாள்.

"கனகவதியா?" என்று நான் பேராச்சரியத்துடன் கேட்டேன்.

"ஆம். கனகவதிதான்! இதோ கூப்பிடுகிறேன் பாருங்கள். அம்மா கனகவதி! இப்படிவா!" என்று கூப்பிட்டாள் சுவர்ணம் பாள். நான் பேராவலுடன் வழியைப் பார்த்தேன். ஆனால் ஏமாந்து போனேன். அவள் உள்ளிருந்து வெளியே வரவில்லை.

"அம்மா கனகம், சும்மா வா; பரவாயில்லை. இவர் ஒரு வைத்தி யர் தாம்!" என்று மறுபடியும் கூப்பிட்டாள் சுவர்ணம்பாள்.

அப்பொழுதும் அவள் அங்குவரவில்லை.

ஜனக குமாரியைச் சுவர்ணம்பாள் கனகவதியென்று தெரிவிக் கின்றாள். அவள் ஜனககுமாரியா, கனகவதியா? ஜனககுமாரி என்ப வள் யார்? கனகவதி என்பவள் யார்? கனகவதி என்னும் பெயரை ஜனககுமாரி என்று இந்திரலிங்கம் மாற்றிக்கூறினரு? அல்லது, ஜனககுமாரி என்னும் பெயரைக் கனகவதியென்று சுவர்ணம் பாள் மாற்றிச் சொன்னளா? ஆனல், எந்தப் பெயரையுடையவளா யிருந்தாலும், அவள் எனது மனைவியே! நான் அவளுடைய சொந்தக் கணவனென்பதை அவள் அறியமாட்டாள்!

ஜனக குமாரிதான் மடிந்துவிட்டாளே என்று மனங்கலங்கி ஏங்கினேன். அவளோ இன்னும் உயிரோடிருந்துகொண்டு, எதிர் காலத்திலும் என்மனத்தை வதைப்பாள்போலிருக்கிறது!

இரண்டாமுறை அழைத்ததற்கும் ஜனககுமாரி நாங்கள் இருந்த அறைக்கு வராததைக்கண்ட சுவர்ணம்பாள் என்னைப்பரிகா சமாகப் பார்த்தாள்.

"ஏன் மனக்கஷ்டப்படுகிறீர்கள்? அத்தை மகளல்லவா? அத் தான் முன்வர வெட்கப்படுகிருள் போலும்!" என்று என்னை நோக் கிக்கூறிவிட்டுச் சுவர்ணம்பாள், 'கனகா! கனகா!! சும்மா வா' பரவா யில்லை!" என்று மூன்றும்முறையும் கூப்பிட்டாள்.

"வேண்டா விடுங்கள். வெட்கப்படும் பெண்ணை ஏன் கஷ்டப் படுத்துகிறீர்கள்?" என்று வஞ்சகமாகக் கூறினேன் நான். ஜனக குமாரியைக் கண்ணாரக் காணவேண்டுமென்ற ஆவல் என் உள்ளத் தில் நிரம்பி இருந்தது. ஆனல் என்ன செய்வது? உபசாரத் திற்கு ஜனகத்தை வற்புறுத்த வேண்டாமென்று சொல்லித்

தொலைக்க வேண்டியிருந்தது. இஷ்டமில்லாவிட்டாலும், நிலைமைக் குத்தக்க உபசார வார்த்தைகளைச் சொல்லவேண்டிய சந்தர்ப்பம் வாழ்க்கையில் அடிக்கடி ஏற்படுவதுண்டு.

"வெட்கந்தான் காரணம்! இருக்காதா என்ன? இருங்கள், இதோ வருகிறேன்," என்று சொல்லிக்கொண்டே சுவர்ணும்பாள் எழுந்து சென்றாள். அவள் வாயிற்படியைத்தாண்டிச் சென்றபொழுது, "கனகா, என்னவெட்கம் வந்தது? உனது மாமன் மகன் ராஜேஸ்வரனல்லவா அந்த டாக்டர்?" என்று சொல்லிய வார்த்தைகள் என் காதுகளில் விழுந்தன. பிறகு, தங்கையும் தமக்கையும் ஏதேதோ பேசிக்கொண்டது காதில் விழுந்தது. ஐந்து நிமிஷத்தில் சுவர்ணும்பாள் திரும்பி வந்தாள்.

"நாங்களிருவரும் இன்று தாம்பரம் கல்யாணபவனத்தில் நடைபெறும் ஒரு தேநீர் விருந்துக்குச்செல்கிறோம்," என்றாள் சுவர்ணும்பாள்

"தாங்களும் கனகவதியுமா?"

"ஆம்."

"சரி. சென்று வாருங்கள். நானும் சென்று வருகிறேன்!" என்று சொல்லிவிட்டு இருக்கை விட்டெழுந்தேன். மணி பன்னிரண்டடித்தது.

"என்ன அவசரம்?" என்றாள் சுவர்ணும்பாள்.

"கடந்த ஒரு வாரமாக வியாதியஸ்தர்களைச் சரியாகப் பார்வையிடவில்லை. வீண்காலம் கடத்த இது சந்தர்ப்பமில்லை. சௌகரியப் பட்டால் மற்ெறாரு முறை இங்கு வருகிறேன்" என்றேன் நான்.

"சௌகரியப் பட்டால்-இதென்ன அநாகரிமானபதம்? ராஜேஸ்வரரே, தாங்கள் எங்களுக்கு எவ்வளவு நெருங்கிய பாத்தியமுடையவர்களென்பதை எந்தக் காலத்திலும் மறந்துவிட வேண்டா!" என்று மனங்கசிய உரைத்தாள் சுவர்ணும்பாள்.

"இனி ஒருபோதும் உங்களை மறக்கமுடியாது! அப்படிச் சொன்னதற்கு மன்னிக்க வேண்டுகிறேன்!" என்று சொல்லி விடைபெற்றுக்கொண்டு ஒரு ரிக்ஷாவண்டி பிடித்துக்கொண்டு புரசைக்குப் புறப்பட்டேன்.

6. பிழைத்தது எப்படி?

வீட்டிற்குள் புகுந்தேன். கோபாலன் ஒரு நாற்காலியில்சாய்ந்துக் கொண்டு புன்னகை அரும்பியவனாய் இருந்தான்.

"ராஜேஸ்வரா, சௌக்கியந்தானா? எங்குப் போய்விட்டு வருகிறாய்? நமது நோயாளிகளெல்லாம் எப்படியிருக்கின்றார்கள்?" என்றான் கோபாலன்.

"நீ எந்த வண்டியில் வந்தாய்?"

"சற்று முன்தான் வந்தேன்!"

"ஓகோ! நீ கிராமத்துக்குச் சென்ற பிறகு எனது சரித்திரத்தில் நம்பமுடியாத சில ஆச்சரிய நிகழ்ச்சிகள் எல்லாம் ஏற்பட்டன!" என்றேன் நான்.

"அவை என்ன?"

"உன்னை ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்த்துக்கொண்டுதானிருந்தேன். நல்ல வேளை; வந்து சேர்ந்தாய். மாடிக்கு வா, சொல்கிறேன். மிகவும் இரகசியமான விஷயங்கள்!" என்று சொல்லி மாடிக்குக் கோபாலனை அழைத்துச் சென்றேன்.

மாடிக்குச் சென்ற பிறகு, கோபாலன் சென்றது முதல் அன்று வரையில் நடந்த எல்லா விவரங்களையும் விளக்கமாக எடுத்துச்சொன்னேன். கோபாலன் ஆச்சரியமும் திகிலும் அடைந்தான்.

"ராஜேஸ்வரா, நான் இது வரையில் இது போன்ற அதிசயக் கதையைக் கேட்டதில்லை. ரெயினால்ட்ஸ் பிரபு எழுதிய கதை கூடத் தேவலை போலிருக்கிறதே! உனக்குக் கலியாணமானது நிஜந்தானா?" என்றான் கோபாலன்.

நான்:—சந்தேகமில்லாமல்! ஆதிகாலத்துத் தமிழர் நாகரிகத்தில் கொஞ்சங்கூட மாறுபாடில்லாமல் கல்யாணம் இனிது நடந்தேறியது. ஆனால் ஒன்று, நான் எனது மனைவியை நன்கறிவேன். அவளுக்கு என்னைப்பற்றி ஒன்றும் தெரியாது! சுவர்ணாம்பாள்

அவளுக்குத் தெரிவித்தபடி என்னைத் தனது மாமன் மகனாகவே கருதியிருப்பாள்.

கோபாலன்:—அதிருக்கட்டும். உனது மனைவி இறந்துவிட்டாள் என்பதைத் தீர ஆராய்ந்தறிந்த பிறகுதானே தீர்மானித்தாய்?

நான்:—அந்த விஷயத்தில் உனக்குச் சந்தேகமே வேண்டா. கடவுள் சாட்சியாகச் சொல்கிறேன். அவள் இறந்துபோனது உண்மை. கொலையுண்டுதான் செத்திருக்கவேண்டும்! அவள் எப்படிப் பிழைத்தாளென்பதுதான் தெரியவில்லை.

கோபாலன்:— செத்தவர் எப்படிப்பிழைக்க முடியும்? அவள் செத்திருக்க மாட்டாள். உனது சோதனையில் பிசகு ஏற்பட்டிருக்க வேண்டும்!

நான்:—எத்தனைதரம் திருப்பித்திருப்பிச் சொல்வது? அவள் இறந்துவிட்டாள் என்பதில் உனக்குச் சந்தேகம் வேண்டா. பிழைத்தது எப்படி? இதைத்தான் நாம் கண்டுபிடிக்கவேண்டும்

கோபாலன்:—ராஜேஸ்வரா, உன்மூளை குழம்பியிருக்கிறது என்றும் அல்லது நீ என் மூளையைக் குழப்புகிறாய் என்றும் என்னால் யிக்க முடியவில்லை. பொறு கொஞ்ச நேரம். யோசிக்கிறேன்.

நான்:—யாருமே ஒரு குழப்பம் குழம்பவேண்டிய விஷயந் தானே இது. ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வரமாட்டாரென்பது ஒப்பாரியில் கூடத்தெரியத் தக்க விஷயமல்லவா? அதனால்தான் எனது சித்தமும் சபலமடைகிறது.

கோபாலன்:—ஆனால், என் மண்டையில் பளிச்சென்று என்னவோ ஒன்று தோன்றுகிறது!

நான்:—என்ன?

கோபாலன்:—ஆதிகாலத்துத் தமிழர்கள் செத்தவர்களைப் பிழைப்பித்ததாகக் கூறப்படுகிறது. அதை இந்தச் சமயம் நம்ப வேண்டியிருக்கிறது. பறக்கும் விமானத்தைப்பற்றி முன் காலத்தில் ஒருவரும் நம்பவில்லை. இன்று அவ்விஷயத்தை நம்பாதவனைப் பைத்தியம் பிடித்தவன் என்று சொல்வோம். இல்லாத விஷயங்களைக் கண்டு பிடிக்க ஆராய்ச்சியும் நம்பிக்கையும் காரணமாக இருக்கின்

றன. இந்திரலிங்கக் கோஷ்டியார் பழைய காலத்து ஏட்டுச் சுவடிகளின் மூலமாகச் செத்தவர்களை எழுப்பும் வித்தையைக் கற்றுக் கொண்டிருக்க முடியாதா?

நான்:—அதைத்தான் என்னால் நம்பமுடியவில்லை.

கோபாலன்:—நமக்கு எது மூடநம்பிக்கையாகத் தென்படுகிறதோ அது மேனாட்டாருக்கு நம்பிக்கையாக இருக்கிறது. தாமஸ் ஆல்வா எடிஸன் கிராம்போன் முதலியவைகளைக் கண்டுபிடிப்பதற்கு முன், ஒலியைப் பிடித்து வைத்துக்கொண்டு நம் இஷ்டம் போல உபயோகிக்கலாம் என்பதை யாராவது நம்பியிருப்பார்களா? எனவே, புராண இதிகாசங்களல்லாத மற்ற சாஸ்திரங்களில் திரண்ட உண்மைகளிருக்க வேண்டுமென்பது எனது பூரண நம்பிக்கை. 'செத்தாரை எழுப்புவது உத்தரஞான சிதம்பரம்' என்று ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகள் சொல்கிறார். இதை விளையாட்டுக்குச் சொன்னதாகத் தெரியவில்லை. நிஜமாகவே செய்து காட்டியதாகத் தெரிகிறது. தமிழர் விஞ்ஞானத்திலும் ரசாயனத்திலும் வெகுகாலத்துக்கு முன் பரிபூரண தேர்ச்சி பெற்றிருந்தார்கள்! அந்த முறைகளில் சில இந்திரலிங்கத்துக்குச் சித்தியாயிருக்கலாம்.

கோபாலன் ஆங்கில நாகரிகத்தை அனுசரிப்பவனாயினும், தமிழர்களின் பண்டைய வைத்திய நூற்களில் பிரமாதமான பற்று வைத்திருப்பவன். ரசாயன முறைகளில் அவன் தமிழர் நூற்களைத் துருவித் துருவி ஆராய்வதுண்டு. செத்தவர்களில் பலரைச் சிலர் உயிர் பிழைப்பித்ததாகப் பண்டைச் செந்தமிழ் நூற்களிலும், சமஸ்கிருதம், தெலுங்கு நூற்களிலும் காணப்படுதலின், இறந்தவர்களை எழுப்பும் ஒரு வைத்திய முறை இருக்கிறதென்று நம்புகிறான் போலும்!

"என்னவோ அப்பா, என்னால் ஒன்றையும் நம்பக்கூடவில்லை. ஆனால், ஜனககுமாரி இறந்ததும் உண்மை! உயிருடனிருப்பதும் உண்மை! இவ்வளவுதான் எனக்குத் தெரியும்," என்று சொன்னேன் நான்.

கோபாலன்:—ஆச்சரியமும் இரகசியமும் நிறைந்த சம்பவந்தான் இது. இதைப்போலக் கேள்விப்பட்டது கூடவில்லை.

நான்:—ஆனால் கோபாலா, ஜனககுமாரி எவ்விதமான அந்தரங்கம் நிறைந்த வஞ்சக ஸ்திரீயாக இருந்தாலும் அவளை நான் மனப்பூர்வமாகக் காதலிக்கிறேன்.

கோபாலன்:—'காதல்! காதல்!' என்று ஜனங்கள் உயிரைத்தான் விடுகிறார்கள். நீயோ, விபத்தும் ரகசியமுமே உருவெடுத்து வந்தவள்போன்ற ஒரு ஸ்திரீயை 'மனப்பூர்வமாகக்' காதலிப்பதாகத் தெரிவிக்கிறாய். அழகுள்ள ஸ்திரீகள் சில சமயம் உயிருக்கு உலையாயிருப்பார்கள். குண அழகுள்ள ஸ்திரீகள் அவலக்ஷணமானவராயிருந்தாலும் காதலிப்பதற்கும் மனைவியாக்கிக் கொள்வதற்கும் தகுதியானவர்கள். நீ சொல்லும் கதையோ மூளையைக் கலக்கித் திகைக்கச் செய்கிறது. இந்திரலிங்கமோ, சுவர்ணாம்பாளோ உனது மனைவியின் பெயரைமாற்றிக் கூறியிருப்பதாகச் சொல்கிறாயே, அது எப்படிப் பொருந்தும்? ஜனககுமாரியும் கனகவதியும் இரட்டைப் பெண்மணிகளாயிருந்து, ஜனகம் சாக, கனகம் உயிருடன் இருந்தால்—?

நான்:—உனது உத்தேசம் மேலும் எனது மண்டையைக் குடைகிறது. இதற்குப் பதில் சொல்ல முடியவில்லை. ஆனால், ஜனககுமாரிதான் அவள். இதில் சந்தேகமில்லை.

கோபாலன்:—அப்படியானால், சுவர்ணாம்பாளும் சதியாலோசனைக் கூட்டத்தைச் சேர்ந்தவளாக இருக்கவேண்டும். இல்லாவிட்டால் ஜனககுமாரியைக் கனகவதி என்று மாற்றிக் கூறவேண்டிய அவசியமென்ன வந்தது? ஜனகமும் சுவர்ணாம்பாளும் இந்திரலிங்கம் பிள்ளையின் குமாரிகளா?

நான்:—மறந்தே விட்டேன்! சுவர்ணாம்பாளின் தந்தை பெயரென்னவென்று கேட்க மறந்து விட்டேன்! நான் மற்றொருமுறை சந்திக்கும்பொழுது மறந்துவிடாமல் கேட்டுத் தெரிந்துகொண்டு வருகிறேன்.

கோபாலன்:—ராஜேஸ்வரா, வீண் அவதிப் படவேண்டா. இன்றைய இரவு தாம்பரம் கல்யாணபவனத்தில் என்ன நடக்கிறதென்பதைத் தூரவிருந்து கவனித்துக் கொண்டுவா. பிறகு, யோசித்துக் கொள்வோம்.

மணி இரண்டடித்தது. நாங்கள் இருவரும் சாப்பிடச் சென்றோம்.

7. வியப்பைத்தந்த உரையாடல்

இரவு சுமார் ஏழுமணி இருக்கலாம். தாம்பரம் கல்யாணபவனத்துக்குச் சற்றுத்தூரத்தில் நான் நின்று கொண்டிருந்தேன். சுமார் ஐம்பது வயதுடைய கர்நாடக பிராமணக்கிழவர் ஒருவர் என்னை உற்று நோக்கிக்கொண்டே வந்தார். நான் கல்யாணபவனத்தைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அப்பிராமணர் என் அருகே வந்து, "என்ன பார்க்கிறீர்கள்?" என்று வினவினார்.

"அதோ தெரிகிறதே பங்களா, அது யாருடையது?"

"அதுவா? ராவ்பகதூர் ராமச்சந்திரம் பிள்ளையினுடைய கல்யாண பவனம்!"

"அப்படியா? அவரைப்பற்றிக் கேள்வியுண்டு. பார்த்ததில்லை. அவருடைய குணகுணங்கள் எப்படி?"

"அவருக்கென்ன குறைவு? அவர் ஓர் இலட்சாதிபதி! தங்கமான குணமுடையவர்!"

"அவருக்குக் குழந்தை குட்டிகளுண்டோ?"

"அதற்கும் குறைவில்லை! சுமார் இருபத்திரண்டு வயதில் ஒரு மகனிருக்கிறான். அவன் மூத்த தாரத்தின் குமாரன். இளையதாரத்துக்கும் குழந்தைகளிருக்கின்றன. இளையதாரமாகிய ஞானரத்தினத்தம்மாளுக்கும் மூத்த தாரத்தின் குமாரனுக்கும் அடிக்கடி மனஸ்தாபமுண்டாகும். அதன் காரணமாக ராமச்சந்திரம் பிள்ளை மிகவும் கஷ்டப்படுகிறார்."

"ஓகோ அப்படியா?"

நாங்களிருவரும் இவ்வாறு சம்பாஷித்துக் கொண்டே வேதவிலாஸமென்னும் காப்பி ஹோட்டலை அடைந்தோம். "இந்தச் சிற்றுண்டிச்சாலை நம்முடையதுதான்! வாருங்கள்; கொஞ்சம் காப்பி சாப்பிட்டுவிட்டுப் போகலாம்!" என்று வயோதிகர் சொல்லிக் கொண்டே வாயிற்படியின் மீது ஏறினார். நானும் அவரைப் பின் தொடர்ந்தேன். ஹோட்டலில் மின்சார விளக்குகள் பிரகாசத்துடன் எரிந்து கொண்டிருந்தன. கூடத்தின் நாற்புரமும் பல

வேறு அழகிய சித்திரப் படங்களும் நிலைக்கண்ணாடிகளும் மாட்டப் பெற்றுக் கண்களுக்கு விருந்தளிப்பனவாயிருந்தன. எனக்குப் புதிதாகப் பழக்கமான அப் பிராமணர் மேஜையினருகே போய் அமர்ந்து கொண்டு, என்னைத் தமதருகே கிடந்த ஒரு நாற்காலியில் அமரச் சொன்னார். காப்பிக் கொண்டுவரும்படி ஒரு வேலைக்காரனுக்குக் கட்டளையிட்டார். காப்பியை ஆற்றி அருந்திய பின்னர், நாங்களிருவரும் மறுபடியும் உரையாடத் தொடங்கினோம்.

“தங்களுக்கு வாசஸ்தலம் சென்னைதானோ?” என்றார் அப்பிராமணர்.

“ஆம். நான் ஓர் இங்கிலீஷ் வைத்தியன். இவ்வூருக்கு ஒரு வேலையாக வந்திருக்கிறேன். இருக்கட்டும், ராமச்சந்திரம் பிள்ளையைப் பற்றிச் சொல்லிக்கொண்டு வந்து, இடையில் நிறுத்தி விட்டீர்களே! அவர் அதிக நாளாகவே இவ்வூரில்தான் வசித்து வருகிறாரோ?”

“ஆம்.”

“அவருக்குப் பழக்கமான நண்பர்கள் இங்கு அடிக்கடி வருவதுண்டா?”

“ஆகா! வேண்டிய பேர் வருவார்கள். சென்னையிலிருந்துகூடச் சிலர் அடிக்கடி வருவதுண்டு!”

“அவர்களில் முக்கியமானவர்கள்—?”

“முக்கியமானவர்களா?—ஆம். திவான்பகதூர் தெய்வநாயகம் பிள்ளையும் அவரது குடும்பத்தினரும் ராமச்சந்திரம் பிள்ளைக்கு மிகவும் நெருங்கிய நண்பர்கள்! அக்குடும்பத்தார் அடிக்கடி இங்கு வருவார்கள்.”

“கனகவதி என்னும் ஒரு சிறு பெண் இப்பங்களாவுக்கு வருவதுண்டா?”

“கனகவதியா? அதென்னவோ தெரியாது. நேரில் பார்த்தால் ஒரு சமயம் தெரியவரும்.”

“ஒடிந்து விழுவாள் போல இருப்பாள். கருத்தடர்ந்த அவ்வளுடைய கூந்தல் நெளிநெளியாக இருக்கும். சற்று நீண்டமுகம். எலுமிச்சம்பழம்போன்ற நல்ல சிவப்புநிறமுடையவள், நெற்றி

அழகாகப் பிறைச்சந்திரனைப்போல இருக்கும். தகதகவென்று மின்னும் உருவத்தோடு சுமார் பதினைந்து அல்லது பதினாறு வயதிருக்கும். நல்ல அழகி."

"ஓ! நீங்கள் அவளைச் சொல்கிறீர்களா? இல்லையே, அவள் பெயர் கனகவதியல்லவே!"

"பின்னை என்ன?"

"ஜனககுமாரிக்குத்தான் நீங்கள் அடையாளஞ் சொல்கின்றீர்கள்! ஆம். அவள் தான், சுவர்ணம்பாளின் தங்கை! மதனசுந்தரத்தின் மனைவி என்று நிச்சயம் செய்யப்பட்டிருப்பவள்!"

"என்ன? என்ன? மதனசுந்தரத்துக்கென்று நிச்சயம் செய்யப்பட்டவளா?" என்று நான்கேட்டேன். என் உள்ளத்தில் வியப்பும் அச்சமும் உண்டாயின.

"ஆம். ஜனககுமாரி கல்யாணபவனத்துக்கு வரும்போதெல்லாம் மதனசுந்தரத்துடன் தெரிந்தும் தெரியாமலும் பேசிக்கொண்டிருக்கிறாளென்று வேலைக்காரர்கள் பேசிக்கொள்கிறார்கள்."

"நான் சொன்ன அடையாளமுடைய அதே பெண்மணியைப் பற்றியா தாங்கள் பேசுகிறீர்கள்?"

"ஆம். அவளே தான்! ஜனககுமாரியைத் தான் நீங்கள் கனகவதி என்கிறீர்கள். அவள்தான் ராமச்சந்திரம் பிள்ளையின் குமாரன் மதனசுந்தரத்தின் காதலி!"

வாசகர்களே, இப்பொழுது எனது மூளை எவ்விதமிருக்குமென்று நினைக்கிறீர்கள்? ஆ! ஜனககுமாரி! அதே பெயரில்தான் என்னை அவள் கைப்பிடித்தாள்; மாலை மாற்றினாள். அந்தக் கட்டழகி தான் எனது மனைவி—காதலி! நெருப்பின்மீது வைத்த மெழுகைப் போல உருகியோடும் எனது நெஞ்சத்துடன், "வயோதிகரே! நீங்கள் சொல்வது உண்மைதானா?" என்றேன் நான்.

"நண்பரே, உண்மை! உண்மை!! அவள் தனது தமக்கையுடன் இங்கு அடிக்கடி வருகிறாள்."

"நான் குறித்த அடையாளமுடைய பெண்மணியின் பெயர் ஜனககுமாரி என்பதல்லாதிருக்க முடியாதா ?" என்று நான் வருத்தத்தோடு வினவினேன்.

"இல்லை. உங்களது வர்ணனைகள் அனைத்தும் ஜனககுமாரியைத் தான் குறிக்கின்றது!"

"ஜனககுமாரியின் விவாகத்தைப்பற்றி என்னபேச்சு நடக்கிறது?"

"வெகுநாளாக விவாகப்பேச்சு இருந்துவருகிறதேயன்றி, நிறைவேறியபாடில்லை!"

"அவர்களிருவரும் ஒருவர்க்கொருவர் பந்துக்களாக இருக்கக்கூடுமோ?"

"இருக்கலாம். இந்திரலிங்கம்பிள்ளை என்பவனுடைய புதல்வி தான் ஜனககுமாரி என்கின்றனர். இந்திரலிங்கம் என்பவன் ஒரு பிரபல நாட்டு வைத்தியனும்!"

"அப்படியா?" என்று நான் ஆச்சரியத்துடன் தலையை அசைத்துக்கொண்டு மௌனமாயிருந்தேன். மணி எட்டரையாயிற்று.

"இன்றிரவு நீங்கள் இங்குத்தானே தங்கப்போகிறீர்கள்? மாடியில் ஓர் அறை காலியாக இருக்கின்றது. வெளி ஹாலிலிருந்தபடியே மாடிப்படிகள் போகின்றன! இந்தாருங்கள் சாவி," என்று சொல்லிப் பிராமணர் ஒரு சாவியை எடுத்துக்கொடுத்தார். பின்னும் சற்று நேரம் சம்பாஷித்துவிட்டுச் சாப்பாட்டை அறைக்கு அனுப்பும்படிச் சொல்லிவிட்டு நான் மாடியறைக்குச் சென்றேன்.

உணவருந்தியபின்னர், மாதாந்த சஞ்சிகை ஒன்றைப்படித்துக் கொண்டிருந்தேன். மணி ஒன்பதேகாலாயிற்று. அன்றிரவு கல்யாணபவனத்தில் என்ன நடக்கிறதென்பதை அறிய என் மனம் துடித்தது. ஆதலின், அறையைப்பூட்டிக்கொண்டு வெளிக்கிளம்பினேன்.

8. மறைந்திருந்து அறிந்த மர்மங்கள்

கல்யாணபவனம் என்ற பேரழகு வாய்ந்து சிறந்த கட்டிடம், இயற்கைக் காட்சியுள்ள நந்தவனத்தின் நடுவே, நான்குபக்கமும் மதில் சூழப்பெற்றதாக அமைந்திருந்தது. மின்சாரவிளக்குகளின் ஒளி சுவர்களின்மீது பட்டு அவற்றின் பளபளப்பைப் பளிச்சென்று எடுத்துக்காட்டியது. வீதியிலிருந்து பார்ப்பதற்கு அம்மாளிகை அறையும் குறையுமாகத் தெரிந்தது. ஏனெனில், அடர்ந்த சுகந்த பரிமள மலர் மரங்களும் செடிகளும் கொடிகளும் மாளிகையின் தோற்றத்தைக் கொஞ்சம் மறைத்தன. அம்மாளிகையின் முன்கூடத்தில் அழகிய பல கருங்காலி நாற்காலிகளும் மேசைகளும் கிடந்தன. சுமார் பன்னிருவர் வரையில் அங்கே வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருந்தனர்.

இருள் சூழ்ந்திருந்த போதிலும், மின்சார தீபத்தின் ஒளி சந்திர ஒளியைப்போலப் பிரகாசித்தது. அம்மாளிகைக்கு விஜயம் செய்திருப்பவர் யாரார் என்பதை அறிய என் மனம் அலைந்தது. ஆதலின், ஒருவரும் என்னைக்காணுமல் மதிலின் உட்புறம் புகுந்தேன். கொஞ்சதூரம் சென்று பங்களாவை நெருங்கினேன். ஒரு பெரிய ஜன்னலையுடைய அறை தெற்றெறன என் கண் முன்னர் பட்டது. அந்த ஜன்னலோரத்தில் ஓர் இளமங்கையும் ஒரு வாலிபனும் இரு நாற்காலிகளில் எதிர்முகமாக உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கக் கண்டேன். அவ்வளவில் என் மனம் துடிதுடித்தது! என் உடல் பதைத்தது! அம்மங்கை யார்? அவள்தான்! பழிகாரி! எனது மனைவி! ஜனககுமாரி! ஜனகமே அவள்! அவளுடன் அமர்ந்திருந்தவன் யார் என்று எனக்குத் தெரியவில்லை. ஆம். காப்பி ஹோட்டல் ஐயர் சொன்னவை உண்மையாயின், அவ்வாலிபன் மதனசுந்தரம் என்பதில் திணையளவும் ஐயமில்லை. எனது கண்களிரண்டும் அவ்வுருவங்கள் மீது ஆழ்ந்து பதிந்து விட்டன. என்னை மறந்து நான் கற்பதுமை போலச் சமைந்திருந்தேன்.

சரசர வென்று ஏதோ சப்தம் கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். யாரோ ஒருவன் அடிமேல் அடிவைத்து ஜன்

னலை நோக்கி, வந்து கொண்டிருந்தான். நான் திகிலடைந்து சட்டென்று இருட்டில் பதுங்கிக் கொண்டேன். வந்தவன் யாரையோ எதிர்பார்த்த வண்ணமாகச் சிறிது நேரம் நிசப்ததத்துடன் உலாவிக் கொண்டிருந்தான். பிறகு, நான் ஒளிந்திருந்த மரத்தடியின் நேரே வந்து சிறிது நேரம் நின்றான்அவன். அவன் யார் என்பதை நன்கு கவனிக்க எனக்கு இப்பொழுது முடிந்தது. அவன்தான் விஷ ஸிகரட்டை எனக்குக் கொடுத்துக் கொல்ல நினைத்த சதிகாரன் சுபேதார் மகேந்திரன்! நயவஞ்சகனான அந்த அயோக்கியன், நான் முதன் முதல் பார்த்த ஜன்னல் வழியாக ஜனககுமாரியை உற்று நோக்கினான். அவனுடைய நடையுடை பாவனை குறிப்பிலிருந்து, அவன் கல்யாண பவனத்துக்கு விருந்தாளியாக வந்தவனல்லன் என்றும், ஏதோ இரகசிய சூழ்ச்சியை உத்தேசித்தே அவ்விடம் வந்திருக்கிறானென்றும் எனக்கு எளிதாக விளங்கிற்று.

எனது மறைவிடத்திலிருந்து சுபேதார் மகேந்திரனின் நடவடிக்கைகளை நான் கவனித்தேன். அவன் அங்கு நல்ல உத்தேசத்துடன் வரவில்லை. உலாவிக் கொண்டிருந்தவன் சற்றுநேரம் அசைவற்று நின்றான். பிறகு, தனக்குள் ஏதோ ஒரு முடிவு செய்து கொண்டவன்போல விரைவாக வெளிப்புறம் நோக்கிச் சென்றான். நானும் அவனைப் பின்தொடர்ந்தேன். சென்னைக்குச் செல்லும் சாலையிலிருந்ததொரு சிறு கட்டிடத்தினுள் அவன் நுழைந்தான். நானும் ஒரு பக்கம் மறைவாக உட்கார்ந்தேன்.

சுமார் பத்தரைமணி இருக்கலாம். அச்சிறு மனையிலிருந்து மகேந்திரன் மறுபடியும் வெளிக்கிளம்பினான். நானும் வெகு எச்சரிக்கையுடன் அவனைப் பின் தொடர்ந்தேன். கல்யாணபவனத்தின் இருப்புக் கம்பிக்கதவின் இடுக்கு வழியாக அவன் உள் நுழைந்தான். அந்நேரத்தில் வெளிக்கதவு மூடப்பட்டிருக்கும் என்பதை அவன் நன்குணர்ந்திருந்தான்போலும்! அவன் உட்சென்ற சின்னேரத்தில் அவ்வழியாகவே நானும் உட்புகுந்து, புஷ்பச் செடிகளுக்கிடையே மறைந்துகொண்டேன். மகேந்திரன் எவ்வழியாக எங்குச் சென்றானென்பதையும் கவனித்தேன். மரஞ் செடிகளுக்குகிடையே மெதுவாக நடந்து அம்மாளிகைக்கு நேராகச் சென்று, அங்கு என்ன நடக்

கிறதென்பதைக் கவனித்தேன். வீட்டு முகப்பில் பிரகாசமான பெரிய மின்சார விளக்கொன்று சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அதன்கீழ் பட்டாடை அணிந்த இருவர் உலாவிக்கொண்டிருந்தனர். அவர்களும் அம்மாளிகையின் விருந்தினர்களாகத்தானிருக்க வேண்டும்.

பின்னும், சற்று நேரத்தில் அவ்விருவரும் வீட்டினுள் பிரவேசித்தனர். மேலும் கொஞ்சம் நெருங்கி ஜன்னலின்மூலமாக உட்புறம் கவனித்தேன். சுமார் பன்னிருவர் வரையில் அமர்ந்து கடுதாசி ஆடிக்கொண்டிருந்தனர். ஆனால், ஜனககுமாரியையோ சுவர்ணம்பாளையோ அங்குக் காணமுடியவில்லை.

ஹாலில் சங்கீதக் கச்சேரி நிகழ்ந்து கொண்டிருந்ததுபோலும்! சங்கீதக் கருவிகளின் ஒலியும் இன்னிசையும் பாடகரின் ராகசஞ்சாரமும் என் காதுகளில் கொஞ்சம் கொஞ்சம் விழுந்தன.

சுமார் அரை மணி நேரமாயிருக்கும். அது வரையில் நான் பழைய மரத்தடியிலேயே மறைந்து நின்று கொண்டிருந்தேன். அப்பொழுதும் சங்கீத ஓசை நிற்கவில்லை. முன்போலவே திடீரென்று சரசரப்புச் சப்தம் கேட்டது; திரும்பிப் பார்த்தேன். யாரோ இருவர் மெதுவாக அவ்விடம் வந்தனர். அவர்கள் யார் என்றறிய நான் முயன்றேன். அவர்கள் அறியாமல் அவர்களைப் பின் தொடர்ந்தேன். பங்களாவிற்குப் பின்புறம் ரோஜா புஷ்பங்களின் இனிய மணம் கமகமவென்று வீசிற்று. மல்லிகை, முல்லை முதலிய மலர்களின் கந்தம் மனத்தைப் பரவசப்படுத்தியது. தென்றல் காற்று மெல்லெனவீசியது. பயங்கரமான அந்நிலைமையிலும் ஓர் ஆனந்தம்! என்னே, எல்லாம்வல்ல திருவருளின் அற்புதம்!

என் முன்னால் சென்ற இருவர் மீதும் எனது மனம் அழுந்திப் பதிந்திருந்தது. வாசனை நிறைந்த அவ்விடத்தில் அவர்களிருவரும் நின்றனர். நானும் புதர்களுக்கிடையில் பதுங்கினேன். புன்னை மரங்களில் ஒன்றன்கீழ் அவர்கள் நின்றார்கள். அடுத்த நிமிஷத்தில், "நீ விரும்பியிருந்தால், இதற்கு முன்னாலேயே நான் உன்னைச் சந்தித்திருக்கக்கூடும்! சுமார் ஒரு மணி நேரமாக நான் காத்திருந்தேன்.

அநேக விருந்தினர்கள் சூழ்ந்திருக்கும் பங்களாவில் இவ்வாறு ஒளிந்திருப்பது ஆபத்துக்கிடமான விஷயம்,'' என்ற வார்த்தைகள் எனக்குக் கேட்டது. குரலிலிருந்து, பேசியது சுபேதார் என்று நான் அறிந்து கொண்டேன்.

''தங்களை நான் இங்கு வரும்படி ஒருபோதும் கூறவில்லையே,'' என்று பதில் மொழி பிறந்தது. கன்ன குதூகலமான அப்பதிலைக் கூறியவள் எனது மனைவி ஜனக குமாரியே !

''உண்மை ! துன்பத்தை நானே சுமந்து கொண்டேன்!'' என்றான் சுபேதார்.

''ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்? உங்களைச் சந்திப்பதற்காக இந்தக் காரிருளில் வெளிவரும் துன்பம் என்னையல்லவா சார்ந்திருக்கிறது?'' என்றாள் ஜனககுமாரி.

''ஆ! நாம் இருவரும் சந்திக்க வேண்டுவது இன்றியமையாத கடனாக இருந்திராவிடில் நான் இங்கு வந்திருக்க மாட்டேன்,'' என்றான் சுபேதார்.

''நல்லது, இப்பொழுது நீங்கள் சொல்ல வேண்டுவதென்ன? சொல்லுங்கள்.''

''உன்னிடம் விசேஷமாகச் சில விஷயம் பேசவேண்டும்!''

''ஆனால், சீக்கிரம் சொல்லி, என்னை அனுப்புங்கள்! சீக்கிரம் நான் அங்குப் போகாவிடில் ஆபத்து!''

''அந்த இழவெடுத்த அவசியம் என்னை இங்குத் தள்ளிக் கொண்டு வந்து விட்டது. உனக்கோர் எச்சரிக்கை செய்யவேண்டுவதுதான் அவசியம். அந்த எச்சரிக்கையை எழுத்து மூலமாகச் செய்வதும் ஆபத்து. அதையறிந்தே நான் நேரில் வந்திருக்கிறேன். நீ உன்னைக் காப்பாற்றிக்கோள்!''

''என்ன—?......எச்...சரிக்கை! அதென்ன எச்சரிக்கை?''

''லீலா ஜீவை இங்கு வந்திருக்கிறாள்!!''

''லீலா ஜீவையா?'' என்று அச்சத்தால் அரற்றினாள் எனது அருமை மனைவி ஜனகம். ஆ! ஜனகத்தின் நிலையைக் கண்ட எனது

மனம் புழுங்கியது. யார் அந்த லீலா ஜீவை? என் மனைவிக்கு அவள் தீங்கு செய்பவளாயிருந்தால் அவளைக் கொன்றுவிட எனது மனம் துணிந்தது. லீலா ஜீவை என்னும் பேரெழுதிய ஒரு துண்டுக் கடிதத்தை ஜனக குமாரியின் தலையணையின் கீழிருக்க நான் அன்று கண்டது என் நினைவுக்கு வந்தது.

"நிஜம் என்று சொல்ல எனக்குப் பயமாகவிருக்கின்றது!" என்றான் சுபேதார்.

"லீலா ஜீவை வந்திருக்கிறாளா?" என்று மீண்டும் ஜனக குமாரி ஏக்கத்தோடு கேட்டாள். பிறகு, "நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள் ?" என்று பரபரப்போடு சுபேதாரை நோக்கி வினவினாள் ஜனக குமாரி.

சுபேதார் வாய்திறக்கவில்லை. ஜனகமும் சிறிது நேரம் ஆழ்ந்த மௌனத்திலிருந்தாள்.

"இந்தப் பாழும் உலகில் பிறந்து கோடானுகோடி துன்பங்களை அடைந்து மடிவதை விட, அத்துன்பங்களையெல்லாம் அனுபவிப்பதற்கு முன்னமேயே மடிந்து விட்டால் நலமென்று எண்ணுகிறேன். என் துன்பத்தை நிவர்த்திக்க யாரால் முடியும்? மரணம் ஒன்றினால் தான் கூடும்," என்று தழுதழுத்த குரலில் உரைத்தாள் ஜனக குமாரி. எனது மனைவி இவ்வாறு மனம் நெகிழ்வதையும் ஒரு வஞ்சகனோடு அந்த நள்ளிரவில் அச்சத்துடன் பதில் சொல்லிக் கொண்டிருப்பதையும் என்னால் சகித்துக்கொண்டிருக்க முடியவில்லை. ஆனால், அவள் ஏதோ ஓர் அந்தரங்கத்தால் சூழப்பெற்றிருக்கிறாளே; அதற்கென் செய்வது? எனது மனைவியைப் பற்றி என்னாலேயே ஒன்றும் அறியக்கூடவில்லையே! நான் என்ன செய்ய முடியும்? ஆண்டவனே! நீதான் எல்லா ரகஸியங்களையும் விளக்கியாக வேண்டும்.

"ஜனகம், துன்பங்களுக்காகப் பயந்து மரணத்தை விரும்புவதைப் போலக் கோழைத்தனம் வேறில்லை."

"உங்களது சித்தாந்தம் ஆண்மக்களுக்கேயாகும். பெண்மக்களுக்கு அச்சம் ஆபரணந்தான்! நான் உயிருடனிருப்பதால் யாருக்கு என்ன இலாபம்?"

"இலாபமா? ஏன் இல்லை? நீ மதனசுந்தரத்தை விவாகம் செய்து கொள்ள நினைத்திருக்க வில்லையா?"

"ஹா! அபாண்டம், வேண்டா! வேண்டா!. ஒருபோதும் நான் அவனை மணந்து கொள்ளப் போவதில்லை."

"மதனசுந்தரம் உன்னைக் காதலிக்கவில்லையா?"

"ஹா! விதியே! இது போன்ற கொடுமையான விஷயங்களைப் பற்றிக்கூட நான் பேசவேண்டுமா?"

"ஜனகம், உனது நன்மைக்கே நான் வெளிப்படையாகப் பேசுகிறேன். வருந்தாதே. மதன சுந்தரம் உன்னைக் காதலிக்கிறனென்பதில் சிறிதும் உனக்குச் சந்தேகம் இல்லையே?"

"இல்லை—!"

"தன்னை விவாகம் செய்து கொள்ளும்படி அவன் உன்னைக் கேட்க வில்லையா?"

"ஹூம்"

"அப்படிக் கேட்ட முறைகளில் எது கடைசிமுறை ?"

"இன்று, சுமார் ஒரு மணி நேரத்திற்கு முன்னுல்தான்—"

"அதை நீ மறுத்துவிட்டாயா?"

"ஆமாம் !"

"ஏன் மறுத்து விட்டாய் ?"

"காரணம் சொல்ல என்னுல் முடியாது !"

"அக்கரையில்லை! ஆனுல், நீ உன்னைக் காப்பாற்றிக்கொள்."

"என்னைக் காப்பாற்றிக் கொள்ளும்படி, தாங்கள் அடிக்கடிச் சொல்வதால்—?"

"ஆம். நீ மதனசுந்தரத்தை மணந்துகொண்டால், லீலா ஜீவை சக்தியற்றவளாகி விடுவாள்!"

"ஆ! அது ஒரு போதும் முடியாது," என்று கூறி, ஜனகம் பெருமூச்சு விட்டாள்.

"நீ சிறு பெண். எனது புத்திமதியைக் கேள். நீ மதன சுந்தரத்தை விவாகம் செய்துகொண்டால், லீலாஜீவையின் கூந்தல் உன் கையில் சிக்கிக்கொள்ளும்!" என்றான் சுபேதார்.

சின்னேரம் அவ்விருவருக்குமிடையில் அமைதிபரவியிருந்தது.

"கல்யாணம் செய்துகொள்வதால் எனது சத்துருக்களின் வேரை அறுக்கலாமென்று தாங்கள் சொல்கின்றீர்கள். ஆனால், அது சரியன்று. பிறருடைய சுதந்தரத்தையழிக்க என்னால் முடியாது!" என்றாள் ஜனகம்.

"ஏன்? நீ யாருக்கு அஞ்சுகிறாய்?"

"உங்களுக்குத்தான்! உங்களுடைய சதி சூழ்ச்சியிலிருந்து நான் விடுபட முடியாதென்பதை நன்கறிவேன். எனது இன்பம் உதயமாகும் ஒவ்வொரு தருணத்திலும் அதனை அஸ்தமிக்கச் செய்ய உங்களால் முடியும்! உங்களை நான் நம்பமாட்டேன்!" என்றாள் ஜனகம்.

"என் மீது அவ்வளவு அவநம்பிக்கையா?" என்றான் சுபேதார்.

"உங்களைப் போலப் பெண்மக்களின் சுதந்தரத்தைப் பறித்து அடிமைப் படுகுழியில் தள்ளுவோர்களிடம் எனக்குச் சிறிதும் நம்பிக்கையில்லை!" என்று ஆத்திரத்துடன் உரைத்தாள் ஜனகம்.

"நீ என்மீது அவநம்பிக்கை வைத்திருந்துங்கூட உன்னுடைய நன்மையை உத்தேசித்து, என்னைச் சூழ்ந்திருக்கும் பேராபத்துகளைச் சிறிதும் பொருட்படுத்தாது, இங்கு வந்திருக்கிறேன். அதை நீ உணரவில்லையே!" என்றான் சுபேதார்.

"தங்களுடைய நன்மைக்காகவே இங்கு வந்திருக்கிறீர்களேயன்றி என்னுடைய நன்மைக்காக அன்று என்பதை நான் நன்கறிந்திருக்கிறேன்," என்றாள் ஜனகம்.

"இல்லை. நான் தக்கப் பந்தோபஸ்துடனிருக்கிறேன். இரண்டு விஷயங்களைப்பற்றி உன்னிடம் யோசிக்கவே நான் இங்கு வந்திருக்கின்றேன்."

"அவைகள் யாவை?"

"முதலாவது, நீ மதனசுந்தரத்தை அவசியம் மணந்துகொள்ள வேண்டும். இரண்டாவது—" என்று இழுத்தான் சுபேதார்.

"இரண்டாவது விஷயமென்ன?" என்று பரபரப்புடன் கேட்டாள் ஜனகம்.

"அதுதான் நாம் இருவரும் சேர்ந்து லீலாஜீவையைப் பழி தீர்க்கவேண்டுமென்பது," என்று சொல்லியபொழுது சுபேதார் தெளிவான சுவாதீனத்தோடில்லை.

"ஹா ! சதி ! சதி !! இருக்கட்டும்; விவரத்தைச் சொல்லுங்கள் கேட்போம்."

"உளறித்தள்ள வேண்டா. நான் சொல்வதை நீ சரியாக அர்த்தப்படுத்திக்கொள்ளவில்லை. நான் சொல்வது சதியல்ல. அவளை எப்படியாவது அந்நிய தேசங்களுக்கு விறட்டி அடிக்கவேண்டும்!"

"அவளை வெளியே அனுப்பிவிடுவதா ? ஒருபோதும் முடியாது. அவளை ஒருவராலும் ஒன்றும் செய்ய முடியாதே !"

"ஆ! பெண்களாகிய நீங்கள் எல்லோருமே வெகு சீக்கிரத்தில் ஒரு கெட்ட முடிவுக்கு வந்துவிடுகிறீர்கள். நீ சொன்னது உண்மை. ஆனால் லீலாஜீவை ஒரு விஷயத்தில் அதிகப் பலவீனமாக இருக்கிறாள் !"

"அதை நீங்கள் கண்டுபிடித்திருக்கிறீர்களா?"

"ஆம்"

"எப்படி?"

"எனது விடாமுயற்சியால்—"

சிறிது நேரம் நிசப்தம் நிலவியிருந்தது.

"நீங்கள் ஏதோ கண்டுபிடித்திருப்பது உண்மையாக இருக்குமானால், அந்தவிஷயத்தை நீங்களே நிறைவேற்றலாம்! நீங்கள் எனது நண்பர்! என்னுடைய சுகத்தில் உங்களுக்கு அக்கரையிருக்கிறது! ஆதலின், எனக்காக நீங்களே சிரமம் எடுத்துக்கொள்ளுங்கள்," என்று கூறி முடித்தாள் ஜனகம்.

"ஆனால், உன் உதவியில்லாமல் நான் ஒன்றும் செய்ய இயலாதே!"

"இல்லை. நீங்கள் என் உதவியைச் சிறிதும் பெறமுடியாது! உங்களது சதியாலோசனைக்கும் எனக்கும் எவ்விதமான சம்பந்தமும் வேண்டா. என்னுடைய உதவியில்லாமலேயே என்னுடைய சத்துருவை வெல்லக்கூடிய சாமர்த்தியம் உங்களுக்குண்டு!"

"ஒத்துக் கொள்ளுகிறேன். ஆனால், லீலாஜீவை சம்பந்தப்பட்ட விஷயங்களில் என் ஜம்பம் ஒன்றும் பலிக்காது. உன்னைக் கண்டால், அவள் ஈவு இரக்கமில்லாமல் உன்னுடைய வாழ்வின் வீழ்ச்சிக்கான முறைகளைக் கையாளுவாளென்பது உனக்கு ஞாபகமிருக்கட்டும்!"

"அவள் என்னைக் கொன்றுவிடுவது நிச்சயமாயிருந்தால், நான் பூர்வஜன்மத்தில் விசேஷ பூஜாபலனைச் செய்தவளென்பதில் ஐயமில்லை!"

"இப்படி அனேகர் கூறுவதை நான் கேட்டிருக்கிறேன். இறப்பது சாமான்யமான காரியமன்று. அதிலும் பெண்கள் இறப்பதற்கு எளிதில் துணியமாட்டார்கள்!"

"என் விஷயம் பொது விஷயத்தோடு சேர்க்கக்கூடியதல்ல. வேண்டுமானால், பின்னால் நீங்கள் என்னைக் கவனியுங்கள்."

"இன்றிரவு இங்கு நிகழப்போகும் ஒரு புயலைக் கூர்ந்து கவனிப்பவளாக நீ தோன்றவில்லை!"

"ஏதோ கொஞ்சம் உணர்ந்திருக்கிறேன். ஆனால், ஏதேனும் சதிசூழ்ச்சி நடக்குமென நான் நினைக்கவில்லை. நீங்கள் லீலாஜீவையின் உயிரைக் கவர்ந்துவிட உத்தேசித்திருக்கிறீர்கள். அல்லவா?"

"இல்லை, இல்லை. நீ என் கருத்தைத் தவறாக உணர்ந்திருக்கின்றாய்!"

"முன்னர் சில சந்தர்ப்பங்களில் நான் உங்களது கருத்தைத்தவறாக உணர்ந்திருந்தது உண்மை. ஆனால் இப்பொழுது—"

"ஜனகம்! உன் மூளையைக் குழப்பிக்கொள்ளாதே. லீலாஜீவை விஷயத்தில் நீயும் நானும் ஒத்துழைத்துதான் ஆகவேண்டும்!"

"அவ்விஷயத்தில் என்னால் சம்பந்தப்பட முடியாதென்பது உறுதி!"

"சம்பந்தப்பட்டுத்தானாகவேண்டும். விஷயம் அதி முக்கியமானது. லீலாஜீவையை அடக்கிவிடின், நாம் அடையும் இலாபம் சிறிதல்ல!"

"நாம் அவளைச் சந்திப்பதாலும் அவளுக்கு இடையூறு செய்ய நினைப்பதாலும் நமக்கு நிகழக்கூடிய ஆபத்துகளும் குறைவாக இருக்கமுடியாது! அதையும் ஞாபகப் படுத்திக் கொள்ளுங்கள்."

"என்ன செய்தால் அவள் அடங்குவாள் என்பதைக் குறித்து ஓர் அரிய சூழ்ச்சியை நான் கண்டு பிடித்திருக்கிறேன். அதிலிருந்து அவள் மீளமுடியாது!"

"எந்த சூழ்ச்சி வேண்டுமானாலும் நீங்கள் செய்துகொள்ளுங்கள். எனக்குக் கொஞ்சமாவது கவலையில்லை. என்னால் எவ்விதமான உதவியும் செய்ய முடியாது!"

"ஜனகம்! அகாரணமான ஒரு விஷயத்தை நீ என்னிடம் கூறுகிறாய். என்னோடு நீ ஏன் ஒத்துழைக்கக் கூடாது?"

"முடியாதென்றால் விட்டுவிடுங்கள்."

"நம்முடைய பயங்கரமான நிலைமையை நீ சிறிதும் சிந்திக்கவே இல்லை. லீலாஜீவை உன்னைக் கண்டுபிடித்துவிட்டாளென்று வைத்துக்கொள். உன் கதி என்னாகும் தெரியுமா?"

"நீங்களும் லீலாஜீவைக்குப் பயப்படுகிறீர்களல்லவா?"

"ஆம். நமது இரகசியத்தை அறிந்திருப்பவள் அவள் ஒருத்தியே!"

"அதற்காக அவளை நீங்கள் கொன்றுவிடத் தீர்மானித்திருக்கிறீர்களா?"

"உண்மையே!"

"சரி. ஒரு முறைக்கு ஆயிரம்முறை சொல்கிறேன். உங்களுடைய குற்றத்தில் நானும் பங்கிட்டுக்கொள்ளப் பிரியப்படவில்லை!"

9. கொலை!

இச்சமயத்தில் யாரோ ஒரு மூன்றுவது பேர்வழி பலமாக இருமும் சப்தம் கேட்டது. பின்னும் சற்றுநேரத்தில் திடீரென்று ஏதோ ஒரு வஸ்து ஜலத்தில் விழுந்ததைப் போன்ற சப்தம் கேட்டது. அது கேட்ட நான் திடுக்கிட்டேன். நான் ஒளிந்திருந்த புதரினின்றும் சுற்று முற்றும் பார்த்தேன். ஜனககுமாரியும் மகேந்திரனும் அச்சத்தால் விலவிலத்து நின்றனர்.

"அதென்ன சப்தம்—?" என்று நடுங்கிக்கொண்டே வினவினுள் ஜனககுமாரி.

"ஏதேனும் மரக்கிளைகள் தண்ணீரில் முறிந்து விழுந்திருக்கலாம்!" என்றுன் சுபேதார்.

ஜனகம் சுபேதார் கூறிய சமாதானத்தை ஏற்றுக்கொண்டாள்.

"ஜனககுமாரி, லீலாஜீவையைப் பழி தீர்க்கும் விஷயத்தில் உதவிசெய்ய முடியாதென்று நிர்தாக்ஷண்யமாகச் சொல்லிவிட்டாயல்லவா?" என்று சீற்றத்தோடு வினவினுன் சுபேதார்.

"நல்ல விஷயங்களுக்குத் தாக்ஷண்யம் வேண்டுவதவசியமாக இருக்கலாம். கெட்ட காரியங்களுக்கு நிர்தாக்ஷண்யமே அத்யாவசியமாகும். ஒரு தரம் நீங்கள் என்னை ஏமாற்றி விட்டீர்கள். மீண்டும் நான் ஏமாறுவேனென்று எதிர்பார்க்க வேண்டா!"

"என்னவோ கடவுளிருக்கிறுர்!"

"போதும் வேதாந்தம். நீங்கள் என்னைக் கேட்டதற்கு நான் பதிலளித்தேன். லீலாஜீவையைப் பழிதீர்க்க நினைப்பது, யானை தன் தலையில் தானே மண்ணை யள்ளிக் கொட்டிக் கொள்வதைப்போலிருக்கிறது. ஞாபகமிருக்கட்டும்!" என்றுள் ஜனகம்.

"ஜனககுமாரி, நான் முட்டாளல்ல. உன் மனத்தில் என்ன இருக்கிறதென்பதை நானறிவேன். இன்றிரவு நீ தற்கொலை செய்துகொண்டு லீலாஜீவை விஷயத்தில் தலையிடுவதை நீக்கிக்கொள்ளலாமென்று நினைக்கிறுய், அல்லவா? அதைப்போல் முட்டாள்தனம் வேறில்லை!"

"உங்களை நொந்து கொள்வதிற் பயனில்லை. சின்னஞ் சிறியவளாகிய நான் இந்நேரத்தில் உங்களைச் சந்தித்துப் பேசுகின்றேன். எவ்வளவோ காரியங்களையும் அபாயங்களையும் உதிர்த்துவிட்டு உங்களோடு பேசிக் கொண்டிருக்கவேண்டுமென்று என் தலையில் இறுக்கினானே, அவனைச் சொல்லவேண்டும்!" என்று ஜனககுமாரி சுபேதாருக்குப் பதிலளித்துவிட்டு, மாளிகையை நோக்கி விரைந்து சென்றாள்.

சுபேதார் மகேந்திரன் மலைத்துப் போய் நின்றான்.

எனக்கு அங்குக் கண்ட காட்சிகளும் கேட்ட சம்பாஷணைகளும் கனவில் நிகழ்ந்ததாகத் தோற்றியது. நிகழ்ந்த சம்பவங்களெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக என் நினைவில் தோன்றி ஆச்சரியத்தையும் திகிலையும் எழுப்பின.

சுமார் கால்மணி நேரம் மௌனமாகச் சென்றிருக்கலாம். தலையைத் தூக்கி சுபேதாரைப் பார்த்தேன். சுபேதாரும் அப்பொழுதுதான் உணர்ச்சி வரப்பெற்றவனாய்த் தன் அடியைப் பெயர்த்து நடக்கலானான். அவன் எனது கண்களுக்கு மறைந்த பின், நானும் ஹோட்டலை நோக்கிப் பையச் சென்றேன்.

ஹோட்டலில் எல்லோரும் அயர்ந்து நித்திரை போயினர். எனது அறையைத் திறந்துகொண்டு படுக்கையிற் படுத்தேன். காற்று வேகமாக வீசிற்று. எனது மனமும் அக்காற்றோடு காற்றாய் எங்கெங்கோ சென்று வியாபித்தது. நித்திரையே எனக்கு நஞ்சாயிருந்தது. சுமார் காலை ஐந்துமணிக்குக் கொஞ்சம் கண்ணயர்ந்தேன்.

வண்டிகளும் மோட்டார்களும் ரிக்ஷா முதலிய வாகனங்களும் வீதியிற் செல்லும் பேரொலியினால் கண் விழித்துக்கொண்டு 'அப்பாடி' என்று வாய்விட்டுச் சோம்பல் முறித்தேன்.

"ஸார் தூங்குகிறீர்களா?" என்று காப்பி ஹோட்டல் ஐயர் கதவைத் தட்டினார்.

"இல்லை. இதோ வந்துவிட்டேன்!" என்று சொல்லிக் கொண்டே கதவைத் திறந்துவிட்டேன்.

"கல்யாண பவனத்துச் சேதி தெரியுமோன்னோ?" என்று ஐயர் ரகஸியமாகக் கேட்டுக்கொண்டே உள்ளே வந்து கட்டிலில் உட்கார்ந்தார்.

"என்ன? என்ன?" என்று நான் பரப்பரப்புடன் கேட்டேன்.

"கோலை! கொலை!! கோரக்கொலை!"

"கோலையா—?"

"நிஜம்!"

"கோலையுண்டவர்—?"

"லக்ஷாதிபதி ராமச்சந்திரம் பிள்ளைதான்!"

"ராவ் பகதூர் ராமச்சந்திரம் பிள்ளையா?"

"ஆம். எல்லாம் அதிரகஸியமாக இருக்கின்றது. அவர் இறந்து கிடந்ததைக் காலை ஐந்து மணிக்குக் கண்டுபிடித்தார்களாம்!"

"எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லுங்கள்!"

"காலையில் போலீஸ் இன்ஸ்பெக்டர் மாணிக்கமுதலியார் இங்கு வந்து காப்பி சாப்பிட்டார். அவர்தான் இந்தச் சங்கதியைச் சொன்னார். கல்யாணபவனத்தின் நந்தவனத்தில் உள்ள ஒரு சிறு குளத்தில் ராமசந்திரம் பிள்ளைவிழுந்து, இறந்து கிடந்ததைத் தொழிற்சாலைக்குப் போய்க்கொண்டிருந்த ஒருவன் கண்டு பிடித்தானும்!"

"நீரில் விழுந்தா?"

"இல்லை. கொலை செய்யப்பட்டு."

"எப்படி?"

"தலையில் ஓங்கி இருப்புத் தடியால் அடிக்கப்பட்டு இறந்து கிடந்தாராம். துப்பறியும் உத்யோகஸ்தர்களுக்கு விஷயம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. போலீஸ் இன்ஸ்பெக்டர் அக்குளக் கரையில் ஏதோ சண்டை நடந்த குறிகள் இருப்பதாகத் தெரிவித்தாராம்!"

"ஆச்சரியம்! டாக்டர்கள் யாராவது அழைக்கப்பட்டிருக்கின்றனரா?"

"இல்லை!"

"சவம் எங்குக் கிடக்கிறது?"

"பூங்காவனத்திலேயே கிடக்கிறதாம்!"

"துப்பறிபவர்கள் வந்தால் கொலைஞனைக்கண்டு பிடிக்கக்கூடும்."

"இது மகா பயங்கரமான சம்பவம்!"

நான் சென்ற இரவு பூங்காவனத்துள் சென்றிருந்த விஷயம் யாருக்காவது தெரிந்திருந்தால் என்கதி என்னவாகும்? மகேந்திரனும் ஜனககுமாரியும் சம்பாஷித்துக்கொண்டிருந்தபோது ஓர் உரத்த இருமல் சப்தம் கேட்டதும், பின்னும் சற்று நேரத்தில் திடீரென்று ஏதோ தண்ணீரில் விழுந்த சப்தம் எழுந்ததையும் நான் மறந்துவிடவில்லை. என் மனத்தில் பலவித சந்தேகமும் அச்சமும் குடிகொண்டன.

ஐயர் அழைத்ததற்கிணங்கிக் காப்பிசாப்பிட்டபின், அவரும் நானுமாகக் கல்யாண பவனத்துக்குச் சென்றோம். அப்பூஞ்சோலையின் நடுவே ஓர் அழகிய தடம்; அதனைச் சுற்றிலும் பச்சைப்பசேலென புற்களும் செடிகளும் வளர்ந்திருந்தன. அக்குளத்தின் இடையில் மூங்கில் பாலம் ஒன்று போடப்பட்டு, இரு பக்கங்களிலும் இருப்புக் குழாய்களினால் கைப்பிடியும் அமைத்திருந்தது. அப்பாலத்தின்கீழ்தான் ராமச்சந்திரம்பிள்ளை இறந்து கிடந்தார். கடந்த இரவு நான் அதே பூங்காவனத்துக்குச் சென்றிருந்தபோதிலும் அக்குளக் கரையை மாத்திரம் பார்க்கவில்லை. போலீஸ்காரர்கள் குளத்தைச் சுற்றிக்காவல் காத்திருந்தார்கள். பாலத்தின்மேல் ஏறிச்செல்வதற்குப் போலீஸார் அனுமதிக்கவில்லை. பாவம்! ராமச்சந்திரம்பிள்ளை அலங்கோலமாகக் கிடந்தார்.

கோலைஞனைக் கண்டு பிடிக்கும் விஷயத்தில் என் மனம் அலையாய் அலைந்தது. கல்யாணபவனத்துக்குள் நான் பிரவேசித்திருந்ததை யாராவது கண்டிருப்பார்களா? கண்டிருந்தால் என்கதி என்னாகும்? நானே குற்றவாளியல்லவா? ஆதியோடந்தமாக என் சரித்திரத்தை ஒப்புவித்தபோதிலும் ஒருவரும் நம்பமாட்டார்கள். எனக்கே உண்மையில் ஒன்றும் விளங்காத இரகசிய இருளோடு அவர்கள் என்ன செய்வார்கள்?

---

10. போலீஸ் ஆராய்ச்சி

"அதோ போலீஸ் இன்ஸ்பெக்டர் மாணிக்க முதலியார் வந்து விட்டார்," என்றார் ஐயர்.

மாணிக்க முதலியாருடன் கவர்ன்மெண்ட் ஸர்ஜனும் வந்து கொண்டிருந்தார். ஸர்ஜன் என்னைக் கண்டவுடன் ஆச்சரியத்துடன், "ஓ! ராஜேஸ்வரரே, எப்பொழுது இவ்விடம் வந்தீர்?" என்று கேட்டுக்கொண்டே எனது கைகளைப் பற்றிக் குலுக்கினார்.

"நேற்றுதான் இவ்விடம் வந்தேன். உங்களை எதிர்பார்த்துக் கொண்டுதானிருந்தேன்," என்று நான் ஸர்ஜனுக்குப் பதில் கூறினேன்.

போலீஸ் இன்ஸ்பெக்டரைக் கண்ட சேவகர்கள், கோணலில்லாத சவுக்க மரங்களைப்போல நிமிர்ந்து நின்று அவருக்கு மரியாதை செலுத்தினார்கள்.

பிரேதத்தினருகில் இன்ஸ்பெக்டரும் டாக்டரும் அமர்ந்து அதனைக் கூர்ந்து பார்த்தனர். அவர்கள் விரும்பியபடியே பிரேத பரிசோதனையில் நானும் கலந்து கொண்டேன். பிரேதத்தின் மண்டை ஓரத்தில் ஒரு சிறு காயமிருந்தது. நாங்கள் மூவரும் அதை நன்கு கவனித்தோம்.

"ராஜேஸ்வரரே, இந்தக் காயத்தைப்பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?" என்றார் கவர்ன்மெண்ட் டாக்டர்.

"அந்தக் காயத்தினால் மரணம் நேர்ந்ததாக நான் நம்பவில்லை!" என்றேன் நான்.

"ஆனால், இந்த மரணத்தைப் பற்றி உமது அபிப்பிராயமென்ன?" என்றார் இன்ஸ்பெக்டர்.

"இந்த நிமிஷம் ஒன்றும் முடிவு சொல்வதற்கில்லை. இருப்புத் தடியினால் தாக்கிக் கொல்லப்படிருப்பதாக யாரும் கருதக் கூடும். உண்மை அப்படியிருக்காது. உருண்டை வடிவமான இருப்புத் தடியின் அடியால், இப்படிப்பட்ட ஒரு காயம் ஏற்படுவதற்கில்லை. பாலத்திலிருந்து நீரில் விழுந்தபோது நீரிற் கிடந்த கற்கள்

அல்லது மரங்கள் அவர் மண்டையில் தாக்கியிருக்கிறது,'' என்றேன் நான்.

நெடுநேர ஆராய்ச்சிக்குப் பிறகு நான் அக்கொலையைப் பற்றி ஒரு முடிவான யோசனைக்கு வந்தேன். அவர் தாக்குண்டு சாகவில்லை; பாலத்தினின்றும் நீரிற் தள்ளப்பட்டுக் கொலையுண்டிருக்கிறார். இராமச்சந்திரம் பிள்ளையின் பரம விரோதிகளாலேயே இக்காரியம் நடந்திருக்க வேண்டும்.

"இது ஒரு நொடியில் நிகழ்ந்த மரணமாயிருக்குமென்று நீர் நம்புகிறீரா?'' என்றார் இன்ஸ்பெக்டர்.

"அப்படிச் சொல்வதற்கில்லை. ஒரு நொடியில் மரணத்தை உண்டாக்கக்கூடிய பலமான அடி ஒன்றும் முதுகெலும்பில் வீழ்ந்திருப்பதாகத் தெரியவில்லை. பாலத்திலிருந்து தலை குப்புறத் தண்ணீரில் வீழ்ந்து இறந்துபோயிருக்கிறார். தாமே வீழ்ந்தாரென்றும் யாரேனும் விரோதிகளால் தள்ளப்பட்டு வீழ்ந்தாரென்றும் சொல்லுவதற்கில்லை,'' என்றேன் நான்.

"கொள்ளைக்காரர்களால் கொலை சம்பவித்ததென்றும், சத்துருக்களால் கொலை நிகழ்ந்ததென்றும் நிச்சயமாக நாம் அறிந்து கொள்ள வேண்டும்,'' என்றார் இன்ஸ்பெக்டர்.

"கொள்ளைக்காரர்களாயிருந்தால் ராமச்சந்திரம் பிள்ளையைக் கண்டு ஒளிந்து மறைந்திருப்பார்களே அன்றி அவரைக் கொலை செய்வதற்குத் துணிந்திருக்க மாட்டார்கள்,'' என்று விவாதித்தேன் நான்.

"ஆனால், அந்நேரத்தில் ராமச்சந்திரம்பிள்ளை ஏன் வெளியே வந்திருக்கவேண்டும் ?'' என்றார் இன்ஸ்பெக்டர்.

"அந்த விஷயத்தை ராமச்சந்திரம் பிள்ளையின் மனைவியைக் கேட்டே அறியவேண்டும்,'' என்று நான் கூறினேன்.

"எனது ஆலோசனையை இருவரும் ஒப்புக்கொண்டனர். நாங்கள் மூவரும் பங்களாவுக்குள் சென்றோம்; ராமச்சந்திரம் பிள்ளையின் மனைவி அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக அமர்ந்திருப்பதைக் கண்டோம். பாவம் ! சிறுவயது. அதிகமாய்ப்போனாலும் முப்பது வய

துக்கு மேலிராது. எங்களைக் கண்டவுடன் எமதூதர்களைக் கண்டது போலப் பேரச்சங்கொண்டு எழுந்தாள்.

" அம்மா, ஒன்றுக்கும் தாங்கள் பயப்பட வேண்டா ! தங்களது மணவாளரைக் கொன்ற பாதகர்களைக் கண்டுபிடித்துத் தண்டிப்பது எங்கள் கடமை. நாங்கள் கேட்கும் இரண்டொரு கேள்விக்கு மாத்திரம் தாங்கள் பதில் சொல்லியாக வேண்டும்," என்றார் இன்ஸ்பெக்டர். அந்த அம்மாள் கதவிற்குப் பக்கத்தில் மறைந்து நின்று கொண்டு தேம்பித் தேம்பியழுதாள்.

" வருத்தப்படுவதில் பிரயோஜனமென்ன ?" என்றார் இன்ஸ்பெக்டர்.

"கொலையாளிகளைக் கண்டுபிடிப்பதில்தான் என்ன பிரயோஜனம் ?" என்று அழுதுகொண்டே கேட்டாள் அந்த மாது.

அவள் கேள்வி என் செவியில் விழுந்ததும் எனக்குண்டான ஆச்சரியத்திற்களவில்லை. பெருஞ்சந்தோஷம் வந்து உணர்ச்சியை அப்படியே கொள்ளைகொண்டுபோகட்டும், அல்லது துக்கந்தான் விஸ்வரூபமெடுத்து வந்து எதிரே நின்று பயமுறுத்தட்டும், பெண்மணிகள் பேசுவதிலேயோ, கேள்விக்குப்பதிலளிப்பதிலேயோ, மிகவும் நிதானமாக இருக்கிறார்கள். இந்தப் புகழத்தக்க குணம் அவர்களுடைய உடன் பிறப்பாகவே இருக்கிறது. எந்த ஆண் மகனும் ஒரு பெண்மணியின் பேச்சில் ஒரு நிமிஷமேனும் மயங்கியோ அல்லது பிரமித்தோ ஆகவேண்டுமென்பது மறுக்க முடியாத உண்மை.

"தங்கள் பெயர் என்ன அம்மா ?" என்றார் இன்ஸ்பெக்டர்.

"என் பெயரா கேட்கிறீர்கள், ஞானரத்னம்" என்றாள் அம்மாது.

"சரி; தங்கள் புருஷர் இரவு எத்தனை மணிக்குத் தோட்டத்தை நோக்கிப் போனார் என்பது உங்களுக்கு ஞாபகம் இருக்குமே ?"

"சுமார் பத்தரை மணிக்குப் போயிருக்க வேண்டும்."

நான் வெகு கூர்மையாக ஞானரத்தினத்தைக் கவனித்துக் கொண்டிருந்தேன். அவளுடைய அழகிய முகம் சாம்பலாக வெளுத்திருந்தது. நரம்புகள் புடைத்து இரத்தம் வெகுவேகமாக ஓடுவதை நிரூபித்தது.

"பத்தரை மணிக்கு வெளியே போனவர் திரும்பி வாராததைக் குறித்துத்தாங்கள் சந்தேகிக்கவோ கவலைப்படவோ இல்லையா ?"

"ஆ ! இல்லை. காலை ஆறுமணிக்கு வந்து வேலைக்காரி இந்தப் பயங்கரமான செய்தியைச் சொல்கிறவரையில், அவர் திரும்பி வாராததைப்பற்றி எனக்கொன்றும் தெரியாது."

"தங்களுக்குத் தெரியாமல் அவர் வெளியே சென்றார்போலும். கடந்த இரவு நீங்கள் எவ்வாறு காலங்கழித்தீர்கள் ?"

"நானா ?"

"இல்லை, நீங்கள் எல்லோருமே எவ்வாறு காலங்கழித்தீர்கள் ? சில விருந்தினர் நேற்று வந்திருக்கவில்லையா ?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"இரவு எட்டு மணிக்குள் விருந்து முடிந்துவிட்டது. அதன் பிறகு சங்கீதக் கச்சேரி நடந்து கொண்டிருந்தது," என்றாள் ஞானரத்னம்

"ராமச்சந்திரம் பிள்ளை நேற்று இரவு உங்களிடம் ஏதாவது கூறினாரா?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"சுமார் இரவு பத்து மணிக்குப் பின்கட்டுக்கு வந்து தமக்கு மிகவும் களைப்பாக இருப்பதால்,போய் நித்திரை செய்யப் போவதாகவும், விருந்தினர்களைக் கவனித்து இரவு பன்னிரண்டுக்கெல்லாம் கச்சேரியை நிறுத்திவிடும்படியும் சொல்லிவிட்டுப் போனார்."

"மறுபடி அவரை நீங்கள் பார்க்கவில்லை போலும்!"

"ஆ! விதிமுடிந்தபின் அவரைப் பார்த்தேன். இந்த அகன்ற உலகத்தில் என்னை நிர்கதியாக விட்டுவிட்டுப் போய்விட்டார்,"என்று சொல்லித் தேம்பியழுதாள் ஞானரத்னம்.

"அம்மா, கவலையும் வருத்தமும் தோன்றத்தான் செய்யும். கலங்கி யாவதென்ன? தங்களுக்குத் தெரிந்த வேறு விஷயம் ஏதாவது இருந்தால் சொல்லுங்கள். அவைகள் எங்களுக்கு மிகவும் பிரயோஜனமாயிருக்கும்."

"வேறு ஒன்றும் சொல்வதற்கிருப்பதாகத் தோன்றவில்லை. மற்ற வேலைக்காரர்களை ஏதேனும் கேட்க வேண்டுமானால் கேட்டுக் கொள்ளுங்கள்."

"நித்திரை செய்யப் போவதாக உங்கள் கணவர் உங்களிடம் சொல்லியதைப்பற்றி உமது அபிப்பிராயமென்ன? அவர் கூறியது உண்மையாக இருக்குமா ?"

"அதெல்லாம் எனக்கொன்றும் தெரியாது. நடுநிசிவரையில் அவர் விருந்தினரோடு இல்லை. அதற்குள்ளாகவே விருந்தினர் தத்தம் மோட்டாரில் போய்விட்டார்கள். வீட்டுக் கதவுகள் தாழ்ப்பாளிடப் பட்டன. சிப்பந்திகள் காலையில் திறந்து விடுகிறவரையில் ஜன்னல் கள் எல்லாம் நன்கு மூடித் தாளிடப்பட்டிருந்தன."

"அப்படியானால், கதவுகள் மூடப்படுவதற்கு முன்னமேயே உங் கள் கணவர் வெளியே சென்றிருக்கவேண்டும்"

"ஆம்."

"வெளியில், வேறு யாராவது விருந்தினர் உங்கள் கணவரோடு சென்றிருக்கலாமோ?"

"இல்லை. விருந்தினர் ஒருவருமே இரவு இங்குத் தங்கவில்லை. எல்லோரும் போய்விட்டனர்."

"ஆனால், இங்கு வந்திருந்த விருந்தினர்களின் பெயர்ப்பட்டி ஒன்று தயாரித்துக் கொடுக்க முடியுமா?"

"ஆனால், இன்ஸ்பெக்டரே, இங்கு வந்தவர்கள் எல்லோரும் மிக வும் கௌரவமான குடும்பத்தினர்கள். அவர்கள்மீது சந்தேகப் படவே வேண்டா."

"இந்தச் சமயம் நாங்கள் ஒருவர்மீதும் சந்தேகம் கொள்ள வில்லை. பின்னால் ஒருசமயம், இன்னின்னார் விருந்தினராக வந்தி ருந்தார்கள் என்றறியவும், அவர்களிடம் ஏதேனும் துப்பு விசாரிக் கவும் நேரிடுமல்லவா?"

"ஆமாம். நான் வந்த விருந்தினர் பெயர்களை எழுதித் தரு கிறேன்," என்றாள் அம்மாது.

ராமச்சந்திரம் பிள்ளையின் புத்தக நிலயம் திறந்திருப்பதை மாணிக்க முதலியார் பார்த்தார். நானும் அவ்வறையைக் கவனித்தேன்.

"அம்மா, தங்கள் புருஷரின் புத்தக நிலயத்தைப் பரிசோதிக்க அனுமதிக்க வேண்டும். ஏனெனில் அவருக்கு வந்திருக்கும் நிருபங்கள் ஏதேனும் எங்களுக்கு உதவியாக இருக்கலாம்," என்றார் இன்ஸ்பெக்டர்.

"நன்மையென்று எதைச் செய்வதற்கும் தாங்கள் உரிமை பெற்றிருக்கிறீர்கள்," என்று அவள் உரைத்தபோதிலும், முகத்தில் கவலையும் அச்சமும் தோன்றி மறைந்தன.

நாங்கள் புத்தக நிலயத்துக்குள் சென்றோம். ஞானரத்னமும் எங்களோடு வந்தாள். இறந்துபோன தன் கணவருடைய ரிகார்டுகள் ஏதாவது கிடைத்துவிடப் போகிறதோ என்று ஞானரத்னம் கவலையுற்றவளாகக் காணப்பட்டாள். இதுபோன்ற சந்தர்ப்பத்தில் மற்றொரு பெண்மணியாய் இருந்தால் அளவில்லாத துக்கம் அடைந்திருப்பாள். ஆனால், ஞானரத்னம் எங்களைக் கண்டபின் குழப்பமும் சஞ்சலமும் கொண்டு வருந்தினாள்.

"கடைசியில் உங்களது புருஷரை யார் சந்தித்திருக்கக் கூடுமென்பதைப்பற்றி ஏதாவது தெரிவிக்கக் கூடுமோ?" என்று இன்ஸ்பெக்டர் திடீரென்று ஒரு கேள்வியைப் போட்டார்.

"தெரியாது."

"தங்கள் புருஷரின் முதல் தாரத்துக்குப் பிறந்த ஒரு பையன் இருக்கிறானோ?"

"ஆம். மதனசுந்தரம்! அவனும் அதோ வருகிறான்," என்று மெல்ல மொழிந்தாள் ஞானரத்னம்.

அப்பொழுது சுமார் இருபத்திரண்டு வயதுடைய ஒரு வாலிபன் அங்கு வந்து சேர்ந்தான்.

நாங்கள் யார் என்பதையும் விசாரிக்கும் தோரணையைப்பற்றியும் ஞானரத்னம் மதனசுந்தரத்துக்கு விவரித்துக் கூறினாள். தன் தந்தை பாதிசாமத்தில் ஒருவரும் அறியாவண்ணம் தன்னந்தனியாக

வெளியே சென்றதைப் பற்றியும், கிழக்கு வெளுத்த பின்பே தங்க ளுக்குத் தன் தந்தையின் விபரீதமான முடிவு தெரிய வந்ததென்றும் எங்களுக்கு எடுத்துச் சொல்லி வருந்தினான்.

இன்ஸ்பெக்டர்:— உமது தந்தைக்குச் சத்துருக்களே இல்லை யென்கிறீர் அல்லவா?

மதனசுந்தரம்:— ஆம். எங்களுக்குத் தெரிந்த வரையில் எனது தகப்பனாருக்கு விரோதிகள் எவரும் இல்லை. கொலை நடந்தது மிகவும் இரகசியமாய் இருக்கிறது.

இன்ஸ்பெக்டர்:—ஆம். மகாரகஸியந்தான். ஆனால் நாங்கள் அதைக் கண்டுபிடிக்காமல் அலட்சியமாக விட்டுவிடப் போவதில்லை.

மதனசுந்தரம்:— அப்படியே நான் நம்புகிறேன். எனது தந்தையின் விரோதிகள், நாங்கள் முற்றும் அறியாத பேர் வழிகளே. எங்களுக்குத் தெரியாமல் அவருக்கு விரோதிகள் இருந்திருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். பாவிகள் யாரோ பழிவாங்கி விட் டார்கள். இனி, என்ன செய்து என்ன வரப்போகிறது?

இன்ஸ்பெக்டர்:— என்ன காரணத்தால் உம் தந்தை பழிதீர்க் கப்பட்டாரென்று சொல்கிறீர்?

இவ்விடத்தில் ஞானரத்னத்தின் பார்வையும் மதனசுந்தரத் தின் பார்வையும் ஒன்றோடு ஒன்று மோதிக்கொண்டன. ராமச்சந்திரம் பிள்ளைக்கு யாரோ சில எதிரிகள் இருந்திருக்கிறார்கள் என்ற எனது கொள்கை அதனால் உறுதிப்பட்டது.

"விவரம் ஒன்றும் எனக்குத் தெரியாது. சாதாரணமாக அப்படி யிருக்கலாமென்று யூகித்ததேயன்றி வேறில்லை," என்று பதில் சொன்னான் மதனசுந்தரம்.

"வஞ்சம்! எதற்காக?" என்றார் இன்ஸ்பெக்டர்.

"அந்த விஷயம் நாங்கள் அறிந்திருக்கும் பக்ஷத்தில், கொலை ஞனைக் கண்டுபிடிக்கும் பிரயாசையில் ஏன் கலங்கவேண்டும்?" என்று நிதானமாகப் பேசினான் மதனசுந்தரம்.

"அர்த்த சாமத்தில் அவர் வீட்டுக்கு வெளியில் போன ரகஸிய மென்ன? ஏதேனும் ரகஸிய முயற்சியை முன்னிட்டு யாரையோ அந்தரங்கமாகச் சந்தித்துப் பேசுவதற்கே அவர் வெளியே புறப்பட் டிருக்கவேண்டும். தாம் உடம்பு சௌகரியமற்றிருப்பதாக உமது

சிற்றன்னையிடம் அவர் தெரிவித்தது உண்மையாயிருக்காது,'' என்று உரைத்தார் இன்ஸ்பெக்டர்.

"இருக்கலாம்,'' என்று இழுத்தாற்போலக் கூறினான் மதனசுந்தரம்.

இன்ஸ்பெக்டர் சம்பாஷணையை நழுவவிட்டு, புத்தக அறையைப் பரிசோதிக்கத் தொடங்கினார். மேஜை அறையைத்திறந்து கடிதங்களைப் புரட்டிக்கொண்டு வந்தார். மதனசுந்தரம் எல்லாவற்றையும் எடுத்துக்காட்டிக் கொண்டிருந்தான். ஞானரத்னம் எங்களைக்கவனித்துக்கொண்டு நின்றாள். எங்களைக் கண்டதிலிருந்தே அவள் அச்சப்பட்டுக்கொண்டிருந்தாள். அவள் இவ்வாறு பயப்படுவதற்குக் காரணமென்ன? ஏதேனும் அந்தரங்கமான ரிகார்டு அல்லது வஸ்துவை நாங்கள் கண்டுபிடித்து விடுவோமோவென்று அவள் பயப்பட்டாள். புருஷனின் பிரிவாற்றாமையைவிட வேறு ஒரு வஸ்துவின் பிரிவாற்றாமையே தன்னைப் பாதிக்குமென்பதை அவள் நன்கறிந்திருக்க வேண்டும். அந்த அரிய பொருள் என்னவாக இருக்கும்?

மேஜை அறையைத்திறந்து கடிதங்களைக் கவனித்துக் கொண்டிருந்த சமயம் ஞானரத்னம் தனது குமாரனிடம் சென்று ஏதோ ஒரு பொருளை அவன் கையில் கொடுத்துவிட்டு, தான் முன் நின்ற இடத்திலேயே வந்து நின்றாள். இந்நிகழ்ச்சியை நான் ஒருவனே கவனித்தேன். கவனித்ததாக நான் சிறிதும் காட்டிக்கொள்ளவில்லை.

"என்ன இன்ஸ்பெக்டரே, ஏதேனும் ருஜு அகப்பட்டதா?'' என்றாள் ஞானரத்னம்.

"இல்லை, ஒன்றுமே அகப்படவில்லை,'' என்று பதிலளித்தார் இன்ஸ்பெக்டர்.

ராமச்சந்திரம் பிள்ளையினுடைய படுக்கையறை, உடுப்பறை, பெட்டி முதலிய எல்லாவற்றையும் சோதனை செய்தார்கள். ஒன்றிலும் உருப்படியாக ஒன்றும் அகப்படவில்லை. இன்ஸ்பெக்டர், மதனசுந்தரம், ஞானரத்தினம் ஆகிய மூவரும் சம்பாஷணையில் ஆழ்ந்திருந்தார்கள். இதுதான் சமயம் என்று நான் மறுபடியும் புத்தக நிலையத்துக்குட் சென்றேன்.

11. உருவப் படம்

ஞானரத்னம் ஏதோ ஒன்றை மதனசுந்தரத்திடம் கொடுத்தானல்லவா? அப்பொழுது அவன் நின்று கொண்டிருந்த அதே இடத்துக்குச் சென்று நான் கவனித்தேன். அவ்விடத்தில் சிறிது பிளவுபட்ட சுவர் ஒன்றிருந்தது. சந்தேகத்துடன் அந்தச் சுவரின் இடுக்கை நான் ஆராய்ந்தேன். ஒரு காகிதம் அதற்குள் நுழைத்துத் திணிக்கப் பெற்றிருந்தது. அக்கடிதத்தை இழுத்துப் பிரித்துப் பார்த்தேன். என்ன வியப்பு! அது ஒரு கடிதமல்ல! ஒரு புகைப்படம்! அட்டையில் ஒட்டாத ஒரு தனிப் புகைப்படம்; யாருடைய படம்? ஆ! அது ஜனககுமாரியின் உருவப்படமே!

அந்தப் படத்தை வேறு யாராவது பார்த்திருந்தால் கண்டிப்பாக நெஞ்சு இரண்டாகப் பிளந்துபோயிருக்கும். ஏன்? அது அவள் இறந்த பின்பு எடுத்த படம்! ஜனககுமாரியின் கண்கள் மூடியிருந்தன. முகத்தில் அழகே இல்லை. ஒரு கட்டிலில் அவள் செத்துக்கிடக்கிறாள். ஒரு பெண் இறந்து கிடக்கும் காட்சியை நிதர்சனமாகக் காட்டும் அந்த உருவப்படத்தைக் கண்கூசாமல் பார்த்துச் சகித்திருக்க வேறு யாராலும் முடியாதென்பது உண்மை. ஆ! கடவுளே! ஜனககுமாரி மறுபடியுமா இறந்திருக்கமுடியும்? முன்பு எடுத்த படமாக இருக்குமோ?

இன்னும் எனது மனைவி உயிருடன் இருக்கிறாள். நேற்றிரவு சுபேதார் மகேந்திரனுடன் அவள் நின்று கொண்டிருந்ததை நான் பார்த்தேன். படத்தை நினைத்தாலோ பார்த்தாலோ அதெல்லாம் கனவாக மாறிவிடுகின்றது. என்னவோ எல்லாம் ஈசன் செயல்!

படத்தைச் சட்டைப் பையில் வைத்துக்கொண்டு ஒரு வெற்றுக் கடுதாசியை அந்த இடுக்கில் வைத்துத்தள்ளி, மதனசுந்தரம் இடுக்கைப் பார்த்ததும் சந்தேகப் படாவண்ணம் செய்துவிட்டு, ஹாலுக்குள் பிரவேசித்தேன்.

இன்ஸ்பெக்டர் மேலும் மேலும் ஏதேதோ கேள்விகளைக்கேட்டுக் கொண்டிருந்தார். ஞானரத்னம் பதில் கூறியமாதிரியிலிருந்து மதன

சுந்தரத்துடன் இணங்கி நடக்கிறாள் என்பதைத் தெளிவாக அறிந்து கொண்டேன். மதனசுந்தரன் நவநாகரிகத்தை ஒட்டித் தன் வாழ்க்கை லக்ஷியத்தைக் கைக்கொண்டிருப்பவனாகத் தோன்றினான். அமரிக்கன் 'கிராப்' வெட்டி, சுமார் இரண்டு அங்குலம் வரையில் காதோரமாக 'கிருதா' விட்டிருந்தான். முழு ட்ரவுஸ்ஸர், இங்கிலீஷ் 'ட்வில் ஷர்ட்' 'டென்னிஸ் காலர்' கறுப்பு பூட்ஸ், கையில் ரிஸ்ட்வாட்ச் முதலிய அலங்காரத்தோடு அவன் தோன்றினான். பார்வை மாத்திரம் ஈரமுள்ளதென்று சொல்வதற்கில்லை. 'சார்லி' மீசை நிஜமாகவே அவனது அழகை எடுத்துக் காட்டியது.

இறுதியாக நாங்கள் அவ்வீட்டாரிடம் விடைபெற்றுக் கொண்டு கொலை நடந்த இடத்துக்கு வந்து சேர்ந்தோம். சிறிது நேரம் பொறுத்து நான் அவ்விடத்தை விட்டு அப்பூங்காவனத்தைச் சுற்றிச் சென்றேன். "அங்கே எங்காவது ஏதாவது ருஜு கிடைக்காதா? அதைக்கொண்டு கொலையாளியையும், கொலையாளியைக் கொண்டு கொலையின் காரணத்தையும் அறிய மாட்டோமா?" என்று எனது உள்ளம் துடித்தது. ஒரு கைக்குட்டை, அல்லது பேரெழுதிய பேனாகத்தி, அல்லாவிட்டால் ஒரு கடிதமாவது கிடைக்க வேண்டுமே, ஒன்றுமே இல்லை. மேற்சொல்லியவைகளில் ஏதேனும் ஒன்று கிடைக்குமாயின், நான் இந்த டாக்டர் வேலையே பார்க்கவேண்டிய அவசியமில்லை. என்னைச் சூழ்ந்திருக்கும் அந்தரங்கத்தோடு போரிடவும் வேண்டியதில்லை!

சுபேதார் மகேந்திரனும் ஜனககுமாரியும் நின்று, சென்ற இரவு சம்பாஷித்த இடத்துக்கு வந்து சேர்ந்தேன். அங்கே அவர்களது அடிச்சுவட்டைக்கூட காணமுடியவில்லை!

"அவர்கள் இருவரும் அந்த நள்ளிரவில் எனது கண்ணைவிட்டு மறைந்ததற்குப் பிறகு இந்தக் கொலை நிகழ்ந்திருக்க முடியுமா?" என்று நான் யோசித்துப் பார்த்தேன்.

மெல்ல மெல்ல சூரியன் உச்சத்துக்கு வந்தான். வெயிலின் கொடுமை பொறுக்க முடியாததாய் இருந்தது. சாப்பிட்டு வரலாம் என்று நான் ஹோட்டலுக்குச் சென்றேன்.

"என்ன ஸார், என்னை விட்டுவிட்டு நீங்கள் பாட்டில் போய் விட்டீரே," என்று என்னைக் கோபித்தார் ஐயர்.

"நீங்கள் சொல்லாமலிருந்திருந்தால் அதைக்கூட மறந்து போயிருப்பேன்! ராமச்சந்திரம் பிள்ளையின் விரோதிகளைக் கண்டு பிடிக்கும் விஷயத்தில் என் கவனமெல்லாம் இழுக்கப்பட்டுவிட்டது," என்று அவருக்குப் பதில் சொல்லிக் கொண்டே மேஜைமீது கிடந்த பில் புஸ்தகத்தைப் பார்த்தேன். 'சுபேதார் மகேந்திரன்' என்று அதல் எழுதப் பெற்றிருந்தது.

"இது யார் மகேந்திரன்?" என்றேன் நான்.

"மூன்று நாட்களாய் இங்குத்தான் தங்கியிருந்தார். இப் பொழுதுதான் பணங்கொடுத்து விட்டுச் சென்னைக்குச் செல்கிறார்," என்றார் ஐயர்.

மூன்று நாட்களாக சுபேதார் அங்குத் தங்கியிருந்தான் என்றது எனது ஆராய்ச்சியை இன்னும் கொஞ்சம் அதிகமாகச் சிக்கல் படுத்தியது.

சாப்பாட்டுக்குப் பின் நான் மறுபடியும் கல்யாண பவனத்துக் குச்சென்று, இன்ஸ்பெக்டரையும் டாக்டரையும் சந்தித்தேன். பிணப்பிரிசோதனை செய்த பொழுது நானும் அருகிலிருந்தேன். ஆனால், ராமச்சந்திரம் பிள்ளையின் சாவிற்கு உண்மையான காரணம் என்ன வென்று எங்களால் அறியக்கூடவில்லை. "கொலை" என்றால், "எப் படிக் கொலை செய்யப்பட்டார்?" என்ற கேள்விக்கு நாங்கள் எவ்வித பதிலும் சொல்லக் கூடாதவர்களாயிருந்தோம்.

"உமது அபிப்பிராயமென்ன?" என்று இன்ஸ்பெக்டர் என்னை வினவினார்.

"என் அபிப்பிராயம்: ஞானரத்னம் அறிந்திருக்கும் சில அந்த ரங்கங்களையும் சொல்லாத வரையில் 'கேஸ்' எவ்வித பயனும் உடைய தாக இராது," என்றேன் நான்.

"சந்தேகமில்லாத வார்த்தை! எதற்காகத் தனக்குத் தெரிந்த ஒரு சமாசாரத்தைச் சொல்ல அவள் பயப்பட வேண்டுமென்

பது அர்த்தமாகவில்லை. ஞானரத்னத்தைப் பயமுறுத்தியாவது நிஜத்தைக் கிரகிக்க ஏற்பாடு செய்யவேண்டும். விருந்தினர் பெயர்களை எழுதிக்கொடுத்துவிட்டாள். அதைக்கொண்டு நாம் சில ஆராய்ச்சி செய்யக்கூடும்,'' என்று சொல்லி, பையில் கையைவிட்டு அந்தக் கடிதத்தை எடுத்துக்காட்டினார் இன்ஸ்பெக்டர்.

இருவருடைய பெயர் மாத்திரம் அந்தக் காகிதத்தில் இல்லாததை நான் கண்டேன். அவர்கள் தாம் சுவர்ணம்பாளும் ஜனககுமாரியும்! இந்த அந்தரங்கத்தை வெளியிடாமல் எனக்குள்ளேவே ஒளித்து வைக்கக் கருதினேன். அப்படிச் செய்வதால் கேஸுக்கான ஆதாரம் ஏதேனும் எனக்குக்கிடைக்கக் கூடுமல்லவா ?

சுமார் மாலை நான்கு மணிக்கு நான் இன்ஸ்பெக்டரிடம் விடை பெற்றுக்கொண்டு பிரிந்தேன். இன்ஸ்பெக்டர் தம்மை அடிக்கடி வந்து பார்த்துப் போகும்படித் தெரிவித்துச் சென்றார். நான் அதனைச் சந்தோஷத்துடன் ஒப்புக்கொண்டேன்.

அன்று மாலை ஆறு மணிக்கெல்லாம் ராமச்சந்திரம் பிள்ளையின் கொலை விவரம் பெரியபெரிய கொட்டை எழுத்துகளில் தினசரிகளில் காணப்பட்டது. நூற்றுக்கணக்கான ஜனங்கள் கல்யாண பவனத்துக்குப்போய் வந்துகொண்டிருந்தார்கள்.

அன்று இரவே நான் எனது தோழன் கோபாலன் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தேன். கோபாலன் அப்பொழுது தினசரிப் பத்திரிகை ஒன்றில் அந்தக் கொலைச் சம்பவத்தைப் பற்றிப் படித்துக் கொண்டிருந்தான்.

"திரும்பியா வந்து விட்டாய்? கல்யாணபவனத்தில் கொலையாமே! அதை விட்டுவிட்டா வந்தாய்?'' என்றான் நண்பன்.

அவனுடைய கேள்வியில் நான் சிறிது ஆச்சரியப்பட்டேன்.

"ஆம். ஆச்சரியமான கொலை! இல்லையா?'' என்றேன் நான்.

பிறகு அவனது வேண்டுகோளின் பேரில் நான் கண்ட எல்லா விதமான காட்சிகளையும் தகவல்களையும் ஒன்றும் விடாது கூறி

னேன். எல்லாவற்றையும் கேட்டு அவன் திகைப்பூண்டு மிதித்த வன்போலிருந்தான்.

"நல்லது நான் கேட்கிறேன், இதைப்பற்றி உன்னுடைய அபிப் பிராய மென்ன?" என்று நான் கேட்டேன்.

"அபிப்பிராயமென்ன? அந்தரங்கம், சூழ்ச்சி, சதி பயம் எல் லாம் மேன்மேலும் வளர்ந்துகொண்டு போகிறது. இருக்கட்டும், அந்தப் புகைப் படம் ஜனகுமாரியுடையது என்பதில் சந்தேகம் இல்லையே?" என்றான் தோழன்.

"இல்லவே இல்லை," என்றேன் நான்.

"அப்படியானால், ஞானரத்னம் மதனசுந்தரம், மகேந்திரன் ஆகிய எல்லோருக்கும் ஜனகுமாரி கையடக்கமாக இருக்கிறாள். எனவே, கொலை விஷயம் இம் மூவருக்கும் தெரிந்தே இருக்க வேண்டும்!"

"சபாஷ் கோபாலா, என்னுடைய முடிவும் அதுவேயாகும்."

"ஒரே ஒரு விஷயம் மாத்திரம் குழப்பத்துக்கு இடமாயிருக் கிறது. சுவர்ணம்பாள் உன்னை ஏன் அறிமுகப்படுத்திக் கொண் டிருக்கிறாள்?"

"ஆம். அது சம்பந்தமாக என்னால் ஒன்றும் நிச்சயிக்கக்கூட வில்லை. கல்யாண பவனத்துக்கு நான் சென்ற விவரம் அவளுக்குத் தெரியாமலிருப்பது நமது அதிர்ஷ்டமல்லவா?"

"அதிர்ஷ்டமா? சந்தேக மில்லாமல்!"

"ஏன் கோபலா, கொலைஞன் மகேந்திரனாய் இருக்கலாமென்பது உன் மனத்தில் படவில்லையா?"

"கொலைஞன் அவன் அல்ல!"

"ஏன் அப்படிக் கூறுகிறாய்?"

"ஞானரத்னமும் ஜனகுமாரியும் ஒத்து நடப்பவர்களாயிருக் கும் பக்ஷத்தில், மகேந்திரன் கொலைஞனாயிருக்க முடியாது!"

கோபாலன் திடீரென்று ஒரு நோயாளியைப்பார்க்க வெளியே போக வேண்டியிருந்ததால் எங்கள் சம்பாஷணை இத்துடன் முடிந்து விட்டது.

இச்சம்பாஷணை நிகழ்ந்ததற்குப்பின் மாதம் ஒன்று கடந்தது. கல்யாணபவனக் கொலை சம்பந்தமான பேச்சு ஜனங்களிடமிருந்து விலகியது. இதற்கிடையில் நான் போலீஸ் இன்ஸ்பெக்டர் மாணிக்க முதலியாரைப் போய்ப் பார்த்துக் கல்யாணபவனத்து கொலையை யொட்டிய புலன்கள் ஏதாவது கிடைத்தனவா என்று விசாரித்து வந்தேன். எவ்விதமான தகவலும் கிடைக்கவில்லையென்று சொல்லி விட்டார். துப்புக் கண்டு பிடிக்க வேண்டுமென்னும் ஆசை என்னை விட்டு நீங்கவே இல்லை.

சுவர்ணாம்பாளைப் போய்ப்பார்த்து வருவதற்கு நான் விரும்பினேன். அவளுடைய பெயரையும் ஜனககுமாரியின் பெயரையும் போலீஸுக்குக் கொடுத்த 'லிஸ்டில்' ஞானரத்னம் சேர்க்கவில்லையல்லவா? அது எனக்கு ஞாபகம் வந்தது.

எனது காதலியுடன் நான் பேசவேண்டும்! அவளது மொழிய முதத்தைக் காதுகள் நிறையப் பொழியச்செய்ய வேண்டும், அவளது இனிய அழகிய உருவத்தை அரைமணி நேரமாவது எனது இரு கண்களுக்கும் நல்விருந்தாகச் சமர்ப்பிக்க வேண்டும்! கூடுமானால் அவளுடைய தங்கமயமான பூங்கைகளை மெதுவாகப்பற்றி—

அந்தோ! என்ன வீண் எண்ணம்! அவளது கையைப் பற்றவாவது, முத்தமாவது, இடவாவது! ஹே! ஜானகிராமா, எனது ஜனகத்தை நான் தொடக்கூடாதா? முத்தமிடக் கூடாதா? என்ன பாபம் செய்தேன்?

எனது மனைவியைப்பார்த்து வரவேண்டுமென்னும் எண்ணம் துரிதத்தில் வளர்ந்து சகிக்கக்கூடாததாய் விட்டது. ஆதலின், நான் உடனே தங்கசாலை வீதிக்கு ஒரு ரிக்ஷாவண்டியிற் சென்றேன்.

அன்று அமரபக்ஷத்துப் பஞ்சமி; முன்னிருட்டு. ஆனால் சென்னையிலுள்ள மின்சார விளக்குகளின் பிரகாசத்தினால், அந்தகாரம்

இந்திரலோகம் போல விளங்கிற்று. எனது பயங்கரமான விவாகம் நிகழ்ந்து அன்றோடு சரியாக இரண்டு மாதமாயிற்று.

ரிக்ஷா சுவர்ணம்பாள் வீட்டு வாயிற்படியில் நின்றது. ஜனக குமாரியைப் பார்க்கவேண்டும் என்ற உணர்ச்சி எனக்கு அதிகப் பட்டது.

"இந்தக் கார்டை உள்ளே கொடு," என்று சொல்லி எனது பெயர் பொறிசீட்டை வேலைக்காரனிடம் கொடுத்தேன்.

"எஜமானர் ஊரிலே இல்லிங்க ஸார்," என்று பணிவோடு பதில் அளித்தான் வேலைக்காரன்.

நான்:—சுவர்ணம்பாள் அம்மாள் கூடவா?

வேலைக்காரன்:—ஆமாம்.

நான்:—கனகவதியாவது இருக்கிறாளா ?

வேலைக்காரன்:—கனகவதி யென்னும்பேர்வழியே இந்தக் குடும் பத்தில் இல்லிங்களே.

நான்:—இல்லை, ஞாபகமறதி. நான் ஜனககுமாரியைக் குறிப்பிடு கிறேன்.

வேலைக்காரன்:— ஜனககுமாரியம்மாள் வீட்டு எஜமானியம்மா ளோடு போயிருக்காங்க.

நான்:—எந்த ஊருக்கு?

வேலைக்காரன்:—விழுப்புரத்துக்கு.

நான்:—விழுப்புரத்துக்குத் திவான்பகதூர் தெய்வநாயகம் பிள்ளையும் போயிருக்கிறாரா?

வேலைக்காரன்:—ஆமாங்க. போய் மூணு நாளாச்சுங்க.

நான்:—மதனசுந்தரம் பிள்ளை என்னும் ஒரு சிறு வயசுப் பிள்ளையாண்டானும் கூடப்போயிருக்கிறாரா?

வேலைக்காரன்:— தெரியாதுங்க.

நான்:—மதனசுந்தரம் என்னும் பிரபுவையே உனக்குத் தெரியாதா? அல்லது அவர் அவர்களுடன் போயிருக்கிறார் என்பது தெரியாதா?

வேலைக்காரன்:—தெரியும். தாம்பரத்திலிருந்து இங்கே வருவாருங்க. அவருடைய அம்மாகூட இங்கே அடிக்கடி வருவாங்க.

நான்:—சுபேதார் மகேந்திரன் என்று ஒரு மனிதர் வருவதைப் பார்த்திருக்கிறாயா?

வேலைக்காரன்:—ஆமாம் பார்த்திருக்கிறேனுங்க.

அந்த வேலைக்காரன் கையில் ஒரு ரூபா பணத்தைக் கொடுத்து விட்டு நான் அன்று வீடு திரும்பினேன்.

டாக்டர் கோபாலனின் ஆதரவின் கீழ் எத்தனை நாளைக்கு நான் வசித்து வர முடியும்? எனக்கு இந்த விஷயத்தில் கொஞ்சம் மனக் குழப்பம் ஏற்பட்டது. ஆதலின், நான் மயிலாப்பூரில் தனியாக வசிப்பதற்குத் தீர்மானித்து விட்டேன். கோபாலனும் அதற்கு உடன்படவே, ரங்கவிலாசம் என்னும் மாளிகையில் நான் குடியேறினேன்.

சில நாட்களில் என் பெயர் மயிலாப்பூர் மாத்திரமல்ல இன்னும் மற்ற இடங்களிலும் பரவி எனக்கு நன்மதிப்பு ஏற்பட்டது ஆகவே, நோயாளிகள் என்னை அன்புடன் நாடி வந்தார்கள்.

திவான் பகதூர் தெய்வநாயகம்பிள்ளை குடும்பத்தார் விழுப்புரத்திற்கு என்ன அலுவலாகச் சென்றிருக்கிறார்கள்? திடீரென்று போவதானால் தக்க காரணந்தான் இருக்கவேண்டும். எனக்கும் ஜனக குமாரிக்கும் அந்தரங்க விவாகம் செய்வித்ததால் இந்திரலிங்கம் என்ன இலாபம் அடைந்தான்? எதை உத்தேசித்துச் செய்தான்? கொல்லப்பட்ட ஜனக குமாரி மறுபடி எப்படிப் பிழைத்தாள்? அவளுடைய பிரேதத்தை எதற்காகப் படம்பிடிக்க வேண்டும்? ராமச்சந்திரம்பிள்ளை ஏன் யாரால் கொல்லப்பட்டார்? இப்படியாக, பல வேறு கேள்விகள் என் மனத்தில் எழுந்து உறுத்திவந்தன. இத்தனை கேள்விகளுக்கும் பதில் காணுமல் நான் விட்டுவிடப் போகிறவனல்ல,

12. வலையில்பட்ட மான்

ஒரு நாள், வழக்கம்போல நான் எனது நோயாளிகளைக் கவனித்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு வேலைக்காரன் ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து கொடுத்தான். கடிதத்தைப் பிரித்துப் படித்தேன்:

அன்பார்ந்த ராஜேஸ்வரருக்கு:—

இந்தக் கடிதம் கண்டவுடன் எவ்வித தாமதமும் இன்றி உடனே வந்து சேரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். கனகவதி மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கிறாள்.

தங்களன்புள்ள
சுவர்ணாம்பாள்

கூடிய விரைவில் வருவதாகச் சொல்லி வேலைக்காரனை அனுப்பிவிட்டு, முக்கியமாகக் கவனிக்கவேண்டிய நோயாளிகளைக் கவனித்து மருந்து கொடுத்துவிட்டு, சுவர்ணாம்பாள் வீட்டுக்குப் போய்ச்சேர்ந்தேன்.

சுவர்ணாம்பாள் வெள்ளை வெளேரென்று வெளுத்துப்போயிருந்தாள்; மிகவும் கவலை யடைந்தவளாகக் காணப்பட்டாள். பெருங்காற்றில் அடிபட்ட மரக்கலம்போல அவளது நிலைமை காணப்பட்டது 'ஏன் சுவர்ணாம்பாள் இவ்வாறு துன்புறுகிறாள்?' என்று நான் எண்ணினேன்.

என்னைக் கண்டதும் அவள் ஆவலோடு "ராஜேஸ்வரரே!" என்று அழைத்து, ஏதோ சொல்ல வாயெடுத்தாள். அதற்குள் நான், "கனகவதி எங்கே? அவளுக்கு என்ன செய்கிறது?" என்று கேட்டேன்.

நான் முன்பொரு முறை இதே இடத்துக்கு விஜயம் செய்தபொழுது சுவர்ணாம்பாள் ஆனந்தமாக உரையாடினாள். சிலேடையானதும் ரசமும் கருத்து முடையதுமான பதங்களையும் வாக்கியங்களையும் கொட்டினாள். இன்றோ அவள் மனமுடைந்து வருந்துகிறாள்.

"வைத்தியரே, இதோ இப்படி வாரும். இங்கே படுத்திருக்கி

றாள் கனகம்,'' என்று சொல்லி சுவர்ணாம்பாள் என்னை ஓர் அறைக்கு அழைத்துச் சென்றாள்.

ஜனகத்தை நான் பார்த்தேன். கண்கள் மூடியிருந்தன. இளம் பச்சை நிறமான ஒருபட்டாடை உடுத்தியிருந்தாள். அவள் விழிகளை நான் பார்க்க விரும்பினேன். கண்களைக் கெட்டியாக மூடிக் கொண்டிருந்தாள். தலைமயிர் அலங்கோலமாகத் தலையணையின் மீது பரவிக் கிடந்தது. கால் போட்டபடி கிடந்தது, கை வைத்தபடி கிடந்தது. வாய் சிறிது திறந்தபடியிருந்தது. எனது கையால் ஜனகத்தின் மெல்லிய கையைப் பற்றினேன். சில்லென்று என் கையைத் தாக்கிற்று. உடம்பு மிகவும் சில்லிட்டிருந்தது. அவ்வளவு குளிர்ச்சி! இவ்வளவு உச்சமான குளிர்ச்சி சரீரத்தில் ஏற்படுமென்றால் ஜீவன் உடலில் தங்குமா?

என்மனம் பதை பதைத்தது. பரபரப்புடன் அவளைச் சோதனை செய்தேன்.

''ராஜேஸ்வரரே நம்பிக்கைக்கு ஆதாரமிருக்கிறதா?'' என்று துக்கத்துடன் விரைவாகக் கேட்டாள் சுவர்ணாம்பாள்.

''நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. எங்கே சீக்கிரம் ஒரு முகம் பார்க்கும் கண்ணாடி கொண்டு வாருங்கள்,'' என்றேன் நான்.

முகம் பார்க்கும் கண்ணாடியை அவளது நாசியின் முன்னால் சிறிது நேரம் நிறுத்திப் பார்த்தேன். பிராணவாயு மிகக்குறைந்த வேகத்தில் போய்க் கொண்டிருப்பதாகத் தெரிந்தது. நரம்புகளெல்லாம் பலவீனப்பட்டிருந்தன. இந்திரலிங்கம் இல்லத்தில் ஜனககுமாரி எந்த நிலைமையிலிருந்தாளோ, அதைவிடப் பயங்கரமான ஸ்திதியில் இன்று வீழ்த்தப்பட்டிருக்கிறாள். அன்று அவள் கழுத்தில் கிடக்கக்கண்ட பொற்சங்கிலி இன்றும் கிடந்தது. அதை நான் அன்றே அபகரித்தேன். ஆயினும் அதைப் போலவே மற்றொரு பொற்சங்கிலி கேள்விக்குறி பதக்கத்துடன் இன்றும் கிடந்தது. ஆம்! அந்தக் கேள்விக்குறி சங்கிலியில் ஏதோ ரகசியம் இருக்க வேண்டும்! அவளது கையை நான் எடுத்துப் பார்த்தபோது அநேக கல்லிழைத்த மோதிரங்கள் அணியப் பெற்றிருப்பதைக் கண்டேன்.

ஆனால், எனது கல்யாணத்தின்போது நான் அவளுக்கு அணிந்த முத்திரை மோதிரத்தைக் காணவில்லை. அம்மோதிரத்தில் எனது முழுப்பெயரும் சிறிய எழுத்துகளில் செதுக்கப்பட்டிருந்தது. அந்த மோதிரம் எங்கே?

ஜனகுமாரியின் முகத்தை வெகுநேரம் வரையில் பிரமையுடன் நோக்கிக்கொண்டு ஸ்தம்பித்து நின்றேன். "காலத்தை இப்படி அபஸ்மாரமான எண்ணத்திலே கடத்திக் கொண்டிருக்கிறாயே! ஒரு க்ஷணத்தில் அவள் உயிர் போய்விடப் போகிறதே!" என்று என்னை யாரோ கேட்பதுபோல என் மனத்தில் பட்டது.

"ஆம். நேரமில்லை. சொற்ப நேரத்துக்குள் முயலாவிட்டால், உயிர் போய்விடும்," என்று என்னை அறியாமலேயே வாய்விட்டுரைத்தேன்.

"என்ன சொன்னீர் வைத்தியரே?" என்று அலறினாள் சுவர்ணம்பாள்.

"ஆம். உடனே வேலைக்காரன் ஒருவனை அனுப்பி இந்த விலாசதாரரை அழைத்துவரச் சொல்லுங்கள்," என்று சொல்லி டாக்டர் விஸ்வ மேனனுக்கு ஒரு கடிதம் எழுதி சுவர்ணம்பாளிடம் கொடுத்தேன்.

"ஏன் நீங்கள் மாத்திரம் தனியாகக் கனகவதியைக் காப்பாற்ற முடியாதா?" என்று கவலையோடு வினவினாள் சுவர்ணம்பாள்.

"மிகவும் நெருக்கடியான நிலைமை! நான் தனியே பார்க்க முடியாது. டாக்டர் விஸ்வமேனன் சாதாரண வைத்தியர் மாத்திரமல்ல; பேர் பெற்ற ரசாயன சாஸ்திரியுமாவர். அவர் சாதாரணமாக வைத்தியத்திற்காக வெளியிற் செல்லமாட்டார். என் விஷயத்தில் அவர் வேண்டிய உதவிசெய்ய இணங்குவார். அவரால் அன்றி கனகவதிக்குச் சம்பவத்திருக்கும் வியாதியின் மர்மத்தை வேறு ஒருவராலும் கண்டறியமுடியாது. காலத்தை அவலமாகக் கடத்தவேண்டா. சீக்கிரம் ஓர் ஆளை அனுப்புங்கள்," என்றேன் நான்.

அதன்பேரில் டாக்டர் விஸ்வமேனனுக்குச் சுவர்ணம்பாள் ஓர் ஆளை அனுப்பினாள். பிறகு, அரை அவுன்ஸ் பிராந்தியை ஜனக

குமாரியின் வாயில் ஊற்றி சிரமத்துடன் உட்செலுத்தினேன். அப்பொழுதும் அவள் கண்விழிக்கவில்லை!

"அம்மா, தயவுசெய்து நிஜத்தைச் சொல்லுங்கள்! தங்கள் சகோதரி இந்நிலைமைக்கு எப்படி வந்தாள்?" என்று மெய்சிலிர்க்கக் கேட்டேன் நான்.

"எனக்குத் தெரியாது," என்றாள் சுவர்ணம்பாள்.

"எவ்வித மர்மமாக இருந்தாலும் என்னிடம் சொல்லத் தயங்க வேண்டாம்! உமது தங்கையின் உயிரை நான் காப்பாற்ற வேண்டுமானால், உண்மையை ஒளிக்காமல் உரைத்தே ஆகவேண்டும்," என்று திடசங்கல்பத்தோடு உரைத்தேன்.

அச்சமும் ஆச்சரியமும் அவள் முகத்தில் தோன்றி மறைந்தன.

"எனக்குத் தெரிந்தாலல்லவோ, சொல்வதற்கு; மெய்யாகவே எனக் கொன்றும் தெரியாது," என்றாள் சுவர்ணம்பாள்.

"உமது சகோதரி பிழைக்க—"

"நிச்சயமாக அவள் பிழைக்க வேண்டும்! எப்படியாவது அவள் உயிரைக் காப்பாற்றுங்கள்," என்று கெஞ்சினாள் சுவர்ணம்பாள்.

"அப்படியானால் எல்லா மர்மத்தையும் என்னிடம் தெரிவிக்க வேண்டும். எவ்விதமான பொறுப்பையும் என் கையிலே விட்டுவிட வேண்டும். உங்களுக்குத் தெரிந்த ஏதோ ஒரு ரகஸியத்தை ஏதோ ஒரு கருத்தைக்கொண்டு மறைக்க முயலுகிறீர்கள்," என்றேன் நான்.

சுவர்ணம்பாள் ஏதும் கூற வகை அறியாது, திகைத்து வாய் திறவாது நின்றாள். நான் அவளை நோக்கி, "அம்மா, உங்கள் தங்கையின் உயிரைக் கவருவதற்குப் படுமுயற்சி செய்யப்பட்டிருக்கிறது! என்றென்றும் அந்த விஷமக் கூட்டத்தார் கண்டுபிடிக்கப் பட்டுத் தண்டிக்கப் படுவார்கள்," என்று அழுத்திக் கூறினேன்.

"உயிரைக் கவர முயற்சியா! இதை எப்படித் தாங்கள் அறிந்தீர்கள்?" என்று அவள் வினவினாள்.

புன்னகை செய்ய முயன்றேன், முடியவில்லை. அவளுடைய கண்கள் அசைவற்று என்னிடத்தில் லயித்துப் போயிருந்தன.

"எப்படி அறிந்தேனென்று நான் சொல்லியாக வேண்டுமா? ஜனககுமாரி என்பவளும் கனகவதி என்பவளும் ஒரே பெண்மணியென்று நான் உணர்ந்ததன் மூலமாகவே அந்தப் படுமுயற்சியைப் பற்றி அறிந்தேன்," என்று சிக்கலான பாஷையில் பதிலளித்தேன்.

"யார் அப்படிச் சொன்னது?" என்றாள் சுவர்ணும்பாள். அப்பொழுது அவள் முகத்தில் அச்சக்குறி தோன்றியது.

"மறுபடியும் நான் அறிவுறுத்துகிறேன்: இவ்விஷயத்தில் நீங்கள் என்னுடன் ஒத்துப் போகாமல், ஏனைய ரகஸியங்களைத் திரட்டுவதற்கு என்னைத் தனியே விட்டுவிட நினைப்பது பேராபத்தாகும். உங்களது சகோதரியைக் காப்பாற்றுவதற்கு என்னை அழைத்து, அதை மறந்துவிட்டு, என்னுடன் நீர் மொழிச்சண்டை செய்து கொண்டிருக்கிறீர் என்பதை இச்சந்தர்ப்பத்தில் ஞாபக மூட்டுகிறேன். இப்பொழுதாவது அந்த மூடு மந்திரத்தை அவிழ்த்துக் கொட்டுங்கள்," என்று திடசித்தத்தோடு நான் உரைத்தேன். சுவர்ணும்பாள் சிறிது நேரம் பேசாதிருந்தாள்.

"சரி, நான் ஆரம்பிக்கட்டுமா? தாங்கள் ஜனககுமாரியுடன் விழுப்புரத்திலிருந்து எதிர் பாராத விதமாக ஒரு முக்கிய கர்மத்தை உத்தேசித்து நேற்று இங்கு வந்து சேர்ந்தீரல்லவா?" என்று நான் சொல்லிக்கொண்டு வந்தபொழுது, சுவர்ணும்பாள் இடைமறித்தாள். "எங்களுடைய இயக்கம் உங்களுக்கு எப்படித்தெரிந்தது?" என்று கேட்டாள் அவள்.

விழுப்புரத்திலிருந்து அவர்கள் நேற்றுதான் வந்தார்களென்பது எனக்கு உண்மையில் தெரியாது. சாமான்களின்மீது படிந்திருந்த தூசியைக்கொண்டு நேற்று மாலை வந்திருக்கலாமென்றும், திடீரென்று வந்ததற்கு அவர்கள் ரகஸியத்தைக் காப்பாற்றுவதற்கு அனுகூல காரணமாக இருக்கலாமென்றும் நம்பியே நான் மேற்படிக் கேள்வியைக் கேட்டு வைத்தேன்.

"அம்மா, நாம் இன்னும் கொஞ்சம் முன்னணிக்குப்போவோம். தாங்கள் திடீரென்று பிரசன்னமானதற்குத் தக்க காரணமிருக்க வேண்டுமென்றும், சென்னை வாசத்தை விரும்பிப்பதற்குக்கூட இருக்

கலாமென்றும் நான் நம்புகிறேன். இதன் தொடர்பாக தங்களது உற்ற சிநேகிதை யொருவருடன் கடிதப்போக்குவரத்தும் இருந்திருக்கிறது," என்றேன் நான்.

"யாருடன் ?" என்று சுவர்ணும்பாள் கேட்டாள்.

"ஞானரத்னத்தம்மாளுடன் !"

சுவர்ணும்பாளின் முகம் சட்டென்று வெளுத்தது. மாயப்புன்னகை ஒன்று அவளிடம் உதயமாயிற்று.

"நீங்கள் சாமர்த்தியமான வைத்தியர் மாத்திரமல்ல, ஒரு பிரமாதமான மாந்திரீகராகவும் இருக்கிறீர்களே மெஸ்மெரிஸம், ஹிப்நாடிஸம், முதலிய கலைகள் உங்களுக்குத் தெரியுமோ ? இத்தனை சங்கதிகளையும் நீங்கள் எப்படி அறிந்தீர்கள் ?" என்று ஆச்சரியத்துடன் மெலிந்த குரலில் வினவினாள் சுவர்ணும்பாள்.

அவள் கூறிய இவ்வசனத்தில் எனக்கு ஒரு பெரிய சந்தேகம் தோன்றியது. உண்மையிலேயே இப்படிப் பேசுகிறாளா ? ஏமாற்றுவதற்காக இப்படிப் பேசுகிறாளா ? இவைகளைப்பற்றி சிந்திக்க இங்கே நேரமில்லை. ஜனககுமாரி குற்றுயிரும் கொலையுயிருமாகக் கிடக்கிறாள் ! சிக்கலான பிரச்னைகளையெல்லாம் எல்லாம் வல்ல ஆண்டவனுடைய திருவடிக்கமலங்களிலேயே சமர்ப்பிக்கிறேன். அவைகள் அவனிடந்தான் வெளிச்சமாக வேண்டும் !

"ஆனால், நான் ஒன்று சொல்கிறேன். நான் மெஸ்மெரிஸம் ஹிப்நாடிஸக்காரனல்ல. மர்மத்தைப் பாதுகாப்பவர்கள் மிகவும் ஜாக்கிரதையாக இல்லாவிட்டால், தம்மைத் தாமே காட்டிக்கொடுத்துக்கொள்வார்கள்," என்றேன் நான்.

"நானே என் ரகசியத்தை நழுவவிட்டதாகச் சொல்கின்றீர்கள், அல்லவா ராஜேஸ்வரரே ?" என்றாள் சுவர்ணும்பாள்.

"அம்மா தங்கள் பேரில் எனக்கு எவ்விதமான துவேஷமும் ஏற்படுவதற்குக் காரணமில்லை. தாங்கள் எனது அத்தை மகள் என்பதைக்கூட அடிக்கடி நினைவுபடுத்திக்கொள்ளுகிறேன். ஜனககுமாரி உயிர்தப்ப வேண்டுமானால் உங்களுக்குத் தெரிந்த இரகசியங்களைச் சொல்லியே தீரவேண்டும்," என்று நான் நயமாகக்கூறினேன்.

"சொல்லித்தீர வேண்டிய எந்த இரகசியமும் என்னிடம் இல்லையே!"

"இதற்கு மேல் நான் என்ன செய்யக்கூடும்? ஜனககுமாரியின் ஆயுள் ஸ்தான பலம் அவ்வளவுதான் என்று நினைத்துப்போக வேண்டியதே என் வேலையாகும்!"

மறுபடியும் சுவர்ணம்பாள் அமைதியிலீடுபட்டாள். கைலாயத்துக்கும் பூமிக்குமாகப் போராடிக்கொண்டு கிடக்கும் எனது மனைவியின் நிலைமையை நான் ஆழ்ந்து கவனித்தேன். ஆம். அவள் எனக்கு உரிமையான பேரழகிதான். அவளை எவ்வளவு சீக்கிரம் மனைவியாகப்பெற்றேனோ, அவ்வளவு சீக்கிரம் இழந்து விடப்போகிறேன். ஜனககுமாரியின் நோய் இன்னதென்று என்னால் அறியக்கூடவில்லை. ஆட்டம் அசைவு ஒன்றுமே இல்லை. பிரக்ஞையே இல்லாத இந்த நிலைமை எப்படி ஏற்பட்டது? இதைத்தான் சுவர்ணம்பாள் சொல்வதற்கு மறுக்கிறாள். டாக்டர் விஸ்வமேனன் வருவதற்குள் ஜனகம் போய்விடுவாளோ என்று நான் ஐயப்பட்டேன். விஸ்வமேனன் நோயறிந்துரைப்பதில் தலை சிறந்தவர்.

"அம்மா, என்னிடம் உம் அந்தரங்கத்தை ஒப்புவிப்பதால் ஏதேனும் தீங்கு நேரும் என்று நினைக்கின்றீர்களா?" என்று நான் மீண்டும் கேட்டேன்.

"உங்களைப் பெரிதும் நம்பியே எனது சகோதரியைக் கவனிப்பதற்கு வேண்டினேன். எங்கள் குடும்ப ரகஸியத்தை வெளியே சொல்ல அசக்தளாயிருந்தால் நான் கெட்டவள் என்பதாகுமா?" என்றாள் அவள்.

டாக்டர்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கும், ஒவ்வொரு தனி மனிதனுக்கும் ஜீவநாடியாக இருக்கின்றனர். எத்தகைய முகாந்திரத்தைக் கொண்டும் எவ்விதமான ரகஸியத்தையும் அம்பலப்படுத்த அவர்கள் துணியமாட்டார்கள். என்னை நம்புங்கள் என்னுடைய வார்த்தையில் உறுதிகொள்வதால் ஓர் உயிர் காப்பாற்றப்படுகிறது," என்று நான் விடாமல் கூறினேன்.

"தாங்கள் உண்மையைக் காப்பவராக இருக்கலாம், மற்றொரு பெரிய டாக்டர் வருகிறாரே அவர்?"

"அவர் உலகமறிந்து பிரக்யாதியடைந்த பெரிய மனிதர். அந்தரங்கத்தைக் காப்பதாக அவர் சபதம் செய்வார்."

சுவர்ணாம்பாளின் மனம் அரைவாசி இளகிற்று. மற்றொரு புறம் பயம் மென்னியைப் பிடித்துத் தள்ளிற்று. மிரள மிரள விழித்தாள்.

"அம்மா, யோசிக்கவேண்டா. தங்களுடைய நிலை எனக்கு ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. நான் தங்களுக்கு இரத்த பாத்திய முள்ளவனென்பதை உங்கள் மூலமாகவே நான் உணர்ந்திருக்கிறேன். தங்களுக்கு வரும் எல்லாவிதமான துன்பத்தையும் நீக்குவதற்கு என் உயிரையே தத்தம் செய்கிறேன். உண்மையைச் சீக்கிரம் சொல்லுங்கள்," என்று மறுபடியும் மனமுருகக் கேட்டேன் நான்.

"அது பரம ரகஸியமாயிற்றே," என்று சன்னமாக ஆரம்பித்தாள் அவள்.

"எந்த வழியில்?"

"தாங்கள் சொல்லியவாறே நாங்கள் ஒரு முக்கியமான காரியத்தை முன்னிட்டே இங்கு விழுப்புரத்திலிருந்து திடீரென்று புறப்பட்டு வந்தோம். என் புருஷனிடம் சில சாக்குப்போக்குச் சொல்லிவிட்டு நானும் ஜனகமும் சென்னைக்கு வந்தோம்."

கனகவதியென்று முன்னம் எனக்கு அறிமுகப் படுத்திய அதே பெண்மணியை அதே சுவர்ணாம்பாள் ஜனகம் என்று குறிப்பிட்டுப் பேசியதை நான் கவனித்தேன்.

"ஞானரத்னத்திடத்தில் ஒரு காரியமாக வந்தீர்களா?"

"ஆம். இன்று இரண்டுமணிக்கு ஞானரத்னத்தைச் சந்திக்க ஏற்பாடு செய்திருந்தேன்."

"சமீபத்தில் கொலையுண்ட ராமச்சந்திரம் பிள்ளை ஞானரத்தினத்தின் புருஷரல்லவா ?"

"ஆம்," என்று சொல்லியபொழுது அவளது குரல் கொஞ்சம் கம்மிற்று. நாலைந்து சுவாசம் சென்று திரும்பும் வரையில் மௌன

மாக இருந்தாள். மேற்படித் துக்ககரமான நிகழ்ச்சிக்குப் பின் திருவல்லிக்கேணியில் தனது சகோதரியின் வீட்டில் ஞானரத்னம் தங்கியிருந்தாள்.

"என் உத்தேசம் சரியாக இருக்கும் பக்ஷத்தில், தாங்களும் ஜனகமும் கொலை நிகழ்ந்ததினம் தாம்பரத்திலிருந்திருக்க வேண்டும். அல்லவா?" என்று நான் கேட்டேன்.

"ஓ, இல்லை, இல்லை. நல்ல வேளையாக நாங்கள் அங்கு இல்லை. அந்த தினத்துக்கு முன்தினமே சென்னைக்கு வந்துவிட்டோம்."

இந்த வார்த்தை முற்றும் பொய்யானது என்பதை நான் நன்குணர்ந்தேன். சுவர்ணம்பாள் அன்று அங்கில்லாவிட்டாலும், ஜனகம் அங்கிருந்திருக்க வேண்டும். நான் அவளை அங்குப் பார்த்தேன். நான் அவ்வார்த்தையைத் தடுத்துரைக்கவோ, அல்லது ஜனகத்தைப் பார்த்ததைப்பற்றிச் சொல்லவோ சிறிதும் விரும்பவில்லை. ஏனெனில், அதனால் எவ்வித பயனும் ஏற்படாதென்பது என் துணிபு.

"இன்று ஞானரத்னத்தைத் தாங்கள் சந்திக்கவில்லையா?"

மறுபடியும் சுவர்ணம்பாள் மயங்கினது எனது சந்தேகத்தை அதிகப்படுத்தியது.

"ஆம். இங்கு வந்து அரை மணி சாவகாசம் பேசியிருந்துவிட்டுச்சென்றாள்."

"தனியாகவா?"

"இல்லை; நாங்களும் அவளுடன் சென்றோம்."

"எங்கே?"

"வேப்பேரியில் ஒரு நண்பரைப் பார்த்துவரச் சென்றோம்."

"எவ்வளவு நேரம் அங்கிருந்தீர்கள்?"

"சுமார் ஒரு மணி நேரம்."

"அந்த நண்பரின் பேரைச் சொல்லக்கூடாதா?"

"இல்லை. அது அவசியமில்லை."

"தாங்களாவது அல்லது ஜனககுமாரியாவது வெளியில் எங்காவது சிற்றுண்டியோ வேறு ஏதோ அருந்தியதுண்டா?"

"இல்லை. வேப்பேரியில் அந்த நண்பர் எங்களைக் காப்பியருந் தும்படி வேண்டினர். நாங்கள் இருவரும் மறுத்துவிட்டோம். பிறகு சுமார் ஐந்து மணிக்கு வீடு வந்து சேர்ந்தோம். இங்கு வந்துதான் காப்பி சாப்பிட்டோம். காப்பி சாப்பிட்டுக்கொண்டிருந்தபொழுது வேலைக்காரன் வந்து ஜனககுமாரியை யாரோ 'ஓர் அம்மாள்' தேடுவ தாகத் தெரிவித்தான். என்னிடம் சொல்லிக்கொண்டு ஜனகம் புத் தக அறைக்குச்சென்றாள். அரைமணி நேரத்துக்குப் பின்னல் நான் அகஸ்மாத்தாகப் புத்தக நிலயத்துக்குப் போனேன். ஜனககுமாரி தலைவிரி கோலமாகக் கீழே விழுந்து கிடக்கக்கண்டு, விதிர் விதிர்த்துக் கூவினேன். ஸ்மரணையே சிறிதுமில்லாது பிணம்போற் கிடந்த ஜனகத்தை நாங்கள் தூக்கி வந்து கிடத்தினேம். உடனே தங்களை அழைத்துவர ஆள் அனுப்பினேன்," என்று முடித்தாள் சுவர் ணாம்பாள்.

"இவ்வளவுதானா உங்களுக்குத் தெரிந்தது?"

"ஆம். முற்றும் சொல்லியாய் விட்டது. இப்பொழுது கிடக் கும் நிலையிலேயே அப்பொழுதும் கிடந்தாள்!"

"ஆச்சரியம்! இச்சம்பவம் சுமார் ஒன்றரை மணி நேரத்துக்கு முன் நிகழ்ந்திருக்கலாமா?"

"ஆம். இரண்டுமணி நேரத்துக்குமேல் இராது."

"அந்த மாது இன்னர் என்று தெரியவில்லையா? அந்த வேலைக் காரனைக் கேட்கலாமே!"

"கறுப்புடை தரித்து வந்திருந்ததாகவும், தன்னை ஒரு மந்திர வாதியென்று தெரிவித்துக் கொண்டதாகவும் வேலைக்காரன் கூறு கிறன்."

"பிறகு அவள் ஒருவர் கண்ணுக்கும் காணப்படாமல் தப்பி விட்டாளா?"

"ஆம், ஜனகம் அறைக்குள் சென்ற பிறகு அங்கே என்ன நிகழ்ந்தது என்று ஒருவரும் அறிந்தவரில்லை."

"ஜனக குமாரிக்கு விளைந்த பயனல் அங்கே என்ன நிகழ்ந் திருக்கிறது என்பதை ஸ்பஷ்டமாக நாம் அறிகிறோம். படுமோச

மாக ஜனகத்தின் உயிரைக் கவருவதற்கு எத்தனம் நிகழ்ந்திருக்கிறது. இது என்ன காரியமென்று யாராவது சொல்ல முடியுமா?"

"ஆனால் அந்த மர்ம மாது யாராயிருக்கக்கூடும்? இது அசாத்தியமாகக் குழப்பக்கூடிய கேள்வி," என்றாள் சுவர்ணாம்பாள்.

என் மனத்தில் ஓர் எண்ணம் தோன்றியது; கறுப்பாடையில் வந்த அந்தப் பயங்கரமான பெண் பிசாசு, லீலாஜீவையாக இருக்கலாமோ? என்று நான் ஐயப்பட்டேன்.

ஜனககுமாரியிடத்தில் ஒரு புதிய மாறுதலுண்டாயிருந்ததை கவனித்தேன். அவள் முகத்தில் சுத்த சூன்யம் குடிகொண்டது. விரிவான-நுணுக்கமான வைத்திய ஆராய்ச்சி இனி வேண்டுவதில்லை. மதனசுந்தரத்தின் வசத்திலிருந்து என்னால் அபகரிக்கப்பட்ட புகைப்படத்தில் காணப்படும் ஜனகத்திற்கும் இப்பொழுது படுக்கையில் கிடக்கும் ஜனகத்துக்கும் சிறிதும் வித்யாசமில்லை! நாடியைப் பற்றி ஆழ்ந்து கவனித்தேன். ஆனால், நேயர்களே, பயனில்லை! அவள் கைகளை அழுத்தினேன். அவள் பேரைச்சொல்லி வாய்விட்டுக் கூவினேன். சுவர்ணாம்பாளையே கூப்பிடச் சொன்னேன். சுபேதார் மகேந்திரன் அன்று தாம்பரம் கல்யாண பவனத்தில் ஜனககுமாரியிடம் ரகசியமாகச் சொன்ன ஜோசியம் பலித்து விட்டது. ஏதோ மனிதரால் கண்டுபிடிக்க முடியாத ரகஸிய சக்தியால் லீலாஜீவை ஜனககுமாரியைக் கொன்றுவிட்டாள். ஜனகம், எனது அன்புள்ள, அழகுள்ள, அந்தரங்கம் சூழ்ந்த, அருமை நேசி - மனைவி - காதலி சுவர்க்கப்பதவி அடைந்தாள்!

"டாக்டரே, அவளை நிச்சயம் நீங்கள் காப்பாற்ற வேண்டும்! ஜனகம் உமது அத்தை மகள், அவளை நீர் அவசியம் காப்பாற்றித்தீர வேண்டும்!" என்று சுவர்ணாம்பாள் கதறினாள்.

"ஆனால், ஜனகம் மனித உதவிக்கு வெகுதூரத்துக் கப்பால் சென்றுவிட்டாள். மூச்சு அறவே நின்றுவிட்டது. இனி யாராலும் ஒன்றும் செய்வதற்கில்லை. ஜனகத்தை நாம் நிச்சயமாகவே இழந்துவிட்டோம். அந்தப் பயங்கரமான ஸ்திரீயால் கொலை செய்யப்பட்டாள்!"

"ஆ! ஆ!! அந்த மந்திரவாதப் பெண்மணியாலா கொல்லப் பட்டாள்? எப்படி?" என்று கூவினுள் சுவர்ணும்பாள்.

"எப்படிக் கொல்லப் பட்டாள்? இதுதான் என்ஞல் அறியக் கூடவில்லே. எவ்விதமான காயமும் தென்படவில்லே; கொலேக்கான வேறு எவ்வாருன குறிகளுமே இல்லே."

"ஆ! எல்லா அந்தரங்கத்தையும் சொல்லியாக வேண்டும்! ஐயோ டாக்டர்! அவைகளேயெல்லாம் நீங்கள் நம்பமாட்டீர்கள். பயங்கரமான ஓர் ஆவியிஞல் இவ்வீடு சூழப்பட்டு விட்டது," என்று கூறியழுதாள் சுவர்ணும்பாள்.

"தாங்கள் சொல்வது எனக்கு விளங்கவே இல்லே," என்று சொல்லிக் கொண்டிருந்த பொழுது வெளிக்கதவைப் படீரென்று திறக்கும் சப்தம் கேட்டது. அடுத்த விநாடி வேலேக்காரன் உள்ளே ஓடிவந்தான். எனது வைத்திய ஆசிரியரும் பேர்பெற்ற ரசாயன சாஸ்திரியுமான டாக்டர் விஸ்வமேனன் அவ்வேலேக்காரனின் பின்னே வந்து கொண்டிருந்தார்.

13. விஸ்வமேனன்

நான் எனது ஆசிரியரை அன்போடு வரவேற்றேன். டாக்டர் விஸ்வமேனன் மலையாள தேசத்தார். அவருக்குத் தமிழில் அதிகப் பழக்கமில்லை. அநேகமாக அவர் ஆங்கில பாஷையில்தான் பேசுவார். நேயர்களின் நன்மையைக் கோரி அவர் பேசிய பேச்சுக்களைத் தமிழில் மொழி பெயர்த்து எழுதிவிடுகிறேன்.

"ராஜேஜ்வரரே, நவீனமான 'கேஸ்' என்றீரே என்ன?" என்று சொல்லிக்கொண்டே என்னால் அளிக்கப்பெற்ற ஓர் ஆசனத்தில் அமர்ந்தார் விஸ்வமேனன்.

விஸ்வமேனனுக்குச் சுமார் ஐம்பது வயதிருக்கலாம். அழகிய பரந்த முகவிலாஸமுடையவர். அவ்வளவு வயதிலும் தலை மயிர் கொஞ்சமும் நரை காணவில்லை. பெரும்பாலும் மலையாள ஜனங்களுக்கே இக்குறைபாடு சீக்கிரம் நிகழ்வதில்லை. விஸ்வமேனன், லண்டன், ஜெர்மனி, அமரிக்கா முதலிய தேசங்கள் சென்று ரசாயனம் வைத்தியம் முதலியவைகளிலும், விஷ—லாகிரி சாஸ்திரத்திலேயும் நன்கு புலமையடைந்து பட்டம் பெற்றவர். வைத்திய உலகம் ரசாயன உலகங்களுக்கே சிரோமணியாக விளங்கி வருபவர். இதுபோன்ற நவீன நோய்களை அவர் வலிய வந்தே ஆராய்வதுண்டு.

திவான் பகதூர் தெய்வநாயகம்பிள்ளை மனைவியாகிய சுவர்ணம்பாளுக்கு டாக்டர் மேனனை அறிமுகம் செய்துவைத்து, பிணமாகக் கிடந்த ஜனக குமாரியை அவருக்குக் காட்டி, நான் கண்ட அதிசயங்களைப்பற்றியும் தெரிவித்தேன். மேனன் வீண் காலங்கடத்தாமல், ஜனகத்தைச் சோதனை செய்தார். அவரது முகத்தில் கவலைக்குறிகள் தென்பட்டன.

"இந்தப் பெண்மணி இறந்துவிட்டவளாகக் காண்கிறாளே," என்று மேனன் அழுத்தமாய்க் கூறினார்.

"ஜீவனுள்ள குறிப்பே இல்லை. தங்கள் அபிப்பிராயமும் இதுதானா?" என்று நான் அவரை விசாரித்தேன். 'கண்ணபிரானே, மேனன் நல்ல பதிலாகச் சொல்லமாட்டாரா?' என்று என் மனம் ஏங்

கிற்று. எடுத்தவுடனேயே அவர் கையை விரித்துவிட்டார். என்ன செய்வது?

மறுபடியும் இருக்கையை விட்டெழுந்து ஜனககுமாரியின் கணுக்கால், பிடரி, உள்ளங்கை, உச்சி, மார்பு முதலிய உறுப்புகளை ஆய்ந்தோய்ந்து பரிக்ஷித்தார். ஜனகத்தின் மார்பில் முன்பு நான் கண்ட மூன்று சுடுசூலம் இப்பொழுதும் இருந்தது.

மேனன் ஜனககுமாரியின் கண்களைச் சோதித்துவிட்டு, "இது எப்படி ஏற்பட்டது?" என்றார்.

நான் சுவர்ணாம்பாளின் முகத்தைப் பார்த்தேன். அவளும் அச்சத்துடன் என்னை நோக்கினாள். சுவர்ணாம்பாள் சொல்லிய எல்லா வரலாறுகளையும் மேனனுக்கு நான் எடுத்து விளக்கினேன்.

"இந்த வரலாறு பூராவும் மிக்க ரகஸியமாகக் காப்பாற்றப் பட வேண்டுமென்று சுவர்ணாம்பாள் கருதுகின்றார்," என்று நான் கடைசியில் மேனனிடம் சொல்வதற்கும் நான் மறந்து விடவில்லை.

"ஜனகம் இறந்துவிட்டாளென்பது உண்மைதானா?" என்று அரற்றினாள் சுவர்ணாம்பாள்.

ஜனககுமாரியின் மரணத்தில் சுவர்ணாம்பாளுக்கு அவ்வளவு அவநம்பிக்கை ஏன் என்று எனக்கு விளங்கவில்லை.

"உண்மையாகவே ஜனககுமாரி செத்துப்போய் விட்டாள்," என்று மேனன் சுவர்ணாம்பாளுக்குப் பதிலளித்தார்.

"தங்களால் இனி ஒன்றும் செய்ய முடியாதா? உலகம் முழுவதும் தங்கள் நாமம் பிரபல்யமடைந்திருக்கின்றதே?" என்று நான் மனமுருகக் கேட்டேன். இதே கேள்வியை நினைத்து நான் பிற்காலத்தில் வெட்கப்பட்டதுண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

"ராஜேஸ்வரரே, ஒருவர் இறந்துவிட்ட பிறகு டாக்டர்கள் அவருக்கு என்ன செய்ய முடியும்?" என்றார் மேனன்.

"மேனாட்டு மூலமாக விகசிதமடைந்திருக்கும் இந்த வைத்திய சாஸ்திரமே சில சமயம் பொய்த்துப்போகும்போது, முழுதும்

செவ்வையாகக் கற்கப்படாத ஜோசியங்கள் மனிதனின் அறியாமையால் சிலகால் பொய்த்துப் போவதற்குக் கேட்கவும் வேண்டுமா?'' என்று ஒரு ஜோசியர் சொன்னது அந்தச் சமயத்தில் ஞாபகம் வந்தது. ஒன்று பொய்யாகப் போகும்போது எல்லாமே பொய்யாகிறது. நிஜமாகத் தோன்றும்பொழுது எல்லாமே நிஜமாகிறது.

ஜனககுமாரி இறந்துவிட்டாள். அவளைக் காப்பாற்றுவதற்கு மேனனே கைவிட்டுவிட்டார். உடற்கூறு (Anatomy) நோயறிகூறு (Pathology) அணுவேந்திரியக்கூறு (Bacteriology) முதலிய வைத்தியப் பகுதிகளைத் தனித்தனியே படித்தறிந்தவர். அன்றியும் ஆயுர்வேதம் சித்தவேதம் முதலிய இந்திய வைத்தியத்தில் விசேஷ ஆராய்ச்சி உடையவர். இத்தகைய மேதாவியாலேயே ஜனககுமாரியைக் காப்பாற்ற முடியவில்லையென்றால், அவர் கற்ற சாஸ்திரங்கள் பொய்மையானதும், புளுகும் புனைச்சுருட்டும் நிறைந்த அபஸ்மாரமான நூலாகவுமேயாகும். இந்தப் பயனற்ற சாஸ்திரங்களை மூளையுருக ஏன் படிக்கவேண்டும் ?

டாக்டர் மேனன் ஆழ்ந்த யோசனையில் ஆழ்ந்திருந்தார். திடீரென்று அவர் தம் சட்டையை முழங்கை பரியந்தம் ஒதுக்கித் தள்ளிக்கொண்டு எழுந்தார். மறுபடியும் ஜனககுமாரியின் அருகிற் சென்று, முழங்கை கழுக்கட்டு முதலிய அவயவங்களைப் பரிசோதித்தார். அந்தச் சோதனையிலும் அவருக்குத் திருப்தி ஏற்படவில்லை.

நான் நிகழ்த்திய கண்ணுடிப் பரிக்ஷையைப்பற்றி அவருக்கு எடுத்துரைத்தேன். அதை அவர் ஊன்றிக் கவனித்தபிறகு, ஜனகத்தின் இடது கண்ணைப் பிதுக்கிக் கருவிழிகளைக் கூர்ந்து கவனித்தார். அவ்வாறு சுமார் கால் மணிநேரம் ஆராய்ந்த பிறகு, அவர் முகத்தில் ஒருவகை பிரகாசம் தோன்றியது.

"ஆ ! நாம் தவறுசெய்தோம். அவள் இன்னும் செத்துப் போய்விடவில்லை !'' என்றார் மேனன்.

"ஆ ! இறக்கவில்லை ? ஆனால் தாங்கள் உயிரைத் திரும்பக் கொண்டுவர முடியுமா ?" என்றேன் நான்.

"சாபல்யமடைந்தேன்," என்றாள் சுவர்ணாம்பாள்.

மனிதரின் அறியாமை காரணமாகவே கலைகள் பொய்யாகின்றன, பயனற்றதாகின்றன என்பதை டாக்டர் மேனன் நிரூபித்தார். மேனன் இல்லாவிடில் ஜனகம் நிச்சயமாக எரிக்கவோ புதைக்கவோ பட்டிருப்பாள் அல்லவா? 'இறந்தவரை எழுப்பும் வித்தை இருக்கிறது' என்று கோபாலன் சொன்னதை இன்று மெய்யாகக் காணப் போகின்றேன்!

"ராஜேஸ்வரரே, சற்று அமைதியாக இரும்," என்று மேனன் கூறினார்.

பின்னும் ஐந்து நிமிஷம் பாதாதிகேச பரியந்தம் நுணுக்கமாக ஆராய்ந்தபிறகு, சில முக்கிய மருந்துகள் தேவையாயிருக்கிறதென்றும், வீட்டுக்குப்போய் ஐந்து நிமிஷத்தில் திரும்பி வருவதாகவும் சொல்லி வெளியே சென்று மோட்டாரில் ஏறினார்.

பத்து அல்லது பதினைந்து நிமிஷத்திற்குள் மேனன் திரும்பி வந்தார். ஏதோ சிற்சில மருந்துகளைக் கையில் கொண்டு வந்திருந்தார்.

"கொஞ்சம் வெந்நீர்," என்றார் மேனன்.

வெகுசீக்கிரம் வெந்நீர்கொண்டு வரப்பட்டது. மருந்து சீசாக்களை வரிசையாக மேஜைமீது வைத்து, ஒவ்வொன்றிலும் அளவுடன் ஒரு கண்ணாடித் தம்ளரில் கொட்டினார்.

"உம்மிடம் இன்ஜெக்ஷன் குழாய் இருக்கிறதா?" என்று மேஜைமீது பார்வையைச் செலுத்தியபடியே என்னைக் கேட்டார் மேனன்.

பாக்கெட் கேஸிலிருந்த இன்ஜெக்ஷன் குழாயை எடுத்து மேனனிடம் கொடுத்தேன். மருந்தைக் கலந்து குழாயில் விட்டு ஜனககுமாரியின் புஜத்தில் செலுத்தினார்.

நாற்காலியை இழுத்துக்கட்டிலோரமாகப் போட்டுக்கொண்டு, குளிர்ந்து ஜில்லிட்ட ஜனககுமாரியின் உருவத்தைக் கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

மேனன் தம் கைக்கடிகாரத்தைப் பார்த்துவிட்டு இரண்டாவது இன்ஜெக்ஷன் ஒன்று கொடுத்தார். அவருடைய சோகமான முகத்

தோற்றத்தைப் பார்த்துக் காரியம் அபஜெயமாக முடியுமோவென்று நான் மனங்கலங்கினேன். உயிராவது திரும்பி வராவது என்று ஒரு அசட்டு எண்ணம் தோன்றி என்னைப் பயமுறுத்திற்று.

“அம்மே, இப்போது ஞான் விளிக்குன்னதுக்கு மெத்த நேரான உத்தரம் தருமோ?” என்று மேனன் சுவர்ணாம்பாளை நோக்கிக் கேட்டார். சுவர்ணாம்பாளுக்கு இங்கிலிஷில் நல்ல பயிற்சியிருக்கிறதென்பதை மேனன் எப்படி அறிந்திருக்க முடியும்?

“ஈ டெரிபில் கோமா (Terrible Coma) ஏ வழியாண ஈ பெண்குட்டிக்குச் சம்பவமாய்?” என்று கண்களைச் சுருக்கிக்கொண்டு வினவினார் மேனன்.

“எனக்கு ஒன்றும் தெரியாது. எனக்குத் தெரிந்ததெல்லாவற்றையும் உங்களிடம் டாக்டர் ராஜேஸ்வரன் சொல்லி முடித்தார்?” என்றாள் சுவர்ணாம்பாள்.

“ஆனால், டாக்டர் மேனன் வந்துகொண்டிருந்தபொழுது நீங்கள் சொல்லிக்கொண்டிருந்த சமாசாரத்தைச் சொல்லவில்லையே?” என்று மடக்கினேன் நான்.

தன் உதட்டைக் கடித்துக்கொண்டு அந்த மலையாள டாக்டரின் முகத்தைக் கூர்ந்து நோக்கினாள் சுவர்ணாம்பாள்.

“மெத்த அசம்பாவிதம்! ஆச்சரியம்! அதை எப்படித்தான் சொல்லப்போகிறேன். அந்தப் புத்தக நிலையத்தில் ஏதோ பரம ரகஸியம் சூழ்ந்திருக்கின்றது,” என்றாள் சுவர்ணாம்பாள்.

“ஆ பரம ரகஸியம் எந்தாண?” என்று சுவர்ணாம்பாளைக்கேட்டார் மேனன்.

“வலையிற் பட்ட மானைப்போல அலங்கோலமாகக் கிடந்த ஜனகத்தைப் புத்தக நிலையத்தில் நான் பார்த்தேன். அப்பொழுது என் உடம்பு சுகமாகவே இருந்தது. அவ்வறையைவிட்டு நான் வெளியே விரைந்து வந்தபோது, ஒரு நவீனமான உணர்ச்சியை அடையப்பெற்றேன். என் நரம்புகள் திமிரேறி விறைத்துவரத் தொடங்கிற்று. டாக்டர் ராஜேஸ்வரன் வருவதற்கு முன் நான் பிரக்ஞை பெற்றவளாகவில்லை. இதில் முக்கியமான ஆச்சரிய

மொன்றிருக்கிறது. நான் அச்சத்தால் அலறியபொழுது வேலைக்காரர்கள் அதே அறையிலிருந்து விரைந்தோடி வந்தார்கள். அவர்களும் என்னைப்போலவே நரம்பு வாதங்கொண்டு பிரக்ஞை இழக்கலானார்கள். ஒரு ஜில்லிப்பான ராட்சச கரத்தினால் வலிந்தறையப்படுவதாக நாங்கள் அறிந்தோம். ஆ! நினைக்கும்பொழுதே பயமாக இருக்கின்றது. பேய் பிசாசுகளை நான் எளிதில் நம்புவதில்லை. அந்தச் சந்தேகம் இனி ஜென்மம் உள்ளவரையில் அணுகாவண்ணம் செய்யத்தக்க ஆவி அவ்வறையிலே குடிகொண்டிருக்கின்றதென்பது நிச்சயம்," என்றாள் சுவர்ணம்பாள். அச்சம் அவள் அவயவங்களை நடுங்கச் செய்தது.

"உலகத்திலில்லாத பேராச்சரியம்!" என்று நான் பிரமை கொண்டேன்.

"இதே மாதிரிதான் ஜனகம் தாக்கப்பட்டிருக்க வேண்டுமென்று நம்புகிறேன்," என்றாள் சுவர்ணம்பாள்.

"உட்புகுவான் போகும்போது ஒந்நும் வந்திட்டில்லா. வெளியராண வரும்போது ஆ எக்ஸ்பீரியன்ஸ் வருன்னது! இல்லையாண?" என்றார் மேனன்.

"ஆம். உள்ளே போகும்பொழுது எவ்விதமான உணர்ச்சியும் ஏற்படவில்லை! வெளியே வரும்பொழுது—அதை நினைப்பதற்கே பயமாகவிருக்கிறது," என்றுரைத்தாள் சுவர்ணம்பாள்.

"மெத்த ஸ்ட்ரேஞ்ச் அக்கான்ஸாண! நான் ஆக்கிரகந்தன்னே நோக்குவான் வேணும். அவிட ஏதானு 'க்ளூ' கிட்டுதற்கான ஞாயம் உண்டு!" என்றார் மேனன்.

"ஜனகம் இறக்கவில்லையென்பது நிச்சயந்தானே?" என்றேன் நான்.

"இல்லை, கடைசியில் கொடுத்திருக்கிற இன்ஜெக்ஷன் மேலான நன்மையைக் கொடுத்தாக வேண்டும். பிழைப்பாள் என்று நம்புவதற்கு இடமிருக்கிறது," என்று ஆங்கிலத்தில் சொன்னார் டாக்டர் மேனன்.

டாக்டர் மேனனின் சொந்த தமிழ்ப் பாஷையை இனி அப்படியே தெரிவிக்காமல், என்னுடைய பாஷையில் எழுதி வாசகர்களின் சிரமத்தைப் போக்க நினைக்கிறேன்.

சுவர்ணம்பாள் எங்களை ஹாலுக்கு அழைத்துச் சென்று ஓர் அறையைச் சுட்டிக் காட்டினாள்.

"இதுதான் புத்தக நிலையம். இதன் கதவுகளை வெளிப்புறம் இழுத்துத் திறக்கவேண்டும். 'வில்' வைத்த கதவாதலால் தானே மூடிக்கொள்ளும். உள்ளே யாரேனும் சென்றால் கதவுதானே மூடிக்கொள்ளும். உள்ளிருந்து வெளியே வரும்பொழுது கதவைத் தள்ளிக்கொண்டு வரவேண்டும்," என்றாள் சுவர்ணம்பாள்.

"கதவைத் திறக்கிறதுதானே?" என்றார் மேனன்.

"அப்பாடி நான் மாட்டேன்!" என்று நடுக்கத்தோடு கூறினாள் சுவர்ணம்பாள்.

"ஓ! கதவைத்திறக்கவே பயமா?"

"ஆம். நான் வெளியிலேயே நிற்கிறேன்."

"நாங்கள் உள்ளே செல்லுகிறோம்," என்று சொல்லி நான் அலட்சியமாகச் சிரித்தேன்.

முடிவில் நாங்கள் இருவரும் அறைக்குட் சென்று ஒவ்வொன்றையும் கவனித்தோம். எவ்விதமான நூதனமும் எங்களுக்குத் தோன்றவில்லை. ஜன்னல் கதவுகளை நன்கு திறந்திருந்ததால் ஜிலுஜிலுவென்று காற்று வீசிக்கொண்டிருந்தது. மின்சார தீபம் பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தது. புஸ்தக பீரோக்களும் ஆடையாபரண அலமோரக்களும் அங்கு இருந்தன. அருமையான சித்திரப் படங்கள் பல ஒழுங்கான வரிசையில் அமைந்திருந்தன. எல்லா விளக்குகளையும் ஏற்றி விட்டோம். ஸோபா, மேஜை, நாற்காலி, ரத்ன ஜமுக்காளம் முதலியவை அவ்வொளியில் அழகாகத் திகழ்ந்தன.

மேனன், அவ்வறையில் இருந்த எல்லா சாமான்களையும் ஆராய்ந்து பார்த்து வந்தார். நானும் கூடியவரையில் அவருக்கு உதவியாயிருந்தேன். மணி எட்டடித்தது.

என்ன ஆச்சரியம்! சுமார் இரண்டரைமணி நேரத்துக்கு முன்னால் இதே அறையில் ஜனகம் உயிரோடிருந்து ஒரு நவீன ஸ்திரீயுடன் உரையாடிக் கொண்டிருந்திருக்கிறாள். கறுப்பு உடையில் வந்த அந்தப் பெண்மணி யார்? கொலைபாதகி என்று கருதப்பட்ட லீலா ஜீவையே இங்கு வந்திருப்பாளோ?

சுவர்ணாம்பாள் வாயற்படிக்கு வெளியே நின்றுகொண்டு எங்கள் இருவருடைய செயலையும் கூர்ந்து கவனித்தாள். எங்கள் இருவரில் ஒருவராவது அசம்பாவிதமான உணர்ச்சிக்கோ வியாதிக்கோ இலக்காகவில்லை. சுவர்ணாம்பாளின் முகத்தோற்றம் நாங்கள் வெகு சீக்கிரம் மேற்படி நோய்க்கு இலக்காவோம் என்பதை முன்னறிவிப்பதாக இருந்தது. அச்சத்தோடு நின்றிருந்த அவள் எங்களை ஒரு விதமாகப் பார்த்து, "உங்களுக்கு எவ்விதமான உணர்ச்சியும் நரம்புகளில் ஏற்படவில்லையா?" என்று கேட்டாள்.

"இல்லவே இல்லை!" என்றேன் நான்.

"அறையைவிட்டு வெளியே வரும்பொழுது நிச்சயமாக ஏற்படும்," என்றாள் சுவர்ணாம்பாள்.

"அப்படியா?" என்று அவள் வார்த்தையைக் கேலி செய்து கொண்டு புத்தக நிலையத்தின் கண்ணாடிக் கதவுகளைத் தள்ளிக் கொண்டு வேகமாக வெளியே வந்தேன்.

"ஆ! ஆ!! கடவுளே!" என்று என்னையும் அறியாது நான் கூறினேன். அடுத்த நிமிஷம் சுவர்ணாம்பாளின் அருகாமையில் நின்றேன்.

"ஆ! டாக்டர்! டாக்டர்!! சீக்கிரம் வாருங்கள். நானும் அந்த அபாயத்திற் சிக்கிக் கொண்டேன்! சீக்கிரம்!" என்று நான் கூவினேன்.

மேனன் துடித்துக்கொண்டு அறையிலிருந்து என்னிடம் ஓடி வந்தார்.

"என்ன செய்கிறது? சீக்கிரம் சொல்லும்!" என்று பதறினார் டாக்டர் மேனன்.

மேனன் பேசியசொற்கள் என் காதுகளில் தெளிவாக விழுந்தன. ஆயினும் கிணற்றுக்குள்ளிருந்து வெளியே நிகழும் சப்தத்

தைக் கேட்பதை யொத்த மெல்லிய வோசையில் கேட்டேன். நான் அவ்வறையை விட்டு வெளியேவந்தபோது, சுவர்ணம்பாள் சொன்ன மாதிரியே ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. எலக்டிரிக் ஷாக்கைவிட இவ் வுணர்ச்சி அதிர்ச்சியையும் பயங்கரத்தையும் அதிகமாகக் கொடுத்த தென்பது நிச்சயம். என் உடம்பு ஜில்லிட்ட சிறிது நாழிகைக்குள், எனது அவயவங்கள் சுரணையற்று மரத்துவருவதை நன்குணர்ந்தேன். கண்களில் மின்மினி தோற்றுவதையும் கண்டேன். பாதத்திலிருந்து சீதளம் பரவிவருவதாக நான் அறிந்தேன். கீழே சாய்ந்துவிட நேர்ந்தபொழுது மேனன் என்னைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு சோபாவில் படுக்க வைத்தார்.

“ ராஜேஸ்வரா, இப்பொழுது என்ன செய்கிறது ?” என்று பர பரப்புடன் வினவினார் மேனன்.

“ அவயவங்கள் எல்லாம் இறுகிக் குளிர்ந்து வருகின்றன. நாடி நரம்புகள் திமிர் அடைகின்றன. தலை கிறுகிறுவென்று சுற்று கிறது. கண் மங்குகிறது. காதுகள் அடைத்துக்கொண்டு வருகின் றன, ” என்று நான் என் நிலையை மெல்ல எடுத்துக் கூறினேன்.

எனது நாடியைப் பரிக்ஷித்தார் மேனன். சுவர்ணம்பாள் சித்தி ரம்போல் அசைவற்று நின்றாள். நாடிகள் மந்தப்பட்டு வருவதை உணர்ந்த மேனனின் வதனம் சிவந்தது.

“ ராஜேஸ்வரரே, பயங்கரம்—பயங்கரம்! பயங்கரமான ரகஸியம்! நூறு மைல் வேகத்தில் நாடியின் வலிமை குறைந்துகொண்டு செல் கின்றது. ஆ! கண்கள்,” என்று சொல்லிக் கண்களைக் கூர்ந்து பார்த் தார்.

“ ஆம். நீர் சொல்கிறபடி உம் சரீரம் வெகு சீக்கிரம் குளிர்ச்சி யடைந்து கல்லைப்போல இறுக்கம் அடைந்து வருகிறது. அந்தப் பெண்மணியின் நோயைப்போன்ற அம்சமே உம்மிடம் வியாபிக் கிறது,” என்றார் மேனன்.

“ஆனால், தங்களுக்கு எவ்விதமான உணர்ச்சியும் பலஹீனமும் தோன்றவில்லையா ?” என்றேன் நான்.

“ இல்லை. இதுவரையில் எவ்வாறான மாறுபாடும் என்னிடம் நிகழவில்லை,” என்று பதிலளித்தார் மேனன். “ ஆ ! என்ன இது ?

னக்கு மாத்திரம் இந்நோய் எப்படிவந்தது? ஆச்சரியம்! டாக் .ர், நான் முழுவதும் பிரக்ஞையிழந்து போவதற்குள் தயவு செய்து னக்கு ஏதாவது சிகிச்சை செய்யுங்கள்! அந்தச் சீதளத் தாக்குதல் ப்படிப் பாய்ந்தது? ஆ! டாக்டர், இப்பொழுது என் கண்களின் பார்வை முற்றும் அற்றுப்போய்விடப்போகிறது. சீக்கிரம்," என்று ான் அரன்று கத்தினேன்.

எனது காதலி ஜனகத்திற்குக் கொடுத்த அதே ஔடதத்தை எனக்கு ஊசி மருந்தாக உட் செலுத்தினார் மேனன்.

மனிதன் உயிர் போகும் தருவாயில் எவ்விதமான நிலைமையை அடைகிறான் என்பதை நான் நன்கு உணர்ந்துகொண்டேன். ஆ! நான் இறந்துபோவேனோ? என் கண்களுக்குத் தெரிவதெல்லாம் மேனனின் பிரகாசமான முகமும் மூக்குக் கண்ணாடியுந்தான். பேச முயன்றேன்; முடியவில்லை. சைகையினால் ஏதேனும் தெரிவிப்போ மென்று கைகளைக் கிளப்பினேன். தசை நரம்புகளெல்லாம் இறுகி உணர்ச்சியற்றுப்போய், எழும்ப மறுத்தன. மெய்யாகவே புத்தக நிலையத்தில் ஒரு நூதன ஆவி சூழ்ந்திருக்கிறது.

மேனன் கைக்கடிகாரத்தைத் திருப்பிப் பார்த்துவிட்டு இரண்டாவது இன்ஜெக்ஷனையும் போட்டார். சில விநாடிகள் கடந்தன. கொஞ்சம் விடுதலை ஏற்படுவதாகவும், கலகலப்புத் தோன்றுவதாக வும் தோன்றிற்று. மேனனின் முகத்தோற்றத்தைக்கொண்டு அவர் மிகவும் மனக்குழப்பங் கொண்டிருப்பதாக நிச்சயித்தேன். சுவர்ணாம்பாள் சொல்லிய கதையைக்கேட்டு என்னைப்போலவே வியப்பும் திகைப்புங்கொண்ட மேனன், புத்தக நிலையத்தில் ஏதோ ஒரு பிரமாதமான மர்மம் இணைக்கப்பட்டிருக்கின்றதென்பதைத் தெளிவாக உணர்ந்தார்.

14. மேனனின் மருத்துவ மகிமை!

இருபது அல்லது முப்பது விநாடிகள் வரையில் எனக்கு முழுவதும் ஸ்மரணை யற்றுப் போயிருக்க வேண்டுமென்று நினைக்கின்றேன். அதன் பிறகு உடல் லகுவாகத் தொடங்கியது. சிவப்பு மாத்திரை ஒன்றை வெந்நீரில் கரைத்து என் வாயில் ஊற்றினார் மேனன். கசப்பாய்க் கசந்தது அம்மாத்திரை!

நான் இப்பொழுது பேசுவதற்கு வலிமை பெற்றுவிட்டேன். எழுந்து நடக்கவும் பலமடைந்து விட்டேன். "தாங்கள் என் போல பயங்கர வியாதியோ உணர்ச்சியோ அடையவில்லையா?" என்று நான் மேனனைக் கேட்டேன்.

"நான் அந்த மாதிரி ஒன்றும் பெறவில்லை. உண்மையில் இதைப்போன்ற விசித்திர நோயை நான் இது வரையில் கண்டதில்லை, நோயின் தன்மை இறப்புக் குறிகளை முற்றுந் தன்வசங் கொண்டிருப்பதால், எத்தகைய டாக்டரும் ஏமாந்து போய், நோயாளியை எரித்துவிடும்படிச் சொல்லிப் போய்விடுவார்கள். இன்னும் இதைப்பற்றி ஆராய வேண்டிய பாகம் அதிகமாயிருக்கிறது. அறைக்கு உட்புறத்தில் விஷக்காற்று சிறிதுமில்லை. ஏனென்றால், ஜன்னல்கள் திறந்து விடப்பட்டு காற்று நன்கு வியாபித்திருக்கிறது. வெளியில் விரைந்து வரும்போது மாத்திரம் இப்படி நிகழ்கிறது" என்றார் மேனன்.

"ஆம். வெளியே வந்தபோதுதான் நான் பலமாகத் தாக்கப் பெற்றேன். காரணம் என்ன?" என்றேன் நான்.

"இல்லை! விஷயம் மூட மந்திரமாக இருக்கின்றது. ஆனால் அந்த மூட மந்திரங்களைத்தான் நான் வரவேற்கிறேன். மூட மந்திரத்திலிருந்துதான் உலகத்துக்கு வேண்டிய சாதனங்கள் கண்டு பிடிக்கப் படுகின்றன," என்றார் மேனன்.

"ஆனால், இந்த இரகசியத்தைத் தாங்கள் கண்டுபிடிக்கக் கூடுமா," என்று ஆவலோடு வினவினாள் சுவர்ணம்பாள்.

"தாராளமாக, உங்களுடைய சம்மதத்தின் பேரில் இதோ ஆரம்பிக்கப் போகிறேன். ரகஸியத்தைக் கண்டுபிடித்து விட்டால்

ங்களுடைய சகோதரிக்குச் சிகிச்சை செய்வது எளிதாகும்," ன்றார் மேனன்.

"எவ்விதத்தில் கண்டுபிடிக்க முடியும்?" என்று வியப்புடன் வினவினேன் நான்.

"அறைக்குள் பிரவேசித்துதான்."

"தாங்கள் என்னைப்போல அந்த நோயினால் பீடிக்கப்பட்டால் என்ன செய்வது?"

"ஆராய்ச்சி செய்தல் என்றும் அறிவுடைமையாகும்," என்று சொல்லிக்கொண்டே இன்ஜெக்ஷன் செய்வதற்கு வேண்டிய மருந்து கள் இரண்டு பாகங்களையும் தனித்தனியே எடுத்து அளவுடன் வைத்துவிட்டு, தாம் என்னைப்போல் நரம்பு வாதப்பட்டு ஸ்மரணை தவற நேர்ந்தால், இப்படி இப்படி இன்ஜெக்ஷன் செய்ய வேண்டு மென்று எனக்குச் சொல்லிக் கொடுத்தார். நான் அவைகளைக் கவன மாகக் கேட்டுக்கொண்டேன்.

மேனன் அலக்ஷியமாக உட்புகுந்து ஆராய்ச்சி செய்தார்; சுமார் பத்து நிமிஷம் சென்று வெளியே விரைந்து வந்தார். ஹா! கடவுளே! அவரும் என்னைப்போல் 'கீச்' என்று உள்தொண்டையால் கத்தினார்.

"ஆ! இன்ஜெக்ஷன்! இன்ஜெக்ஷன்!!" என்று கூவினார் டாக்டர்.

அவர் கட்டளை செய்திருந்தபடி முதல் இன்ஜெக்ஷனை அவரது புஜத்தில் கொடுத்தேன். குழாயின் ஊசியை வெளியே இழுத்த பிறகு, "ஆச்சரியம்! மனோ வாக்குக்கு எட்டாத அந்தரங்கம்! என் உடம்பு பனிக்கட்டியைப்போலக் குளிர்ந்து உறைந்து வருகின்றது. நரம்புகள் இறுகுகின்றன," என்றார் மேனன்.

"கால்கள் மரமரக்கின்றன வல்லவா?"

"ஆம். முற்றிலும் தாங்கள் விவரித்ததைப்போலவே எனக்கும் வாய்த்திருக்கின்றது. கடிகாரத்தைக் கவனியுங்கள். மூன்று நிமிஷங் களுக்குப்பின் இரண்டாவது இன்ஜெக்ஷனைக் கொடுக்க வேண்டும்" என்றார் மேனன்.

நாங்கள் மூவரும் நிசப்தமாக நின்றுகொண்டிருந்தோம். மூன்று விநாடிகள் கடந்தபின் இரண்டாவது இன்ஜெக்ஷனையும் அளித்தேன். ஐந்து நிமிஷம் வரையில் மௌனமா யிருந்த மேனன், "பேஷ்!

அருமையான ஔஷதம். நல்ல வேலை செய்திருக்கின்றது. இன்னும் சில விநாடிகளில் நான் முற்றும் குண மடைவேன். கால்கள் இப்பொழுதும் பலவீனமாக இருக்கின்றனவல்லவா ?" என்றார் அவர்.

நான் அதற்கு உடன்பாடான பதிலளித்தேன்.

"நானும் அங்நிலையிலேயே இருக்கின்றேன். வியாதியின் ஆரோகணம் வெகு துரிதமாகச் செல்கின்றது; முதன்முதல் மூளையைத் தாக்குகிறது. இவ்வாறாகவே அப்பெண்மணி மூளையின் ஸ்திதி குன்றி, மூச்சற்றுப் பிணம்போலக் கிடக்கிறாள் !" என்றார் அவர்.

"அதற்குக் காரணம் ?" என்றேன் நான்.

"அதுதான் நாம் கண்டுபிடிக்க வேண்டிய ரகசியம்," என்றார் மேனன்.

"சந்தேக மில்லை. ஆனால், நாம் ஆராய்ச்சியிற் புகுந்து ஜனககுமாரியை இழந்துவிடக் கூடாது ! அவள்—"

"இல்லை. அவளை நாம் புறக்கணித்துவிடவில்லை. இப்பொழுது நாம் சில குறிப்புகளைக் கண்டறிந்து விட்டோம். ஜனககுமாரியை இனி நாம் நிச்சயமாகக் காப்பாற்றலாம்" என்றார் மேனன்.

நூல் நிலையத்தின் கதவில் அல்லது வாயிற்படியில் ஏதோ மர்மம் இருக்க வேண்டுமென டாக்டர் கருதுவதாகத் தெரிந்தது. எங்களை விட்டுத் திடீரென்று அந்த அறைக்குச் சென்று அதன் வாயிற்படியில் நின்று, எதனையோ உற்றுக் கவனித்தார். மறுபடியும் கதவைத் திறந்துகொண்டு உட்புறம் சற்று நேரம் நின்றார். ஐந்து நிமிஷத்துக்குப் பின் எங்களிடத்திற்குத் திரும்பி வந்தார். ஆனால், இம்முறை அவர் எத்தகைய விபத்துக்கும் இலக்காக வில்லை.

அவ்வறையின் ஏதோ ஒரு பாகத்தில் மர்மம் ஒன்றிருக்கின்றதென்பது நிச்சயம். அறையி லிருந்து விரைந்து வருபவர்களை அது பிடித்துக் கொள்கின்றது என்பதுதான் நாங்கள் அறியக்கூடிய அந்தரங்கமாக விருந்தது.

ஜனககுமாரியை நாங்கள் கவனித்தோம். ஜனககுமாரியின் உடம்பு சற்று இயக்கங்கொண்டது. எங்கள் மனம் குளிர்ந்தது. ஹா ! டாக்டர் மேனன் இல்லாவிட்டால், ஜனககுமாரியின் கதியென்ன ?

"பேஷ்! இதோ உயிர் வந்துவிட்டது! ஜனகம் பிழைத்துக் கொண்டாள்! இருங்கள், வீடுவரையில் சென்று வேறு சில மருந்து களைக் கொண்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு, விரைவாக வெளியே சென்றார் டாக்டர் மேனன். நான் ஜனககுமாரியை அன்புடன் கூர்ந்து நோக்கிக்கொண் டிருந்தேன்.

செத்தாரை எழுப்புவது உத்தர ஞான சிதம்பரம் என்னும் செய்யுளடியை அன்று கோபாலன் நினைவூட்டினு னல்லவா? ஆம். உண்மை. தமிழ் வளர்த்த பெருமான் அகஸ்தியர் காலத்தில் இந்திய வைத்தியம் தலைசிறந் திருந்தது. தென் மதுரை, கபாடபுரம் என் னும் ஸ்தலங்களில் தமிழ்ச் சங்கங்கள் இருந்த காலத்தில், வைத்தியம், ரசாயனம், இயந்திரம், பூதபௌதிகம், வானம், ஜோதிஷம், இந்திர ஜாலம், மகேந்திர ஜாலம், பரதநாட்டியம், சங்கீதம், சிற்பம், யுத்தம், பொருளாதாரம் முதலிய அநேக கலைகளைத் தமிழர் வளர்த்துவந் திருப்பதாக ஆதாரங்கள் காணப்படுகின்றன. சிலப்பதிகாரம் காடு காண் காதையாலும், ஸ்ரீஎல்லியட் பிரபுவின் ஆராய்ச்சி யுரையாலும் கபாடபுரம் மதுரை முதலிய ஸ்தலங்கள் கடல் கொள்ளப்பட்டதென் பதை யொப்புக்கொள்கின்றோம். கடைச்சங்கம் கூடல்மாநகரத்தில் ஸ்தாபிக்கப்பட்டாலும், மேற்கண்ட அரிய கலைகளைச் சமுத்திரம் விழுங்கிற் றென்பதில் ஐயமில்லை. கடைச்சங்கத்திலும் வைத்தியக் கலை வளர்க்கப்பட் டிருப்பதாகத் தெரிகின்றது. உடல்நூல் என்று இப்பொழுதும் மதுரைச் சங்கத்தில் ஒரு நூலிருப்பதாகத் தெரிகிறது. வள்ளுவர் தமது நூலில் மருந்து என்று ஓர் அதிகாரம் வகுத்து, பத்து செய்யுட்களில் அநேக விஷயங்களைச் சொல்கின்றார்!

"ஜனககுமாரி என்ன ஆனாள்?" என்பதன்றோ உங்கள் கேள்வி? இறந்துபோன ஜனககுமாரி பிழைத்துக்கொண்டு வருகின்றாள். நீங்கள் நம்ப மாட்டீர்கள். நம்பாவிட்டாலும் பாதக மில்லை. நான் சுவாதீனத்துடன் அவள் உயிர் பெற்று வருவதைப் பார்க்கின் றேன்! நம்புகின்றேன்! டாக்டர் மேனனின் ஆச்சரிய வைத்தியம் என்னை ஐயாயிரம் ஆறாயிரம் வருஷத்துக்கு முன்னு ளுள்ள தமிழர் வாழ்க்கைக்கு இழுத்துக் கொண்டுபோய் நிறுத்துகின்றது. நான் என்ன செய்வேன்? முப்பு. இதே மூவெழுத்துப் பதத்தை உங் களில் சிலர் கேள்விப்பட்டிருப்பீர்கள். இது பழைய தமிழ் வைத்தியர் களின் சிந்தையிலும், வாயிலும் அனவரதமும் நர்த்தனம் புரியும்

சொல். இச்சொல்லுக்கு அகஸ்தியர் வைத்தியம் என்று அகராதியில் பொருள் காணப்படுவதை அறியக்கூடும். இந்த முப்புதான் செத்தவரை எழுப்பும் என்று நான் கேள்விப்பட்டிருக்கின்றேன். இன்று இதன் தத்துவத்தை யறிந்தவர் இல்லை யென்று நினைக்கின்றேன்.

"முப்பு செத்தவரை எழுப்ப முடியுமா?" என்று நான் ஒரு நண்பரிடம் உங்களைப் போலவே தருக்கித்தேன். "செத்துப் போன தொரு ஈயை முதலாக இங்கிலீஷ் வைத்தியத்தால் எழுப்ப முடியுமா?" என்று அவர் என்னைத் திருப்பிக் கேட்டார். கொல்ல முடியுமே யொழிய எழுப்ப முடியா தென்று கேலியாகப் பதிலளித்தேன். தமிழ் வைத்திய முறையில் இந்த க்ஷணமே இறந்துபோன ஈயை எழுப்ப முடியும் என்று வாதித்ததோடு அவர் நிற்கவில்லை. ஓர் ஈயைப் பிடித்து நீரில் வீழ்த்திக் கொன்றார். உயிரே இல்லை. நிச்சயமாக அது மடிந்து விட்டது. அதன் பிறகு அதனை உயிர்ப்பித்துக் காட்டினார். எப்படி? திருநீற்றில் அந்தச் செத்த ஈயை வீழ்த்திப் புரட்டினார். அவ்வளவு தான். மூன்றாவது நிமிஷம் அது உயிர் பெற்றெழுந்து பறந்து போய் விட்டது. ஈயைப் போலவே துன்மரண மடைந்த நாய், பாம்பு முத லியவைகளை உயிர் பெறச் செய்யலா மென்று அவர் சொன்னார். நோயினா லன்றித் துன்மரண மடைந்த நாயையும் பாம்பையும் தென் னங்காற்றில் அரைமணி நேரம் கிடத்தி வைத்தால் அவைகளுக்கு உயிர் வருமென்பது சித்தாந்தம்.

மேற்கண்ட இவ்வளவு ஆதாரங்களினாலுங்கூட எனக்கு இறந்த வரை எழுப்ப முடியும் என்பதில் நம்பிக்கையுண்டாகவில்லை. இதன் காரணமாகவே, நான் கோபாலனுடைய வார்த்தையில் நம்பிக்கை கொள்ளவில்லை. இன்றோ, டாக்டர் மேனனின் ஆங்கில வைத்திய முறையின் தீக்ஷண்யத்தைக் கண்டு பிரமிப்பதோடு, தமிழ் வைத் தியத்தைப் பற்றி நான் கேள்விப்பட்டவைகளை யெல்லாம் சிந்திக்க வேண்டி யிருக்கின்றது.

சுவர்ணாம்பாள் மலர்ந்த முகத்துடன் ஜனகத்தை நோக்கிக் கொண்டிருந்தாள். எனது காதலியின் உயிர் திரும்புகின்றது என் னும் விஷயத்தைவிட எனக்குச் சந்தோஷத்தை அளிக்கக் கூடியது வேறு இவ்வுலகத்தில் என்ன இருக்கின்றது?

"நூல் நிலையத்தின் மர்மம் இந்த லோகத்துக்கு மாத்திர மன்று எந்த லோகத்துக்குமே ஒரு நவீனம்! இதற்குமுன் இதுபோல் நிகழ்ந்ததில்லையே?" என்று நான் சுவர்ணாம்பாளை விசாரித்தேன்.

"எனக்குத் தெரிந்த வரையில் இதற்கு முன் இதுபோல என்றுமே நிகழ்ந்ததில்லை"

"அந்த அந்நிய ஸ்திரீ வருவதற்குமுன் இந்த அபத்தம் விளைந்ததில்லை யல்லவா?"

"ஆம். அதுதான் எல்லாவற்றிலும் விந்தை!"

"அந்த ஸ்திரீ யாரா யிருக்கலாம் என்று உங்களால் யூகிக்க முடியாதா?"

"எப்படி முடியும்?"

"ஓர் அனுமானத்தால்கூட—"

"முடியாது!"

அவளுடைய பதில் எனக்குத் திருப்தி யளிக்கவில்லை. எனது சிந்தனை திடீரென்று லீலாஜீவை என்னும் விசித்திர மாதைத் தழுவியோடிற்று. எனது சந்தேகத்தைப்பற்றிச் சுவர்ணம்பாளிடம் பிரஸ்தாபிப்போமா வேண்டாமா என்று சின்னேரம் தயக்கங் கொண்டேன். ஆம். கூடாது. ரகஸியம் ரகஸியத்தைக் கண்டு பிடிக்கும், என்று மௌன மடைந்தேன்.

"ஜனகம் அந்த ஸ்திரீயுடன் சுமார் அரைமணி நேரம் சம்பாஷித்திருக்கக் கூடுமா?"

"ஆம். அவ்வளவு காலந்தா னிருக்கும்"

"அவள் வெளியே சென்றபோது ஒருவரும் பார்க்க முடியவில்லையோ?"

"ஆம். ஒருவருமே பார்க்கவில்லை!"

"ஆ! எவ்வளவு சிக்கலான விஷயம்"

அத்தருணம் டாக்டர் மேனன் வந்து சேர்ந்தார். மேஜையோரத்தில் நாற்காலியை இழுத்துக் கிடத்தி உட்கார்ந்துகொண்டு பல சீசாக்களிலிருந்த மருந்துகளை அளவுடன் ஒரு கண்ணாடித் தம்ளரில் கொட்டிக் கலக்கிக் குழாயில் விட்டு முன்போலவே இன்ஜெக்ட் செய்தார்.

மருந்தின் குணம் பயன் தருவதாகத் தோன்றியது. வெளுத்திருந்த அவளது இதழ்கள் சிவந்தன. பிரகாச மற்ற வதனத்தில்

புதுப் பிரகாசம் தோன்றிற்று. பின்னும் ஐந்து நிமிஷத்தில் மற்றொரு இன்ஜக்ஷன் கொடுத்தார் மேனன்.

ஜனகத்தின் நாடியைப்பற்றிப் பரிசோதனை செய்தார். 'பளிச்' சென்று அவர் முகம் மலர்வுற்றது. "இதோ பிராணவாயு இயங்கத் தொடங்கிவிட்டது! நமது ஆராய்ச்சி சரியாகப் பலித்தது. நான் எதிர் பார்த்த நேரத்தைவிட வெகு துரிதத்தில் ஔஷதம் வேலை செய்திருக்கிறது," என்றார் மேனன்.

சில நிமிஷங்கள் சென்றன. ஜனகத்தின் உடலில் அனலுண்டாயிற்று. இரத்த ஓட்டமும் ஆரம்பித்தது. பின்னும் சில விநாடிகளில் ஜனகம் மருண்டு விழித்துச் சுற்றிப் பார்த்தாள்.

"ஜனகம்! இப்படிப் பார்! என்னைத் தெரிகிறதா?" என்று என்னை யறியாமலேயே நான் கேட்டேன்.

"தெரிகிறது. அவள்—அந்த ஸ்திரீ எங்கே?" என்று அச்சத்துடன் வினவினாள் ஜனகம்.

"யாரைக் கேட்கிறாய்? அந்தக் கருப்பாடைக்காரியையா?" என்று நான் தெளிவாகக் கேட்டேன்.

"ஆம்"

"எங்களுக்குத் தெரியாது. நீ வியாதியுற்றிருக்கிறாய். டாக்டர் மேனன் வைத்தியம் செய்கிறார்."

"அம்மா, உனக்கு இப்பொழுது எப்படி யிருக்கிறது?" என்று ஜனகத்தை வினவினார் டாக்டர் மேனன்.

"எனக்குத் தாகவிடாய் ஜாஸ்தியாக விருக்கிறது," என்றாள் ஜனகம்.

கண்ணாடித் தம்ளரில் கொஞ்சம் நீரும் பிராந்தியுமாகக் கலந்து ஜனகத்துக்குக் கொடுத்தார் மேனன்.

அப்பொழுது பின்கட்டிலிருந்து சுவர்ணம்பாள் வந்துசேர்ந்தாள். ஜனகம் உயிர் பெற்றதைக் கண்டு மனமகிழ்ந்து "ஆ! நானே பாக்யவதி!" என்று சொல்லி ஜனகத்தைத் தழுவிக்கொண்டு ஆனந்த மடைந்தாள்.

அந்த மாயா விகசித பயங்கரச் சிக்கு எவ்வளவு விரைவாக உடலிற் பரவிற்றோ, அதனினும் அதிவிரைவாகச் சொஸ்த மடைகிறது

சுநு எல்லாவற்றிலும் பேராச்சரியமாக விருந்தது. இப்பொழுது தில் ம் எழுந்து உட்காரவும் பேசவும் பலம் பெற்றுவிட்டாள். அந்த நோய் எவ்வாறு விளைந்தது என்று நாங்கள் அவளைக் கேட்டோம். அவள் அளித்த விடையி லிருந்து எங்களுக்கு நேர்ந்ததைப்போலவே அவளுக்கும் நேர்ந்த தென்று அறிந்து கொண்டோம்.

"இப்பொழுது உன்னால் நடக்க முடியுமென்று உனக்குத் தோன்றுகிறதா?" என்றேன் நான்.

"ஓ! முடியு மென்று நம்புகிறேன்!" என்று சொல்லி எழுந்து மிகவும் நடுக்கத்துடன் கொஞ்சதூரம் நடந்து சென்று வந்து உட்கார்ந்தாள்.

"உன்னைத் தேடிவந்த அந்தக் கருநிற ஆடைக்காரியுடன் வார்த்தையாடிக் கொண்டிருந்தபொழுது என்ன விளைந்தது என்பதறிய ஆவலா யிருக்கிறோம். அதைப்பற்றிச் சொல்ல முடியுமா?" என்று கேட்டேன்.

சுவர்ணாம்பாள் உத்தரவைப் பெறுபவள்போலத் தன் கண்களை அவள் பக்கம் திருப்பினாள் ஜனககுமாரி. சுவர்ணாம்பாள் திகிலும் அச்சமுங்கொண்டு தன் கண் மடலைச் சற்று அசைத்து ஓர் உதறு உதறினாள். அக் குறிப்பி லிருந்து உள்ளதைக் கக்கி விடாதே என்று அவள் சமிக்ஞை செய்ததாக நான் ஸ்பஷ்டமாக அறிந்து கொண்டேன்.

"ஒன்று மில்லை" என்றாள் ஜனகம்.

"அவள் யார்?"

"எனக்குத் தெரியாது!"

"பின்னை அவள் இங்கு வரவேண்டிய காரணம்? அவளை இதற்குமுன் நீ பார்த்திருக்கிறாயா?"

"இல்லை. முற்றும் புதியவள். உயர்ந்து மெலிந்து அழகு வாய்ந் திருந்தாள். கன்னங் கரேலென்ற கருப்புத் துணியை உடுத்தி யிருந்தாள்! எனக்கு ஒரு கடிதங் கொண்டு வந்திருந்தாள்."

"கடிதம்—? யாரிட மிருந்து?"

"ஒரு மர்ம சமாசாரம்! எனது சிநேகிதை யொருத்தி அதனை யனுப்பி யிருந்தாள்."

மற்

" அந்தச் சிநேகிதை யார் என்று சொல்லக்கூடாதா?"

" ஆம். முடியாது. அது என் சொந்த ரகஸியம் "

" நூல் நிலையத்தில் மாயாசக்தி ஒன்று இருக்கிறது. அது என்ன எனக் கண்டு பிடிக்க வேண்டுமானால் உன் இரகஸியத்தைப் பகிரங்கப்படுத்தியே தீரவேண்டும்!"

" என்ன மாயாசக்தி?"

" அறையை விட்டு யார் விரைந்து வருகின்றார்களோ, அவர்களை ஒரு மாய நோய் பற்றிக்கொள்ளுகிறது!"

" ஆம், அது ஒரு மாயா ஜாலந்தான். என் சிநேகிதைக்கு ஒரு கடிதம் எழுதி அந்த ஸ்திரீயிடம் கொடுக்க உத்தேசித்து என் பேனாவை யெடுத்து வர வெளியே வந்தேன். உடனே அந்த ரகஸிய நோய் என்னைப் பிடித்துக் கொண்டது. நடுக்கத்துடன் திரும்பி அறைக்குள் சென்றேன். சோபாவில் உட்காருவதற்குள் எனது உடல் மரமரத்துக் கீழே விழுந்துவிட்டேன். கருப்பாடைக் காரியைப்பற்றி என்னால் கவனிக்க முடியவில்லை!" என்றாள் ஜனகம்.

"அந்த ஸ்திரீயைப்பற்றி நீ ஓர் உண்மையும் சொல்லமாட்டாயா?"

சுவர்ணம்பாளைப் பார்த்தபடி ஜனகம் மௌனமாய் நின்றாள்.

" இல்லை. அது சொல்லக்கூடிய சங்கதி யல்ல!" என்று அரற்ற லுடன் பதி லளித்தாள் ஜனகம்.

சிநேகிதையிட மிருந்து செய்தி வந்தது என்பது சுத்தப்பொய் யாக இருக்க வேண்டும்! ஞானரத்னத்தைத் தவிர ஜனககுமா ரிக்கு வேறு சிநேகிதை யிருப்பதாகத் தெரியவில்லை. அவள், கருப்பாடைக்காரி — விஜயம் செய்வதற்கு அரைமணி நேரத்துக்கு முன் ஜனககுமாரியையும் சுவர்ணம்பாளையும் சந்தித்திருக்கும் பொழுது செய்தி யனுப்ப வேண்டிய நியாயமில்லை. மகேந்திரன் அனுப்பியிருத்தல் சாத்தியமாகுமா? அல்லது மதனசுந்தரம் அனுப்பி யிருக்கக்கூடுமா? மதனசுந்தரத்தை ஜனகம் விசுவாசிப்பது உண்மை யாக விருக்கும் பக்ஷத்தில், கடிதம் அவனிடமிருந்து வந்திருக்க வேண்டு மென்பதில் ஐயமில்லை. கள்ள புருஷனின் பெயரையோ கடி தத்தையோ வெளிப்படுத்துவதற்கு எந்தக் கன்னிகையும் விரும்ப மாட்டாள்.

சுவர்ணத்தைப் பழித்த தேஜஸ் அதோ ஜனககுமாரியின் சரீரத்தில் 'தகதக' வென்று மிளிருகின்றது. அந்த ஹிருதயத்திலோ, கார்த்திகை மாதத்து அமாவாசை பூரணமாகக் குடிகொண் டிருக்கின்றது.

அப்பாப்பா! தலையிடிக்கிறது? ஏன் இவள் இவ்வளவு பிடிவாதமாக இருக்கிறாள். மகேந்திரனோ அல்லது மதனசுந்தரமோதான் கடிதம் அனுப்பி யிருக்கிறார்கள் என்பது என் மனத்தில் பட்டது.

அந்த மாயா ஸ்திரீ யார்? அந்தப் பயங்கரமான லீலாஜீவையைத் தவிர இவ்வளவு திட தீரசங்கல்பத்தையுடைய வேறு பெண்மணியா யிருக்க முடியாது.

"ஜனகம், ஒரே ஒரு கேள்வி. இன்று வந்த பெண்மணி உன்னைத் தொட்டாளா? வேறு ஏதேனும் குறிப்பித்தாளா?" என்று ஆவலோடு வினவினேன்.

"ஒன்றும் செய்யவில்லை!"

"திடீரென்று ஏற்பட்ட அந்நோய்க்கு அந்த ஸ்திரீ காரணமாக விருக்கலாமா வென்று உன் மனதில் சந்தேகம் தோன்ற வில்லையா?"

"இல்லை. அவளால் எப்படி முடியும்?"

"ஏன் அவளுடைய செய்கையைக் கொண்டு"

"அப்படியானால் அவள் இங்கில்லாதபோதும் மேற்படி மாயா நோய்க்குத் தாங்களும், டாக்டர் மேனனும் பாத்திரமானதாகச் சொன்னீர்களே, அதெப்படி முடியும்?"

"ஓ! அது வேறு விஷயம்" என்றார் மேனன்.

"புத்தக நிலையம் எமபட்டணத்தின் சக்திக்குச் சிறிதும் குறைந்த தன்று. அப்பேர்ப்பட்ட வன்மை வாய்ந்த மாயாசக்தியைக் கண்டறிய வேண்டுமானால் நீ உண்மையைச் சொல்லித்தீரவேண்டும்!"

"நான் வெளிப்படையாகச் சொல்கின்றேன். அந்தக் கடிதங் கொடுத்தனுப்பிய மனிதர் என் உயிருக்கு எவ்விதத்திலும் தீங்கு நினைக்கக் கூடியவரல்லர்" என்றாள் ஜனகம்.

"ஆனால்—அந்த ஸ்திரீ? அவளை நிச்சயமாக இதற்கு முன் நீ பார்த்த தில்லையா?"

17

"இல்லை, அவள் எனக்குப் புதியவள்!" என்றாள் ஜனகம்.

டாக்டர் மேனன் மறுபடியும் புத்தக அறைக்குள் சென்று, சில ஆராய்ச்சிகள் செய்து வெளியே திரும்பி வந்தார். அப்பொழுதும் அம் மாயா நோய் அவரைப் பற்றாமல் விடவில்லை. அதே இன்ஜெக்ஷனால் மறுபடியும் சொஸ்த மடைந்தார்.

மணி பத்தரை யாயிற்று. சுவர்ணம்பாளின் வற்புறுத்தலின் பேரில் நானும் டாக்டர் மேனனும் அங்கேயே இரவு போஜனம் செய்தோம்.

புத்தக நிலையத்துக்குள் ஒருவரும் போகா வண்ணம் அதைப் பூட்டி, அச்சாவியை டாக்டர் மேனன் தாம் வைத்துக்கொண்டார். அறையின் வாயிற்படியிலோ உட்புறத்திலோ சூழ்ந்திருக்கும் ரகஸிய சக்தியைக் கண்டு பிடிக்க மேனன் கங்கணங் கட்டிக்கொண்டார். நிச்சயம் அத்துறையில் அவர் வெற்றி பெறுவார் என்பது எனக்குத் தெரியும்.

> வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
> உள்ளத்தின் உள்ளக் கெடும்.

என்ற குறட்பா சொல்கிறபடி, பூமியை அப்படியே விழுங்கும் பெரு வெள்ளம்போல இடுக்கண் புரண்டோடி வந்தாலும், அறிவின் மிக்க ஒருவன் தன் மனத்தில் அதைப்பற்றிச் சிந்திக்கும்பொழுது, அது சூரியனைக் கண்ட பனிபோல நீங்கிவிடு மல்லவா?

"டாக்டர், அறையின் அந்தரங்கத்தைப்பற்றித் தங்கள் அபிப்பிராய மென்ன?" என்று மேனனை வினவினேன்.

"இப்பொழுது ஒன்றும் சொல்வதற்கில்லை" என்று அவர் கூறிவிட்டார்.

சுமார் பதினொரு மணிக்கு நானும் மேனனும் சுவர்ணம்பாளின் வீட்டை விட்டு எங்கள் சாலைக்குப் புறப்பட்டோம். நான் மேனனிடம் விடை பெற்றுக்கொண்டு, எனது சாலைக்குப் போய்ச் சேர்ந்தேன்.

15. நண்பனா? பகைவனா?

அன்று இரவு எனக்கு உறக்கமே இல்லை! சுவர்ணம்பாளின் மாளிகையும், நால் நிலையமும், ஜனககுமாரியும், டாக்டர் மேனனும் மாத்திரம் என் கண்களிலும் மனத்திலும் ஊடுருவிப் பிரயாணம் செய்யவில்லை, அந்தப் பாவ ஜன்மம்—விசித்திரப் பிறவி லீலாஜீவையும், நயவஞ்சக மேஜரும், ஞானரத்னமும், மதன சுந்தரமும்கூட எனது அகக்கண் முன் தோன்றினர். அதோ, அந்தத் தாம்பரத்துக் கொலை! விழுப்புரத்திலிருந்து திடீரென்று சென்னைக்கு ஏற்பட்ட சுவர்ணம்பாளின் பிரயாணம் முதலியன எனது உள்ளத்தை ஊடுருவித் துளைத்தன.

உத்தர பாகத்திலே சூரிய பகவான் செங்கதிர் ஒளிர உதயமானான். லீலாஜீவையை எப்படிக் கண்டு பிடிப்பது? அந்தப் பிரணவ மந்திரத்தைக் கண்டறிந்து விட்டால், எல்லா இந்திரஜால மகேந்திர ஜால மந்திரங்களையும் எளிதில் கண்டறிந்து கொள்ளலாம். மற்றபடி வசிவசி மசிமசி என்று உருப்போடுவதிற் பயனில்லை! ஆ! லீலாஜீவை, லீலாஜீவை! பெண்ணுலகத்திலே ஒரு ராணியா? என்ற பல வேறு சிந்தனைகளும் கேள்விகளும் உதயமாயின. எனது சிந்தா குலத்துடன் காலைக் கடன்களைச் சீக்கிரம் முடித்தேன்.

எனது ஆபீஸுக்குச் சென்று வியாதியஸ்தர்களைக் கவனிக்கலானேன். கவர்ன்மெண்ட் குமாஸ்தாக்கள் முதல் பல உத்தியோகஸ்தர்கள் லீவ் வாங்குவதற்காக டாக்டர் சர்ட்டிபிகேட் வேண்டுமென்று கேட்டனர். ஆங்கிலவைத்தியர்களுக்குப் பெரும்பாலும் பொய்ச் சர்ட்டிபிகேட் கொடுப்பதில்தான் அதிக வருமானம் என்பது நேயர்கள் அறியாத விஷயமல்ல. நோயாளிகளைப் பரிசீலனைசெய்து ஔஷதங்கள் கொடுத்த பின்னர், சர்ட்டிபிகேட்டுகளை வேண்டியவர்களுக்குச் சமர்ப்பித்து முடித்தேன். மணி சரியாகப் பத்தடித்தது. வந்திருந்த தபால்களைப் பிரித்துப் படித்து வந்தேன். அவைகளில் எனது அன்னையின் கடிதமும் ஒன்றிருந்தது. எனது கலியாண விஷயத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருந்தார். திருநெல்வேலியில் யாரோ ஒருவரிடம் ஓர் அழகிய படித்த பெண் இருப்பதாகவும், அப்பெண்ணுக்கு எங்கள் உறவினர் ஒருவர் முயற்சியெடுத்துக்கொண்டிருப்பதாகவும், ஆதலின் சாதகத்தை உடனே அனுப்ப வேண்டுமென்பதாகவும் அதில் எழுதி

யிருந்தது. பணம் கொஞ்சம் அனுப்பும்படியாகவும் எழுதி யிருந்தார்கள்.

என்னை யறியாமலேயே எனக்கு ஒரு பெருஞ் சிரிப்புண்டாயிற்று. ஏன் தெரியுமா? எங்கள் மரபில் கல்யாணம் செய்வதென்றால் லகுவான காரிய மல்ல. கல்யாண ஆரம்பத்தோடு ஒரு பெரிய துவந்த யுத்தம் செய்தாக வேண்டும். செவ்வா தோஷம், கிவ்வா தோஷம், ராகு தோஷம், கேது தோஷம், களத்திர தோஷம், புருஷ தோஷம், பெண் தோஷம், தசப் பொருத்தம் முதலிய பேராபத்துக்களைத் தாண்டிக்கொண்டு ஜோசியருக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைச் செலுத்த வேண்டும். பெண் வீட்டார், ஒரு நித்ய தரித்ர பிள்ளை வீட்டாரை ஈவு இரக்க மில்லாமல், காசுமாலை, கெச்சட்டிகை, பவுன் கொலுசு, பொற்காப்பு, வைரத்தோடு, கூராச்சி புடவை ஆகிய இவைகள் மாத்திரம் முக்கியமாகப் போடப் படவேண்டும் என்று சொல்லி, "இதற்குமேல் தங்கள் இஷ்டம்" என்று ஒரு வார்த்தையும்கூடப் போட்டு வைப்பார்கள். இவ்வளவையும் போடுவதாக அந்த நித்யதரித்ரன் ஒப்புக்கொண்டு தீரவேண்டும்! இதற்கப்பாலும் கல்யாண பேச்சு ஆரம்பம்செய்த மூன்றுவது வருஷம் தாலிகட்டி முடிகிறவரையில், சந்தேகாஸ்பதத்தைப் பூஜித்துக் கொண்டிருக்க வேண்டும்!

அநேக ஆயிர விபத்துக்களுக்கப்பா லிருக்கிற திருமணத்தை ஒரு மணி அல்லது இரண்டுமணி நேரத்துக்குள் வெகு அநாயாசமாக அடைந்த என் அதிர்ஷ்டத்தை என்னவென்று சொல்லுவேன். ஆ! இந்திரலிங்கம்! அவன் பெயரைச் சொன்னாலே குலை நடுங்குகின்றது. ஜனகம்! அந்த ரூபவதி அவலக்ஷணம் பிடித்த அசடாகவாவது அல்லது அந்தரங்கம் சூழாத தூய வநிதையாகவாவது இருக்கலாகாதா? ஜனககுமாரியை நான் திருமணம் செய்துகொண்ட விஷயம் எனது உற்றார் யாருக்குத் தெரியும்? இதைச் சொன்னால் நம்புவார்களா?

எனது அன்னையின் கடிதத்தில் மற்றொரு விஷயம் காணப்பட்டது. அது எனது ஆச்சரியத்தை அதிகப்படுத்தியது. எனது தந்தையின் பெட்டியைத் திறந்து ஒரு நாள் பரிசோதித்தபோது, ஒரு தகர டப்பியில் ஒரு கடிதம் இருந்ததென்றும், அக்கடிதத்தையும் அனுப்பி யிருப்பதாகவும் எழுதி யிருந்தார்கள். அக்கடிதத்தோடு இணைக்கப்பட்டிருந்த அந்தக் கடிதத்தைப் பிரித்தேன்:

உழுவலன்புடைய ஐயன்மீர்!

தமெமர் தலைப்புடையிற் சார விடுத்தக் கட்டளை தன்னைக் கண்டு, உட்பூரித்து உடல் வெய்துயிர்த்தேன் காண்மின். அக் கட்டளை தானுஞ் சீரிய நெறிப்புறத்துச் செய்விப்பானுள்ளிப் பகற்படுத்த நாழி பத்திற் றொடங்கிப் பரியூர்ந்து பதிகடந்து... ....குணதிசை வந்துழி ஓதையுஞ் சும் மையு மோங்குற காலெனக் கடுகி வீழ்ந்துபு வெள்ளம் விரைந் தது. கோனுறை இல்லத் துறைந்து திருவலஞ் சூழ்ந்து தெருள் பெறற் கவன்றாடலைப் பொருந்த இறைஞ்சினேன். மலைபடு திரவியம் வானுறக் குவிக்கலாமாங்கு, தண்டமிழோங்...

கடிதத்தில் விஷயமில்லையென்று நினைக்கின்றேன். எத்தனையோ தரம் படித்தேன். பொருள் விளங்குவதாகத் தோன்றவில்லை. கடிதம் பாதியாகக் கிழிக்கப்பட்டிருக்கிற தென்பதை நேயர்கள் ஊகித்திருக் கக்கூடும். மற்றொரு பாதியும் அகப்பட்டால் ஒரு சமயம் பொருள் அறியக்கூடு மென்று நம்புகின்றேன். ஆனால், கடிதத்தின் கீழ்ப் பாகத்தை நான் தேடிப் பிடிக்க வேண்டுமென்று முயற்சி யெடுத்துக் கொள்ளப் போவதில்லை. தலைக்குமே லிருக்கும் ரகஸிய இருட்டுகளை வெளிச்சம் செய்வதற்கே திணறும்பொழுது, இதில் எப்படித் தலையிட முடியும்?

சுவர்ணாம்பாளின் இல்லத்தில் நேற்றையதினம் நிகழ்ந்ததை நினைக்கும்பொழுது என்னை இந்தப் பூலோகத்தை விட்டு வேறொரு நவீன பிரகிருதிக்குக் கொண்டுபோவதைப் போலத் தோன்றியது. மேற்படி அந்தரங்கங்கள் எல்லாம் சேர்ந்து எனது உள்ளத்தைக் குழப்பி அதம் செய்தன. இந்த ரகஸியங்களை யாரிடமாவது உதறி விட்டால் தேவலையென்று தோன்றியது. ஆதலின், எனது தோழன் கோபாலனைப் போய்ப் பார்த்துவர எண்ணங் கொண்டேன்.

ரிக்ஷா வண்டியை விட்டுக் கீழிறங்கி எனது நண்பனின் இல்லத் துக்குள் புகுந்தேன். கோபாலன் சிகரட் சகிதம் ஆழ்ந்த யோசனையில் அமிழ்ந் திருந்தான்.

"ராஜேஸ்வரா, ஏது இவ்வளவு தூரம்? வா. இப்படி உட்காரு," என்று சொல்லி, ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டான் கோபா லன்.

அவ்வாசனத்தில் அமர்ந்தபின், பல உலகவிஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். உப்புச் சத்யாக்கிரகம், இர்வின் பிரபுவின் தாக்ஷண்ய தர்மகுணம், ஐயர்லந்து தேசத்து மாறுதல், திவேலரா பெருமை முதலியவைகளைப்பற்றி விரிவாகச் சம்பாஷணை புரிந்தோம்.

மேற்படி விஷயங்களெல்லாம் பேசப்பட்ட பிறகு, நான் சுவர்ணம் பாளின் வீட்டுக்குச் சென்றது, அங்கே நிகழ்ந்த சம்பவங்கள், டாக்டர் மேனனின் மருத்துவ மகிமை முதலிய எல்லாச் செய்திகளையும் விவரித்து அவனுக்கு எடுத்துரைத்தேன்.

“ஓ! இன்னும் உனக்கு அந்தப் பைத்தியம் விடவில்லையா? அந்த மோக வலையிலிருந்து மீளாத வரையில் உன் உயிருக்கே தீங்கு விளையு மென்பது நிச்சயம்,” என்றான் கோபாலன்.

“நான் வேண்டு மென்று அந்த மோக வலையிலோ; ரகசிய வலையிலோ சிக்கவில்லையே. எதிர் பாரா விதமாக நிகழ்ந்துவிட்டது. அதைப்போலவே நான் மௌனமாக விருந்து சில அந்தரங்கங்களைக் கண்டறிவேன்.”

“இல்லை. உன்னால் இம்மியளவுகூட அவர்கள் அந்தரங்கங்களை அறிய முடியாது! என் வார்த்தையை ஞாபகம் வைத்துக்கொள்.”

“அப்படி நீ கருதுவதற்குக் காரண மென்ன?”

“ஏனென்றால், உனது நடவடிக்கைகளை அவ்விஷமக் கூட்டத்தார் ஒற்றிருந்து கவனித்து வருகிறார்கள்?”

“ஒற்றறிகிறார்களா? யார்?” என்று நான் பேராச்சரியத்துடன் வினவினேன்.

“அநேகம் பேர். உன் மனைவிகூட உன் செயல்களைக் கவனித்து வருகிறாள்.”

“ஆ ஜனகங்கூடவா? உனக் கெப்படித் தெரியும்?”

“முந்தாநாள் மாலை உன் மனைவி இத்தெரு வழியாக உன்னைத் தேடிக்கொண்டு இரண்டு மூன்று முறை அங்கு மிங்கும் போனாள்; இந்த வீட்டைக் கூர்ந்து கவனித்தாள். முந்தாநாள் மாலை அவர்கள் சென்னையிலேயே இல்லை என்று உன்னிடம் தெரிவித்திருந்தால் அது சுத்த பொய்யான வார்த்தை யென்று நம்பு!”

“உண்மைதானா?”

"சந்தேக மில்லாமல்!"

"ஆனால் என் மனைவியை நீ எப்படி அடையாளம் தெரிந்து கொண்டாய்?" என்று வினயமாகக் கேட்டேன் நான்.

கோபாலன் விழித்தான். அவனுடைய முகம் சிவந்து கருத்தது. அவனுடைய முகக்குறியி லிருந்து, ஜனககுமாரி—சுவர்ணாம்பாள் ஆகியவர்கள் கோபாலனுக்குத் தெரியாதவர்கள் என்பது சுத்தப் பொய் யென்பது வெளிச்சமாயிற்று. கோபாலனுக்கு அவர்களை நன்கு தெரிந்திருக்க வேண்டும். அப்படி யிருந்தும் ஒன்றுந் தெரியாதவனைப்போல அவன் என்னிடம் பேசவேண்டிய காரணமென்ன? அவர்கள் கோபாலனுக்கு எவ்வாறு பழக்கமாயினர்? எத்தனை நாளாக? இவ்வாறு பல கேள்விகள் ஒன்றன்பின் ஒன்றாக எழுந்து, என்னைத் திகைக்கப் பண்ணின. சே! என்ன தர்மசங்கடம்! போகப்போக இருளாக விருக்கின்றதே யன்றித் தெளிவுபட வில்லையே!

எனது அத்யந்த தோழனாக நான் கருதி வந்த கோபாலன் என்ன காரணத்தைக் கொண்டோ என்னிடம் நயவஞ்சகத்தனமாக நடந்து வந்திருக்கிறான். அவர்களுக்கும் இவனுக்கும் ஏதோ தொடர்பு இருக்கிற தென்பது வெட்டவெளிச்சம். அக்கூட்டத்தாரின் ரகஸியங்களை நான் கண்டு பிடித்துவிடக்கூடும் என்ற பயத்தினால், என்னிடம் ஏதேதோ புலம்புகின்றான்போலும்!

"ஜனகத்தை நீ எப்படி யறிந்தாய்?" என்று மறுபடியும் அவனை அழுத்தமாகக் கேட்டேன்.

"எப்படி யறிந்தாய்? இதென்ன நூதன கேள்வி. நீ வர்ணித்த அடையாளங்களைக் கொண்டுதான்," என்று அவன் தந்திரமாகப் பதி லளித்தான்.

அப்பதிலை நான் நம்பவில்லை. நேரே அவளைப் பார்த்திருக்கிறானோ இல்லையோ அதைப்பற்றி விட்டுவிடுவோம். பதினைந்தாம் தேதி மாலை அவள் சென்னையில் இல்லை யென்று என்னிடம் அவள் சொல்லுவாள் என்பது இவனுக்கு எப்படித் தெரியும்? அல்லாமலும் நான் மயிலாப்பூர் ரங்க விலாசத்தில் இருக்கிறேன். புரசையி லில்லை யென்று சுவர்ணாம்பாள் அறிந்த விதம் எங்ஙனம்?

ஜனககுமாரி என்னைத் தேடி வந்தால் நேராக வீட்டுக்கு வந்து என்னை விசாரியாமல் தெருநெடுகப் பார்த்துக்கொண்டு செல்வானேன்?

இதற்கு ஒரே ஒரு பதில்தான் இருக்கிறது. கோபாலனைக் காணுவதற்கு ஜனககுமாரி என்ன காரணத்தாலோ பயப்படுகிறாள்.

எனது விவாக சம்பந்தமான ரகசியத்தைக் கோபாலன் ஒரு சமயம் அறிந்திருக்கலாம். ஆனால், என்னிடம் தெரிவிக்காமல் மறைத்து வரக்கூடும். என் சம்பாஷணையின்போது நான் கண்டுபிடித்த விஷயங்களில் அருவருப்புக் கொள்ளுகின்றான் என்பதை நன்கறிந்தேன். அவன்மீது எனக்கு ஐயம் விழுந்துவிட்டது. அவனையும் எனது விரோதிகளில் ஒருவனாகக் கருதினேன். மேலும் அவனுடன் பேச இஷ்டப்படாமல் சொல்லிக்கொண்டு புறப்பட்டேன்.

“ இன்னும் ஏதேனும் கண்டுபிடித்தால் வந்து தெரிவிக்கிறாயா ?” என்றான் கோபாலன்.

“ ஆகா ” என்று நயவஞ்சகமான மறுமொழியோடு மயிலாப்பூர் சென்றேன்.

16. கனவா? நினைவா??

மாலை சுமார் மூன்று மணி யிருக்கும். சூரியன் மேல் வானத்திற் சாய்ந்தான். காற்றின் மிகுதியினால், வெயிலின் வெப்பம் அதிக மாகத் தெரியவில்லை. முகத்தைச் சுத்தி செய்து நல்லுடை யுடுத்திக் கொண்டு ஒரு கோப்பை காப்பி சாப்பிட்டேன். ஜனககுமாரியைப் பார்த்து வரவேண்டுமென ஆவல் உண்டாயிற்று.

ஜனககுமாரி வீட்டை யடைந்த பின், வேலைக்காரர்களிடம் சொல்லி யனுப்பினேன். சற்று நேரத்தில் ஜனககுமாரி என்னை வர வேற்றாள்.

"ஜனகம், உடம்பு எப்படி யிருக்கிறது? அக்கா எங்கே?" என்று அவளைக் கேட்டுக்கொண்டே, அங்கிருந்த ஒரு சோபாவில் உட்கார்ந்தேன்.

ஜனகம் சற்று நாண மடைந்தாள்.

"சில சாமான்கள் வாங்குவதற்காக, சைனு பஜாருக்குப் போ யிருக்கிறார்கள்" என்றாள் ஜனகம். அவ்வொலி செஞ்சுருட்டி ராகத்தை மேல் ஸ்தாயில் இழைப்பதைப்போ லிருந்தது. இனிமை—இனி மையான ஓசை! அதுதான் இனிமையான ஓசை!

"உடம்பு எப்படி யிருக்கிறது?" என்று நான் மீண்டும் கேட் டேன்.

"பூரண சௌகரியம் அடைந்தேன். எல்லாம் தங்களுடைய கிருபையால்தான்!" என்று பெண் வர்க்கத்தின் இயற்கைப் பண் புடன் வார்த்தைகளுக்கு மெருகு கொடுத்து மனத்தை உருகச் செய் தாள் ஜனககுமாரி.

"கடவுள் புண்ணியம்! டாக்டர் மேனனின் காருண்யம்! எங்கே உன் கையைக் கொண்டு வா! நாடிகள் எப்படி இருக்கின்றன வென்று பார்ப்போம்!" என்றேன் நான்.

"நாடிகள் சரியாக ஓடிக்கொண் டிருப்பதாகவே நம்புகிறேன்" என்றாள் ஜனகம்.

இவளைப்போன்ற பெண்மணிகளின் உரைகளால், ஆடவர்கள் திடுக்கிட்டுத் திகைத்துப் பேந்தப் பேந்த விழித்து, வெட்கத்தின் உச்சியை யடைவார்க ளென்று சந்தேக மற உணருகிறேன்.

“ஓ! உனக்கு வைத்தியங்கூடத் தெரியுமா? இப்படி வா; நான் ஒரு வைத்தியன் என்ற முறையில் என்னிடம் சகோதர வாஞ்சையுடன் நடந்து கொள்ள உனக்கு உரிமையிருக்கிறது!” என்று தந்திரமாகப் பேசி அந்த இக்கட்டான நிலைமையை உடைத்தெறிந்தேன்.

ஜனகம் நாணத்துடன் என்னை அணுகினாள். நாதுவைப் பார்த்து அவள் பரிபூரணமான உடல் நலத்தை யெய்திவிட்டாளென்பதை உறுதி செய்துகொண்டேன். கரத்தை என்னிடம் கொடுத்த பொழுது அவளது உடல் வல்லிக்கொடியைப்போல் துவண்டது. நாணம் மகளிரை அழகு படுத்துவதோ டல்லாமல், ஆண் மக்களைக் கலக்கி நெகிழச் செய்யும் பிரமாதமான ஜீவ சக்தியைக்கொண்டிருக்கிறது! ஆயிரக்கணக்கான மைல்களுக் கப்பாலிருந்தாலும் கவர்ந்திழுக்கக்கூடிய காந்த சக்தி பெண்களிடம் அமைந்து கிடக்கிற தென்றால், அது எத்தனை ‘வால்டேஜ்’ (Voltage) இருக்கக்கூடுமென்பதைத் தாமஸ்ஆல்வா எடிஸன்கூட மதிப்பிட முடியு மென்று தோன்றவில்லை! சாக்ஷாத் லக்ஷ்மி தேவிதான்! குறைவற்று நிறைந்த பரிபூரண அழகு! தங்க நிறம் ‘பளபள’ வென்று மேனியில் மின்னியது. அவளுடைய கூந்தல் ஜப்பான் தேசத்துக் கருப்பு வர்ணத்தைக் குன்றச் செய்யு மென்பது மறுக்கக் கூடாத உண்மை. நீல மாமணியின் வர்ணத்தைப்பற்றி நாம் கேள்விப்பட் டிருக்கின்றோம். நேரிற் பார்த்திருக்கிறோமா? அதோ! ஜனகத்தின் வெள் விழிகளின் மையத்தில் பாருங்கள், எவ்வளவு அழகாக மிளிருகின்றது. ஒலியை முதற் காரணமாகவுடைய சொற்கள் இல்லாமல் பேச முடியுமா? ஜனகத்தின் கண்களைப் பார்க்கப் பாக்கியம் பெற்றவர்கள் முடியு மென்றே விடை கூறுவார்கள். செந்தாமரையின் இதழ்கள் எப்படி யிருக்கின்றன? அதன் நிறம் எப்படி? என்பதை யாராவது சொல்ல முடியுமா? ஒரு சித்திரிகனுல்கூடச் சரியாகச் சொல்ல முடியு மென்று நான் நினைக்கவில்லை. ஓவிய வல்லவர் சந்திரசேகரம் பிள்ளையே செந்தாமரை புஷ்பம் எழுதுவதற்கு ‘கிரும்ஸன்’ (crimson) வர்ணத்தையும், முத்து வெள்ளையையும் கலந்து கலந்து பார்த்துவிட்டார். முடியவில்லை! எப்படியும் சுர சிற்பியிடம் அல்லது சித்திரிகனிடம் நாசித்திரிகனின் ஜம்பம் சாயா தென்பது பிரத்யக்ஷ உண்மை. அந்தப் பிர்மச் சித்திரிகன் ஜனககுமாரியின் செந்தாமரை யிதழை எவ்வளவு அழகாகச் சித்திரித்து விட்டிருக்கிறான். அந்த இதழ்களிற் சர்வ சதாகாலமும் இளநகை விகசிதமடை திருந்தது குறிப்பிடத்தக்கது. ஜனகத்தின்

பேரெழிலை முற்றும் சொல்வதாயின், வர்ணனை யறியாத நானே ஒரு விரிந்த நூல் எழுதக்கூடும், ஒரு நாவலர் சொல்வதாயின் எவ்வளவு பெருகும் என்பது நேயர்கள் அறியத் தகுந்தது.

இப்பேர்ப்பட்ட ஓர் அழகின் சிகரம், கண்களின் நல்விருந்து, இவ்வுலகத்தின் புழுதியிற் புதைக்கப்படுவ தென்றால் அல்லது அக்கினி பகவானுக்குத் தத்தம் செய்யப்படுவ தென்றால் எந்தக் காதலுலோபிக்குத்தான் மனம் வரும்? அவ ளிறந்து போயிருந்தால் இந்தவுலகமே இறந்து போயிருக்கு மென்பது எனது அபிப்பிராயம்.

அவளை நான் மனைவியாக அடைந்தபின் மனப்பூர்வமாகக் காதலிக்கிறேன். எனது உண்மைக் காதலை அவள் ஏற்றுக்கொள்ளப் போகிறாளா? நினைத்தபோதே பயம்! ஹா, ஜனகம் என்ன பதில் சொல்லப் போகிறாள்? என் மனத்தில் பொங்குகிற உண்மைக் காதலை வெளியிட்டுச் சொல்லாமலேயே அவள் தெரிந்து கொள்ளும் படியான வசதியை, இவ்வளவெல்லாம் படைத்த அந்தக் கடவுள் படைத்திருக்கக் கூடாதா? கடவுளிடமும் நயவஞ்சக மிருக்கிறது என்பதில் ஐயமில்லை. முத்துச் சரங்கள் போன்ற பல் வரிசைகளைப் 'பிரஷ்' கொண்டு 'பாலிஷ்' கொடுப்பதைப் போலத் துடைத்துக் கொண்டிருக்கும் ஜனகத்தின் செந்நிற நாக்கு என்ன சொல்லப்போகிறதோ, கடவுளுக்குத்தான் தெரியும். ஹே! நாக்குத் தெய்வமே, உனக்குச் 'சந்தேஷும்' 'குலாப் ஜானும்' வாங்கி வைத்துப் படைக்கின்றேன், நல்ல பதிலாகச் சொல்லித்தொலை! உன்னைவிடப் பெரிய தேவதை எந்த லோகத்திலு மிருக்க முடியா தென்பதை நான் பல வருஷமாகச் சிந்தித்துத் தெரிந்துகொண் டிருக்கிறேன்.

ஜனக குமாரியின் நாடியைப் பார்த்துவிட்டுக் கரத்தை விட்டு விட்டவுடன், அவள் மெதுவாக அசைந்து மேஜை யோரத்துக்குச் சென்று ஒரு நாற்காலியைப் பிடித்துக்கொண்டு நின்றாள். உயிர் பெற்ற சித்திரம் போல நின்ற ஜனகத்தை நான் இமை கொட்டாது நோக்கிக்கொண் டிருந்தேன். ஐயோ, அந்த லாவண்ய திலகம் என்ன நினைத்துக் கொள்கிறதோ தெரியவில்லை! ஒரு பட்டம் பெற்ற வைத்தியன் இப்படி ஒரு பெண்ணின் செளந்தர்யத்துக்குப் பலியாகி யிறந்து கிடக்கின்றானே! என்று ஜனகம் நினைத்திருப்பாளோ? எம். பி. பி. எஸ். பரிக்ஷைக்குப் படிப்பதில்கூட நான் இவ்வளவு சிரமப் பட்டதில்லை. படித்தென்ன ஸ்வாமி! போங்கள்! 'அ' என்கிற

அக்ஷரம் தெரியாமலேயே இந்த உலகத்தை அதிர அதிர ஆளுகின்றார்கள் அந்தப் பெண் கோஷ்டியார்! பெண்களுக்குப் படிப்புத் தேவையில்லை யென்பது எனது கட்சி. ‘பெண்கல்வி’ பெண்கல்வி’ என்று அநேக ஆசிரியர்கள் எழுதுகிறார்களே, அதை அவர்கள் சொந்த சங்கல்ப மென்று நினைக்கின்றீர்கள்? இல்லவே இல்லை. அதுவும் பெண்கள் ஆடவகோஷ்டியாருக்குக் கொடுத்த கட்டளையேயாகும்!

“என்ன அப்படியே அழுந்திப்போய் உட்கார்ந்து விட்டீர்கள்?” என்று ஜனககுமாரி கேட்டதும், நான் திடுக்கிட்டு என் உணர்வடைந்தேன்.

“இல்லை. நேற்று இங்கு நிகழ்ந்த அசம்பாவிதமான சம்பவங்களைப்பற்றிச் சிந்தித்துக்கொண் டிருந்தேன்” என்று ஒரு பொய் வாக்கியத்தைக் கூறினேன். நான் பொய் பேசுகிறேன் என்பதைக் கூட அந்த ஆன்மா, அறிந்துகொள்ள முடியு மென்று ஓர் எண்ணம் என்னைப் பயமுறுத்திற்று. அப்படியாவது எனது காதல் நெஞ்சத்தை அவள் தெரிந்துகொள்வதா யிருந்தால் எனக்கு அவ்விஷயத்தில் பரம திருப்தியே யாகும்.

“அதிருக்கட்டும், மறுபடி டாக்டர்—மேனன் இங்கு வந்து இந்த அறையைப் பரிசோதித்தாரா? இல்லையா?” என்று ஜனகத்தை வினவினேன்.

“ஆம், சொல்ல மறந்துவிட்டேன். இன்று காலை ஒன்பது மணி சுமாருக்கு இங்கு வந்து சுமார் ஒரு மணி நேரம் வரையில் ஏதேதோ தமக்குள் பேசிக்கொண்டு ஆராய்ந்தார். வெளியில் வந்தபொழுது, ஆ, அதே சீதள நோயால் தாக்கப்பட்டார். ஆனால், உடனே இன்ஜெக்ஷன் செய்து சொஸ்த மடைந்தார்!” என்றாள் ஜனகம்.

“மேனன் ஒரு பெரிய ரசாயன சாஸ்திரி. அவர் சுலபமாக இந்த இரகசியத்தைக் கண்டு பிடித்துவிடுவார். உயிர் உள்ள வரையில் அதற்காக உழைத்தே தீருவார். இதற்கு முன்னால் அவ்வறையில் ஏற்பட்டதில்லையே?” என்று நான் நயமாகக் கேட்டேன்.

“இல்லை!”

“இந்தக் கேள்விக்கு மாத்திரம் தயவு செய்து பதில் சொல், இதைப்போன்ற விசித்திர நோயை நீ இதற்கு முன் அனுபவித்ததுண்டா?”

இக் கேள்வியால் ஜனகத்தின் முகம் வெளுத்தது.

"சில நாட்களுக்கு முன் நோயுற் றிருந்தேன். அப்பொழுது கடந்த இரவு எனக்குச் சம்பவித்ததைப்போலவே, பிரக்ஞை யில்லாமல் நரம்பு நாளங்க ளெல்லாம் திமிர்க்கப்பெற்று கிட்டத்தட்ட இறந்தே போயிருக்கின்றேன்!" என்றாள், எனது மனைவி ஜனகம்.

இலவம்பேட்டை ஜமீன்தார் இந்திரலிங்கம் வீட்டில் ஏப்ரல் மாதம் 16-ஆந் தேதி மாலை நிகழ்ந்த விஷயத்தைக் குறிப்பிடுகின்றாளா? ஆம். நான் அவளை மணம் புரிந்த அன்று, நேற்றை இரவைப் போலத்தான் அவளுக்கு நேர்ந்தது.

"அன்றைய தினமும் இதைப்போலவே திடீரென்றுதான் நோய் உற்பவித்ததா? இதே வீட்டிலா வேறிடத்திலா?" என்று நான் வினவினேன்.

என் மனம் பதைத்தது. அவளுக்குத் தெரிந்த இரகசியத்தைச் சொல்லிவிடுவாளா? பார்ப்போம்.

"ஆம். திடீரென்று இந்தச் சந்தர்ப்பத்தைப் போலவே அதுவும் நிகழ்ந்தது. நேற்றுப்போலவே அன்றும் இறந்தவள்போல நான் கிடந்திருக்க வேண்டும்!" என்றாள் ஜனககுமாரி.

"அச்சமயம் உன்னுடன் ஒருவரு மில்லையா?"

"யாரோ சிலர் இருந்தனர்"

"அவர்கள் யார்?"

"அவர்கள் யாரோ? அதெப்படிச் சொல்ல முடியும்? நான்தான் அறவே பிரக்ஞை யில்லாம லிருந்தேனே. யாரோ சிலர் பேசிக் கொண்டிருந்தது மாத்திரம் காதில் விழுந்தது. அவர்கள் யார் என்று திட்டமாய்ச் சொல்ல முடியாது!"

"அவர்கள் என்ன பேசிக்கொண் டிருந்தார்கள்? அதையாவது சொல்ல முடியுமா?"

"இல்லை. சொர்ப்பன வுலகத்தில் ஏதோ பிரசங்கம் நடப்பதைப் போலத்தான் எனக்குத் தோன்றியது. வேறொன்றும் தெரியாது! ஒரு கோவிலில் ஏதோ மங்கள வாத்தியங்கள் கோஷித்ததாகவும் எனக்குத் தோன்றியது. அது ஓர் ஆச்சர்யமான கனவு" என்றாள் ஜனகம்.

"என்ன கனவு கண்டாய்? அது கனவாக விருக்க முடியாது! மூளையின் குழப்பமாக விருக்கலாம். அன்று நீ கண்ட கனவு என்ன? சீக்கிரம் சொல்," என்று வற்புறுத்தினேன் நான்.

"எனக்குக் கல்யாணம் நடந்ததைப்போலக் கனவு கண்டேன்," என்று யதார்த்த ரகிதமான ஒரு குரலில் தழுதழுப்புடன் உரைத்தாள் ஜனகம்.

"கல்யாணமா? யாருக்கு உன்னைக் கல்யாணம் செய்து கொடுத்தார்கள்?"

"இன்னாருக்கென்று எனக்குத் தெரியவில்லை. சாதாரண கனவு தானே!"

"சில சப்தங்களை நீ கேட்டாய், அல்லவா?"

"ஆம். சப்தம் வெகு தெளிவாகக் கேட்டது!"

"அதை நீ கன வென்றே நிச்சயமாக நம்புகின்றாயா?" என்று அவளது விழிகளை நோக்கியபடியே நான் வினவினேன்.

அருவருப்பும் பயமும் நிறைந்த பிரகாச மொன்று அவள் முகத்தில் தோன்றியது. "தாங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லையே!" என்றாள், அவள்.

"நீ திருமணம் செய்யப்பட்டாய் என்பது பொய்தானா?"

"ஆம். அதுதான் ஒரு கன வென்று சொன்னேனே. நிச்சயமாகவே மணம் செய்யப்படவில்லை. அது வெறுங் கனவு. நான் விழித்துப் பார்த்த பொழுது எனது தமக்கை என் அருகில் இருந்தாள்"

"அந்த மாயச் சிக்கு உனக்கு இங்குத்தான் ஏற்பட்டதா? வேறெங்கேனுமா?"

"இல்லை. எனது நண்பர் ஒருவரது வீட்டில் நிகழ்ந்தது!"

"அந் நண்பரின் பெயரை நான் அறியக்கூடுமா?"

"அவரை உங்களுக்குத் தெரியாது!"

"அவருடைய வீடு எங்கே இருக்கிறது?"

"புரசைவாக்கம் கந்தப்பமுதலித் தெருவி லிருக்கிறது" என்றாள் ஜனகம்.

அவள் இதுகாறும் பேசியவரையில் நிஜம். கந்தப்ப முதலித் தெருவிலுள்ள இந்திரலிங்கத்தின் வீட்டில்தான் அவள் அந்த மாய நோயை யடைந் திருக்கிறாள்.

கந்தப்ப முதலித் தெருவி லிருந்து இங்கு யார் உன்னைக் கொண்டு வந்து விட்டார்கள் ?"

"எனக்குத் தெரியாது. எனக்கு அப்போது பிரக்ஞையில்லை !"

"உனது புருஷன் மாத்திரம் இன்னார் என்று தெரியவில்லை யாக்கும் !"

"இல்லை" என்றாள் ஜனகம்.

மேற்படி கடைசி பதிலி லிருந்து ஜனகம் தனக்கு விவாகம் நிகழ்ந்திருக்கிற தென்பதை ஸ்பஷ்டமாக வுணர்ந்திருப்பதாக அறியக் கிடக்கிறது. ஆனால், கணவன் யார் என்பதை நாளது வரையில் அவள் உணர்ந் திருக்க நியாயமில்லை. பாதாதிகேச பரியந்தம் அங் கியைக் கொண்டு மறைத்திருந்ததோ டல்லாமல் ஏதோ மயக்க மருந் தையும் அவளுக்குக் கொடுத்திருக்கிறார்கள். மேற்படி உண்மைக் கல்யாணத்தைக் கனவில் நிகழ்ந்த தென்று அவள் சொல்வதற்குப் பயமும், வேறு சில இரகசிய காரணங்களு மிருக்க வேண்டும்.

அழகின் தலைவியாகச் சிறந்து விளங்கும் ஜனகம், எனது மனைவி—காதலி யென்பது என்னையும் இந்திரலிங்கத்தையும் தவிர வேறு யாருக்குத் தெரியும் ? திருக்கழுக்குன்றத்துக்கு விஜயம் செய் திருந்த குடியானவர்களில் யாரை எனக்குத் தெரியும் ? அந்த மர்மக் கல்யாணத்தை நிரூபிக்கவே முடியாது. ஜனகம் எனது சொந்த மனைவி யென்று யாரிடமாவது நான் சொல்லும் பக்ஷத்தில், பைத்தியக் கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்படுவே னென்பது நிச்சயம். நான் அவ ளுடைய சொந்த கணவன் என்பதை ஜனககுமாரி அறியாள் அறி யாள் !! இதை எப்படி அவளிடம் சொல்வது ? என் மனம் எவ்வழி யிலும் செல்வதற் கில்லாமல் தத்தளித்தது.

மதனசுந்தரம் ஜனககுமாரியைக் காதலிக்கின்றான் என்பது உண்மையாக இருக்க முடியுமா ? ஜனகம் அவனுடைய அபிப்பிரா யத்தை வரவேற்கிறாளா ? பகிஷ்கரிக்கிறாளா ?

"வைத்தியரே! இந்த விஷயங்களையெல்லாம் தங்களிடம் சொன் னது என்னுடைய முட்டாள்தனம். அவைகளையெல்லாம் நிஜ நிகழ்ச்சி யென்று நினைத்துவிட வேண்டா" என்றாள் ஜனககுமாரி.

"கனவுத் தோற்றமாகவே அல்லது பொய்யாகவே இருந்தாலும் அதை என்னிடம் சொன்னவரையில் நான் சந்தோஷ மடைகிறேன். இவ்வளவு விஷயங்களையும் நேற்று நீ என்னிடம் சொல்லாமல் விட்டதற்கு என்ன காரணம்" என்றேன் ?

"ஆம். அப்படி மறைத்துப் பேசாம லிருந்தால், எனது தமக்கை என்பால் கோபங்கொண் டிருப்பாள்"

"ஏன் கோபிக்க வேண்டும்?"

"அவ்விஷயங்களை ஒருவருக்கும் தெரிவிக்க வேண்டா மென்று சொல்லிவைத் திருந்தாள்."

"என்ன எண்ணத்தைக்கொண்டு அப்படிச் சொல்லி யிருக்க வேண்டும் !"

"டாக்டர், அதெல்லாம் பேச்சுக்குப் புறம்பான சங்கதி. சுவர்ணம்பாளின் குணகுணத்தைப்பற்றித் தயவு செய்து விவாதிக்க வேண்டா. அவள் எனது அருமை சகோதரி."

"நான்— உனது அருமை தோழ னல்லவா ?"

"நான்—நான் அப்படித்தான் நம்புகிறேன். தாங்கள் எனது மாமன் குமாரர் என்றுகூட அக்காள் என்னிடம் சொல்லியிருக்கிறாள்!".

ஜனககுமாரியின் வாயினால் 'மாமன் குமாரர்' என்று நான் குறிப்பிடப்பட்டேன். அவள் எனது மனைவி—காதலி மாத்திரமல்ல, இரத்த பாத்யமுள்ள அத்தைப் பெண் ! ஜனகம் அத்தைமகள் ! மெய்யாகவே அச்சொல்லைக் கேட்ட என் காதுகளை நம்பவே முடியவில்லை ! அத்தை மகளையா நான் காதலிக்கிறேன் ! அத்தை மகளா என்னை இரகஸியமாக மணந்துகொண்டாள். "இந்திரலிங்கம் உனக்கொரு பெரிய நமஸ்காரம். நீ அவளை எந்தக் கருத்தைக்கொண்டு எனக்குக் கட்டிக்கொடுத்தாயோ தெரியாது. செய்தவரையில் இரகசியக் கல்யாணமா யிருந்தாலுங்கூட என் அத்தை மகளையே அடைந்தேன். ஆனால், கைக்கெட்டிய பொருள் வாய்க் கெட்டாம லிருக்கிறது" என்று நான் எனக்குள் கூறிக்கொண்டேன்.

"ஜனகம்! நீ எனது அத்தை மகள் என்பதைச் சுவர்ணம்பாள் வாயிலாக அறிந்தேன். ஆனால், அத்தை மக்களாகிய நீங்கள் இரகசியம் சூழ்ந்த கபட்டுக் குணத்தை யுடையவர்களாக இருக்கின்றீர்கள் !" என்றேன் நான்.

"வைத்தியரே, தாங்கள் இவ்வாறு எண்ணுவதற்காக நான் வருந்துகிறேன்" என்றாள் ஜனகம்.

"ஜனகம், மாமன்—அத்தை மக்கட் கிடையிலுள்ள பந்தவ்வியம் நம்மிடம் ஏற்படாததற்கு நான் மிகவும் வருந்துகிறேன். இதற்கு முக்கிய காரணம், நமது இரண்டு குடும்பங்களும் பிரிந்திருந்ததேயாகும். போகட்டும், இனியாவது மைத்துனன் - மைத்துனி என்ற முறையில் பரஸ்பரம் பேத மில்லாமல் பழகி வருவோம். உன்னை அல்லது உங்கள் குடும்பத்தைப் பெரியதோர் அந்தரங்கம் சூழ்ந்திருக்கிற தென்பதை நான் தெளிவாக அறிந்திருக்கிறேன். உதாரணமாக நூல் நிலையத்தை எடுத்துக்கொள்வோம். நூல் நிலையத்துக்குள் சென்று ஒருவர் வெளியே வரும்பொழுது காலபாசனுக்குப் பலியாகிறார்கள். அதன் பயங்கரமான இரகசியத்தைக் கண்டறிய வேண்டும். ஆனால், அதற்குச் சில உளவுகள் வேண்டும். நீ உண்மைகள் சிலவற்றை உரைப்பாயாயின், அந்த மர்மத்தைக் கண்டுபிடிக்கத் தக்கச் சாதனமாகும்!" என்றேன் நான்.

"ஒத்துக்கொள்கிறேன். நூல் நிலயத்தில் ஒரு நவீன பைசாசமிருக்கின்ற தென்பது நிச்சயம். அதற்கு நான் என்ன செய்யக் கூடும்?"

"என்ன செய்வதா? கருப்பாடையில் வந்த அப் பெண்மணி யார்? அவளைக் கண்டுபிடிக்க வேண்டும்!"

இவ்வுரை ஜனககுமாரியை நடுங்கச் செய்தது.

"ஆ அவளைக் கண்டுபிடிக்கவா? முடியவே முடியாது" என்று கூறினாள் ஜனகம்.

"ஏன்" என்று நான் ஆச்சரியத்துடன் வினவினேன்.

"ஏனா? அவ ளிருப்பிடத்தைக் கண்டுபிடிக்க ஒருவராலும் முடியாதே!" என்றாள் ஜனகம்.

17. 'உயிர் காப்பான் தோழன்'?

"நீ அவளுடைய இருப்பிடத்தை அறிந்து சொல்ல முடியுமா"

"என்ன சொல்லுகிறீர்கள்?" என்று அவள் கேட்டபோது சர்வ நாடி நரம்புகளும் 'கிடுகிடு' வென்று நடுங்கின.

"ஜனகம், தைரியமா யிரு. அப் பெண்மணியைக் குறித்துப் பேசும்பொழுது உனக்கு இவ்வளவு அச்சந் தோன்றுவதற்குக் காரண மென்ன? கொஞ்சங்கூட அவளுடைய தோற்றத்தைப்பற்றி வர்ணிக்க மாட்டாயா?"

"என்னால் ஒன்றுமே சொல்ல முடியா தென்று நான் முன்னமேயே சொல்லிவிட்டேன். மேலும் மேலும் கிண்டுவதிற் பயன் யாதுமில்லை! உங்கள் நன்மையைக் கருதியே நான் சில இரகசியங்களை மறைக்கிறேன்."

"இரகசியங்களை மறைப்பதால் எனக்கென்ன நன்மை?"

"கொல்லப்படாமல் காப்பாற்றப்படுவீர்கள்!"

என்னைத் தூக்கி வாரிப்போட்டது. மிகப் பளுவான அவ்விரகசியத்தை அறிவதால் நான் கொல்லப்படுவேன் என்று ஜனகம் நினைக்கிறுள்போலும்; அவ்வளவு வன்மை வாய்ந்ததொரு கூட்டத்தாரை எவ்விதத்திலும் கண்டுபிடித்துத் தீரவேண்டுமென என் மனத்தில் பலமாக உறுதி செய்து கொண்டேன். மேலே சொல்லிய சில இரகசியங்களை ஜனகம் என்னிடம் தெரியாத்தனமாக உதறிவிட்டதற்காக அவள் வருந்துவதுபோல அவள் முகக்குறி காட்டிற்று.

"அந்தப் பெண்மணியாலா கொல்லப்படுவேன்?" என்று நான் ஜனகத்தைக் கேட்டேன்.

"அதெல்லாம் தெரியாது!"

"அது போகிறது. நீங்கள் மறுபடியும் விழுப்புரம் செல்லப் போகிறீர்களா?"

"அது அக்காளின் இஷ்டத்தைப் பொறுத்தது. ஆனால், நாங்கள் விழுப்புரத்திலேயே தங்கப் போவதில்லை. அத்தானுக்குச் சிநேகிதர் ஒருவர் திண்டிவனத்தி லிருக்கிறார். அவருடைய பங்களா ஒன்று காலியாக இருக்கிறது. தாம்பரம் ராமச்சந்திரம் பிள்ளை

வீட்டில் நடந்த கொலை விபத்துக்குப் பிறகு, மே மாதம் பத்தொன்பது இருபதாம் தேதிகளில் தங்கியிருந்தோம். வசிப்பதற்கு அருமையான இடம். மறுபடியும் அந்தப் பங்களாவில் சில காலம் வசிக்கத் தீர்மானித்துள்ளோம். அங்குத் தங்களையும் அழைத்துக்கொண்டு போகவேண்டும் என்று அக்கா சொல்லிக்கொண் டிருந்தாள்," என்றாள் ஜனகம்.

"அப்படியா? சந்தோஷம்! நானும் திண்டிவனம் போனதில்லை," என்றேன் நான்.

சுவர்ணாம்பாளை நான் ஏப்ரல் மாதம் முதன் முதலாகச் சந்தித்த போது, அவளுடைய பேச்சு வார்த்தை பார்வைகளி லிருந்து அவளைக் கைதேர்ந்தவள் என்று தீர்மானித்தேன். திண்டிவனத்துக்கு என்னை விருந்தாளியாக அழைக்க உத்தேசித் திருப்பதைக்கொண்டு, என் சம்பந்தமாக ஏதோ சூழ்ச்சி நிறைந்த தீர்மானம் ஒன்றைக்கொண் டிருப்பதாக அறியக் கிடக்கிற தல்லவா?

"விழுப்புரத்தி லிருந்து நீங்கள் என்றைக்கு வந்தீர்கள்?" என்று வினவினேன்," நான்.

"முந்தாநாள் வந்தோம்."

"மாலை வண்டியிலா?"

"இல்லை, காலை வண்டியில்"

சுவர்ணாம்பாள் முந்தாநாள் மாலை வண்டியில் வந்ததாகத் தெரிவித்திருக்க ஜனகம் காலை வண்டியில் வந்ததாகக் கூறுகிறாள். தோழன் கோபாலன் சொன்னதற்கும் சுவர்ணாம்பாள் சொன்னது பொய்யென்று நிரூபணமாவதற்கும் சரியாய்த்தா னிருக்கிறது! ஆகவே, கோபாலனுக்கும் சுவர்ணாம்பாளுக்கும் சிநேகம் இருக்க வேண்டு மென்பது நன்கு புலனாகிறது. அவன் தெய்வநாயகம் பிள்ளையையா வது நட்புப் பூண்டிருக்க வேண்டும். இவர்களுக்குள் எப்படிப் பழக்க மேற்பட்டது? எப்பொழுது ஏற்பட்டது? கோபாலன் என்னிடம் நயவஞ்சகமாக நடந்துகொள்ள வேண்டிய அவசிய மென்ன வந்தது? இருக்கட்டும், நான் கோபாலனின் ஸ்தானத்தில் உத்யோகம் வகித்து வருகிறே னென்பது மகேந்திரனுக்கும் இந்திரலிங்கத்திற்கும் எப் படித் தெரியும்? என்னை அவர்களுக்குத் தெரியாம லிருந்திருக்கும் பக்ஷத்தில், தந்திரமாகக் கந்தப்பமுதலித் தெருவுக்கு அழைத்துச் சென்று, இரகசியமான விவாகத்தைச் செய்துகொள்ள வற்புறுத்தி

யிருக்க! முடியாது. நான் தரித்திரம் பிடித்த டாக்டர் என்பதும் அவர்களுக்குத் தெரிந்திருக்காது. அன்று இந்திரலிங்கம் என்னுடன் சம்பாஷித்தபோது என்னுடைய ஸ்திதி பூராவும் அறிந்திருப்பவன் போலத் தோன்றினன். ஆம்! கோபாலன் அவர்களுக்கு என்னைப் பற்றிச் சொல்லாமல் தெரிந்திருக்கப்போவதில்லை. 'உயிர் காப்பான் தோழன்,' என்று திருக்குறள் முதல் தெருக்கூத்து நாடகம் வரையில் நீதி வழங்குகிறது! என் கதையிலோ அதற்கு நேர் விரோதமாகச் சம்பவித்திருக்கிறது!

தோழன் கோபாலின் சூழ்ச்சியினுல் எவ்வளவு துன்பத்துக்கு இலக்கானேன் பாருங்கள். இரண்டு முறை எனதுயிர் கைலாயம் சென்று திரும்பிவந்த தென்பது நேயர்கள் அறிந்த விஷயம். கோபால னும் அந்த விஷமக் கோஷ்டியாரைச் சேர்ந்தவன் என்பதில் சிறி தும் ஐயமில்லை. செத்தவரை எழுப்ப முடியும் என்று அவன் பேசி யதை நேயர்கள் மறந்திருக்க மாட்டார்கள்! அவ்வார்த்தைக்கும் ஜனக குமாரி முதன் முறை மேற்படி இரகசிய விஷ நோயில் சிக்கி உயிர் பெற்றதற்கும் எவ்வளவு நெருங்கிய தொடர்பு இருக்கிற தென்பது சிந்திக்கத் தகுந்தது.

"சரி, ஜனகம் முந்தாநாள் மாலை நீ என்னைத் தேடிக்கொண்டு புரசைவாக்கம் வேளாளர் தெருவுக்குப் போனதுண்டா?" என்று வினவினேன்.

சிறிது நேரம் அவள் திகைப்புற்ருள். பிறகு, "ஆம். உங் களைக் காணக்கூடு மென்று நம்பி வேளாளர் தெரு வழியாகச் சென் றது வாஸ்தவம். ஆனல், உங்களைப் பார்க்கக்கூடவில்லை!"

"வேளாளர் தெருவில் இப்பொழுது எனக்குச் சாகை இல்லை. நான் ஸ்ரீ கோபாலனிடம் உதவி வைத்தியனுக உத்யோகம் வகித் திருந்தபோது அங்கிருந்தேன்."

"கோபாலன்! ஆம். அந்த மாதிரி ஒரு போர்டு தொங்கியதை நான் பார்த்தேன். ஆனல், தங்கள் பெயர் எழுதிய போர்டு தொங்கு கிறதா வென்றுதான் கவனித்துக்கொண்டு சென்றேன்!"

"ஏன் என்னைத் தேடி வந்தாய்?"

"உடம்பு சௌகரிய மில்லாம லிருந்தது!"

"சுவர்ணும்மாளுக்குத்தான் என் விலாசம் தெரிந்திருக்கிறதே, அவளைக் கேட்டுக்கொண்டு வந்திருக்கலாமே!"

"என் தமக்கையைக் கேட்டுக்கொண்டுவர நான் பிரியப்படவில்லை!" என்றாள் ஜனகம்.

"டாக்டர் கோபாலனை நீ பார்த்திருக்கிறாயா?"

"இல்லவே இல்லை!"

"பொய்யும் புரட்டும் நிறைந்த இந்த வீட்டில் நீ எப்படி வசிக்கிறாய்?"

"என்ன செய்வது? அநாதைக்கு வேறு வழி?" என்றாள் ஜனககுமாரி. அவள் கண்களில் நீர் ததும்பியது.

"அநாதையா? அதென்ன?" என்று நானும் திடுக்கிட்டுக் கேட்டேன்.

"ஆம். எனது தந்தை என் பால்ய வயதிலேயே இறந்து போய் விட்டார்! அதிலிருந்து நான் என் சிநேகிதிபோலத் தன்னைக் கருதியிருக்கும் சுவர்ணம்பாளிடம் காலந்தள்ளி வருகிறேன்" என்றாள் ஜனகம்.

சிக்கலான இரகசியம்.

இதுவரையில் சுவர்ணம்பாளும் ஜனககுமாரியும் சொந்த சகோதரிகளென்றும், அவர்களிருவரும் இந்திரலிங்கத்தின் குமாரிகளென்றும், இந்திரலிங்கம் எனது அத்தை புருஷனென்றும் நான் நினைத்து வந்தேன். ஜனககுமாரியின் பதிலால் இப்பொழுது அவை எல்லாமே கலப்பற்ற பொய்கள் என்பதை அறிந்தேன்.

"ஜனகம்" என்று வாயெடுத்தேன். வெளியே சென்றிருந்த சுவர்ணம்பாள் "ஓ! டாக்டர் வாரும் வாரும், இப்பொழுதுதான் வந்தீரா?" என்று கேட்டுக்கொண்டே ஹாலுக்குள் பிரவேசித்தாள்.

"ஆம், நான் இங்குவந்து அரை—" என்று நான் சொல்லிக் கொண்டிருக்கும்பொழுதே ஜனகம் இடைமறித்து, "பத்து நிமிஷமிருக்கும்!" என்று கூறினாள். ஜனகம் அப்படிக் கூறியதற்குத் தக்க காரண மிருக்கும். சுவர்ணம்பாளின் கோபத்துக்கு ஆளாகாமல் தப்புவதற்காகச் செய்துகொண்ட வழியாக இருக்கலா மல்லவா? ஜனகம் சுவர்ணம்பாளுக்குப் பயந்து வாழ்க்கை நடத்துகிறாள்.

"நீங்கள் விழுப்புரத்திற்குப் போகப்போகிறீர்களா?" என்றேன் நான்.

"ஆம், இன்று இரவு மெயிலில் பிரயாணமாகிறோம்! டாக்டர்! ஜூலை மாதம் ஒன்றாந் தேதி திண்டிவனத்தில் ஒரு விருந்து நடத்த

என் கணவர் உத்தேசித்திருக்கிருர்! திண்டிவனம் கலெக்டர் மாற்றல். பிரிவு உபசாரமாக ஒரு டீ பார்ட்டி அதற்கு அவசியம். நீங்களும் வரவேண்டும்! அவ்வூர் வாசத்துக்கு நல்லவூர். வந்தால் ஒரு பத்து நாட்கள் தமாஷாகப் பொழுது போக்கிவிட்டு வரலாம். வருகிறீர்களா?"

"ஆகா. வந்து சேருகிறேன்," என்றேன் நான்.

"டாக்டர் நிச்சயம் வரவேண்டும். தங்களை நான் எதிர்ப் பார்த்துக்கொண்டே யிருப்பேன். வாராவிட்டால் தெரியுமா?" என்ருள் எனது அன்புள்ள நாயகி.

"ஜனகம், நான் அவசியம் வருகிறேன். கவலை வேண்டாம்! உன் ஞாபகம் எனக்குச் சதாவிருக்கிறது! உன்னை மறக்கவே முடியாது" என்று மதிமயங்கிப் பேசினேன் நான்.

"கல்யாணமாகாத அத்தை மகளைக் கல்யாணமாகாத அம்மான் மகன் மறக்க முடியுமா என்ன? ஏன், அத்தான் டாக்டர்?" என்ருள் சுவர்ணும்பாள்.

ஜனகம் வெட்கத்துடன் புன்னகை செய்தாள்.

"அக்கா, உன் புத்தியைக் காட்டுகிருயே! விளையாட்டு எல்லா வற்றிலுமா?" என்று சுவர்ணும்பாளைக் கண்டித்தாள் ஜனகம்.

"ஜனகம், இப்படித் திரும்பிப் பார்த்துப் பேசு. நானும் அசட்டு ஆண் கூட்டத்தைச் சேர்ந்தவ ளல்ல. நானும் பெண்ணினத் தைச் சேர்ந்தவள்தான். அந்தப் படிப்பையும், ஜால வெட்டுக்களையும் வியர்த்தப் படுத்தாமல் பேசு" என்று கூறினுள் சுவர்ணும்பாள்.

"சண்டையை நிறுத்துங்கள்! ஏன், அத்தாச்சி, நான் உங்களை ஒரு கேள்வி கேட்கிறேன், நிஜமாகவே நீங்கள் எனக்கு அத்தாச்சி தாளு?" என்று நான் சுவர்ணும்பாளை நோக்கிக் கேட்டேன்.

அதென்ன புதிய சந்தேகம்! உமது தந்தை அம்பலத்தரசம் பிள்ளை எங்கள் மாமா. அப்படியானுல், நாங்கள் உமக்கு என்ன முறையாக வேண்டும்!" என்ருள் சுவர்ணும்பாள்.

"உங்கள் தந்தை பெயரென்ன?"

"மகாலிங்கம் பிரபு!"

"அவர் எங்கிருக்கிருர்!"

"அவர் எங்கு மிருப்பார். அவரொரு ஜமீன்தாரர். எங்கு வேண்டுமானுலும் தங்குவதற்கு அவருக்கு வசதி யிருக்கிறது!"

"சரி; நான் போய் வருகிறேன், நேரமாகிறது!"

"என்ன திடீரென்று கிளம்பி விட்டீர்கள்?"

"இல்லை, வேலை யிருக்கின்றது. மணி நாலரையாயிற்று. டாக்டர் மேனனைப்போய்ப் பார்த்துக்கொண்டு, சிகிச்சைக்குப் போகவேண்டும். நீங்கள் விழுப்புரத்துக்குப் போய்விட்டால்கூட டாக்டர் மேனனின் புத்தக அறை ஆராய்ச்சிக்கு உத்தரவு கொடுத்துவிட்டுப் போக வேண்டும்" என்றேன் நான்.

"ஓ, இஷ்டம்போல வந்து ஆராய்ச்சி செய்து கொள்ளட்டும், வேண்டாமென்று சொல்லவில்லை!" என்றான் சுவர்ணம்பாள்.

அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு சைக்களில் புறப்பட்டு மேனன் வீடு நோக்கிச் சென்றுகொண் டிருந்தேன்.

சுவர்ணம்பாள் ஜனகத்தைத் தன் சகோதரியென்றுகூறுவதோடு கூட, மகாலிங்கம் என்பவன் தங்கள் தந்தை யென்றும் கூறுகின்றாள். மஹாலிங்கம் யார்? இந்திரலிங்கம் யார்? இந்தப் பெயர்களில் 'மகா' 'இந்திர' என்ற பதங்களைத் தனித்தனியே லிங்கத்துடன் சேர்த்திருக்கிறது. என்னமோ வாசகர்களே, என்னால் ஒன்றையும் நிஷ்கரணையாகச் சொல்ல முடியவில்லை! எல்லாம் இந்திர ஜாலமாகவும், மகேந்திர ஜாலமாகவும் இருக்கின்றன. இந்த அசட்டுச் சந்தேகங்களையும், இருட்டுக் கலக்கங்களையும் டாக்டர் மேனனைத் தவிர தீர்ப்பதற்கொருவருமில்லை!

18. அந்த ரங்கத்தின் அஸ்திவாரம்

மௌண்ட் ரோடு பதும விலாசத்துக்குட் புகுந்து சைக்கிளை வெளியே சாத்திவிட்டு உள்ளே சென்றேன். டாக்டர் மேனன் ரசாயன சாலையில் முகமூடியணிந்துகொண்டு ஏதோ ஆராய்ச்சியி லீடுபட்டிருந்தார். அவ்வறையில் நீல நிறமான புகை சூழ்ந்து நிறைந் திருந்தது.

"ஆங்கிலத்தில் அவருக்கு வந்தனம் கூறிக்கொண்டு அவ்வறைக்குள் புகுவதற்கு நான் எத்தனித்தேன்.

"ஓ! நண்பரே, உள்ளே வரவேண்டாம். விஷப்புகை! விஷப் புகை!! அப்படியே வெளிக் கூடத்தில் அமரும், இதோ வருகின்றேன்" என்று பரபரப்புடன் ஆங்கிலத்தில் உரைத்தார் மேனன்.

அப்படியே நான் கூடத்தில் போய் சற்றுநேரம் அமர்ந்திருந்தேன். பத்து விநாடியில் வந்து சேர்ந்தார்.

"சுவர்ணம்பாள் வீட்டுக்குப் போய் வந்தீரா?" என்று வினவினார் மேனன்.

"ஆம், ஆனால், எனக்கு முன் தாங்கள் அங்குச் சென்று பரிசோதித்து வந்ததாகச் சொன்னார்கள். என்ன சமாசாரம்? ஏதேனும் புலன் கிடைத்ததா?"

"ஒன்று மில்லை!"

"இன்றுகூட அவ்வுணர்ச்சி பிடித்ததா?"

"ஆம். ஆனால், அதிகமல்ல!"

"அதே இன்ஜெக்ஷனால்தான் சௌகரிய மடைந்தீர்களோ?"

"ஆம். அந்தச் சீதள விநோத நோய் எப்படி உண்டாகிறதென்பதன் சரியான தாத்பரியத்தை இன்னும் அறியக்கூடவில்லை!"

"அந்தக் கருப்பாடை மனுஷியையும் கண்டு பிடிக்க முடியவில்லை!"

"அவளிடந்தான் இந்தப் பூட்டகத்தின் சாவி யிருக்கின்றது. அவளைப் பிடித்துவிட்டால் எல்லாச் சங்கதியும் வெளியாகிவிடும்!"

"சுவர்ணம்பாள் என்னைத் திண்டிவனம் வரும்படி அழைக்கிறாள், நான் அதற்குச் சம்மதித்திருக்கிறேன். நான் ஒப்புக்கொண்டது தவறுதலா, நன்மையா?"

"மிகவும் நன்மை! அந்தரங்கத்தின் அஸ்திவாரத்தை யறிகிற பரியந்தம் நாம் இருவரும் பரஸ்பரம் ஒத்தும் கடுமையாகவும் உழைத்தாக வேண்டும்!"

"எப்படி?"

"நாம் இதுவரை யறிந்திருப்பதைவிட ஆயிரமடங்கு மர்மத்தை இனிக் கண்டறிந்தாக வேண்டும்! ஜனககுமாரியைக் கொல்வதற்குச் சதி சூழ்ச்சி செய்வது எதற்காக என்பது நமக்குத் தெரிய வில்லை. கருப்பாடையில் வந்த அந்த மாதை ஜனகம் அறிந்திருந்தும், நம்மிடம் சொல்ல மறுப்பதற்குத் தக்க ஆதார மிருக்க வேண்டும்!"

"சொல்வதற்குப் பயப்படுகிறாள்"

"ஜனகம் என்பவள் யார்?"

"தன் சகோதரி என்று சுவர்ணம்பாள் சொல்கிறாள். தானொரு அநாதையாகச் சுவர்ணம்பாள் வீட்டில் வளர்வதாய் ஜனககுமாரி தெரிவிக்கிறாள்."

"ஓ! அப்படியா? நான் அப்படி நினைக்க வில்லை!"

"சுவர்ணம்பாளின் நடத்தையைப் பற்றித் தாங்கள் என்ன எண்ணம் கொண்டிருக்கிறீர்கள்?"

"உண்மைகளைச் சாப்பிடக்கூடிய பொய் நிறைந்த உள்ளமுடையவள் சுவர்ணம்பாள்! பொதுவாக இருவருமே நம்பிக்கைக்கு உரியவரல்லர்!"

"ஜனகத்தின் குணப்போக்கு எப்படி யென்று கேட்கிறேன்"

"கருப்பாடைக்காரியை ஜனகம் செவ்வையாக உணர்ந்திருந்தும் மறைக்கின்றாள்!"

"தாம்பரம் கொலையைப்பற்றித் தாங்கள் தினசரிப் பத்திரிகையில் பார்த்திருக்கலாமே!"

"ஆம். ராவ்பகதூர் ராமச்சந்திரம் பிள்ளை யென்பவர் 'கல்யாண பவனம்' என்னும் மாளிகையில் அகாரணமாகக் கொலை யுண்டிறந்தாரென்னும் விஷயத்தைத் திருப்பத் திருப்பப் படித்தேன்."

"அந்தக் கொலை விபத்துக்கும் சுவர்ணம்பாள்—ஜனககுமாரிக்கும் ஏதேனும் சம்பந்த மிருக்க வேண்டுமென்று நினைக்கின்றேன்!

ஏனென்றால் சுவர்ணாம்பாள் கொலை நடந்த தினம் 'கல்யாணபவன'த்தி லிருக்கின்றாள்."

"தாம்பரத்திலா? தாம்பரத்தில் கொலை நடந்த வன்று சுவர்ணாம்பாள் இருந்தா ளென்பது உண்மைதானா?"

"உண்மை?"

"ஆனால், ஜனகம்?"

"ஜனகமும் இருந்தாள். நான் அறிந்த வரையில் ஜனகம் 'கல்யாண பவன'த்தில் இரவு 10-30 மணி பரியந்த மிருந்திருக்கிறாள். ராவபகதூர் ராமச்சந்திரம் பிள்ளையின் மனைவி ஞானரத்னமும் சுவர்ணாம்பாளும் பரஸ்பர அந்தரங்கத் தோழிகள்."

மேனன் கண்களை மூடிக்கொண்டு சில விநாடிகள் தியானத்தி லாழ்ந்திருந்தார்.

"அப்படியானால், அவ்விசனாந்தத்தில் ஏதோ சில விஷயங்களைச் சுவர்ணாம்பாள் அறிந்திருக்க வேண்டும்! இதுதானே சந்தேகம்?"

"உண்மை! அதுதான் எனது சந்தேகம்!"

"என் அபிப்பிராயமும் அதுவேயாகும். எனது சித்தாந்தத்தை வலுப்படுத்துவதற்கு இந்த இரகசியங்களைச் செப்பியதில் நான் பரம சந்தோஷ மடைகின்றேன். எனது துப்பின் உண்மைக்கு நீர் சொன்ன ரகசியம் நிஜமாகவே ஒரு வெளிச்சமாக விருக்கின்றது."

"துப்பின் உண்மை! அதென்ன? தாங்கள் என்ன துப்பறிந்திருக்கிறீர்கள்?" என்று நான் ஆச்சரியத்துடனும் ஆவலுடனும் வினவினேன்.

"நேற்று மாலை கருப்பாடையில் வந்து ஜனககுமாரியைக் கொல்வதற்கு எத்தனித்த பெண்மணியின் உருவத் தோற்றத்தில் துப்பறிந்திருக்கிறேன்" என்றார் மேனன்.

"பேஷ்! அவளைக் கண்டு பிடித்து விட்டீர்களா! யார் அவள்?" என்று பேராச்சரியத்துடன் வினவினேன், நான்.

"கருப்பாடையில் வந்தவள் லீலாஜீவை என்னும் பெயருடைய ஒரு இரகசிய ஸ்திரீ!" என்றார் மேனன்.

"லீலா ஜீவை! ஹா—! லீ—லா—ஜீவை! அவளைக் கண்டு பிடித்து விட்டீர்களா?" என்று திகைப்பின் உச்சத்தை யடைந்து கூவினேன்.

"ஆம். அந்தப் பிசாசுப் பெண்மணியைக் கண்டறிந்து விட்டேன்!" என்று அழுத்தமாக வுரைத்தார் மேனன்.

"ஆச்சரியம்!!" என்றேன் நான்.

"இன்னும் அவளை நான் பார்க்கவில்லை! பெயரளவில் அவளை நான் அறிந்துவிட்டே னென்பது உண்மை! உமக்கு அவளுடைய உருவத் தோற்றத்தைப்பற்றித் தெரியுமா?" என்று கேட்டார் மேனன்.

"தெரியாது! நானும் தங்களைப்போலவே பெயரளவில் அவளை யறிந்திருக்கிறேன்."

"உண்மையாகவே தெரியாதா?" என்று சந்தேகத்துடன் என்னை உற்று நோக்கினார் மேனன். என் வார்த்தையில் அவருக்குச் சந்தேக மிருப்பதாகத் தோன்றியது. லீலாஜீவையை எப்படிக் கண்டறிந்தார் என்பதைப்பற்றி விவரிக்கும்படி நான் வற்புறுத்தினேன். அதற்குத் தகுந்த பதிலை அவர் சொல்ல மறுத்துவிட்டார்; அல்லாமலும், அவரைவிட லீலாஜீவையைப்பற்றி நான் அதிகமாக அறிந்திருப்பதாக நம்பிச் சில கேள்விகளைக் கேட்டார். எனக்கு மெய்யாகவே லீலாஜீவையைப்பற்றி ஒன்றும் தெரியா தென்று உரைத்தேன். பின்னும் சில விநாடிகள் அவருடன் பேசிக்கொண் டிருந்துவிட்டு, மேற்படி இரகசியங்களைக் கண்டு பிடிப்பதில் பின் வாங்க வேண்டாமென்றும், நான் கூடுமான உதவிகள் செய்வதாகவும் எடுத்துச்சொல்லிவிட்டு சைக்களில் வீடு திரும்பினேன்.

19. தெய்வநாயகம் பிள்ளை

சுவர்ணம்பாளும் ஜனககுமாரியும் குறிப்பிட்டுச் சென்றபடி ஜூலை மாதம் முதல் தேதி திண்டிவனம் செல்ல, முதல் நாளிரவே சென்னையை விட்டுப் புறப்பட்டேன். புகை ரதத்தில் செல்லும் பொழுது எனது மனம் பலவிதமான சிந்தனைகளில் அழுந்திப் பதிந்து கிடந்தது.

பல பல வென்று பொழுது விடிந்தது. கீழ்த்திசை பளிச் சென்று பிரகாசித்து நிர்மலமான மனத்திற்கு உற்சாகத்தையும் சந்தோஷத்தையு மளித்தது. 'ஜெயலட்சுமி விலாச'த்தின் முகப்புத் தோற்றம் பக்தி நிறைந்தவனின் முகத்தோற்றத்தைப் போன்று, பனிநீர் தாங்கிய பசிய தளிர்களாலும் இனிய நறுமலர்களாலும் நிறையப் பெற்று புதிய அழகுடன் பொலிந்து விளங்கிற்று. ஊருக்குச் சொற்பதூரம் வெளியே அமையப் பெற்ற மாளிகை யாதலின் நிசப்தம் பொழுது புலர்ந்தும் நிலவி யிருந்தது. உயர்ந்த ஜாதிப் பறவைகள் ஒன்றிரண்டு குரலொலி எழுப்பின. பசுக்களும் கன்றுகளும் காளைகளும் எருதுகளும் கண்களுக்கெட்டிய தூரம் வரையில் காணப்பட்டன. ஏற்றம் இறைப்பதா லுண்டாகும் இனிய ஓசையும், நிலங்கள் மீது வீழ்ந்தோடி விளையாடும் நீரி னொலியும் இணையற்ற இன்பத்தை யளித்தன. கிராம வாழ்க்கையின் உயர்ச்சி யாருடைய கண்ணுக்குத்தான் இனிமை தராது!

வண்டியை விட்டுக் கீழிறங்கி வாயிற்படியி லேறினேன். உள் வாயிற்படியில் சுவர்ணம்பாள் வெளிப்புறம் பார்க்க நின்றுகொண் டிருந்தாள். மின்சாரத்தைப்போல அவளது கண்கள் என்னைத் தாவின. எத்தனை விரைவாக அவளுடைய முகத்தில் சந்தோஷத் தின் சாயல் பிரதிபலித்தது! "ஓ! வாருங்கள்? வாருங்கள்? ஜூலை ஒன்றாந் தேதி உதயம் ஞாபகத்தி லிருந்ததா?" என்று சொல்லிக் கொண்டே என்னை நோக்கி வரலானாள்.

"ஆம் சொன்னவாறு வந்து விட்டேன்" என்று சொல்லிக் கொண்டே உட்புறம் சென்றுகொண் டிருந்தேன். வியர்வை எனது முகத்திலும் பிடரியிலும் முத்துமுத்தாகத் தெரிந்தது. கைக்குட்டை யால் துடைத்துக்கொண்டு நாற்காலியி லமர்ந்தேன்.

நாங்க ளிருவரும் பேசிக்கொண்ட சத்தம் கேட்டு உள்கட்டி லிருந்த ஜனகம் சடுதியாக வெளியே வந்தாள். நெற்றி நிறைய விபூதி படிந் திருந்தது. இணையற்ற வெண்ணிறம் பூண்ட பற்கள் அவளது மலர்ந்த செந்துவர் இதழ்ச் சந்தின் வழியே வெள்ளியைப் போல ஒளிரப் பெற்றன. "வாருங்கள்" என்று சொல்லித் தனது மிருதுவான கைகளைப் பிசைந்தாள். நான், "ஆம்" என்று தலையசைத்தேன்.

"ஜனகம், பாக்கியையும் சொல்லேன். வாருங்கள் என்று மொட்டையாக நிற்கிறதே" என்றாள் சுவர்ணம்.

ஜனகத்தைப் போலவே நானும் ஆச்சரியத்துடன் சுவர்ணத்தின் முகத்தை நோக்கினேன். "என்ன? நீ சொல்வது புரியவில்லையே! பாக்கி என்ன?" என்று வினவினாள் ஜனகம்.

"இத்தனை பெரிய பெண்ணுக்கு இது தெரியவில்லையா? மனங் குளிர அத்தான் வாருங்கள் என்று வரவேற்றால், முழுகியாப் போய் விடும்" என்று முடித்தாள் சுவர்ணம்.

"ஓகோ" என்று உரைத்துக்கொண்டு நகைத்தாள் எனது காதலி. இதற்குள்ளாகத் தெய்வநாயகம் பிள்ளையும் வந்து சேர்ந்தார். என்னைப் பார்த்தவுடன் நான்தான் ராஜேஸ்வரனாக இருப்பேனென்று தெரிந்துகொண்ட அவர், "வாருங்கள்! வாருங்கள்!! வைத்தியர்வாள். இப்பொழுதுதான் வந்தீர்களோ?" என்று குசலம் விசாரித்துக்கொண்டே சோபாவில் கம்பீரமாக அமர்ந்தார்.

தெய்வநாயகம் பிள்ளையை இப்பொழுதுதான் நான் முதன்முதலாகச் சந்திக்கிறேன் என்பது வாசகர்கள் அறிந்த விஷயம். அவருடைய தோற்றத்தைப்பற்றி எனது உள்ளத்தில் கற்பித்திருந்தவையெல்லாம் அவரைப் பார்த்தபின் பறந்துவிட்டன. 'கிராப்' கத்தரித்துக்கொண்டு தற்கால நவ நாகரிகத் தோற்றத்துடன் விளங்குவாரென்று நான் அப்பொழுது நினைத்துக்கொண் டிருந்தேன். ஆனால், அவர் நீண்டு வளர்ந்த தலைமயிரைப் பின்பக்கம் அழகாக முடிபோட்டுக்கொண் டிருந்தார். கொண்டையின் பருமனி லிருந்து அதை அவிழ்த்துவிட்டால் பிட்டத்துக்கு வந்து விழக்கூடிய நீள மிருக்கலாமென்று யூகித்தேன். விபூதி பூச்சுக்கும் பரந்த நெற்றிக்கும் அடர்ந்த புருவ அமைப்பிற்கும் களங்க மற்ற மொழிகளின் நோக்

கிற்கும் அவருடைய முகம் அத்தனை வயதிலும் குற்ற மில்லாத வசீகரத்தைக் கொடுத்தது. தமிழரின் பூர்வீக நாகரிகத்திலும் ஆசார அனுஷ்டானத்திலும் ஆர்வங்கொண்டவராகவும், கள்ளங் கபடமில் லாத தெளிந்த உள்ள முடையவராகவும் அவர் காட்சி யளித்தார். என்னையும் அவரையும் என் மனதிற்குள்ளாகவே ஒப்பிட்டுப் பார்த் துக்கொண் டிருந்தேன். 'இத்தகைய உத்தம புருஷரின் மனைவியா சுவர்ணம்' என்ற விஷம் போன்ற எண்ணமும் அதனுடன் கலந்து மேற்படி சிந்தனையுடன் குழம்பியது.

"தம்பி, நீங்கள் எனது நெருங்கிய உறவினர் என்று கேள்விப் பட்டு மகிழ்வு கொள்கிறேன். இந்த மாதிரிதான் சைவர்கள் குடும் பம் நிலைகுலைந்து கிடக்கிறது!" என்று தெய்வநாயகம் பிள்ளை சம்பாஷிக்கத் தொடங்கினர்.

"வாஸ்தவந்தான். அநேகமாக எனது உறவினர்கள் யார் யாரென்பது எனக்குத் தெரியாது. ஏதோ காலந்தள்ளி வருகிறேன்" என்று நானும் கலந்துகொண்டேன்.

"காப்பி சாப்பிட்டுவிட்டால் உங்கள் சம்பாஷணையை நீளமாக வைத்துக்கொள்ளலாம்" என்றுள் சுவர்ணம்பாள். அவளுடைய வேண்டுகோள் பிரகாரம் நானும் தெய்வநாயகம் பிள்ளையும் காலை யுணவு செய்துகொண்டு பற்பல சம்பாஷணைகளி லீடுபட்டிருந்தோம்.

மாலை மூன்று மணியி லிருந்து ஐந்து மணி வரையில் கலெக்ட ருக்குக் கொடுக்கப்படும் தேநீர் விருந்து பிரமாதப்பட்டது. பிரசங் கங்களும் வாழ்த்துப் பத்திரங்களும் ஏக தடபுடலாக வழங்கப் பட்டன.

சுமார் ஆறரை மணிக்கு மேற்கண்ட அமர்க்களம் எல்லாம் முடி யப் பெற்று 'ஜெயலட்சுமி விலாஸம்' சாந்தி ரூபமாகத் திகழ்ந்தது. தெய்வநாயகம் பிள்ளை கலெக்டர் குழாத்துடன் வெளிச் சென்று விட்டார். நான் மட்டும் தனியே யிருந்தேன். தனித் திருப்பதை விடத் தோட்டப் பக்கம் சென்றுல் இனிதாகக் காலம் செல்லுமே என்று பூங்காவனத்திற்குள் சென்றேன்.

20. சாகஸ மொழி

அர்த்தச் சந்திரன் பிரகாசமாகத் தோன்றி இயற்கைக் காட்சிகளை எடுத்துக் காட்டி இன்ப மூட்டினன். கிரீஷ்மருது தொடங்கிப் பதினெட்டு நாட்க ளாயின வென்றாலும், அந்த இனிய தென்றல் வீச்சு இன்னும் அற்றுப் போகவில்லை; 'ஜயலட்சுமி விலா ச'த்தின் கவின்கா மலர்களின் இனிய மணத்திலே மூழ்கித் திகழ்ந்து விளங்கியது. புள்ளினவுலகம் ஓய்வெடுத்துக் கொண்டு அயர்ந்த நித்திரையி லாழ்ந்தது. புன்செய் நிலங்களுக்குக் கேணிநீர் ஊட்டும் ஏழை விவசாயிகளின் சங்கீத ஓசை அந்தப் பூங்காவனத்துக்குச் செவ்வையாகக் கேட்டது. ஆஹா! என்ன முருகான தோட்டம். எவ்வளவு அழகான புஷ்பங்கள்! எவ்வளவு சுகிர்தமான நறுமலர்க் கந்தம்! நான் அந்த அலங்காரத் தோட்டத்தைப் புகழ்ந்து சிங்கார ரசத்தைப் பரிபூரணமாக ரஸித்தேன்.

அந்த எழிலி இருக்கின்றாளே, அந்தரங்க இருளிலே சுடர் வீசிப் பிரகாசிக்கும் ஜனகம், அந்தப் புண்ணிய திலகத்தின் உருவம் அதோ தெரிகிறது. மனத்தில் தோன்றிய அவள் சில விநாடிகளில் எனது மெய்யான கண்களிலும் தோன்றிச் சமீபத்தில் வந்துவிட்டாள். என் மனம் ஜனகத்துடன் பேசுவதற்கு விழைந்து நின்றது. "ஏன் ஜனகம்? எதற்காகத் திரும்புகின்றாய்? இங்கே வா" என்று அங்கு வந்து விட்டு மாளிகைக்குத் திரும்ப எத்தனித்த ஜனகத்தை அழைத்தேன்.

"இங்கு வேறு ஒருவரு மில்லையா?" என்று அவள் அந்த இன்னிசை நிறைந்த குரலிலேயே கேட்டாள்.

"இல்லை. அந்தப் பளிங்குக் கல்லில் உட்கார்" என்றேன் நான்.

அவள் நாணத்துடன் அக்கல்லின் சார்பைப் பற்றிக்கொண்டு நின்றாள். எவ்வளவு சொல்லியபோதிலும் உட்காரும் நோக்கத்தில் இருந்ததாக அவள் தோன்றவில்லை யாதலின், நான் வற்புறுத்தப் பயங்கொண்டேன்.

"உடம்பு இப்பொழுது எப்படி யிருக்கிறது?"

"முற்றும் சௌக்கியம்! டாக்டர் மேனன் எங்கள் வீட்டில வந்து மறுபடி ஏதேனும் உண்மை கண்டுபிடித் திருக்கின்றாரா?" என்றாள் ஜனகம்.

"ஏதோ அடிக்கடி வந்து போய்க்கொண்டுதா னிருக்கின்றார். ஆனால், கண்டு பிடித்த உண்மைகளைச் சொல்ல மறுக்கிறார். அதனால் ஒன்றுமே அறிய முடிய வில்லை!" என்றேன் நான்.

"ஓகோ!"

"ஆனால், ஜனகம்! ஒன்று மாத்திரம் சொன்னார்"

"அதென்ன? அதென்ன?" என்று பரபரப்புடனும் ஆவலுடனும் வினவினாள், ஜனகம்.

"கருப்பாடையில் விஜயம் செய்த நூதன மாதைப்பற்றி!"

"என்ன கண்டு பிடித்தார்? அவள் யார்?"

"அவளுக்கு அறிமுகமான சில நபர்களுக் கிடையில், லீலா ஜீவை யென்ற பெயருடன் அவள் உலவுவதாக அவர் அறிகிறார்."

"லீலாஜீவை! ஆ! அவளையா கண்டு பிடித்துவிட்டார்—?"

"அவளை மாத்திர மல்ல இன்னும் துப்பறியும் உத்தியோகஸ்தர்களே கண்டறிய முடியாத பெரிய ரகஸியங்களை யெல்லாம் எளிதில் கண்டுபிடித் திருப்பதாகத் தெரிகிறது."

"எப்படி முடிந்தது?"

"அதெல்லாம் எனக்குத் தெரியா தம்மா. அவர் என்னிடம் சொன்னதே விவர மில்லாமல்தான்!"

அவளுடைய பங்கய லோசனங்கள் இரண்டும் கீழ் நோக்கியபடி அச்சங் கொண்டன. இடி விழுந்த கற்சுவரைப்போல் சமைந்திருந்தாள். எனது வார்த்தைகள் அவளைப் புண்படுத்தி விட்ட தென்பதை நன்குணர்ந்தேன்.

"இதைப்பற்றி அக்காளிடம் தெரிவிக்க வேண்டும்" என்றாள் ஜனகம்.

"லீலாஜீவையை நீ அறிவா யென்று நான் நம்புகிறேன்!" என்றேன் நான்.

"லீலாஜீவையை அறிவேனு? எப்படி முடியும்?"

"எப்படி யென்று கேட்கிருய்? நீ அவளை அறியா திருந்தால், உனக்கு அவள் கடிதம் கொண்டுவந் திருக்க முடியுமா?"

"இல்லை என் வார்த்தையை நம்புங்கள்! அவளை எனக்குத் தெரியவே தெரியாது!"

"அப்படியானுல் லீலாஜீவையின் பெயரைக் கேட்டவுடன் நீ நடுங்குவதற்குக் காரணங்க ளிருக்க வேண்டுமே!"

"இல்லை. ஒரு காலத்திலும் நான் அந்தப் பயங்கர ஸ்திரீயைப் பார்த்த தில்லை. அன்று கடிதம் கொண்டு வந்தவள் அவளாக இருக்க முடியாது" என்று அச்சத்துடன் உரைத்தாள் ஜனகம்.

"எனக் கென்ன தெரியும்! டாக்டர் மேனன் சொன்னதை உன்னிடம் கூறினேன். அவள் யார்? அல்லது என்ன விதமான சதியைக்கொண் டிருக்கிரு ளென்பதைப்பற்றி அவர் ஒன்றுமே சொல்லவில்லை."

"சோல்லவே இல்லையா?"

"இல்லவே இல்லை!"

ஜனகம் பெருமூச்சுவிடத் தொடங்கினுள். லீலாஜீவை சம்பந்தமான ரகஸியங்கள் சிலவற்றை ஜனககுமாரி அறிந்திருக்க வேண்டுமென்பது நிச்சயமான உண்மையாகும். கருப்பாடையில் வந்து அவளைக் கொலை செய்யச் சூழ்ச்சி புரிந்த பெண்மணியும் லீலாஜீவை யென்பவளும் ஒரே பேர்வழி என்பதை யவள் அறியாம லில்லை. அதை வெளிப்படுத்துவதற்குப் பேரச்சத்தை யடைந் திருக்கிருள். டாக்டர் மேனனைப் புஸ்தக அறையை ஆராய்ச்சி செய்ய அனுமதித்தது சுத்த பிசகாகு மென்று நினைப்பதாக அவளுடைய முகத்தோற்றம் அறிவித்தது.

சுவர்ணும்பாள் என் விஷயத்தில் சர்வ சந்தேகங்கொண் டிருப்பதோ டல்லாமல், ஒரு கொடிய சத்துரு வென்றுகூட நினைத்திருக்கிருள். இதற்கு முக்கிய காரணம் நான் டாக்டர் மேனனைக்கொண்டு புத்தக அறையின் ரகசியத்தைக் கண்டறிய முயற்சிப்பதுதான். என்து முயற்சி அவர்களுக்குப் பயத்தையும் அருவருப்பையும் அளிப்பதற்கு ஏது வென்ன? அவர்களும் குற்றவாளிகளா? அல்லது தம்

தோழர்கள் யாரையாவது காட்டிக் கொடுக்க மறுக்கிறார்களா? ஒன்றுமே விளங்கவில்லை.

திண்டிவனத்துக்கு என்னை வரவேற்ற காரணமென்ன? கலெக்டருக்குத் தேநீர்விருந்து செய்தது வாஸ்தவந்தான். அந்த மகோத்ஸவத்துக்கு நான் எதற்காக வரவேற்கப்பட வேண்டும்? இதில் ஏதோ பிரமாத சூழ்ச்சிகளிருக்க வேண்டும். சுவர்ணாம்பாளின் நடவடிக்கைகளில் தென்படும் அவளது உள்ளெண்ணத்தைக் கவனிக்குங்கால் நான் இவ்விடத்துக்கு வர ஒப்புக்கொண்டதே தப்பிதமென்று தெரிய வருகின்றது.

"டாக்டர்—" என்று ஜனகம் ஏதோ சொல்வதற்கு வாயெடுத்தபோது, சுவர்ணாம்பாள் திடீரென்று அவ்விடத்திற்கு வந்து சேர்ந்தாள்.

"ஜனகம் நான் எவ்வளவு சொன்னாலும் உனக்குத் தெரிவதில்லை. நான் சொன்ன காரியத்தைச் செய்து முடிப்பதற்குள் இங்கென்ன வேலை? அத்தானுடன் பேசிக்கொண்டிருக்க இதுதான் சமயமோ? வீட்டுக்குப் போ இதோ வருகிறேன்" என்றாள் சுவர்ணாம்பாள். ஜனகம் வாய்பேசாமல் எழுந்து போய்விட்டாள். பிறகு சுவர்ணம் மற்றொரு நாற்காலியில் உட்கார்ந்தாள்.

"டாக்டர், நான் சென்னைக்குத் திரும்புவதற்குள் புத்தக அறையின் ரகஸியம் கண்டுபிடிக்கப் பட்டுவிடுமா?" என்று அடுத்த க்ஷணம் ஒரு கேள்வியை யெழுப்பினாள், சுவர்ணம்.

"இதுவரையில், கிணற்றில் போட்ட கல் மாதிரி இருக்கிறது. ஒன்றுமே தெரியவில்லை!"

"நல்லதிர்ஷ்ட வசமாக ஜனககுமாரி ஜீவிதமடையப் பெற்றாள். தாமும் டாக்டர் மேனனுமே ஜனகத்தின் ஜீவியத்தை எமபட்டணத்திலிருந்து கொண்டு வந்தீர்கள்" என்றாள் சுவர்ணம்.

"கடவுள் செயல்" என்றேன் நான்.

"ஆனால், ராஜேஸ்வரரே! நான் உம்மை ஒரு விஷயத்தில் எச்சரிக்கை செய்யவேண்டியது இன்றியமையாததாகத் தோன்றுகிறது! அதாவது நீர் ஜனகத்தோடு அடிக்கடி நெருங்கிப் பழகி வருவதாகத் தெரிகிறது. இந்த நிமிஷமிருந்து அந்த வேலையை விட்டுவிடும்!" என்றாள் சுவர்ணம்.

அவை சொற்களாகவே எனக்குத் தோன்றவில்லை. அக்கினித் திராவகத்தைக் காதில் வார்த்துத் தகிப்பதாகத் தோன்றிற்று.

"ஜனககுமாரியுடன் நான் பழகுகிறேனு? இல்லவே இல்லை!" என்று நான் மறுத்தேன்.

"தாமே இப்படிப் பொய் சொல்வ தென்றால்—?"

"நான் ஒன்றும் பொய் சொல்ல வில்லை!"

"ராஜேஸ்வரரே, என்னிடம் இன்மை பேசி ஜெயிக்க முடியாது. நீர் ஜனககுமாரியைக் காதலிக்கிறீர் அல்லவா?" என்று தைரியமாக அந்த அவலப்பிறவி என்னைக் கேட்டது.

"என்ன சுவர்ணத்தம்மா, பரிகாசமான வார்த்தை?" என்று நான் உறுமினேன்.

"ராஜேஸ்வரரே, நீர் மறுப்பீ ரென்று நான் நினைக்க வில்லை. ஆனல், காதல் விஷயம் எந்தப் படித்தவரையும் படிக்காத சாம்பிராணி களையும் பொய் பேசத் தூண்டு மென்பது நானறிந்த உண்மை! எனது இரு கண்களும் போதாமல் மனக்கண்களைக்கூட உமது பக்கம் திருப்பி, உமது நடவடிக்கைகளையும் மனப்போக்கையும் திட்டமாக அறிந்து வருகிறேன். நீர் ஜனககுமாரியை மனப்பூர்வமாக இச்சிக் கிறீர் என்பதை அகப்பூர்வமாக அறிகிறேன்" என்றாள் சுவர்ணம்.

"என்னைவிட எனது மனே சங்கல்பங்களைத் தாமே நன்கறிய வராயிருப்பதில் எனக்குப் பரம சந்தோஷம்!"

"ராஜேஸ்வரரே; அகத்தின் அழகு முகத்தில்தான் வழிந்தோடு கிறதே! அதை யறிவதற்கு வெள்ளெழுத்துக் கண்ணுடியா வேண்டும்?"

"கோடிய நாக்கு! நான் உமது போக்கை அறிய முடியவில்லை! எதற்காக இப்படி அவமானப்படுத்துகிறீர்? நான் ஒரு 'அந்தஸ்தில்' உள்ளவன்! நிதானமாகப் பேசும்" என்று நான் அவளைக் கண்டித் தேன்.

"நிதானமாகவே பேசுகிறேன்"

"இல்லை."

"தம் வார்த்தைகள்தான் அபசவ்ய கதியில் செல்லுகின்றன! உம்மால் அவளைக் காதலிக்காம லிருக்க முடியாது!"

"ஏன்?"

"தமிழ் நாட்டுக்கே ஜனகம் ஒரு தீர்ந்த அழகும் அந்தமும் படைத்த சிரோமணியா யிருக்கிறு ளென்பதை நீரே அறிந்திருக்கின் றீர்!"

"அவளுடைய கேர்த்தி என்னைப் பைத்தியமாக்கிவிட முடி யாது!"

"அதைத் தாம் அறிந்திருந்தும் மனசாக்ஷிக்கு விரோதமாகவே பேசுகின்றீர்! அதைப்பற்றிப் பாதக மில்லை. ஆனால், வெளியே சொல்லாம லிருந்தால் உமக்கொரு ரகஸியம் சொல்லுகின்றேன்."

"என்ன ரகஸியம்?" என்று ஆவலுடன் அவளை வினவினேன்.

"அவ்வந்தரங்கத்தைப்பற்றி ஒரு இம்மிகூட வெளியே மூச்சு விடக்கூடாது. அப்படியானல் சொல்கிறேன்."

"இல்லவே இல்லை. அப்புறம்!" என்றேன் நான்.

"உமது மச்சினி ஜனககுமாரி முன்னமேயே திருமணம் செய்து கொடுக்கப்பட்டாள்!"

"யாருக்கு?"

"இன்னருக் கென்று தெரியாது! விவாகம் செய்யப்பட்டாள் என்பது முற்றும் நிஜமான சங்கதி!" என்று சொல்லிவிட்டு மிரள மிரள விழித்தாள், சுவர்ணம்.

"விவாகம்கூடவா ரகஸியமாக நடந்திருக்கும்!"

"ஆம், மெய்யாகவே அது ரகஸியந்தான்!"

"புருஷன் பெய ரென்ன?"

"சொல்ல முடியாது!"

"மதனசுந்தரந்தானே ஜனகத்தின் புருஷன்!"

"இல்லவே இல்லை. ஆனால் எனது கணவர் மதனசுந்தரத் துக்கு விவாகம் செய்து கொடுக்கத்தான் நினைத் திருந்தார். அப்படி நினைத்தது ஜனகத்துக்குப் பிடிக்கவில்லை யென்பதற்காகக்கூட, என் கணவர் கருத்துக்கு இடையூறு ஏற்படவில்லை. எதிர்பாராத வித மாகத் திடீரென்று அவள் ரகஸியமாகக் கல்யாணம் செய்யப்பட் டாள்!"

"அவளுடைய புருஷன் எங்கிருக்கிறான்?"

"சென்னையில்தான் இருக்க வேண்டும்!"

"நாம் உரைப்பது எல்லாவற்றிலும் கடைந்தெடுத்த உண்மையா யிருக்கிறது!" என்று நான் புகன்று கொண்டிருந்தபோது "அக்கா! அக்கா! வா சீக்கிரம். மணி ஒன்பதாகிறது" என்று ஜனககுமாரி அழைத்தாள்.

"சரி, வாருங்கள் போவோம். நேரத்துடன் போஜனம் செய் வது நலம்" என்று சுவர்ணம்பாள் எழுந்தாள். நானும் பின் தொடர்ந்தேன்.

21. மறைந்திருந்த காதல்

எல்லோரும் உணவருந்திய பின் அவரவர் சயனஸ்தானத்துக்குச் செல்லலானோம். பற்பல சிந்தனைத் தொடர்கள் எழுந்து ஓடியதால் உறக்கமில்லாமல் நான் வெகுவாகத் துன்புற்றேன். என்னென்னவோ புரிந்தும் உறக்கம் வருவதாயில்லை யாதலின் எழுந்து ஹாலுக்குச் சென்றேன். ஜனககுமாரியின் அறையில் விளக்கெரிந்து கொண்டிருக்கக் கண்டு அவளிடம் செல்லலாமா வேண்டாமா வென்று நினைத்தேன். மணி இரண்டு வரையில் அவள் விழித்துக்கொண்டிருக்கக் காரணம் யாது? போய்ப் பார்க்கலாம் என்ற கருத்துடன் அவளது அறையை நாடிச் சென்று மெதுவாக எட்டிப் பார்த்தேன். அறைக்குள் அவ ளில்லாமை கண்டு வியப்படைந்து உட்புறம் சென்றேன். மேஜைமீது பல அரிய பெரிய நூற்கள் அமைந்து கிடந்தன. 'திருக்குறள்' விரிந்தபடி கிடந்தது.

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை யுண்டாகப் பெறின்

என்ற குறள் சிவப்பு மையினால் குறிப்புச் செய்யப்பட் டிருந்தது. அதனருகில் பல தமிழ்க் காவியங்களும் கதைகளும் அறநூற்களும் கிடந்தன. மற்றொரு பக்கலில் தெலுங்கு புஸ்தகங்கள் சில அடுக்கி வைக்கப்பெற் றிருந்தன. மேஜை டிராயரை இழுத்து அதற்குள் யாவை உள்ளன என்பதை யறிய பேராவல் கொண்டேன். அவ்வாறு டிராயரைத் திறந்தவுடனேயே ஒரு கடிதம் விரித்தபடி கிடக்கக் கண்டேன்.

சுபேதார் மகேந்திரம் பிள்ளைக்கு:

நான் இத்துடன் லக்ஷம் தடவை சொல்லிவிட்டேன். மதன சுந்தரம் பிள்ளையை எனக்குத் தெரியும். அயோக்ய கூட்டத்துத் தலைவன். கோடி ரூபாய்க்குச் சொத்திருந்தாலும் அவனை நான் மணக்க உடன்படேன். நான் இப்பொழுது சில உண்மைகளை அறிந்து விட்டேன். என்னுடைய துணிபுக்கு அது பக்க வலுவா யிருக்கிறது.

ஜனகம்,

என்று மேற்படி கடிதத்தில் வரைந் திருந்தது. இதை வாசித் தறிந்த பின், விரிந்து கிடந்த ஜனகத்தின் தினசரிக் குறிப்பைப் படிக்கத் துணிந்தேன்.

ஜூலை மாதம் 1௳

இன்றொரு பேரானந்த தினம். வைத்தியர் ராஜேஸ்வரனுடைய வருகையின் காரணமாக எனது உள்ளம் பூரணமாக மலர்ந்திருக்கிறது. ராஜேஸ்வரரின் முகக்குறிப்பி லிருந்தும், வசனக்குறிப்பி லிருந்தும் அவர் பேதை ஜனகத்தைக் காதலிப்பதாகத் தெள்ளத் தெளிய உணருகிறேன். எனது மனத்தில் அவரைப்பற்றி எழும் உணர்ச்சிக்கு என்ன பெயர் சொல்வ தென்று தெரியாமல் அலைக்கழிகிறேன். அவரை நான் முதன் முதல் சென்னையில் கண்டேனே. கண்ட விழிகள் இமைப்பற்று அசைதலற்று தேனுண்ட வண்டைப் போல் மயங்கிக் கிடந்ததன் உண்மை யென்ன? அன்றைய தினம் முதல் எனது இருதயத்தில் அவருக்காக ஒரு கோவில் கட்டப்பட்டது. ஆம், அவர் பூசனைக்குரிய தெய்வம். ஆ! ஆ! நான் மணம் செய்யப்பட்டவ ளென்பதற்கு அறிகுறியாக என் கழுத்தில் மாங்கல்யம் கிடக்கிறதே! கொண்ட கணவ னன்றோ ஒரு பெண்மணியின் கடவுள்.

> தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யு மழை

என்பது தமிழர் மறைமொழி யல்லவா? ஆ! எனது திருமணப் பூர்வமாக அமையப்பெற்ற நாயகர் யாரோ தெரியவில்லையே! அவரே எனது பதி. ஆம். ராஜேஸ்வரம் பிள்ளையே உமது எண்ணம் மனக் கோட்டை யல்ல, ஆகாயக்கோட்டை......................

என்று ஜனககுமாரியின் தினசரிக் குறிப்புப் புத்தகத்தில் எழுதப் பெற்று அரைகுறையாக விடப்பட் டிருந்தது. உணர்ச்சியின் துரிதம் கதைபோலும் விரிவாகக் குறிப்பு வரையப்பட் டிருக்கிற தென்பதை யுணர்ந்து கொண்டேன். இன்னும் சில ரகஸியங்கள் புலப்படக் கூடுமென்று மேலும் ஆராய முற்பட்டேன். வெண்ணிறமான தந்தச் சிமிழ் ஒன்றிருக்கக் கண்டு, அதனைத் திறந்து பார்க்கவும் ஒரு மடித்துப்போன பழங்கடிதம் காணப்பட்டது.

.........பொதிய மாமலை ஏறிச் சென்று நீர்ச்சுனைகளும் வீழ்ச்சிகளும் காண்போ மாயினோம். அவை யாவுங் கடத்தற்கு யாம் பட்ட

துன்பம் பற்பல. ஆண்டைக் குறுமுனி யிருந்த குகையுங் கண்டோம். நிலந்தானுங் கிண்டி நீவீர் விழைசாய ஏடுகட்ட பெறப் பெற்றேம்..................................இவ்வளவுதான் என்னல் மேற் கண்ட கடிதத்தில் வாசிக்க முடிந்தவை. எனது அன்னையார் எனக் கனுப்பி யிருந்த கடிதத்தின் எழுத்து நடையை ஒரு சிறிது இது ஒத் திருக்கிறது. இதனல் நான் பெருவியப் படைந்ததோடு என்னிட மிருக்கும் பழங் கடிதத்தைப் பத்திரப்படுத்தி ஆராய்ச்சி செய்ய வேண்டு மென்றும் தோன்றியது. ஆகா! மறந்தே போனேன். அக் கடிதத்தைப்பற்றி மகாமகோபாத்யாயர் மேனனிடம் சொல்லாமல் விட்டுவிட்டேன்!

இச்சமயம் வெளிப்புறம் ஏதோ காலடிச் சத்தம் கேட்டது. சீக் கிரம் இவைகளை வைத்துவிட்டு வெளியே நழுவிவிட வேண்டுமென்று நினைத்து வாயிற்படியில் தலையை நீட்டினேன். மாடிப்படியில் பின் வருமாறு பேச்சுக்குரல் கேட்டது.

“அவர் அங்கே நிற்கிறாரா?”

“ஆம்”

“இந்தா சீக்கிரம் இந்தக் கடிதத்தைக் கொண்டுபோய் அவரிடம் அந்தரங்கமாகக் கொடுத்துவிட்டு வா”

சம்பாஷணை இத்துடன் முடிந்துவிடப் போவதை யறிந்த நான் சீக்கிரமாக அறையைவிட்டு வெளியேறி மாடிப் படியை நோக்கிச் சென்றேன். மாடிப்படியில் ஜனகம் நின்றாள்.

“ஓ! டாக்டர் நீங்கள் இங்கே எப்பொழுது?” என்று அச்சத் துடன் அரற்றினள்.

“இப்பொழுதுதான் வந்தேன்!” என்று மொட்டையாக விட்டு விட்டேன்.

“இப்பொழுது எங்கே போகிறீர்கள்?” என்று கேட்டு, என்னை எங்கேயாவது போகச் சொல்லி அனுமதி கொடுக்க நினைத்தாள். அவளுடைய எண்ணத்தை யுணர்ந்துகொண்ட நான் அவளுடைய அபிப்பிராயத்துக்கு விரோதமாக நடக்க விரும்ப வில்லை.

“படுக்கை அறைக்குச் செல்கிறேன்” என்று சொல்லிக்கொண்டு எனது அறைக்கு வந்து சேர்ந்தேன்.

ஜனகம் யாரிடமோ ஒரு கடிதத்தைக் கொடுத்து எவரிடமோ கொடுக்கச் சொல்லிக் கட்டளையிட்டாள். அக்கடிதம் யாருக்காக இருக்கலாம்? சுபேதார் மகேந்திரனுக்கா? அல்லது லீலாஜீவைக்கா? அல்லது மதனசுந்தரனுக்கா? ஒன்றையுமே நிச்சயிக்க முடியாத நிலைமையில் தத்தளித்தேன். இவ்வத்தியாயத்தில் எனக்கு ஒரு பெரிய ஆனந்தம் ஏற்பட்டதென்பது மட்டும் மறுக்க முடியாத உண்மை. ஜனகம்—எனது மனைவி. தனது மனப்பூர்வமாக என்னைக் காதலிக்கிறாள். ஆனால் அவளுடைய பர்த்தா நான் என்பதை யறியாமலிருக்கிறாள்.

---

22. மர்ம மாது

நாளுக்கு நாள் எனது அறிவு மயங்கிக்கொண்டு வருவதாக அறிந்தேன். அதிலும் திண்டிவனத்துக்குச் சென்ற பின்னர் எல்லா விஷயங்களையும்விட 'நான் எனது காதலியை எப்படிப் பெறுவேன்' என்பதே முன்னால் நின்றது. ஜனகத்தின்பாலெழும் காதல் ஊற்று நீரைப்போல் மேன்மேலும் சுரந்துகொண்டிருந்தது.

காலையரும்பிப் பகலெல்லாம் போதாகி மாலையரும்பும் நோயைப் பற்றி வாசகர்கள் அறிந்திருப்பார்கள். அந்நோய் இன்றைய தினம் பகலில்லாமல் இரவில் வருத்தத் தலைப்பட்டது. சகிக்க முடியாத காதல் நோயினால் என் படுக்கையில் புரண்டு புரண்டு இம்சையடைந்தேன். யுகத்தைவிட எனது காலம் நீளமுடையதைப்போல் எனக்குத் தோன்றியது.

மணி ஒன்றடித்தது; நோயின் கொடுமை ஆற்றாது அறையை விட்டு வெளியே வந்தேன். யாவரும் அயர்ந்து நித்திரை போயினர். ஜன்னல் வழியாகக் குளிர்ந்த வெண்ணிலவு மாடிக்குள் பிரவேசித்தது. மேல் வானச் சரிவில் சந்திரபகவான் ஊர்ந்து சென்றுகொண்டிருந்தார். அதையே கூர்ந்து கவனித்துக்கொண்டு நின்றபோது, மாடிப் படியில் யாரோ ஒருவர் ஏறிவரும் காலடிச் சப்தம் கேட்டது. திடுக்கிட்ட நான் மேல் வாயில் ஜன்னலுக்குத் தென்புறம் கிடந்த கருங்காலி பீரோவின் புறம் மறைந்துகொண்டேன். ஜன்னலின் முன்பக்கம் நான் நின்றுகொண்டிருப்பதை அப் பீரோ மறைத்துக்கொண்டிருக்கும்! மாடிக்கு வரும் வாயிற்படிகள், நான் நின்றவிடத்துக்கும் தென் புறமாக விருக்கிறதென்பதை இதுவரை யூகித்திருப்பீர்கள். பீரோ, சுவரைவிட்டு அரையடி முன் தள்ளிப் போடப்பட்டிருந்தது.

காலடிச் சப்தம் கேட்கவே, "யார் அந்தப் பேர்வழி? இவ்வகால நேரத்தில் கீழே போய் வரவேண்டிய அவசியமென்ன? ஜனககுமாரியா? சுவர்ணாம்பாளா? தெய்வநாயகம் பிள்ளையா?" என்று என் மனம் அந்தப் பேர்வழியை அறியத் துடிதுடித்தது. சுவருக்கும் பீரோவுக்கும் இடையில் கும்பிருட்டாயிருந்தது. அங்கு யார் ஒளிந்தாலும் இருளில் கண்டுகொள்ள முடியாது. ஆதலின் அந்த இடை வெளியில் நின்று பார்த்தேன்.

படி வழியாக ஏறிவந்த வுருவம் மெதுவாக ஊர்ந்து நடந்துவந்த பொழுது, மேல் வானத்திற் சாய்ந்த சந்திரனின் ஒளி ஜன்னல் வழி யாகப் புகுந்து அந்த உருவத்தின்மீது விழுந்தது. அப்பொழுது போதுமான தெளிவுடன் அது யார் என்பதை யறிய முடிந்தது. அவ் வுரு யார்? ஜனககுமாரியு மல்ல, சொர்ணம்பாளு மல்ல, தெய்வநாயகம் பிள்ளைகூட வல்ல. அது ஒரு பெண் உருவம். கன்னங்கரே லென்று கறுப்பான ஆடையினால் தலை முக்காடு போட்டு உடம்பு முழுவதையும் மறைத்துக்கொண் டிருந்தாள்.

ஜன்னல் வழியாக மேற் திசையை அவள் அகஸ்மாத்தாகப் பார்த்தபொழுது அவளது முகத்தை ஸ்பஷ்டமாகப் பார்க்க என்னால் முடிந்தது. பிரகாசம் பொருந்திய அழகான முகம். முகக்குறியைப் பற்றியோ, வயதைப் பற்றியோ அவ்வளவு எட்டத்தி லிருந்துகொண்டு நிச்சயிக்க முடியவில்லை. மேற்படி ஸ்திரீ ஏதோ ஒரு சதிக்கருத்தை உத்தேசித்துத்தான் விஜயம் செய்திருக்க வேண்டும். ஏனெனில் கொஞ் சம் படபடப்புடன் நடந்துவந்தாள். வந்தவள் விறுவிறென்று என்னு டைய அறைக்குள்போய் நுழைந்தாள். "அந்த மர்ம ஸ்திரீ என்னு டைய அறையில் எதற்காக நுழைகிறாள் ? அவள் யார் ? நெஞ்சழுத்த மாக என்னுடைய அறைக்குள் என்ன எண்ணத்துடன் நுழைகிறாள்? இவள்தான் லீலாஜீவை யென்னும் மர்மப்பெண்ணாக விருக்கக்கூடு மோ ? அச்சம் மின்னையை அடைக்கிறது. கால்கள் பூமியில் பரவுவ தற்குத் தாக்ஷண்ய மின்றி மறுக்கின்றன. கொள்ளைக்காரன் மாதிரி திடீரென்று தோன்றி அநாயாசமாக—எனது அறையில் எதற்காகப் பிரவேசித்திருக்கிறாள்? என் நெஞ்சு படபட வென்று துடிதுடித்தது. சுமார் மூன்று நிமிஷங்கள் வரையில் அவள் எனதறையி லிருந்து வெளிவர வில்லை. எனது ஆச்சரியமும் திகிலும் உச்ச ஸ்தானத்தை யடைந்தது. கண்ணைக் கொஞ்சங்கூடச் சிமிட்டாமல் என் அறை யைக் கூர்ந்து கவனித்துக்கொண் டிருந்தேன்.

நான்காவது விநாடி அந்தக் 'கறுப்பாடை உடுத்திய பெண் உரு வம் வெளியே வந்தது. என்னைத் தேடியே அந்தப் பிசாசு வந் திருக்க வேண்டும். அவள் கையில் சிக்காமல் திருக்கண்ணபிரானே என்னைக் காப்பாற்றினார். என்னைத் தேடிவந்து ஆசாபங்கப்பட்ட மையால், அவளுடைய முகம் வெளுத்திருந்ததா? கறுத்திருந்ததா? என்பதை என்னால் அறியக்கூட வில்லை.

என் மனம் விரைவாகத் துடிக்கத் தலைப்பட்டது. லீலாஜீவை யைக் கண்டு பிடிப்பதற்கு நான் முயற்சி செய்வதை அவள் எப் படியோ அறிந்துகொண் டிருக்கிறாள். என்னைச் சங்கரித்து விட் டால், அவள் எவ்வித கவலையுமின்றி யிருக்கலா மன்றோ? மறுபடியும் அவள் நில வொளியில் நின்றபொழுது, அவள் கைகளில் எனது கண்கள் எச்சரிக்கையாக விருந்தன. என்ன ஆச்சரியம்! அவளது வலக் கை வெறுமையாக விருக்கும்பொழுது, இடக் கையில் கையுறை (Glove) அணிந் திருந்தாள். கையுறை யணிந்து வரவேண்டிய காரண மென்ன?

ஜனககுமாரியின் அறையை நோக்கிச் சென்று கதவின் சாவித் துவாரத்தின் வழியாக உள்ளே தன் பார்வையைச் செலுத்தினாள். "ஐயோ, ஜனகம் உட்புறம் அயர்ந்து நித்திரை செய்வாளே, அவளை இவள் என்ன செய்ய உத்தேசித் திருக்கிறாளோ தெரிய வில்லையே!" என்று நான் கலங்கினேன்.

கதவைத் தன் கைகளால் தள்ளிப் பார்த்தாள். அந்தப் பாழும் கதவு படக் கென்று திறந்து கொண்டது.

மூச்சுக் குழாயை உடைத்துவிடும்போ லிருந்தது. "ஐயோ ஆருயிர் ஜனகத்துக்கு என்ன விளையப் போகிறதோ?" ஐயோ அச்சம், கருணை, வீரம் முதலிய வெல்லாம் என் பிடரியைப் பிடித்துத் தள் ளின. லீலாஜீவை! அந்த எமதேவதையை யார் எதிர்க்க முடியும்?

கதவை மெதுவாகத் தள்ளித் திறந்துகொண்டு லீலாஜீவை யென்று நான் கருதிய அந்த மர்மப் பெண் உள்ளே போய்விட்டாள். நான் என் செய்வேன்? ஜனகம் இப்பொழுது தன்னை மறந்து நித்திரை போகும் நேரம். 'லீலாஜீவை என்றென்றும் நம்மைக் கொல்வாள்' என்று அன்று தாம்பரம் 'கல்யாண பவன'த்தில் சுபே தார் மகேந்திரன் கூறியது நன்றாக நினைவுக்கு வந்தது. ஜனகம் தனியே அதுவும் நித்திராதேவியின் வசப்பட்டுக் கிடக்கிறாள். ஜனகத்தைத் தீர்த்துக் கட்ட இது வொரு நல்ல சந்தர்ப்பம்!

"அடே அசட்டுப் பிணமே, நீ ஜனகத்தின் கணவ னல்லவா? உனக்குக் கைக ளிருக்கின்றனவா இல்லையா? நீ ஆண்பிள்ளைதானே?" என்ற கேள்விகள் எனது காதுகளைத் துளைத்தன.

"நான் இப்பொழுது உள்ளே புகுந்து லீலாஜீவையைச் சந்திப் பேனாயின், நிச்சயமாகக் கூக்குரலும் ஆரவாரமும் கிளம்பும். வீண்

கூக்குரலைக் கிளப்பிவிட்டால் எல்லா ரகஸியங்களும் சந்தி சிரித்துப் போய்விடும். ஆனால், ஜனகத்தைக் காப்பாற்றுவதற்கு வழி யென்ன? அதோ அவள் உயிர் போய்விடப் போகிறது. மௌனமாக விருப்பதில் பய னில்லை. சீக்கிரம்! சீக்கிரம்!! ஆனால், லீலாஜீவையை எதிர்ப்பதற்கு 'நெப்போலியனே' எழுந்து வந்தாலும் முடியுமா? எவ்வளவு நெஞ்சத் துணிச்சலுடனும் அஞ்சாமையுடனும் அவள் இந்தப் பெத்தம் பெரிய வீட்டில் பிரவேசித்திருக்கிறாள்!" என்று எண்ணினேன்.

ஒரு பித்தனின் மூளை எப்படி வேலை செய்யுமோ அம்மாதிரி வரம்பில்லாமல் ஒழுங்கில்லாமல் எனது சிந்தனைகள் ஜனித்து வக்ரம் அதிசாரம் மந்தம் சீக்கிரம் அதிசீக்கிரம் முதலிய கதி பேதங்களில் சென்றுகொண் டிருந்தன. இன்னும் அதேமாதிரி ஐந்து நிமிஷம் என் மனம் சென்றிருந்தால் நிச்சயமாகவே பைத்தியம் பிடித்து விட்டிருக்கும்.

"அது என் கடமை! மனைவியின் உயிரைக் காக்கப் புருஷனின் உயிரைத் திரணமாக மதிக்க வேண்டும். என்ன வந்தாலும் வரட்டும். அந்த ஈஸ்வரன் என்னைக் காத்தாலும் சரி, காப்பாற்றாமற் போனாலும் சரி, ஜனகத்தை நான் காக்க வேண்டுவது அத்தியாவசியம்! கடமை! உடனே பீரோவின் மறைவி லிருந்து வெளியே வந்து ஜனககுமாரியின் அறையை நோக்கி விரைந்து சென்றேன்.

கதவு மூடி யிருந்தது. லீலாஜீவை உள்ளே சென்றபோது கதவை மூடிக்கொண்டு போயிருக்கிறாள். சாவித்துவாரத்தில் காதை வைத்துக்கொண்டு உற்றுக் கேட்டேன். உள்ளே எத்தகைய ஒலியும் கேட்கவில்லை. துவாரத்தினால் பார்த்தேன் உள்ளே ஒரே இருட்டு! ஒன்றுமே தெரியவில்லை. கதவில் நான் கையை வைத்தபோது, லொட லொட்ட வென்று ஆட்ட மெடுத்து ஒலி எழுப்பிற்று. நான் செய்த சப்தத்தால் உள்ளே இருந்த லீலா ஜீவை அச்சங்கொண்டிருக்கக்கூடும். தப்பித்து ஓடுவதற்கு அவள் கதவை வேகமாகத் தள்ளிக் கொண்டு என்னைத் தாக்கக்கூடும். ஒரே மூச்சில் அவளைப் பிடித்து கழுத்துப்பூட்டிட்டு அமுக்கிவிட உத்தேசங்கொண்டு வாயிற்படியில் தயாராக நின்றுகொண் டிருந்தேன்.

உள்ளே என்ன நடக்கிற தென்பதை யறிய எனது காதுகள் நிமிர்ந்து ஊன்றிக் கவனித்தன. வீர வுணர்ச்சி மேலெழுந்து

இருதயம் பூராவும் நிறைந்து விட்டது. நான் மூச்சுவிடுவதுகூடச் செவ்வையாகக் கேட்டது.

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு இவ்வாறு முழுசாகப் பத்து நிமிஷங்கள் கடந்தன. லீலாஜீவை வெளியே வரவு மில்லை. உள்ளே எவ்வித ஒலியு மில்லை. "ஐயோ, அந்தக் காட்டேறி எனது அருமந்த காதலியின் சின்ன வீட்டி லல்லவா நிற்கிறது!" என்று எண்ணிய மனம் பொறுமையை நீண்ட நேரம் வகிக்க முடிய வில்லை. மற்றும் ஒரு மூன்று விநாடிகள் சென்றன. அப்பொழுதும் அந்த விநோத அவதார மர்மஸ்திரீ வெளியே வரவில்லை.

கதவைத் தள்ளினேன். திறக்க முடியவில்லை. எனக்குச் சந்தேகம் அதிகமாய் விட்டது. "இதுவரையில் ஜனகம் விண்ணுலகம் சென்றிருப்பாளா?" என்று என் பலம்கொண்ட வரையில் வேகமாகக் கதவைத் தள்ளினேன். கதவு திறந்து கொண்டது.

நெஞ்சு துடிதுடிக்க உள்ளே சென்றேன். இருள் அதிகமாக விருந்தாலும் அறையின் கீழ்வாயில் கம்பி யில்லாத ஜன்னல் திறந்து விடப்பட்டிருந்தபடியால் கொஞ்சம் கொஞ்சம் நிதானித்தறிய முடிந்தது. லீலாஜீவையை எனது கண்கள் கூர்ந்து தேடின. இரண்டு நிமிஷம் நிதானத்துடன் அறையை ஊன்றிக் கவனித்தேன். லீலாஜீவையின் உருவத்தையே காணேம்! என்ன ஆச்சரியம்! சயனக்கிரகத்தின் உட்புறம் ஒளிந்துகொண்டிருப்பதற்கான வசதி யொன்றுமே இல்லை. லீலாஜீவை எப்படி வெளியே சென்றுள்! பேராச்சரியம்! பேராச்சரியம்!! லீலாஜீவையைத் தேடிவிட்டுத் தப்ப விடுவது நல்ல பாம்பை அடித்துத் தப்ப விடுவதற்குச் சமான மல்லவா? ஜனககுமாரியை வேலை தீர்த்துவிட்டாளா? பாவி பாவி பாபிஷ்டி! இதுபோலும் ஒரு பாபாத்மாவைத் துராத்மாவை ஏ! பரமாத்மா ஏன் படைத்தாய்?

ஜனககுமாரியின் படுக்கை யருகிற் சென்று ஆவலுடனும் அன்புடனும் ஆர்வத்துடனும் பார்த்தேன். ஆ! என்ன ஆச்சரியம்! ஜனககுமாரியையும் காணேம்! வெறும் போர்வை மாத்திரம் கிடந்தது! லீலாஜீவையும் ஜனககுமாரியும் எந்த வழியாக வெளியே போயிருக்கலாம்? எங்கே போயிருக்கலாம்? எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை.

திடீரென்று ஒரு யோசனை யுண்டாயிற்று. உடனே கீழ்வாயில் ஜன்னலுக்குக் கட்டிலின்மீது ஏறிச்சென்று கீழ்நோக்கிப் பார்த்தேன். மேற்படி ஜன்னலுக்குக் கம்பியில்லை யென்று முன்னமேயே சொல்லி யிருக்கிறேன். கம்பியில்லை யென்றதும் அதன் வழியாக லீலா ஜீவை தப்பித் திருக்கக் கூடுமோ வென்று சந்தேகிக்கலாம். ஆம், சந்தேகமே வேண்டாம். அதன் வழியாக லீலாஜீவை மாத்திர மல்ல, ஜனககுமாரியும் சென்றிருக்கிறாள். ஜன்னலி லிருந்து கீழ்த் தரைமட்டம் வரையில் ஒரு நூலேணி தொங்கிக்கொண் டிருந்தது. நூலேணி யென்பதை இதுவரையில் நான் பார்த்ததில்லை. மணிக்கயிற்றினால் ஏணியைப்போலவே அமைக்கப்பட் டிருந்தது. மேற்படி ஏணிக்கயிற்றின் வழியாகத்தான் அவர்கள் இருவரும் நிச்சயமாகச் சென்றிருக்க வேண்டும்!

ஜனககுமாரியை லீலாஜீவை ஏன் அழைத்துச் சென்றிருக்கிறாள்? எதற்காக அழைத்துச் சென்றிருக்கிறாள்? எங்கு அழைத்துச் சென்றிருக்கிறாள்? ஒரு விநாடியையும் பயனில்லாமல் கழியவிட எனக்கு மன மில்லை. நூலேணி வழியாக நானும் இறங்கிச் சென்றேன்.

கீழே சென்றவுடன் எங்குப் போய் அவர்களைத் தேடுவது? எனக்கு ஒன்றுமே விளங்க வில்லை. மாளிகையின் விஸ்தாரமான பூந்தோட்டத்தில் எங்கேனும் அவர்கள் என்னைக் கண்டு ஒளிந்திருக்க இயலுமோ? பூந்தோட்டத்தை அலசி யலசிப் பார்த்து விட்டுச் சாலைக்கு வந்தேன். சாலைக்கு வந்தபின் செங்கற்பட்டுக்குச் செல்லும் சாலை வழியாக வடபுறமாகச் செல்வதா? கடைத்தெருவுக்குச் செல்லும் சாலை வழியாகத் தென்புறமாகச் செல்வதா என்று சிந்தித்தேன். கடைத்தெரு பக்கமே முடிவில் திரும்பிச் சென்றேன்.

இளம் பித்தனைப்போல அந்தத் திண்டிவனம் முழுவதையும் சுற்றி யலைந்தேன். அடர்ந்த காரிருள் கண் தெரியவில்லை. நகர சபை விளக்கோ அல்லது பஞ்சாயத்து சபை விளக்கோ ஒன்று இல்லை. இறுதியாக நான் 'ஜயலட்சுமி விலாஸ்'த்திற்கே திரும்பினேன். கடிகாரம் மூன்றடிக்கும்பொழுது அம்மாளிகையின் கீழ்த் தாழ்வாரத்தை அணுகினேன். இப்பொழுது நான் எனது படுக்கையறைக்குச் செல்ல வேண்டுமானால் நூலேணி வழியாகத்தான் செல்ல வேண்டும், ஏனெனில் வாயிற்கதவை உட்தாளிட் டிருப்பார்க ளல்லவா?

மறுபடியும் பங்களாவின் கீழ்ப்புறம் சென்று ஜனகத்தின் சயனக் கிரகத்திற்கு மேல் அண்ணாந்து நோக்கினேன். முன் கட்டியிருந்த நூலேணியைக் காணவில்லை. ஆச்சரியமும் திகிலும் மேலும் மேலும் வலுவடைந்தது. "நூலேணி எங்குப் போயிற்று? அவர்களே மறுபடி வந்து எடுத்துக்கொண்டு போய்விட்டார்களா? ஜனகம் திரும்பவும் தனது நித்ராகிரகத்துக்கு வந்து விட்டாளா? அதிருக்கட்டும், நான் இனிமேல் எப்படி மாளிகைக்குள் போவது? தெருக் கதவைப்போய்த் தள்ளிப் பார்க்கலாம்" என்று வாயிற் கதவைத் தள்ளினேன். திறந்து கொண்டது.

என்ன விந்தை! வாயிற் கதவு ஏன் தாளிடப்படாம லிருக்கின்றது? ஆயிரக் கணக்காகப் பெருகும் இந்தச் சூழ்ச்சியுடன் மனிதன் என்ன செய்ய முடியும்? கதவைத் திறந்து உட் தாளிட்டுக்கொண்டு எனது சயனக் கிரகத்திற்குச் செல்லுமுன் ஜனககுமாரி திரும்பி வந்து விட்டாளா?" என்று பார்ப்பதற்கு அவ்வறையினருகிற் சென்றேன். கதவு அப்பொழுதும் திறந்தபடி யிருந்தது. உட்சென்று கூர்ந்து நோக்கினேன். படுக்கையைத் தடவிப் பார்த்தேன், இல்லை. ஜனககுமாரியை இப்பொழுதும் காணவில்லை! மர்மலோகத்திலே சஞ்சாரம் செய்பவன் போன்று மதிமயங்கி நிலை கலங்கி நெஞ்சு தடுமாறி எனது படுக்கையிற் போய்ச் சாய்ந்தேன்.

"ஹா! ஹா!!" என்று என்னை யறியாமலேயே அடுத்த க்ஷணம் என் வாயி லிருந்து கூக்குரல் கிளம்பிற்று. ஏன்? தங்கசாலை வீதி சுவர்ணம்பாளின் மாளிகையின் புத்தக நிலையத்தில் நிலவிய ரகசியப் பேய் எனது படுக்கையிலும் பிரவேசித்து விட்டது. 'ஜில்' லென்ற அறை யொன்று 'பளார்' என்று என் முதுகில் விழுந்தது. எனது நரம்புகள் வெட்டு வாங்கின. கண்கள் சுற்றின. மூச்சு தடுமாறியது. உணர்ச்சியே இல்லை! இன்னும் சற்று நேரத்தில் இறந்து விடுவேன். திடீரென்று ஒரு நல்ல ஞாபகம் வந்தது. டாக்டர் மேனன் அன்று செய்த இன்ஜெக்ஷன் திராவகம் கொஞ்சம் எனது பெட்டியி லிருக்கின்றது. ஒரு தர்ப்பரை நேரங்கூடத் தாமதிக்காமல் அத்திராவகத்தைப் புஜத்தில் இன்ஜெக்ட் செய்துகொண்டேன். அதன்பிறகு கொஞ்சம் நரம்புகள் தளர்ந்து பிகு நீங்க வாரம்பித்தது. மங்கிய கண்கள்கூடக் கொஞ்சம் பிரகாசமாகத் தெரிய வாரம்பித்தன.

ஹா! லீலாஜீவையிடம் என்ன இருக்கின்றது? எதன் மூலம்யமாக அவள் இவ்விதமான ரோகத்தை மூட்டி பயமுறுத்துகின்றாள்?

மானப் படுத்தினுள். நான்—நானென்ருல், ஒரு எம். பி. பி. எஸ், டாக்டர்! சுவர்ணம்பாள் சொல்லிய வார்த்தையில் நம்பிக்கைகொண்டு அவளை மைத்துனியாகக் கருதி யிருப்பதோ டல்லாமல், 'அத்தாச்சி' என்ற முறைகொண்டு அழைக்கிறே னன்ருே? அது கேவலம் ஒரு பெண் ஜன்மத்துக்கு நகைப்பை உண்டாக்கியது ஆச்சரியமா?

"ஏன் நிறுத்திவிட்டீர்கள்?" என்ருள் சுவர்ணம்.

"தமது சிரிப்பு கொஞ்சம் அமைதி யடையட்டும் என்றுதான்!" என்று நான் விடையிறுக்கும்பொழுது சுவர்ணத்தின் முகம் சடக்கென்று வேறுபட்டது.

"டாக்டர், கோபிக்கிறீர்களே ஏன்? நான் சிரித்தது தங்களுக்குப் பிடிக்கவில்லையா?" என்று மனக்கசிவுடன் என்னைக்கேட்டு என் கோபத்தை நீக்கினுள்.

"கோப மென்ன வந்தது?" என்றேன் நான்.

"பின்னை ஏன் சொல்ல வந்ததை நிறுத்திவிட்டீர்?"

இதற்குள் ஜனகம் அங்குப் பிரவேசித்தாள். அவளுடைய முகம் வெளுத்துக் கவலைக் குறியுடன் விளங்கிற்று. என்னைக்கண்டவுடன் புன்முறுவலை வற்புறுத்தி வரவழைத்துக்கொண்டு "என்ன இன்று அசாத்திய தூக்கம்!" என்று வாத்ஸல்யத்துடன் வினவினுள்.

"ஆம். இரவெல்லாம் இரண்டு யுத்தக் கனவு கண்டு நித்திரையில்லாமற் போயிற்று! நீ கூட எனது சயனக் கிரகத்தின் கதவை நூறு தரம் தட்டினுயாமே" என்றேன் நான்.

"முழுவதும் நிஜம்" என்ருள் ஜனகம்.

"பொய் யென்று நினைக்கிறேன்."

"ஏன்? அப்படிச் சொல்கிறீர்கள்? உண்மையாகவே தங்கள் அறைக் கதவைத் தட்டி யெழுப்பினேன்" என்ருள் அவள்.

"கதவை இடித்தது நிஜமாக விருக்கலாம்! நூறு முறை இடித்ததென்பதைத்தான் பொய் யென்கிறேன். ஏனெனில், காலை ஆறு மணி முதல் பத்துமணி வரையில் நூறு தட்டு தட்டுவ தென்ருல் குறைந்தது இரண்டரை விநாடிக்கு ஒரு தட்டாகத் தட்டி யிருக்க வேண்டுமே!"

"இப்பொழுதுதான் ஜனகத்தின் முகம் மலர்ந்தது. நான் விளையாட்டாகப் பேசியதை யறிந்து மகிழ்ந்தாள்.

23. இருவருக்கும் ஆச்சரியம்

சிவர்ணும்பாளும் தெய்வநாயகம் பிள்ளையும் விழுப்புரம்போய் விட்டார்கள். ஜனகம் மாத்திரம் தனியாக விருக்கின்றாள். இதுபோல் ஒரு சின்னஞ்சிறு பெண்மணியை எங்கள் மரபில் தனி யாக விட்டுவிட்டுப் போய்விட மாட்டார்கள். ஏன் என்று கேட்கலாம்; பெற்றோர்களுக்குத் தங்கள் சொந்தப் பெண்கள்மீது நம்பிக்கையிருப்ப தில்லை. யாரோடாவது எவனோடாவது சம்பந்தம் வைத்துக்கொண்டு விடுவாள் என்பது பெற்றோர்களின் சித்தாந்தம். இவர்களுக்கும் தங்கள் பெற்றோர் மீது சந்தேகமுண்டாய் விடும். 'நம்மைத் தனி யாக விட்டுப் போவதற்கு நமது பெற்றோர்கள் ஏன் பயப்படுகிறார்' என்னும் ரகசியத்தை யறிய அந்தரங்கமாக முயற்சி செய்யத் தொடங்குவார்கள். தெய்வநாயகம் பிள்ளைக்கு மாத்திரம் மேற்படிச் சந்தேகங்களே உண்டாகவில்லை யென்பது பரிபூரணமான உண்மை. நாங்கள் இருவரும் இரவு எட்டு மணிக்கே போஜனம் செய்துவிட்டு ஏங்களெங்கள் சயனக்கிரகத்துக்குச் சென்று விட்டோம்.

சித்தான் நாற்காலியில் சாய்ந்துகொண்டு, இந்து ஆங்கில வாரப் பதிப்பைப் படித்துக்கொண் டிருந்தேன். ஒரு பக்கம் வரையில் அமைதியாக விருந்து படித்து முடித்தேன். இரண்டாவது பக் கத்தைப் புரட்டியபொழுது ஜனகம் அங்கு அவசரமாக ஓடி வந்தாள், ஓடிவந்த வேகத்தைப் பார்த்தவுடன் ஏதேனும் தேள் கீள் கொட்டி யிருக்கலாமோ வென்று சந்தேகித்து அக்னித்திராவகம் கூட கையி லில்லையே என்று ஆயாசப்பட்டேன். எருக்கம்வேரின் பட்டையை இரும்பு படாமல் வெட்டிவந்து அதன் பட்டையை யுரித்து நாலைந்து வெற்றிலையை வைத்து அரைத்து ஒரு கொட்டைப் பாக்குப் பிரமாணம் கர்ப்பிணியைத் தவிர தேள் கொட்டிய யாருக் குக் கொடுத்தாலும் கொட்டுவாயில்கூட விஷமிருக்கா தென்பது இந்திய வைத்தியத்தின் முறை! இப்பொழுது எருக்கஞ்செடிக்கு எங்கே தேடிப் போவது? இதற்குள் ஜனகம் உள்ளே வந்துவிட்டாள்

"என்ன ஜனகம்? ஏன்? மணிக்கட்டிடம் பிடித்துக் கொண் டிருக்கிறாய்? ஏதேனும் கடித்துவிட்டதா?" என்று பரிவோடு வின வினேன்.

போன்ற மெல்லிய மிருதுவான பொற்கரத்தை எவ்வு இரக்க மில்லாமல் எப்படிக் கடித்தது அந்தப் பாழும் எறும்பு. மெதுவாக கடித்தவிடத்தைத் தடவி அவளது நோயை அகற்றினேன்.

"இப்பொழுதுகூட வலிக்கிறதா?" என்று வருத்தத்தோடும் அன்போடும் வினவினேன்.

"கொஞ்சங்கூட நோகவில்லை. சரியாகப் போய்விட்டது. சரி, டாக்டர் தங்கள் தூக்கத்தைக் கெடுத்து விட்டேன், நான் போய் வரட்டுமா?" என்றாள் ஜனகம். ஒன்றுமே பதில் சொல்லாமல் அவளது முகத்தைப் பரவசத்துடன் நோக்கிக் கொண்டு நின்றேன். சில விநாடி சென்றன.

"ஜனகம், நான் என்ன காட்டு மிருகமா? என்னுடன் பேசிக் கொண்டிருக்கப் பிரிய மில்லையா?" என்றேன் நான்.

ஜனகத்தின் கண்களில் நீர் ததும்பியது. ஒன்றுமே பதில் சொல்லவில்லை.

"அன்பே, கோபமா?" என்று நான் என்னை மறந்து பிதற்றி முகவாய்க்கட்டையைப் பற்றினேன். ஜனகம் மதிமயக்கத்துடன் ஓரடி பின்னுக்கு வாங்கினாள்.

இதற்குள்ளாக சென்ற இரவில் நிகழ்ந்த சம்பவங்க ளெல்லாம் நினைவுக்கு வந்து எனது மனத்தில் பொங்கிய காதலுணர்ச்சியை அற நீக்கியதோடு அச்சத்தையும் கொடுத்தன. ஐயோ! இவ்வளவு சிறந்த அழகையுடைய ஜனகம் அந்தரங்க சதிசூழ்ச்சியையுடையவளா யிருக்கக்கூடுமா? ஹா! இந்தத் திவ்ய சொரூபத்துக்கு அவ்விரகஸி யங்கள் எல்லாம் ஒரு விக்னமாக வமைந் திருக்கின்றனவே! ஏ, அருட்பிரகாசமே இதுவும் உன் செயல்போலும்!

பின்னுக்கு வாங்கிய ஜனகம் சித்திரப்பதுமைபோல் ஆடாமல் அசையாமல் நின்றுகொண்டிருந்தாள்.

"ஜனகம்! அந்த நாற்காலியில் உட்கார். உன்னை ஒரு விஷயம் கேட்க வேண்டும்?" என்றேன், நான்.

"என்ன விஷயம்?" என்று கேட்ட சில நிமிஷம் கழித்து நாற்காலியி லமர்ந்தாள்.

"கோபித்துக் கொள்ளாமலும் என்மீது குரோத மடையாமலு மிருந்தால், உன்னை யொன்று கேட்க விரும்புகிறேன்" என்று ஆரம்பித்தேன் நான்.

"ஜனகம் கோபிக்காதே, நேற்றிரவு அந்தக் கறுப்பாடைக்காரி இவ்வீட்டுக்கு வந்திருந்தா ளென்பது நிச்சயம்"

"ஹா! அவ—ளா? அ—வ—ளா?" என்று பயந்து பின்னுக்கு வாங்கினுள் ஜனகம்.

"பயப்படாதே! பயப்படாதே! அந்த ராட்சச பிண்டம் உன் அறைக்குள் நுழைந்து வெகு நாழி தங்கி யிருந்தாள்!" என்று நான் கூறியபொழுது, ஜனகம் இருகைகளையும் கெட்டியாக மூடிக்கொண்டு, கண் பிதுங்க, பல் கிட்ட, நடு நடுங்கினுள். இரண்டு விநாடி சென்ற பின், "ஐயோ! பயமா யிருக்கிறதே!" என்றுள் ஜனகம்.

"தைரியத்தைக் கைவிட வேண்டாம்! நான் அவளை நன்குக் கவனித்தேன். முதன் முதல் எனது அறையை வந்து பார்த்தாள். அந்தச் சமயம் நான் அறையி லில்லை. அதன் பிறகு உனது சயனக் கிரகத்தில் வந்து நுழைந்தாள்!" என்று சொல்லி நேற்றிரவு நடந்த எல்லா நிகழ்ச்சிகளையும் விவரமாக எடுத்துச் சொன்னேன்.

"ஐயோ! இவைகளில் ஒன்றும் எனக்குத் தெரியாதே!" என்றுள் ஜனகம்.

"உன்னுல் அன்று வர்ணிக்கப்பட்டபடிதான் அவள் மெலிந்து சிவந்த மேனியுடன் வனப்புடையவளா யிருந்தாள்! ஏதோ ஒரு துராகிர்தச் செயலை முன்னிட்டு இரவு இங்கு தோன்றி யிருக்கிறுள்!" என்றேன் நான்.

"கடவுள்தான் காப்பாற்றினுர்! தாங்கள் விவரித்தபடி அவள் சென்றிருந்தால் சிப்பந்திகளின் அறைக்குள் நுழைந்திருக்க வேண்டும்! அவள் நம் இரண்டு பேரையுமே தேடி வந்திருப்பவளாகத் தென்படுகிறு ளல்லவா?" என்றுள் ஜனகம்.

"சந்தேக மென்ன? நீ சொல்கிறபடி நூலேணி வழியாக நீ நந்தவனத்துக்குப் போயிருந்த பொழுது அவள் உனது அறையில் நுழைந்திருக்கின்றுள். உன்னைக் காணுததால், அதே நூலேணி வழியாக இறங்கி எங்கேயோ போயிருக்க வேண்டும். நான் உனதறைக் கதவினிடம் நின்று கொண்டு அவளை எதிர் பார்த்திருந்த போதெல்லாம் அவள் வெளியே போயிருக்க வேண்டு மென்று கருதுகிறேன்" என்றேன், நான்.

"நம் இரண்டு பேரையும் ஏன் தேடி வந்தாள்?" என்றுள் ஜனகம்,

"கேட்ட உத்தேசத்துடன்தான் அவள் வந்திருக்கிறாள். அதில் சிறிதும் சந்தேகமில்லை!" என்றேன் நான்.

புருவத்தை நெறித்துக்கொண்டு, சென்ற இரவில் நிகழ்ந்த தனது சொந்த அனுபவங்களையும், சம்பவங்களையும் நினைவுகூர்பவள் போலத் தோன்றினாள் ஜனககுமாரி.

"சென்னை புஸ்தக அறையில் அநுபவித்த அதேமாதிரி யுணர்ச்சியைத் தாங்கள் அடைந்ததாகச் சொல்கிறீர்க ளல்லவா?"

"உண்மை!"

"என்ன ஆச்சரியம்! நான் திரும்பிவந்து படுக்கையிற் படுக்கும்பொழுது நானும் அதேமாதிரி விநோத நோயினால் பீடிக்கப்பட்டேன்! இதைப்பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்று வினவினாள் ஜனகம்.

நம் இருவர் மீதும் பலத்த சதியாலோசனை நடந்து வருகிறது. என்றென்றும் நம்மை ஒழித்துவிட அப் பெண்மணி கங்கணம் கட்டிவிட்டாள். நம்மைக் கொல்ல வேண்டுமென்பதற்குக் காரணந்தான் விளங்கவில்லை. இனி மறைத்து மறைத்துப் பேசுவதில் பயனில்லை. மேற்படி இரகசியங்கள் எல்லாவற்றிற்கும் சாவி உன்னிட மிருக்கிறது. அந்த நவீனப் பெண் எதற்காக நம்மைக் கொல்ல நினைத்திருக்கிறாளென்பதை நீ சந்தேகமற அறிந் திருக்கிறாய். சொல்வதற்கு மாத்திரம் அஞ்சி நடுங்குகிறாய். இது முற்றும் உண்மையான செய்தி."

"வைத்தியரே நீங்கள் சொல்வது எனக்குச் சரியாக விளங்கவில்லையே."

"நான் கேட்கும் சில கேள்விகளுக்கு நீ உண்மையை ஒளிக்காமல் உரைக்கும் பக்ஷத்தில், நான் கண்டிப்பாக எல்லாச் சதியாலோசனை சூழ்ச்சிகளையும் கண்டு பிடித்துவிடுவேன்" என்றேன் நான்.

ஜனகம் கொஞ்சம் அருவருப்பும், அச்சமுங் கொண்டாள்.

"நான் எனக்குத் தெரிந்த விஷயங்கள் முழுவதையும் அநேகமாக வெளிப் படுத்திவிட்டேன்" என்றாள் ஜனகம்.

24. பதிவிரதா சிந்தனை

“இல்லை. சிறிதளவுதான் சொல்லி யிருக்கிறாய்! சொல்வதற்கு நீ பயப்படுகிறாய்! ஒரு முக்கியமான மர்மம் உனது உள்ளத்தை ஊடுருவித் துளைத்துக் கஷ்ட மடையச் செய்கிறது.”

“என்ன மர்மம் என்று நினைக்கிறீர்கள்?”

“அதுதான் உனது கலியாணம் நடந்த மர்மம்!”

“ஹா! இம்மாதிரி யார் சொன்னது—? யார் சொன்னது—?” என்று கண்களில் நீர்த் ததும்ப அச்சத்துடன் வினவினாள் ஜனகம்.

“வெகு நாட்களுக்கு முன்னமேயே எனக்குத் தெரியும்!” என்றேன் நான்.

“இல்லை. சுவர்ணம்பாள் கழுதை எல்லாவற்றையும் தங்களிடம் திறந்து சொல்லி விட்டது!” என்று தன் கோபத்தையும், துயரத்தையும் சுவர்ணம்பாள்மீது திருப்பினாள்.

“இல்லை. சில மாதங்களுக்கு முன்பு உனக்கு விவாகம் நடந்தேறிய விவரம் எனக்குத் தெரியும்” என்றேன் நான்.

“என்ன—? சில மாதங்களுக்கு முன்பா? அது எப்படி முடியும்?” என்று ஆச்சரியப்பட்டாள் ஜனகம்.

“பரஸ்பரம் நீ என்னிடம் நிஷ்களங்கமாகப் பழகவில்லை யென்றறிகிற வரையில், என்னால் இது விஷயத்தைப் பகிரங்கமாகப் பேச முடியாது!” என்றேன் நான்.

“ஹா! நான் இன்னும் இந்த நீசான்மாவை விட்டுக் கொள்ளாமல் உயிருட னிருப்பது கடவுளுக்கே ஆச்சரியமாகத்தா னிருக்கும்!” என்று கண்ணீர் விட்டாள் ஜனகம்.

“ஜனகம்! எல்லா விதமான துக்கத்தையும் ஏற்றுக்கொள். ஒரு மயிரிழையும் அஞ்ச வேண்டாம். நான் உனது ஆருயிர்ச் சிநேகிதன்! உனக்கு வேண்டிய உதவிகளைச் செய்கிறேன். உனக்காக எனது உயிரைக் கொடுக்கச் சந்தர்ப்பம் ஏற்படு மென்றாலும் கொடுக்கத் தயார். தைரியமா யிரு!” என்று ஜீவகாருண்யம், காதல், வீரம் முதலிய நல்லுணர்ச்சியினால் உந்தப்பட்டுப் பரவசச் சந்தத்தனாய் உரைத்தேன்.

"ஹா! என்ன பாவம் செய்து பூலோகத்தில் வந்து ஜனித்தேனோ தெரியவில்லை! வைத்தியரே, தாங்கள் எனக்கு உதவி செய்ய முடியுமென்று நம்புகிறீர்கள்? முடியவே முடியாது! தாங்கள் செய்ய வேண்டிய உதவியெல்லாம் என் இரகசியத்தைத் தங்கள் மனதிலேயே புதைத்து வைத்துக் காப்பாற்ற வேண்டியதுதான்!" என்று சொல்லும் எனது காதலி, தேம்பித் தேம்பி யழுது கண்ணீர் வடித்தாள். நடுக்கடலில் அகப்பட்டுக் கொண்டு வருந்துவதைக்கூட என்னால் சகிக்க முடியும். ஆனால், எனது நாயகி ஜனகம் கண்ணீர் சிந்துவதைச் சகிக்க முடியவே முடியாது! அழுவது மாதிரியே இருந்தது, இருக்கிறது.

"ஜனகம்! என்னால் முடியாத காரியமா யிருந்தாலும் முயன்று பார்க்காமல் விடப் போவதில்லை! உனது அந்தரங்க கல்யாணத்தின் தலையில் போட்டிருக்கும் முட்டாக்கை எடுத்துவிட்டால் எல்லாம் ஸ்பஷ்டமாக உணர்ந்துகொள்ள ஏதுவாகும்!" என்றேன் நான்.

"நானே என் கல்யாண இரகசியம் என்ன வென்பதைப்பற்றி அறிய முயன்று முயன்று முடியாமல் சலித்து விட்டேன். தங்களால் ஒருபோதும் முடியப் போவதில்லை!" என்றாள் ஜனகம்.

"ஏன்?"

எனது கணவன் யார், எவர் என்று நாளது வரையில் என்னால் கண்டு பிடிக்க முடியவில்லை! அவரை யார் என்று அறிவதைவிட எனக்கு வேறு ஆசை கிடையாது!" என்று மன முருக்கத்துடன் உரைத்தாள் ஜனகம்.

என் மனம் 'படக் படக்' கென்று துடித்தது. நான்தான் அவளுடைய உண்மைக் கணவன். என்னை அவளுக்கு அறவே தெரியாது. நான் உண்மையைச் சொல்லி விடட்டுமா? ஐயையோ வேண்டா. வாயிழந்து அவமானப்பட வேண்டும்! நான் ஜனகத்தின் கணவ னென்பதற்கு என்ன அடையாளம்?

"எதன் மூல்யமாகவும் உனது புருஷனை உன்னால் கண்டு பிடிக்க முடிய வில்லையா?" என்றேன் நான்.

"முடியவில்லை. எனது கணவனின் பெயரைக்கூட என்னால் அறிய முடியவில்லை. வெளிப்படையாகத் தெரியக்கூடிய தெல்லாம் என்ன? நான் கிட்டத்தட்ட ஒரு கைம் பெண்போல இருக்கிறேன்.

எனது மனோவெழுச்சிகளை யெல்லாம் அடக்கத் தெய்வத்தின் சந்நிதியில் பலியிட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்க வேண்டும்!'' ஹா! காதல்— அன்பு இவைகளை யெல்லாங்கூடக் கிள்ளி யெறிந்துவிட வேண்டும்! ஹா! எனது இரகசிய கல்யாணம் நடக்கும் வரையில் எனது மனத்தில் யார்மீதும் அன்பு விழுந்து வளர்ந்த தில்லை! ஐயோ! அதன்பிறகு ஓர் உத்தமர்மீது அன்பு தளிர்விட்டு வளர்ந்து வருகிறது! என்ன செய்வேன்? வைத்தியரே, ஐயோ! அராபி தேசத்துப் பாலைவனத்தில் விடப்பட்ட ஏழை ஸ்திரீயைப்போலக் கஷ்டப்படுகின்றேன், கவலையடைகின்றேன், வெம்புகின்றேன், வேகின்றேன்!'' என்று ஜனகம் தனது உள்ளத் துணர்ச்சியை வெளியிடத் தொடங்கினாள்.

என் கண்கள் கண்ணீரை வெளியே உமிழ்ந்து விடுவதாகப் பயமுறுத்தின. வெகு சிரமப்பட்டுக் கண்ணீரை வெளியே கக்க விடாமல் காப்பாற்றினேன்.

"உனது கல்யாண இரகசியத்தை அறிந் திருப்பவர் இன்னும் யாரேனு முண்டா?'' என்றேன், நான்.

"சுவர்ணம்பாள் தான்''

"வேறொருவரு மில்லையா?''

"எனக்குத் தெரிந்த வரையில் வேறொருவரு மில்லை!''

"தாம்பரம் ராவ்பகதூர் ராமச்சந்திரம் பிள்ளையின் குமாரன் மதனசுந்தரத்தை நீ விவாகம் செய்துகொள்ள விரும்ப வில்லையா?''

"அக்காளும் அத்தானும் ஏற்பாடு செய்தார்கள். ஆனால், நான் மறுத்து விட்டேன். மனப்பூர்வமாக நான் விரும்புகின்ற ஒருவரைக் கூட நான் மணம் செய்து கொள்ள இசைய வில்லை. ஏனெனில், அக்கினி சாட்சியாக அடியேனைத் தொட்டு மாங்கல்யதாரணம் செய்த ஒருவருக்கு, நான் துரோகம் செய்யப் படுகின்றேன்!'' என்று சொல்லிக் கண்ணீரை மளமள வென்று கொட்டினாள் ஜனகம்.

"ஜனகம்! உன்னை அக்கினி சாட்சியாகத் தொட்டு மாங்கல்யதாரணம் செய்த ஒருவன் கிழவனா யிருக்கிறான், அல்லது அங்கவீனன், ரோகி, காட்டு மிராண்டி, படிக்கத் தெரியாத முட்டாளா யிருக்கிறான், அவனை உனது புருஷனாக ஏற்றுக் கொள்ள விரும்புகிறாயா?''

"ஆ! டாக்டர்!! நான் கடவுளை மனதார நம்புகின்றேன். காரல்மார்க்ஸ், ஏஞ்சல்ஸ் முதலிய ரஷ்யப் போது உடமைக்காரர்கள்

எழுதிய நாஸ்திக வாத புஸ்தகங்களை யெல்லாம் படித்துங்கூட அந்த எல்லாம் வல்ல முழுமுதலை நம்புகிறேன். கடவுள் ஒருவர்தான்—நாம் தான் கடவுள் என்ற வேதாந்தக் கருத்துப்படியல்ல, சைவ சித்தாந்தப் படியே திருமூர்த்திகளும் உண்டென்று நான் மனதார நம்புகிறேன். ஆங்கில நாகரிகத்தை யொட்டி எனது வாழ்க்கை அமைந் திருந்த போதிலும், நான் பழைய தமிழர் ஆசார ஸ்திரீ தர்மத்தில் கொஞ்சங் கூடப் பிசகாமல் நடந்து வருகிறேன். ஆதலின், எனது கணவன் தொண்டு கிழவனாயினும் சரி, அல்லது குஷ்டரோகியாக இருந்தாலும் சரி, அசல் பைத்தியமாக விருந்தாலும் சரி, அவரே எனது தெய்வம்" என்று மனக் கசிவுடனும், உண்மைப் பரவசத்துடனும் உரைத்தாள் ஜனகம்.

"இவ்வளவும் உண்மைதானா?" என்று பேராச்சரியத்துடன் வினவினேன் நான்.

"கடவுள் சாட்சியாகவே!" என்றாள் ஜனகம்.

"என்னால் நம்ப முடியவில்லை!"

"முடியாவிட்டால் அக்கரையில்லை. பிறர் எனது கொள் கைகளை நம்ப வேண்டுமென்று நான் நடந்து கொள்ளவோ வற்புறுத் தவோ பிரியப்படவில்லை. எனது மனச் சாட்சி என் நடத்தைகளையும் கொள்கைகளையும் நம்பினால் போதுமானது" என்றாள் ஜனகம்.

"மதனசுந்தரத்துடன் நீ நெருங்கிப் பழக வில்லையா?" என்று நான் கேட்டேன்.

"ஆங்கிலேயரின் நாகரிகத்தை யொட்டி நடப்பவள் என்று நான் முன்னமேயே சொல்லி யிருக்கிறேன். ஒரு பெண் மகள் பிற ஆடவ ருடன் சகஜமாகப் பழங்குவது பாதகம் என்றோ? துர் நடத்தை யானது அல்லது துர் நடத்தை ஏற்படுத்து மென்றோ, சந்தேகிப்பது தமிழ் நாட்டாரின் கெட்ட வழக்கமாக இருக்கிறது. நான் ஒரு ஸ்திரீ ஜாதி யென்ற முறையில் எங்கள் மனப்பான்மையைச் சொல் கிறேன்; தாங்கள் கொஞ்சம் கவனமாகக் கேளுங்கள். ஸ்திரீகள், தம் கணவர்மார் தம்மிடம் எப்படி நடந்து வருகிறார்களோ, அதை விடப் பதின்மடங்கு அதிகமாக நடந்து கொள்வார்கள். இதன் அர்த் தத்தைத் தீர்க்க உணர்ந்து கொள்ள வேண்டுவது தங்கள் கடமை. அன்றி, மாதர் ஜாதியினர் தாமாக நல்லொழுக்கத்தைப் பின் பற்றாமல் பிறருடைய கட்டுப்பாட்டுக்கோ காவலுக்கோ சிறிதும் கீழ்ப்படிந்து

பின்பற்றவே மாட்டார்கள். பெண்களின் மூடுமந்திரங்களை ரஷ்ய தேசத்து ஒற்றர்களா யிருந்தால்கூடக் கண்டுபிடிக்க முடியா தென்பது திண்ணம்!" என்றாள் ஜனகம்.

"மதனசுந்தரம் அல்லது ராமச்சந்திரம் பிள்ளை உங்களுக்குச் சொந்தமா?" என்றேன் நான்.

"ஆம். எங்கள் தந்தையுடன் ஞானரத்னத்தம்மாள் உடன் பிறந்த சகோதரி" என்றாள் ஜனகம்.

"அப்படியானால் ஞானரத்னம் உங்களுக்குச் சொந்த அத்தை யல்லவா?"

"ஆம். ஞானரத்னத்தத்தையின் பிடிவாதந்தான் நான் மதன சுந்தரத்தைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டு மென்பது."

"ஓகோ! அவர்களுடைய எண்ணத்தைக் கடைசி வரையில், நிராகரிக்க உத்தேசமா?"

"ஆம்."

"முன்னொரு நாள், சுவர்ணம் உனது சகோதரியல்ல, சிநேகி யென்றாயே, ஞாபக மிருக்கிறதா?"

"அப்படித்தான் நினைத்தேன். பிறகு அறிந்த விவரத்தி லிருந்து நாங்க ளிருவரும் ஒரே தாய்வயிற்றுப் பிள்ளைக ளென்பது தெரிய வந்தது!"

"நிஜமாகவா?"

"நிஸ்ஸந்தேகமாக" என்றாள் ஜனகம்.

"அதிருக்கட்டும், உனது இரகசிய கல்யாணத்துக்குப் பிறகு உனது கையில் மோதிரம் கீதிரம் ஒன்றும் கிடக்கப் பார்க்க வில்லையா?" என்றேன் நான்.

"இல்லை. எனது சொந்த மோதிரங்களைத் தவிர வேறு மோதி ரங்களே இல்லை!"

"உனது புருஷனை உனக்கு நிச்சயமாகத் தெரியாவிட்டால், அவன் இன்னா னென்று நான் சொல்லத் தயாரா யிருக்கிறேன்" என் றேன் நான்.

"உ-ங்-க-ளுக்கு அவரைத் தெரியுமா—? அவர் பெய ரென்ன?" என்று ஆச்சரியத்துடனும் ஆவலுடனும் வினவினாள் ஜனகம்.

"அவன் பெயர்—" என்று இழுத்துக்கொண் டிருக்கும் பொழுது யாரோ நடந்துவரும் பூட்ஸ்காலடிச் சப்தம் கேட்டது. நாங்கள் பேரச்சத்துடன் பேச்சை நிறுத்திவிட்டு, ஸ்தம்பித்துக் கற்சிலை போல உட்கார்ந் திருந்தோம். பின்னும் இரண்டு விநாடியில் சுமார் உயர முடைய ஒரு பேர்வழி எங்கள் அறைக்குள் நுழைந்தான். நாங்கள் இருவரும் நடுநடுங்கி இருக்கையை விட்டெழுந்தோம். அவனது கொடூரமான முகத்தையும் கண்களையும், பார்த்தேன்! பயம் பிடரியைப் பிடித்துத் தள்ளிற்று! அவன் கனைத்துக் கொண்டு என்னுடைய உத்தர வில்லாமலேயே ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தான்.

25. ஜாலப்பேச்சு

அந்தக் கொடூர நோக்கமுடைய நூதன பேர்வழி யார்? என்பதை இரண்டு விநாடியி லறிந்துகொண்ட பின்னரே எனது திகிலும் ஆச்சரியமும் பல மடங்கு அதிகரித்தன. யாரென்று சொல்லி விடட்டுமா? அவன்தான் இந்திரலிங்கம்! கடந்த ஏப்ரல் மாதம் பதினைந்தேதிக்குப் பிறகு அச்சண்டாள பிண்டத்தை நான் பார்க்கவே இல்லை. பேர்வழி முன்னைவிடக் கொஞ்சம் கொழுத்துப் போய் உருட்டித் திரட்டி விட்டாற் போலிருந்தான். கையில் கொண்டு வந்த தோற் பெட்டியை மேஜைமீது வைத்ததைக்கூட முதலில் நான் கவனிக்க முடியவில்லை.

அந்தப் பிணப் பிண்டத்தை ஜனககுமாரி தெரிந்துகொண் டிருக்கிறாள். இந்திரலிங்கத்தின் புதல்விதான் ஜனககுமாரி என்று அன்று தாம்பரம் காப்பி ஹோட்டல் ஐயர் சொன்னார். அது இப்பொழுது நன்கு நினைவுக்கு வருகிறது. ஜனகமும் இந்திரலிங்கமும் உருவச் சாயலில் ஒவ்வுவதாக எனக்குத் தோன்றியது! மனப் பிராந்தியோ, உண்மையோ தெரியவில்லை. நாற்காலியில் உட்கார்ந்தவுடன் விசிறி மடியுடன் கழுத்தில் சுற்றியிருந்த பெங்களூர் குண்டஞ்சியை எடுத்து நாற்காலியின் முதுகில் மாட்டினான். கோட்டைக் கழற்றிக்கொண்டே, "என்னப்பா, ஜனகம் சௌக்கியந்தானே? உன்னை நான் பார்த்து ஒரு வருஷ மிருக்குமே!" என்று ரொம்ப வாத்ஸல்யத்துடன் பேசுவதுபோலப் பாவனை செய்தான்.

ஜனகத்தால் ஒன்றும் பேச முடியவில்லை.

பேர்வழி யென்னைத் தெரிந்து கொண்டதாக எள்ளளவு கூடக் காட்டிக் கொள்ளவில்லை. அவனுடைய விசேஷ நடிப்புத் திறமையைக் கண்டவுடன், தமிழ்நாட்டு நாடக மேடையின் நினைவுகளும், நடிகர், நடிகைகளின் நினைவுகளுங்கூட அந்த நெருக்கடியான காலத்திலும் என் மனத்தில் தோன்ற ஆரம்பித்தன. என்ன ஆச்சரியம்! எவ்வளவு கைதேர்ந்த நடிகன் இந்திரலிங்கம்!

"சுவர்ணாம்பாள் எங்கே! தெய்வநாயகம் பிள்ளை எங்கே?" என்றான் இந்திரலிங்கம்.

"விழுப்புரம் போயிருக்கிறார்கள்!"

"முத்துவிநாயகம் பிள்ளை வீட்டுக்கா? முத்துவிநாயகம் பிள்ளைக்கும் தெய்வநாயகம் பிள்ளைக்கும் தான் சிலகாலமாக மனஸ்தாபம் கொந்தளித்துக்கொண்டிருந்ததே!"

"அதெல்லாம் இல்லை, இப்பொழுது இணைராசி!"

"ஓகோ முத்துவிநாயகம் பிள்ளையைப் பற்றி உங்கள் பந்துக்கள் எல்லோருமே அதிருப்தி படுகின்றார்கள். ஒரு பிரபல படிப்பாளி அவ்வளவு 'அப்ஸர்ட்' ஆக நடப்பாரென்று நான் நினைக்கவில்லை!"

அவர்கள் பேரைச் சொல்லிப் பேசிக் கொள்ளும்போது எனக்கொரு ஞாபகம் வந்தது. ஆம், முத்துவிநாயகம்பிள்ளை எனக்குக் கூட உறவினர்தாம். சுமார் பத்து வருஷமாகக் கேள்வியே தவிர, அந்தப் புண்ணியரை நேரில் பார்த்ததில்லை. படிப்பு நல்ல படிப்பென்று சொல்கிறார்கள். கணிதத்தில் மகா நிபுணராம். பொருளாதார (Economic) சாஸ்திரம் படிப்பதற்காகச் சமீபத்தில் அமெரிக்காவுக்குப் போவதாகக் கேள்வி.

"ஏன் ஜனகம், முத்துவிநாயகம் பிள்ளையின் மனைவி பிரும தேவியம்மாள் இறந்தா போய்விட்டாள்?" என்றான் இந்திரலிங்கம்.

"ஆம்; பாவம் உயிருள்ள வரையில் அந்தக் கற்றறிந்த பிசாசுவினிடம் வேதனைப்பட்டு போய்ச் சேர்ந்து விட்டாள். உலகம் இத்தகைய ஜனங்களுக்கு மட்டும் நித்திய வஸ்துவாக இருக்கிறது!" என்றாள் ஜனகம்.

நான் மௌனமாகவே உட்கார்ந்திருந்தேன். இந்திரலிங்கம் என்னைப் பார்த்துவிட்டுத் தலையைக் கீழே போட்டுக் கொண்டான்.

"இந்திரலிங்கம் பிள்ளை, இதோ இந்த ஸிவில் ஸர்ஜனை உங்களுக்குத் தெரியுமா? சென்னையில் பிரபல டாக்டர் விஜேஸ்வரம் பிள்ளை! தெரிகிறதா?" என்றாள் ஜனகம். ஜனகம் என்னுடைய பேரைச் சொல்லிவிட்டாளே! புருஷன் பேரை மனைவி சொல்லலாமா?

ஜனகத்தின் கேள்வியில் இந்திரலிங்கம் வெருண்டான்.

"இல்லை; கிடையாது. நாங்களிருவரும் பரிச்சயப்படும் பாக்கியத்தைப் பெறுமற் போனோம்!" என்று நைஸாக ஒரு கயிறு

25

திரித்தாள். முன்னமேயே அவன் ஜனககுமாரியைச் சந்தித்து ஒரு வருஷம் ஆயிற்றென்று பொய்யுரை கூறியதை நேயர்கள் அறிவார்கள்.

இந்திரலிங்கத்தின் நடிப்புப் பேச்சைப்பற்றி வெகுவாக ஆச்சரியப்பட்டு இடிசுவரைப்போல் உட்கார்ந்திருந்தேன். ஜனகம் எங்களிருவரையும் மாறி மாறிப் பார்த்தாள். ஒரு சிறிதும் அவன் என்னைச் சந்தித்தவனாகக் காட்டிக்கொள்ளவில்லை. நான் அவனுடைய நடவடிக்கைகளைக் குறித்தே சிந்தனா சாகரத்தில் அமிழ்ந்திருக்கிறேன் என்பதை அந்தக் கைகாரப் பேர்வழி கண்டுகொள்ளாமல் விடுவானா? எனது யோசனையைக் கலைக்க ஆரம்பித்தான்.

"தாங்கள் சென்னையில் எங்கே இருக்கிறீர்கள்?" என்று பேசத் தொடங்கினான்.

"மயிலாப்பூரில்—" என்று நான் இழுத்தேன்.

"நான் அந்நிய தேசங்களில் கொஞ்சநாள் சுற்றிவிட்டுத் திரும்பவும் தாய்நாடு திரும்பினேன். இந்திய நாட்டைப்போல் வேறு நாடு கிடையாது" என்று மேற்படி இந்திரலிங்கம் மளமளவென்று இங்கிலீஷ் வார்த்தைகளைக் கொட்டித் தள்ளினான். அந்நிய தேசங்களுக்குப் போய் வந்ததை அவன் ஆங்கிலத்தில் சொல்ல வேண்டிய காரணமென்ன? ஜனககுமாரிக்கு ஆங்கிலந் தெரியாதென்று மனப்பால் குடித்து, தனது பொய்புரை அவளுக்காவது தெரியாமலிருக்கட்டுமென்று ஆங்கிலத்தில் பேசினானா?

"எவ்வளவு நாளாக தாம் அந்நிய நாட்டில் பிரயாணஞ் செய்தீர்?" என்றேன் நான்.

"சென்ற 1929-ஆம் வருஷம் மார்சு மாதம் 18-ஆந் தேதி இந்தியாவை விட்டுப் புறப்பட்டேன். கெய்ரோ, லண்டன், பிரான்ஸ், வியன்னா முதலிய அநேக இடங்களில் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு இப்பொழுதுதான் வந்தேன்!" என்று ஓர் அண்டைப்புளுகைப் புளுகித் தள்ளினான். பாபம் புளுகத் தெரியாமல் புளுகுகிறான். இந்த வார்த்தையைக் கேட்டவுடன் என்னைப் போல் ஜனகம் ஆச்சரியப்படவில்லை. பின்னை ஏன் அவன் ஆங்கிலத்தில் பேச்செடுத்தான். அதுவும் மர்மமாகத்தா னிருக்கிறது.

"கிட்டத்தட்ட ஒன்றரை வருஷமாகப் போகிறதே. இந்த ஒன்றரை வருஷத்துக்குள் தாம் இந்தியாவுக்கு வரவே இல்லையா?" என்று ஆச்சரியத்துடன் வினவினேன் நான்.

"வரவே இல்லை. இன்றோடு நான் சென்னையை விட்டுப் போய் ஒரு வருஷம் மூன்று மாதம் பதினைந்து நாட்களாகின்றன.'! என்று கயிறு திரித்தான்.

புள்ளி விவரத்துடன் நாள் கணக்குச் சொல்லவும் ஜனகம் ஆச்சரியத்துடன் இந்திரலிங்கத்தை நோக்கினாள். இந்திரலிங்கமும் ஜனகத்தை ஒரு மாதிரியாகப் பார்த்துவிட்டுத் தலையைக் கவிழ்த்துக் கொண்டான்.

"அக்காளுக்குத் தாம் இங்கு விஜயம் செய்யப்போகும் விஷயம் தெரியாதே!" என்றாள் ஜனகம்!

"எதற்காகத் தெரிய வேண்டும்! நான்தான் ஒரு சகட யோகக்காரனாயிற்றே, ஓரிடத்தில் இருப்பதும் போவதும் கணக்கா?" என்றான் இந்திரலிங்கம்.

"ஆம்; தாம் ஒரு திரிலோக சஞ்சாரியைப் போன்றே அலைந்து வருவதாக அக்காள் சில சமயம் சொல்லி இருக்கிறது!" என்று விநயமாகப் பதிலளித்தாள் ஜனகம்.

அவன் கண்ணும் விழியும்! அப்பா தலை நடுங்குகிறது! சுழல் காற்றி லகப்பட்டக் காற்றாடியைப்போல அவனுடைய கருப்பு விழிகள் கறகறவென்று எப்படிச் சுற்றுகின்றன! அந்தச் சுற்றிலே எவ்வளவு நயவஞ்சகம், சூது, குறும்பு, திருட்டுத்தனம்! முகத்திலே மூதேவி பிரசன்னமாயிருந்து நோக்குபவர்களைப் பயமுறுத்தினாள். சூழ்ச்சி—சதியாலோசனைகளோடு கலந்த வீர வுணர்ச்சியை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அதை வீரம் என்றால்கூட ரஜபுத்திரர்களும் சீக்கியரும் சண்டைக்கு வந்து விடுவார்கள். நெஞ்சழுத்தம் நெஞ்சுத் துணிவு என்று குறிப்பிடுவதுதான் தகுதி. அபகாரச் சிந்தனையின் மூலம்—மோசடியான எண்ணத்தின் மூலம் உண்டாகும் வீர வுணர்ச்சிக்கும், சத்தியத்திற்காகவும், சன்மார்க்கத்திற்காகவும், ஜீவ காருண்யத்திற்காகவும், தேச நலத்திற்காகவும் உயிரைத் துரும்பாக நினைக்கும் வீர உணர்ச்சிக்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசம்

அல்லவா? குற்சையும் குரோத பாவமும் நிறைந்த நரப் பிறவியை உண்மையாகவே பார்ப்பதற்கு நடுக்கமாயிருந்தது.

மணி பத்தடித்தது இவ்வளவு நேரமாகியும் அவன் ஏன் பேச்சை வளர்த்திக்கொண்டு உட்கார்ந்திருக்கிறான்.

"ஓ! மணி பதினொன்றாய் விட்டதே! சரி, ஜனகம் நான் திருவனந்தபுரம் எக்ஸ்பிரசில் விழுப்புரம் போய்விட்டுக் காலையில் வருகிறேன்!" என்று சொல்லிக்கொண்டு எழுந்தான் இந்திரலிங்கம். மகாராஜனைப் போய்விட்டு வரட்டும்! புண்ணியவான் இருக்கிறவரையில் மனம் நிம்மதியாக இராது. இந்தக் கொள்ளை நோயிற் போவான், இங்கு என்ன சூழ்ச்சியுடன் வந்தான்? எதற்காக உடனே போகிறான்? எல்லாம் அந்தத் திருச்சிற்றம்பலனுக்குத்தான் அற்புதம். இந்திரலிங்கம் வெளியே சென்றவுடன் தெருக் கதவை நன்றாகத் தாளிட்டுக்கொண்டு எனது அறைக்குத் திரும்பினேன். ஜனகம் அப்பொழுதும் தனது படுக்கையறைக்குத் திரும்பவில்லை!

26. பரஸ்பர நிலைமை

ஜனககுமாரி பதிவிரதா சிரோமணி என்பது ஐயமறத் தெரிந்து விட்டது. தன் கணவன் குஷ்டரோகியாயிருந்தால்கூட அவன் தெய்வந்தான் என்று வற்புறுத்திப் பேசினுள். எவ்வளவு மனே திடம்! ஆ! ஆ! நான் அவளது கணவனுக அமையாதிருந்து அவள் மீது காதல் கொண்டிருந்தால் என் கதி என்னவாகும் என்பதை நினைத்தபோது எனக்கு எப்படியிருந்தது தெரியுமா? நல்லவேளை விதிக்குத் தப்பினேன். எனது அறைக்குள் நுழைந்ததும் நுழையாததுமாக இருக்கும்போதே, "டாக்டர்! என் கணவன் பேரைச் சொல்வதாகச் சொன்னீர்களல்லவா? சொல்லுவீர்களா?" என்று ஆர்வங் கலந்த பரிதாபத்துடன் நயமாகக் கேட்டாள், ஜனகம்.

நான் அக் கேள்வியைக் காதில் வாங்காமல், "ஜனகம் இங்கே வந்த ஆசாமியை நான் எங்கோ இதற்கு முன் சந்தித்திருக்கிற ஞாபக மிருக்கிறது!" என்றேன்.

"இல்லை, சமீபத்தில் அவரைப் பார்த்திருக்க முடியாது!" என்றுள் ஜனகம்.

"இவருடைய சாவகாசம் பொருத்தமானதா?" என்று ஒரு கேள்வியைப்போட்டேன்.

"இவருடைய சாவகாசம் பொருத்தமானதா?" இதென்ன— கேள்வி? ஒரு முழ தூரத்தில்கூட இவர் வரக்கூடாதுதான்!" என்றுள் அவள்.

"ஏன்?"

"அதற்கு அனேக காரணங்க ளிருக்கின்றன. நான் அந்த அழுகுப் பிறவியை விரும்புவதேயில்லை. ஏன், பார்ப்பதற்குக்கூட அஞ்சுகிறேன்!"

"இந்த மனிதன் அயல்நாடு சென்றிருந்ததாகச் சொல்கிருர். ஆனுல், நான் அவரைச் சென்னையில் சந்தித்து நீண்ட சம்பாஷணை செய்திருக்கிறேன்" என்றேன் நான்.

"இல்லை; அவர் தம்மை கொஞ்சங்கூட அறிந்திருப்பவராகத் தோற்றவில்லை!" என்றுள் ஜனகம்.

"கிடையவே கிடையாது! என்னை அவ்வளவு சீக்கிரம் மறந்துவிட முடியாது. நூறு வருஷமானுலும் மறக்க முடியாதென்பது நிச்

சயம். ஆனால், என்னை இவ்விடத்தில் சந்தித்தது சற்றும் தன் மனதுக்குப் பிடிக்கவில்லை!'' என்றுரைத்தேன் நான்.

"அது கிடக்கிறது தள்ளுங்கள், என் கணவன் பேரைச் சொல்ல மாட்டீர்களா டாக்டர்?'' என்று கெஞ்சினாள் ஜனகம். அந்தச் சொல்லில் எவ்வளவு பிரேமை? எவ்வளவு பேரன்பு? எவ்வளவு காதல்! ஆச்சரியம்! பெண்களினுடைய பரிசுத்தமான அன்பைப் பெறுவதற்கும் கொடுத்து வைக்க வேண்டும்.

"என்ன? ஒன்றும் சொல்ல மாட்டேனென்கிறீர்கள்? சொல்லப் பயப்படுகிறீர்களா?'' என்று மறுபடியும் அந்த ஆர்வ வுணர்ச்சி குலையாமல் கேட்டாள், ஜனகம்.

"இல்லை, அதெல்லாமில்லை'' என்று நான் பதில் சொன்ன போதிலும் பயம் உச்சியைப் பிடித்துக் குலுக்கிக்கொண் டிருந்ததென்பதில் ஐயமில்லை. ஏன் தெரியுமா? ஜனககுமாரியின் திருமணத்தைப் பற்றிச் திறப்பாகப் பேசப்புகும் தருணம் அந்த இந்திரலிங்கம் எதிர்பாராத விதமாகப் பிரவேசித்தானல்லவா? அதை நினைக்க நடுக்கங் கொடுத்தது. நான் பேசும் ஒவ்வொன்றையும் அவன் அறிந்து வருவதாக நினைத்துப் பயப்படுகின்றேன். ரகஸியமான ரேடியோவின் மூலயமாக நாங்கள் பேசியவற்றை அறிந்து வந்தானா? பின்னை அநாவசியமாக இங்கு எதற்காக வந்தான்? இன்றைய இரவு என்ன நிகழப்போகிறதோ தெரியவில்லை!

"பயமில்லாவிட்டால் சொல்வதற்கென்ன?'' என்றாள், ஜனகம்.

"ஜனகம், உன் கணவனுக்கும் உனக்கும் தெரியாமல் நிகழ்ந்த விவாகம் உள்ளபடியே அபூர்வமானதுதான்'' என்றேன் நான்.

"ஐயோ அதுதானே தொல்லையாயிருக்கிறது! என்னைப் பல அலைகைகள் ஓயாமல் சூழ்ந்து முற்றுகை யிட்டுக்கொண்டு என் உயிரைக் கவர எத்தனிக்கின்றன! அந்த ரகஸிய ஜில்லிப்புக்கை யென்றென்றும் நம்மிருவரையும் தின்பதற்குக் காத்துக்கொண்டிருக்கிறது!'' என்று சொல்லும்பொழுது அச்சம் அவளது புஜத்தை முகவாய்க் கட்டைக்கு நேரே கொண்டுவந்து நெருக்கிற்று.

"இப்பொழுது சற்று முன் வந்த மனிதனால், உனது மனம் குழம்பி விட்டதா இல்லையா?'' என்றேன் நான்.

அதற்கு ஆகம்பிதமாக இடவலந்தலை யாட்டினாளே யன்றிப் பதிலளிக்க அவள் பிரக்ஞை பெறவில்லை.

“நீ அவருடன் பேசும் பாவத்தைக்கொண்டே அவர் உன் மனதுக்குப் பிடிக்காத பேர்வழி யென்பதைக் குறிப்பாகத் தெரிந்துகொண்டேன்!” என்றேன் நான்.

“அப்படி சந்தேகிக்கக் காரணம்?”

“அகத்தின் அழகு முகத்திலே தெரியாதா? அவனது முகமே காட்டிக் கொடுத்துவிட்டது. உன்மீது அவன் நல்ல அபிப்பிராயம் கொண்டிருக்கவில்லை. அவன் உனது எதிரி!” என்று அழுத்தமாக உரைத்தேன்.

“உண்மைதான்! ஆனால் அவன் இவன் என்று மரியாதைக் குறைவாகப் பேசவேண்டாம். எதிரிதான்! கொடிய சத்ரு!” என்று அச்சத்துடன் தலையைத் திருப்பிப்பார்த்துக்கொண்டு கூறினாள்.

“ஏன்?”

“ஏனென்றால், எனது ரகசிய திருமணத்தைப்பற்றியும், எனது உண்மைக் கணவனைப்பற்றியும் அறிந்து மறைத்து வைத்திருக்கும் அயோக்கிய ராஸ்கல் இவனே!” என்று அச்சமும், கோபமும், நடுக்கமும் கலந்த பார்வையுடனும் தொனியுடனும் உரைத்தாள் ஜனகம்.

இச்சமயம் மாளிகைக்கு நேரே மோட்டார்கார் ஒன்று ‘ரேஸ்’ செய்யப்பட்டு நிறுத்தப்படும் ஓசை பலமாகக் கேட்டது. இருவரும் ஓடிப்போய் கைப்பிடிச் சுவர்மீது சாய்ந்துகொண்டு கீழே கவனித்தோம். மோட்டாரைவிட்டு சுவர்ணமும் தெய்வநாயகம் பிள்ளையும் இறங்குவது நிலவு வெளிச்சத்தில் நன்றாகத் தெரிந்தது. ஜனகம் என்னிடம் பேசிக்கொண்டிருந்ததை சுவர்ணம் அறியாதிருக்க வேண்டுமென்று கருதிப் பயந்ததாக அவள் முகக்குறி தோன்றியது.

“டாக்டர்! அவர்கள் மாடிக்கு வருவதற்குள் சயனக் கிரகத்திற்குப் போய்ப் போர்த்திக்கொண்டு சீக்கிரம் படுத்துவிடுங்கள்!” என்று அச்சத்துடனும் நடுக்கத்துடனும் குசுகுசுவென்று கூறிவிட்டுத் தன் சயனக்கிரகத்துக்கு ஓடிவிட்டாள். அவள் சொற்படி நானும் எனது படுக்கையிற் படுத்து நித்திரை செய்பவனைப் போல் பாசாங்கு செய்தேன். சூழ்ச்சியும், சூதும், அந்தரங்கமும், பிரமையும், மனப்பிராந்தியும் அனந்தமாகக் கொண்டு நிறைந்துள்ள பல எண்ணங்களுடன் போர் புரிந்துகொண்டே துயிலில் ஆழ்ந்தேன்.

27. பழைய புலியும் புதிய கிலியும்

சுமார் எட்டுமணிவரையில் அயர்ந்த உறக்கத்திலிருந்து பிறகு கண் விழித்தேன். சூரியன் கீழ்வானத்தில் ரொம்ப தூரம் உயர்ந்து வந்துவிட்டான். தோட்டத்துக்குச்சென்று காலைக்கடன்களைத் தீர்த்துக்கொண்டு ஹாலுக்குள் வந்தேன். தெய்வநாயகம்பிள்ளை வழக்கம் போல் புன்னகை பூத்தவராக, நெற்றிநிறைய விபூதி யணிந்து கொண்டு பரமானந்த உள்ளத்தினராக அமர்ந்திருந்தார்! என்ன ஆச்சரியம்! நாயகனுடைய ஹிருதயம் ஜோதி சொரூபம். நாயகியினுடைய ஹிருதயம் இருட்டுக் களஞ்சியம்!

“தம்பீ டாக்டர் வாருங்கள், இப்படி உட்காருங்கள்” என்று உபசரித்து ஒரு பிரம்பு நாற்காலியை இழுத்துப்போட்டார். இவர் கூட என்னைப்போல் மெய்நம்புகிற ஆசாமி போலிருக்கிறது என்று எண்ணிக் கொண்டேன். ஏனெனில். பந்துமித்ர பாவத்துடன் என்னிடம் பேசி மனமகிழ்ந்து வருகின்றார். சுவர்ணாம்பாளின் வார்த்தை எவ்வளவு தூரம் நிஜம் பொய் யென்பது பின்னாலல்லவா தெரியப்போகின்றது!

அன்று அப்படி இப்படி யென்று பகற்பொழுது தொலைந்தது. மாலை ஐந்து மணியிருக்கலாம். உத்யான வனத்தைச் சுற்றிச் சற்று உலவினாலாவது இந்த மூளைக்குள் கிடக்கிற கலக்கக் குழப்பப் புழுக்கள் நிண்டாமல் கிடைக்காதா வென்று கருதி அங்கு போனேன். என்ன ஆச்சரியம்! எனக்கு முன்னாலேயே மலைப் பாம்புபோல அந்த சனீஸ்வரன் ஒரு இரும்பு நாற்காலியிற் சாய்ந்து கொண்டு தொடை மொத்தம் ஒரு ஜாவா சுருட்டை வாயில் வைத்துப் ‘பப்பப்’ பென்று புகைத்துக்கொண்டிருந்தான். இந்தப் பாவிக்கு உடம்பெல்லாம் விஷம்! ஆத்தீ! அவனுடைய பயங்கரமான முகத்தை எப்படித்தான் பார்ப்பது! ஐயோ அவன் என்னைப் பார்த்து விட்டான், இனிமேல் நழுவ ஆரம்பித்தால் ஐயப்படுவதாக நன்கு தீர்மானித்து விடுவான்.

“என்ன மிஸ்டர் எப்பொழுது வந்தீர்?” என்று தைரியத்தைக் கூடுமான வரையில் வரவழைத்துக்கொண்டு அவனை நோக்கி வினவினேன். அவன் அலட்சியமாகத் திரும்பிப் பார்த்தான். “ராஸ்கல்!

எவ்வளவு உக்ரமாகப் பார்க்கிறான்!" குறள் வளை...என்று என் மனம் வேலைசெய்தது.

"மிஸ்டர் இந்திரலிங்கம், நாம் இருவரும் இதற்குள் சந்திக்கவில்லையென்று இப்பொழுதுகூட மறுக்கிறீரா?" என்று கண்களில் ரத்தம் தெறிக்கக் கேட்டேன் நான்.

ஜீவசக்தியுடன் கேட்கப்பட்ட மேற்படி கேள்வி இந்திரலிங்கத்தின் மனத்தைக் கொஞ்சம் ஆட்டிவிட்டதென்பது உண்மை.

"இதற்குமுன் சந்தித்திருக்கிறோமா? ஆம், நேற்றுச் சந்தித்தோம்" என்றான அந்த சூரன்.

"நேற்றல்ல அய்யா, நேற்றைக்கும் சில மாதததுக்கு முன்-?"

"இல்லையே தங்களை நான் பார்த்ததே இல்லை!"

"தமக்கு ஞாபக மறதியும் சமயத்துக் குதவி செய்யுமோ? நன்றாக நினைத்துப் பாருமையா!"

"இல்லை! நான் பார்த்ததே இல்லை!" என்று ஒரே அடியாக மறுத்தான் இந்திரலிங்கம்.

"ஏப்ரல் மாதம் 16ஆம் தேதி புதன்கிழமை! ஞாபகப் படுத்தும்!"

"ஏப்ரல்—? பதினாறு—? இல்லை, இல்லை, அந்தத் தேதியே நினைவில்லை!"

"மேற்படித் தேதியில் நீர் சென்னையிலிருந்தீர்!"

"இல்லை. மேற்படித் தேதியில் நான் காசியிலிருந்தேன்."

"ஏதொரு காரணமுமின்றி மறுப்பதில் பயனில்லை. இன்னும் ஒருபடி மேலே செல்வோம். அதே ஏப்ரல் பதினாறாந் தேதி நீர் உமது நண்பர் சுபேதார் மகேந்திரனைச் சந்திக்கவில்லையா?"

"அன்பார்ந்த வைத்தியரே, தம் மூளையை யாருக்காவது இரவல் கிரவல் கொடுத்திருக்கிறீரா?" என்றான் இந்திரலிங்கம்.

"தர்க்க விரோதமாக அல்லது குறுகிய மனப்பான்மையுடன் தப்புசெய்து பேசவேண்டாம்! உண்மையை மறுப்பது முட்டாள் தனம்!"

"வைத்தியரே, நான் எந்த உண்மையையும் மறுக்கவில்லை! சம்பந்தமில்லாத ஒரு விஷயத்தைத்தான் நான் மறுக்கிறேன்!"

"உண்மையை எதிர்த்து நிற்க அஞ்சுவது யாருக்கும் சகஜம் தான்!" என்றேன் நான்.

"நான் எந்த உண்மையை எதிர்த்து நிற்கிறேன்?"

"எனக்கு எதிராகச் செய்த சூழ்ச்சியின் விளைவுக்காக நீர் பயப்படுகிறீர்!"

இந்திரலிங்கம் பதிலிறுக்காமல் சுருட்டுப் புகையை வெளியே ஊதிக்கொண்டிருந்தான்.

"பிரபுவே, இங்கே கவனியும். நான் வினவும் அந்தரங்கத்தைப் பற்றித் தாம் யாதும் அறியாதவர் போலப் பேசுவது மனிதத் தன்மைக்கு அழகன்று!"

"ராஜேஸ்வரரே நான் உம்முடன் சிநேகத் தன்மையோடு பழகவே நினைக்கிறேன். என்னைச் சாமான்யமாக நினைத்துப் பலவாறு தூஷிக்க வேண்டாம். நான் ஒரு **ஜமீன்தார்!** உலகத்தில் சிறந்த பெரியோர்களின் சிநேகம் எனக்குண்டு!" என்றான் இந்திரலிங்கம்.

"நீர் சுத்த ஆகாயப் புரட்சிக்காரர். உம்மை 'கிரிமினல்' கைதியைப் போல் நடத்தப் போகிறேன்" என்றேன் நான்.

"ராஜேஸ்வரரே உமது வசை மாலையை அன்போடு ஏற்றுக் கொண்டேன். ஆனால், எதற்காக இப்படியெல்லாம் என்னை வைது உதாசீனம் செய்கிறீர் என்பதுதான் விளங்கவில்லை!" என்றான் இந்திரலிங்கம்.

"வசை மாலையல்ல. நீர் எனது பரஸ்பர வைரி—உமது அத்யந்த தோழனாகிய சுபேதார்—மகேந்திரனுடன் யோசித்து, ஒரு உறுதியான வலையைக் கந்தப்ப முதலி வீதியில் கட்டி வைத்து விட்டு, என்னை வைத்தியம் பார்ப்பதற்கென்று நயவஞ்சகமாக அழைத்தாய்! கூடியவரையில் வலை முன் யோசனையுடன் அமைக்கப்பட்டிருக்கவே நான் இலக்குத் தப்பாகச் சிக்கிக்கொண்டேன்."

"ஜமீன்தாரரே, உமது தந்திரமெல்லாம் எனக்குத் தெரியாதென்று மனப்பால் குடிக்கவேண்டாம். நீர் செய்த மோசக் கல்யா

ணப்படி ஜனககுமாரி எனது சொந்த மனைவி என்பதை ஐயம் திரிபு இல்லாமல் நன்குணர்ந்திருக்கிறேன் !''

''ஜனககுமாரி உமது மனைவியாயிருந்தால் இருக்கட்டுமே. **அதற்கும் எனக்கும் என்ன ஒப்புரவு?''** எனவும் அதட்டினன்.

''ஜனககுமாரி எனது மனைவி யென்பதற்கும் உனக்கும் சம்பந்தம் இல்லையா ?—எப்படித் துணிந்து சொன்னுய் ? எங்கள் கல்யாணம் உனது சதி சக்தியாலேயே நிகழ்ந்திருக்கிறது. அதை மோசக்கருத்துடன் செய்வித்த நீ கிரிமினல் குற்றம் செய்தவனல்லவா ? உன்னைச் சிறைக்கு அனுப்ப முடியு மென்று நீ ஐயுறவில்லையா ?''

''ஓ ! மரியாதைக் குறைச்சலாய்ப் பேசவேண்டாம். சதிக் கூட்டத்தைச் சேர்ந்த ஒருவனுய் என்னைச் சந்தேகிப்பதற்கு என்ன காரணம் ? நீர் என்னைத் தவறுதலாக நினைத்துப் பேசுகிறீர் ! வைத்யராயிருந்துங் கூட உம் மூளையைக் கலங்கச் செய்துகொண்டது ஆச்சரியம் !''

''இரும் வருகிறேன். மோசம், மோசம் சூது சூது என்கிறீரே, அவைகள் எதன் மூலம் உற்பத்தியாகின்றன என்பதைக் கொஞ்சம் யோசித்துப் பார்த்தீரா ?''

''இல்லை !''

''மண், பெண் பொன் என்ற மூவித ஆசைகளினுலேயே சதியாலோசனை, சூழ்ச்சி கொலை முதலிய **பாதகங்கள்** நிகழுகின்றன!''

''வாய் வேதாந்தத்திற்கு என்ன குறைச்சல்''

''வைத்தியரே, நீரே ஒரு பேர்போன மோசடிக்காரர் என்பதைத்தான் சொல்ல வருகிறேன் ! கேளும், '**ஒரு வீசம் காசுக்கும் ஆசைப்பட்டு வேஷந்தரித்து மோசம் செய்யாதவனே தன்யன்.**' இப்படிச் சொல்லியிருக்கிறதே இதை நன்ருக ஆழ்ந்து கவனித்தீரா ?

''ஆ ! எவ்வளவு உயர்வான வேதாந்தம் ? கொலை செய்து மரண அத்தாட்சிப்பத்திரம் கொடுக்கும்படி தூண்டிய பழியாளன் ஒருவன் வாயில் எப்படித்தான் அந்தப் புனிதமான வாக்கியங்கள் நுழையத் துணிந்தனவோ தெரியவில்லை !'' என்று நான் புலம்பினேன்.

"நீர் சொல்வதும் பேசுவதும் அபத்தம்!" என்றான் இந்திர லிங்கம்.

"அதை நான் ருஜுப்படுத்துவேன்!" என்றேன் நான்.

"நீ ஏது செய்யவேண்டுமானாலும் செய்துகொள்! அதற்கு நீ உரிமை பெற்றிருக்கிறாய்!" என்று அவமரியாதையாகப் பேசினான், இந்திரலிங்கம்.

"ஆனால், நாம் இதற்குமுன் சந்தித்திருக்கிறோம் என்பதை நீ ஒப்புக்கொள்கிறாய் அல்லவா?"

"நான் ஏதோன்றையும் ஒப்புக்கொள்ளவேண்டுமென்கிற அக்கரையில்லை!"

"ஆம், நீ சொல்வது சரிதான்; கந்தப்ப முதலித்தெரு 42-ஆம் நம்பர் வீட்டில் இருந்த உனது வேலைக்காரி, சுபேதார் மகேந்திரன், திருக்கழுக்குன்றம் கோயில் குருக்கள், மேளக்காரர், புரோகிதர் முதலிய சாட்சியங்களைக் கொண்டு உன்னை இன்னொனென்று ருஜுப் படுத்துகிற வரையில் நீ எதற்கும் அக்கரைப்பட மாட்டாய்! அல்லவா?" என்று கோபமும் ஆத்திரமும் பொங்கியெழ உரைத்தேன்.

"ஏ! நீ ஒரு பெரிய கட்டுக்கதைக்காரன் போலத்தெரிகிறதே!" என்று எரிந்து விழுந்தான் இந்திரலிங்கம்.

"ஓய் ஜாக்கிரதையாகப் பேசும்! நீ என்னைக் கொல்ல வழி பார்த்தாய்! இன்று வஞ்சம் என் பக்க மிருக்கிறது. நான் தீர்த்துக் கொள்வேன்" என்று நான் சிலுப்பினேன்.

"எப்படி"

"நாம் வைரிகள். அதுவே போதுமானது. மந்திராலோசனைகளையும் மாயச் செயல்களையும் விட்டுப்போகாமல் பூரணமாக அறிந்துவிட்டேன். எனக்கும் ஜனகத்துக்கும் விவாகம் செய்வித்தது மாத்திரமின்றி எங்கள் ஆவியைச் சூறையாட நீயும் சுபேதாரும் உத்தேசித்தீர்கள். அதன் காரணம் எதுவாயிருந்தாலும் நீங்கள் இருவரும் தண்டிக்கப்படாமல் இருக்கப்போவதில்லை!" என்று கோபத்துடன் உரத்துப் பேசினேன். இந்திரலிங்கத்தின் முகம் செக்கச் செவேரென்று சிவந்தது. தலைமயிர் சிலும்பிற்று.

சந்திரன் உச்சிக்குச் சற்றுக் கீழ்ப்பால் சாய்ந்து துல்லியமான தண்மொளியைப் பரப்பினான். நெருப்பில்கூடச் சீதள நெருப்பு! என்ன அழகான பிறை மதி! இவ்வளவு குளிர்ச்சியான சந்திர பகவானுக்குப் பதினைந்து நாளைக் கொருதரம் க்ஷயரோகம் அணுக வேண்டு மென்று யார் சபித்தார்களோ தெரியவில்லை. சிலு சிலு வென்று வீசிய காற்று இனிய நறுமணத்துடன் கலந்து எங்கள் மீது உராய்ந்து கலங்கியிருந்த எங்கள் மூளையை நிஷ்களங்கப் படுத்தியது. இந்திரலிங்கம் நிதானத்துடன் பேசத்தொடங்கினான்.

"வைத்ய ராஜேஸ்வரரே, உம்மைப்பற்றி எனது சொந்த அபிப்பிராயம், அல்லது பிரத்யேக விமர்சனம் என்ன என்று சொல்லட்டுமா? நீர் ஒரு இம்மி—ஒரு மயிரளவுகூட வேற்றுக் கலப்பில்லாத அசல் பைத்தியம்" என்றான்.

"ஓய் இந்திரலிங்கம், நீ என்னை எப்படியானாலும் சபி. அதைப் பற்றி அக்கரையில்லை. உண்மையை மாத்திரம் ஒப்புக்கொள்; ஜனகத்தை நான் மணந்தபின் எனது டாக்டர் பதவியைவிட்டு வெகுதூரம் துரத்தப்பட்டு அவளுக்காகவே எல்லாவிதத் துன்பத்தையும் துயரத்தையும் ஏற்றுக்கொண்டு வருகிறேன்."

"நீதான் அவளுடைய புருஷன் என்பது அவளுக்குத் தெரியுமா?"

நான் இதற்கு எவ்வித உத்தரமும் கொடுக்கவில்லை. ஜனககுமாரி எவ்வளவு தூரம் தனது கல்யாண இரகசியத்தைப்பற்றியறிந்திருக்கிறாள் என்பதை யறிய அவன் விழைகிறான் என்பதை செவ்வனே உணர்ந்து கொண்டேன்.

"ஜனகம் எனது பற்றுள்ள மனைவி. அவளுக்காக நான் எவ்வளவும் செய்வேன். அவ்வளவுதான் நான் உனக்குச் சொல்ல முடியும்" என்றேன் நான்.

"தங்கம் போலச் செய். அதற்கு நீ சுதந்தரம் பெற்றிருக்கின்றாய்" என்றான் அவன்.

"நான் திண்டிவனத்தில் இதே ஜயலட்சுமி விலாசத்தில் இருப்பேனென்று நீ அறிந்திருக்கும் பக்ஷத்தில் இங்கு வந்திருக்கக்கூட மாட்டாய். ஏனெனில், என்னிடம் அவ்வளவு அச்சம்!" என்று தைரியமாகக் கூறினேன் நான்.

"யுத்த சங்கு ஊதுகிறாய்! ஊது ஊது. நான் எவ்வளவுதான் அயோக்கியனாயிருந்தாலும் கடவுளை நம்புகிறேன். அவன் நிச்சயம் என்னைக் காப்பான்" என்றான் இந்திரலிங்கம்.

"யுத்த பேரிகை அடிக்கிறேனென்பது முற்றும் உண்மை. அந்தப் போர்முழக்கம் உனக்கு மாத்திரமல்ல, உன்னைச் சேர்ந்த இன்னும் சிலருக்கும்—"

"இன்னும் யார்—?"

"உனக்கு அத்யந்தம் நெருங்கிய சிநேகம்—?"

"லீலாஜீவை!"

"லீ—லா—ஜீ வை—யா?"

லீலாஜீவை யென்ற சொல் எப்படியிருந்ததோ பாவம்! லீலாஜீவை யென்றால் இந்திரலிங்கமல்ல, சுபேதாரல்ல, என்னையே ஒரு குலுக்குக் குலுக்கி மலைக்கச் செய்கிறதென்றால்—வேறென்ன வேண்டும்? இந்திரலிங்கத்தின் கண்கள் சுழன்றன. விரலின் நகம் புகள் விரைத்தன பற்கள் கிட்டின. இப்பேர்ப்பட்ட தந்திரக் காரனாகிய இந்திரலிங்கமே லீலாஜீவை யென்றால் இப்படி ஆடுகின்றானே, நாமெல்லாம் எந்த மூலை? இவ்வளவு மகா பெரிய ஆற்றலும் சக்தியும் இகலும் திறலும் பெருமையும் வாய்ந்த அந்தப் பெண் எந்த நேரத்தில் பிறந்தாளோ தெரியவில்லை!

"இங்கே பாரும் பிரபுவே, தாம் சொன்னபடி நான் மனக் கலக்கமுடைய முட்டாள்தான். ஆனால், கடந்த சிலமாதங்களாக நான் சோம்பேரியாகப் போஜனம்செய்து விட்டு சுகமாகத் தூங்க வில்லை! லீலாஜீவையைப் பழிதீர்க்க வேண்டுவது என் கடமையுங் கூட!" என்றேன் நான்.

"லீலா ஜீவையைப் பழி தீர்ப்பதா!" என்று முற்றும் தன்னை மறந்த பெரும் பீதியுடன் ஆங்கிலத்தில் ஆரம்பித்து மனம்நடுங்கி வெருண்டு விலவிலத்துக் திடீரென்று வார்த்தையை நிறுத்திவிட்டான் இந்திரலிங்கம். உணர்ச்சிகள் உச்ச நிலையை அடையும் பொழுது ஆங்கில வார்த்தைகள் புலபுல வென்று இந்திரலிங்கத்தின் வாயிலிருந்து உதிருவதிலிருந்து அவன் மேனாட்டில் மிகவும் சுற்றியிருக்கிறானென்பது தெரியவருகிறது.

“ பழியும் வஞ்சமும் லீலாஜீவையை ஒன்றும் செய்யா! ஆனால், ஜனகம் கொலை வாங்கப்படுவது என்றென்றும் உறுதி!” என்றான் இந்திரலிங்கம்.

“யாரால் அவள் கொல்லப்படுவாள்? யாரால்—உன்னாலும் மகேந்திரனாலுந்தான் ஒரு சமயம் ஜனகம் கொல்லப்படுவாள் என்று நினைக்கிறேன்! நீங்கள் இருவருந்தான் ஜனகத்தை லீலா ஜீவையிடம் காட்டிக் கொடுத்தீர்கள்” என்றேன் நான்.

இந்திரலிங்கம் மௌனம் சாதித்தான்.

“இந்திரலிங்கம், தாம்பரத்தில் நிகழ்ந்த கொலை விவரம் உனக்கு நினைவிருக்கின்றதா?” என்று தைரியத்துடன் உசாவினேன் நான்.

இக் கேள்வி அவன் காதில் விழுந்த மாத்திரத்தில் அவனை ஒரு முழம் மேலே தூக்கிப் போட்டது.

“ தாம்பரம் கொலை—? அதற்கும் எனக்கும் என்ன? அதெல்லாம் எனக்கு ஒன்றுமே தெரியாது!” என்று மழுப்பினான் இந்திரலிங்கம்.

“ நீ அறியாமல் கொலை எப்படி நடக்கும்?

“ டாக்டரே, மூளையைக் குழப்ப வேண்டாம்! என்னையும் அக் கொலையுடன் சம்பந்தப் படுத்த வேண்டாம்!”

“ அப்படித்தான் என் எண்ணம்! ராவ் பகதூர் ராமச்சந்திரம் பிள்ளை உன் முயற்சியில்லாமல் கொல்லப்பட்டிருக்க முடியாது! லஞ்சம் வாங்கிக்கொண்டு ஜனகத்தைக் கொலை செய்ய மறுத்தவுடனே என்னையே வேலை தீர்க்க நீங்கள் முயன்றீர்களல்லவா? சமுத்திரத்தில் தள்ளினீர்கள். விஷ சிகரட்டைக் கொடுத்தீர்கள்! அவைகளெல்லாம் எனக்குத் தெரியாதா?” என்று சொல்லி அவன் முகத்தைப் பார்த்தேன். அவன் தோற்றம் என்னைப் பயமுறுத்தியது. அடாத பெருஞ் சினம் அவன் முகத்திலே பிரதிபலித்தது. ஐயோ! அவன் கொண்டிருந்த வீரபத்ர அவதாரத்தை அருணாசல புராணத்தால்கூட வர்ணிக்க முடியாது.

“ அடே யோக்யத்திலகமே! என்னடா சொன்னாய்? ஜாக்கிரதையாகப் பேசு! இப்படிப்பேசுவதால் என்ன செய்யலாமென்று நினைத்திருக்கிறாய்? பனங்காட்டு நரியா சலசலப்புக்கு அஞ்சப்

போகிறது? ஓர் அணுகூட உன்னால் அசைக்க முடியாது! ஜாக்கிரதை!" என்று ஆசனத்தை விட்டெழுந்து சீறினன். ஆ! என்னது அவயங்கள் அப்படி நடுங்கின. சந்திரன்கூட இந்திரலிங்கத்தினிடம் இப்படிப் பயப்படுவானா? இந்த அசல் கோடைகாலத்தில் இந்த மழை மேகம் எங்கிருந்து முளைத்தது?

"பிரபு! கோபப்படாதீர்கள், என் வார்த்தையில் நீர் கோபப்படுவதைப் போல லீலா ஜீவையிடம் கோபப்படவோ, ஏதொன்றும் செய்யவோ வலிமை பெற்றிருக்கிறீரா, சற்று யோசித்துப் பாரும்!" என்று ஒரு சுரம் கீழிறங்கினேன்.

"யாருக்குமே நான் பயப்பட வேண்டுவதில்லை. லீலாஜீவை உனக்காவது ஜனகத்துக்காவது சிநேகமாக இருக்கட்டும். வேண்டிய உதவிகள் செய்யட்டும். ஆனால், ஜனககுமாரியுடன் உன்னுடைய ஹிருதயத்தையும் பழுது பார்த்து இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்க லீலாஜீவைக் காத்திருக்கிறாள் என்பதை நீங்கள் இருவருமே ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்!" என்று கர்ஜனை செய்தான் இந்திரலிங்கம்.

இதைக் கேட்டவுடன் எனக்கு உடம்பில் சூடிருக்கும் என்று நம்புகின்றீர்கள். கறுப்புத் துணியில் தோன்றிய லீலாஜீவை அக் கண்களில் தோன்றிய உடைவாளை எடுத்துச் சுற்றி அதம் செய்தாள்.

"பிரபுவே, நீர் சொன்னது உண்மை! ஜனகம் எனது அன்புள்ள மனைவி. அவளைக் காக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். லீலாஜீவையும் சரி, நீரும் சரி, ஒரு நாள் என்னால் கோர்ட்டுக்கு இழுக்கப்பட்டுக் கிளிக்கூண்டில் நிறுத்தப்படுவீர்களென்பது ஞாபகமிருக்கட்டும்!" என்றேன் நான்.

இந்திரலிங்கம் பெட்டியைத் திறந்து மறுபடியும் ஒரு சுருட்டை யெடுத்து பற்றவைத்துக்கொண்டு என்னைக் கூர்ந்து நோக்கினன். சுழல் துப்பாக்கியினால் திடீரென்று என்னைத் தீர்த்துக் கட்ட அவனுக்குச் சக்தியுண்டு.

"பகற்கனவு காணும், பகற் கனவு!" என்று அலட்சியமாக உரைத்தான் இந்திரலிங்கம்.

"நிச்சயம் முடியும்! செய்து காட்டுகிறேன்!" என்று மொழிந்தேன் நான்.

" வாலிபனே நான் உனக்கொன்று சொல்கிறேன். நீ இது வரையில் என்னை அவதூறாகப் பேசியதற்கெல்லாம் மன்னித்தேன். இனி வாலை ஆட்டுவாயானல், வால் அறுந்து விழும் என்பது நினைவிருக்கட்டும்! மற்றொரு உபதேசமும் கேள், ஜனகம் உனது மனைவியாவதற்கு முன் லீலாஜீவை சுவர்க்கம் போய்ச் சேரவேண்டும்! தெரிகிறதா?" என்றான் அந்த முரட்டுப் பேய்.

"ஜமீன்தாரரே, என்னை மன்னித்துக்கொண்டதைப்போலவே, என் கல்யாண இரகசியத்தை ஒருகோடி காட்ட மாட்டீரா?" என்று நான் கெஞ்சினேன்.

"போக்கிரிப்பயலே படிந்தாயா! சற்று நேரத்துக்குள் எவ்வளவு பேச்சைக் கொட்டினாய். நீ ஒரு திடதீரப் புருஷனென்றல்லவா நினைத்தேன். அசல் கோழை! வயிரமில்லாத பொதி! சீ! நீ ஒரு மனிதனா? என்னுடைய பயமுறுத்தலைக் கண்டு இடி சப்தம் கேட்ட நாகப்பாம்புபோல் துடிக்கிறாய்! நீயா அந்த யௌவன வனிதாரத்தினம் ஜனகத்தின் புருஷன்! விடியா மூஞ்சி! இதுவும் ஜனகத்தின் தலை விதிதான்! இனி என் முகத்தில் விழிக்காதே சொன்னேன்" என்று யுத்தரங்கத்தில் இரத்த மழை பெய்ததைப்போல வீரமொழிகளைக் கொண்டு வசை பாணம் தொடுத்துவிட்டுச் சரேலென்று எழுந்து மாளிகைக்குப் போய்விட்டான்.

இவ்வளவையும் பரிசாகப் பெற்ற எனக்கு எப்படியிருக்கும்! "பூமி சுற்றுகிறதா நான் சுற்றுகிறேனா? அல்லது ஆகாய மண்டலந்தான் சுற்றுகின்றதா?"

28. இசையின் இன்பம்

அன்றிரவு மணி மூன்றிருக்கும் ஓர் அரிய இனிய ஓசை என் காதுகளில் வந்து விழுந்து எனது மனக் கலக்கத்தை அகற்றத் துவங்கியது. மலயமாருதம் என்ற ராகம் ஒரு கீர்த்தனத்தில் கலந்து வெகு சுவாரஸ்யமாக வெளிவந்து கொண்டிருந்தது. 'மனஸா எடுலோர்த்தனு' என்ற தியாகய்யர் கீர்த்தனம். ஜனகம் இசைபாடினதை நான் இதுவரையில் கேட்டதில்லை. ஆனால், சுபேதார் மகேந்திரன் முன்பொருதரம் ஜனகத்திற்குச் சங்கீதத்தில் பிரமாதமான ஞான முண்டென்று விளம்பியிருக்கிறான். 'இந் நேரத்தில் அவளைத் தவிர இங்கு இசைபாட வேறு யார்? பார்க்கலாமே' என்று போர்வையை உதறி யெறிந்துவிட்டு ஜனகத்தின் அறை நோக்கி நடந்தேன்.

ஒரு பிரம்பு நாற்காலியில் அமர்ந்தவளாய் ஒரு புத்தகத்தைப் பார்த்துப் பாடிக்கொண்டிருந்தாள் ஜனகம். என்ன ஆச்சரியம்! சுருதியுமில்லை; கிருதியுமில்லை. இயற்கைப் பாட்டு! ஜனகத்திற்கு தெலுங்கு மொழியில் விசேஷப் பற்றும் புலமையு முண்டு. ஐயர்வாளின் ஆழ்ந்த கருத்துள்ள பாடல்களையும் சங்கீதத்துடன் அவைகள் இயைந்து கிடக்கும் தன்மையையும் அவள் அளவு கடந்து ரசிப்பவள் என்று அன்றுதான் எனக்குத் தெரிந்தது.

சிந்து நதியின் மிசை நிலவினிலே
சேர நன் னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்துத்
தோணிக ளோட்டி விளையாடி வருவோம்

என்று கவிச் சக்ரவர்த்தி பாரதியார் இசைக்கலைக்கு தெலுங்கு விசேஷ மொழி என்று இயம்பியிருத்தலை ஜனகம் எடுத்துக் காட்டிய சந்தர்ப்பங்கள் இச்சமயம் எனது நினைவிற்கு வருகின்றன. ஜனகத்திற்கு ஸ்ரீ கண்ணபிரானிடத்து மிதமிஞ்சிய பக்தியு முண்டு. நான் உட் புறம் செல்லும்பொழுது ஜனகம் சரணம் பாட ஆரம்பித்தாள். என்னைக் கண்டதும் புன்னகை பூத்து, "வாருங்கள், நீங்கள் வருவீர்களென்று எனக்குத் தெரியும். நீங்கள் வரவேண்டுமென்றுதான் நானும் இசைபாட ஆரம்பித்தேன்" என்று அதி வாத்ஸல்யத்துடன் முகமன் கூறி இருக்

கையை விட்டெழுந்து கீழே விரித்திருந்த ரத்ன ஜமுக்காளத்தில் அமர்ந்தாள். நாற்காலியிலிருந்து கீழேயிறங்கி உட்காருவது இது தான் முதல் முறை. இவ்வளவு மரியாதை உணர்ச்சி காட்டியதை இதற்கு முன்னால் நான் பார்த்ததில்லை. இதிலிருந்து அவள் மனதில் ஏதோ விசேஷமிருக்க வேண்டுமென்று கருதினேன்.

"ஜனகம் ஏன் கீழே உட்காருகிறாய்? இருந்த இடத்திலேயே இருந்தால் என்ன?" என்று என்னை யறியாமலேயே என் வாயிலிருந்து கேள்விகள் பிறந்தன.

"இல்லை சாதுக்களின் அருள் பாடல்களைக்கொண்டு ஸ்ரீ பகவானைப் புகழுங்காலத்தில் மமதாகங்கார ஆசனங்களிலிருத்தல் கூடாதல்லவா?" என்று பதிலிறுத்தாள் ஜனகம்.

இந்த நேரம் வரையில் மமதாகங்கார ஆசனமாக இல்லாது அந்த நாற்காலி இப்பொழுது மட்டும் எப்படி அவ்வாறு ஆயிற்றோ தெரியவில்லை. நவ நாகரிகத்தை யொட்டி வாழும் இவளுக்கு எப்படி இவ்வளவு பிரமார்தமான பக்தி மேலிட்டதோ ஈசனுக்குத்தான் அற்புதம்!

"ஜனகம் அப்படியாயின் பகவானுடைய நாமத்தை கேட்பவனும் அப்படிப்பட்ட ஆசனத்திலிருக்கத் தகுமா?" என்று சொல்லி நானும் இரத்தின ஜமுக்காளத்திலமர்ந்து கொண்டேன். என்னவோ, யோகங்கள் விஷம் பொருந்தி யிருப்பதாக நண்பர் சொன்ன ஜாமத்தில் எனக்கு மட்டும் அமிழ்தந்தான் பொருந்தியிருந்தது. ஜனகம் என்னையே இமை கொட்டாது நீண்டு நோக்கினாள்.

"ஏன் கீர்த்தனத்தைப் பூர்த்தி செய்வதுதானே?" என்றேன் நான்.

ஜனகம் சுமார் அரைமணி நேரம் வரையில் மேற்படி தியாகய்யர் கீர்த்தனத்தைப் பாடிப் பரவசப் படுத்தினாள். தெலுங்கில் எனக்குப் பயிற்சியின்மையால் பொருளின்பத்தை அனுபவியாது இசை யின்பம் மட்டிலும் அனுபவிக்கலானேன்.

"ஜனகம், தமிழில் ஒரு பாட்டு பாடக் கூடாதா?" என்று கேட்டேன்.

"எனக்கு தெரிந்தவரையில் தமிழில் இசை நால்வர்களைத் தவிர பிறர் வெளிப்படையாகச் செய்ய வில்லை என்று தோன்றுகிறது!" என்றாள்.

"திருப்புகழ் தமிழிசையல்லவா?"

"ஆம்; பழங்காலத்து இசைகளிற் பண்வகைகள் மிகவும் சிறப்பாக இருந்திருக்கவேண்டும். பண்-காந்தாரம் பண்-பழம்பஞ்சுரம், பண்-கொல்லிக் கௌவாணம் என்று பல வகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இக்காலத்தில் யார் இவைகளை வளர்த்தனர்?" என்றாள் ஜனகம்.

"அது போகட்டும்; நால்வர் பாடல்களில் ஏதேனும் ஒன்று நடக்கட்டுமே!" என்றேன்.

"தங்களிஷ்டம் என் பாக்கியம்" என்று பாடுவதற் கிசைந்தாள் ஜனககுமாரி.

இங்ஙனம் வந்திடர்ப் பிறவிப் பிறந்தயர் வேனையராமே
அங்ஙனம் வந்தெனையாண்ட வருமருந் தென்னாரமுதை
வெங்கனன்மா மேனியனை மான்மருவுங் கையானை
யெங்ஙன நான் பிரிந்திருக்கே னென்னாரூ ரிறைவனையே

என்ற திருவாரூர் பண்-பழம் பஞ்சுரத்தை இனிமையாகப் பாடி முடித்தாள். ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளின் அருள் மொழிகளைப் பாடக் கேட்பவர் எப்படி மெய்சிலிர்த்தின்புறா திருக்கமுடியும்?

ஜனகத்தின் கண்களில் பக்தி நீர் பாவி முகத்தில் வழிந்தது. எனக்கும் கண்களில் நீர் துளித்தது. காலை நேரமல்லவா ஜிலு ஜிலு வென்று குளிர்ந்த மேற் காற்று வீசிக்கொண்டிருந்தது. இத்துடன் காதுகளைப் பரவசப்படுத்தும் அரிய இன்னிசையும் அன்பின் உணர்ச்சியும் ஒன்று சேர்ந்து என் ஹிருதயத்தை இன்பமயமாக்கின. அவள் ஏன் இப்படி இமை கொட்டாது விழுங்கிவிடுபவள் போலப் பார்த்துக் கொண்டிருக்கிறாள்?

---

29. இருதயத்தோடு இருதயம்

அவள் முகம் சூரிய மூர்த்தி கீழ்க்கடலில் குளித் தெழுந்த அருணம் விரிந்து மலர்ந்து தேனைச் சொட்ட விடும் செந்தாமரை மலர்போலும் மனோகரமாய் விளங்கிற்று. புன்னகை புரியும் போதெல்லாம் கண் கூசுவதுபோல மனத்திலே ஒரு பிரமை யுண்டாயிற்று. முத்தன்ன பல் வரிசையின் ஒளிபோலும் என் கண்களைக் கூச் செறிந்தது!

"ஜனகம், இன்று என்னவோ என் மனம் குதூகலமாயிருக்கிறது. இவ்வளவு மகிழ்ச்சி நிறைந்த நாளை என் வாழ் நாளிலும் கண்டதில்லை!" என்று தொடங்கினேன்.

"திருவருளின் பொன்னடியைப் புகழ்வதால் துக்கம் நிவர்த்தியாகி சுக முண்டாகும், செல்வ முண்டாகும், புக ழுண்டாகும், அழகுண்டாகு மல்லவா? இவ்வளவையும் அருள்வதற்கு அவன் ஒருவன்தானே அதிகாரி!"

"அப்பா, எவ்வளவு பக்தியடா? சூதும் சூழ்ச்சியும் நிறைந்திருக்கிற நெஞ்சில் எப்படி இவ்வளவு பக்தி யுண்டாயிற்றோ!"

"நத்தையில் முத்து எப்படியோ அப்படி!"

"ஓஹோ!" என்று அவளுடைய புத்தி சாமர்த்தியத்தை வியந்தவளாய் மௌன முற்றேன். சின்னேரமான பின்பு,

"அது போகட்டும், அந்தச் சண்டாளன் இருக்கிறானா போய் விட்டானா?" என்றேன்.

"ஜமீன்தார்தானே, தெரியாதா தங்களுக்கு? நேற்றிரவு அத்தான், அக்கா, ஜமீன்தார் மூன்று பேரும் ரெயிலில் பிரயாணம் போயிருக்கிறார்கள்!"

"சுவர்ணம்பாளும் தெய்வநாயகம் பிள்ளையுங்கூட இல்லையா? பரம சாதுவான தெய்வநாயகம் பிள்ளையை ஏன் அவன் அழைத்துப் போயிருக்கிறான்?"

"தெரியாது! காஞ்சி பகவானுக்கு லக்ஷார்ச்சனை செய்ய வேண்டுமென்று பேசிக் கொண்டார்கள்!"

"அட கஷ்டகாலமே அவர்களுக்குக் கூடவா தெய்வமிருக்கிறது. எல்லாம் போலிவேஷம். ஜனங்களை ஏய்ப்பதற்கே

அல்லது தற்பெருமைக்கோதான் அவர்கள் தெய்வ சிந்தனை கொண்டிருக்கவேண்டும்!"

"அதை விடுங்கள் தொலையட்டும். இரவு சாப்பிட எழுப்பிய தற்குக் கதவையும் திறக்கவில்லை. பதிலும் பேச வில்லையே ஏன்?"

"என்ன? என்னை எழுப்பினாயா?"

"ஆம்"

"ஜனகம் உன்னிடம் எவ்வளவு அன்பு கொண்டிருக்கிறே னென்பது கடவுளுக்குத்தான் தெரியும். அத்தகைய நீ வந்த சமயம் நான் பிரக்ஞை இல்லாமல் உறங்கிவிட்டதற்கு வருந்துகிறேன்."

"தாங்கள் என்மீது அன்பு கொண்டிருப்பது உண்மைதானா?"

"நான் உன்மீது அன்பு கொண்டிருக்கவில்லை என்று நீ நினைத் திருப்பது உண்மைதானா?"

ஜனகம் வெட்கித் தலை குனிந்தாள்.

"இந்திரலிங்கம் எவ்வளவு காலமாய் தெய்வநாயகம் பிள்ளைக் குச் சிநேகம்?" என்றேன்.

"சுமார் இரண்டு வருஷ மிருக்கலாம்!"

"இந்திரலிங்கத்தினுடைய நண்பர் மகேந்திரம் பிள்ளை என்ப வரை உனக்குத் தெரியு மல்லவா?"

ஜனகத்தின் முகம் சூரியனில் மறைந்த சந்திரன் போல இருண்டது.

"மகேந்திரம் பிள்ளையா? எனக்குத் தெரியவே தெரியாது!" என்று மருண்டு விழித்தாள்.

ஜனகத்திற்கு அச்சம் விளைக்கும் கேள்வியைக் கேட்டதற்கு நானே என்னை இகழ்ந்து கொண்டேன்.

"பிரபு, தாங்கள் என்னை வஞ்சித்து விட்டீர்கள்" என்று ஜனகம் மீண்டும் பேச்சை யெடுத்தாள். டாக்டர் என்று அழைத்து வந்தவள் பிரபு பிரபு என்று பிரமாதப் படுத்துகிறாளே, காரண மென்ன? இன்னும் கொஞ்சம் பொறுப்போம்.

"ஜனககுமாரி, பிரபு பிரபு என்று வெகு மரியாதையாக அழைப்பதின் தாத்பரியம் விளங்கவில்லை. நான் எப்படி உன்னை வஞ்சித்திருக்க முடியும்?"

"அக்கினி சாட்சியாக எனக்கு மாங்கல்யதாரணம் செய்த எனது பர்த்தா யார் ?———"

"அதைப் பற்றிப் பேசுவதிற் பயனென்ன ?"

"பயனென்னவா ? ஆ! **தாங்களே எனது அருமந்த பர்த்தா! உண்மைக் கணவர்!"** என்று பிரேமையுடன் நீண்டு நோக்கினாள் ஜனகம். அந்த அமிழ்தம் போன்ற மொழிகளைக் கேட்டதும் எனக்கு மெய் சிலிர்த்து வாய் பேச முடியாமற் போயிற்று. அழகின் திலகமாகிய ஜனகத்தின் வாயிலிருந்தே உண்மை வெளி வந்ததை நினைக்க என் உள்ளம் பூரிப்படைந்தது.

"இதை எப்படி நிரூபிக்க முடியும்? இந்த மர்மம் உனக்கு எப்படித் தெரியும் ?" என்று வினவினேன்.

"இந்திரலிங்கம் பிள்ளையும் தாங்களும் பேசிக் கொண்டிருந்ததை ஒற்றுக் கேட்டு உண்மை யறிந்தேன். குற்றமாயின் மன்னித்துக் கொள்ளவேண்டும்!"

"எல்லாம் நன்மைக்கே என்னும் பழமொழி பலித மாயிற்று. உனது அபிப்பிராயத்திற்கு மாறாக நான் உனக்குக் கணவனாக வாய்க்கப் பெற்றிருந்தால்— — —"

"பிராணபதி, ஸ்ரீ சிவபெருமான் எனது இஷ்டத்தைப் பூர்த்தி செய்தருளினார். மணம் செய்யப்பட்ட காரணத்தினாலேயே நான் தங்கள் மீது வளர்ந்துவந்த பேரன்பைக் கத்தரிக்க முயன்று வந்தேன். எனது அதிர்ஷ்ட வசமாகத் தாங்களே எனது உண்மைக் கணவராக வாய்த்த விஷயத்தில் நான் கிட்டாத பதவியைக் கிடைக்கப் பெற்ற பாக்கியசாலியல்லவா ?"

"ஜனகம் நீ மனமொழி மெய்கள் சுத்தியாய் என்னை விரும்பியதற்குப்பின் நான் புண்யம் செய்தவனென்பதில் ஐயமில்லை. இவ்வளவு எளிதாக நான் எனது பாரியாக உன்னை அடைவேனென்று எதிர்பார்க்கவில்லை. எல்லாம் திருவருளின் செயல்!"

"தங்களை வாழ்க்கைத் துணைவராய் அடைந்ததில் நான் எவ்வளவு பரவசப்பட்டிருக்கிறேன் என்பது இறைவனுக்கே தெரியும் தங்கசாலை வீதியிலுள்ள மாளிகைக்குத் தாங்கள் முதன்முதல் வந்தபோது தங்களைச் சந்தித்தேன். அன்று முதல் இன்றுவரை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் அன்பு வளர்ந்து

வந்திருக்கிறது. அதனை அகற்றுவதற்கு என்னால் செய்யப்பட்ட முயற்சிகள் வீணாயின. எனது உண்மைக் காதலுக்குப் பாத்திர மான தாங்களே எனது பதியென்று அறிந்தபின்பு, இறைவன் திருவடிகளைப் புகழ வேண்டுமென்றே இன்று காலை தோத்திரங்க ளைப் பாடலாயினேன்" என்றாள் எனது காதலி.

ஜனகம் தனது தினசரிக் குறிப்புப் புத்தகத்தில் வரைந் திருந்த விஷயங்கள் எனது நினைவுக்கு வந்தன.

"ஆ! ஜனகம், பெரிய நூல் போலவும், மந்திரிபோலவும் நீ எனக்குக் கிடைத்தாய்!— — —" என்று பாக்கியை எப்படி முடிப்பதென்றறியாமல் திகைத்து அவளது மிருதுவான செங்காத் தைப் பற்றி ஒரு முத்த மிட்டேன். சிறிது நேரம் மெய் மறந்து ஆனந்த வாரிதியில் திளைத்திருந்தோம்.

---

30. ஜனகம் உரைத்த உண்மை

"சூதியும் சூழ்ச்சியும் நிறைந்த இருளுலகத்திலே எனது வாழ்க்கை வக்கரிக்கத் தொடங்கியது" என்று ஜனகம் எனது வற்புறுத்தலின் பேரில் தன் கதையைக் கொஞ்சம் விவரிக்க ஆரம்பித்தாள்.

"1930-ம் வருஷம் ஏப்ரல்மாதம் 16-ந் தேதி புதன்கிழமை சர்வ முகூர்த்த நாள். எனது அத்தானுக்கு நெருங்கிய நண்பராகிய வேணுகோபாலய்யர் குமாரத்தி விசாலாட்சிக்கு அன்று உதய முகூர்த்தம். அந்தத் திருமணத்திற்கு நானும் எனது தமக்கையும் போயிருந்தோம்."

"திருமணம் எந்த வீதியில் நடந்தது?" என்றேன் நான்.

"புரசவாக்கம் வெள்ளாழத் தெரு 180-ம் நம்பர் வீட்டில் கல்யாணம். சுபேதார் மகேந்திரம் பிள்ளையும் அங்கு வந்திருந்தார்—" என்று ஜனகம் இழுத்தாள்.

"சுபேதார் மகேந்திரனைத் தெரியாதென்று முன்னம் சொன்னது பொய்தானே?" என்றேன் நான்.

"ஆம்; மகேந்திரன் கொழும்பில் சுபேதார் உத்தியோகத்திலிருந்து ரிட்டயர்ட் ஆனது முதற்கொண்டு அத்தானுக்கு மிகவும் வேண்டியவரானார். யாழ்ப்பாணம், கண்டி, நல்லூர் முதலிய விடங்களிலுள்ள சந்யாசிகளுடன் மகேந்திரனுக்கு உறவுண்டு. அத்தானுக்கு சாமியார் பைத்தியம் ஜாஸ்தி. ஆதலின் மகேந்திரன் அத்தானுக்கு எளிதில் நண்பரானார். நாங்கள் சென்னைக்கு வந்ததும் அவரும் இங்கு வந்து சேர்ந்தார்."

"யாழ்ப்பாணத்திலிருந்து சென்னைக்குவந்து எவ்வளவு நாட்களாயின?" என்று நான் கேட்டேன்.

"1929-ம் வருஷம் ஜூன் மாதம் முற்றெய்தியில் சென்னைக்கு வந்தோம்!"

"நீயும் சுவர்ணம்பாளும் ஒரே தாய்வயிற்று மக்களா?"

"ஆம், ஏதோ ஒரு காரணத்தைக் கொண்டு நான் முன்பொரு முறை நாங்கள் இருவரும் சகோதரிகளல்லவென்று சொல்லியிருக்கும் நினைவு வருகிறது!"

" உங்கள் தாயார் எங்கிருக்கிறார்கள்? "

" யாழ்ப்பாணத்தில் —— ! "

" தனியாகவா? "

" ஏன் தனித்திருக்க வேண்டும்? அவர்களுக்கு மூன்று புத்திரர்கள் இருக்கிறார்கள்! "

சிறிது நேரம் மௌனம் நிலவியது.

" இவர்களில், **சிவப்பிரகாசம்** என்பவர்தான் இப்பொழுது குடும்பத்தை போஷிப்பவர். அவர் தன் விடாமுயற்சியாலும் உழைப்பாலும் கலால் இலாகாவில் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் பதவியை யடைந்து நிறைய சம்பாதித்து வருகிறார்! "

" மற்ற மைத்துனர்கள் விஷயமென்ன? "

" **கங்காதரர்** என்பவர் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டராக விருக்கிறார். **சபாபதி** என்பவன் எனக்கு இளையவன்; அவன்மட்டும் ஒரு வழிக்கும் வாமல் திரிந்து கொண்டிருக்கிறான்! "

" போகட்டும் அப்படியும் ஒருவன் இருக்கவேண்டியதுதான். உனது தந்தை———? " என்றேன் நான்.

" தந்தை காளையார்கோவில் என்னும் ஊரில் அத்வைத சாஸ்திர போதனை செய்துகொண்டிருக்கிறார்! "

" அப்படியா! இந்திரலிங்கம்தான் உனது தந்தையோ என்றிருந்தேன். வெள்ளாழத்தெரு கலியாணத்துக்குப் போன நீ என்ன ஆனாய். பிறகு—? "

" சுபேதார் மகேந்திரன் என்னைக் கல்லியாண வீட்டில் கண்டு திருநெல்வேலியிலிருந்து தனது சகோதரியும் சகோதரியின் குமாரியும் வந்திருப்பதாயும், என்னை அவர்கள் பார்க்க விரும்புவதாயும் புகன்று வற்புறுத்திக் கூப்பிட்டார். மதியீனமாக என் தமக்கையின் சம்மதமும் பெறாமல் அவருடன் கந்தப்பமுதலித் தெரு 42-ம் நம்பர் வீட்டுக்குப் போனேன். அங்கு சென்றவுடன் மேன் மாடிக்கு இட்டுச் சென்று ஒரு நாற்காலியில் அமரச் செய்தார். அங்கிருந்த வேலைக்காரி சுபேதாரின் விருந்தாளிகள் கடைத்தெருவுக்குப் போயிருப்பதாயும், சற்று நேரத்தில் திரும்பிவிடுவார்கள் என்பதாயும் தெரிவித்துவிட்டு வெளியே போய்விட்டாள். என்னை

ஆச்சரியம்! மற்றும் இரண்டு விநாடியில் தங்கசாலை வீதியில் நாம் அனுபவித்ததினைத்தன சீதள நோய் தோன்றியது. கைகளும் கால்களும் உதறின. கண்கள் சுற்றி யிருண்டன. பின்னும் சில விநாடிகளில் நான் எனது நினைவை இழக்கப் பெற்றேன். மௌனவாத்தியம் கோஷிப்பது போலவும் யாரோ என் காதில் ஏதோ சொல்வதைப்போலவும் தோன்றிற்று. எனக்குப் பிரக்ஞை வந்து விழித்துப்பார்க்கும் பொழுது நான் தங்கசாலை வீதி எனது வீட்டில் படுத்திருக்கக் கண்டேன். கையில் கங்கணம் கட்டியிருந்தது. கழுத்தில் தாலி கிடந்தது. அரைமணி நேரம் வரையில் கண்களை நம்பாமல் விழித்துக்கொண்டிருந்த சமயம் எனது தமக்கை வந்து கலியாணம் நடந்துவிட்ட விஷயத்தையும் சொல்லி, அதைப்பற்றி வெளியில் பிரஸ்தாபிக்கக் கூடாதென்றும் எச்சரிகை செய்தாள்.''

"தங்கசாலை வீதிக்கு நீ எப்படி கொண்டுவரப்பட்டாய்?"

"அன்றிரவு சுபேதாரே எங்கள் வீட்டில் கொண்டுவந்து சேர்த்து விஷய மேதும் தெரிவிக்காமல் போய்விட்டாராம். அன்று தினம் அத்தான் அவர்கள் ஊரிலில்லை. நான் யாரால் யாருக்குக் கல்லியாணம் செய்யப்பட்டிருக்கிறேனென்பது அத்தானுக்குத் தெரியாது!"

"இம்மாதிரி எதற்காகக் கலியாணம் நடத்தப்படவேண்டுமென்பதும் தெரியாதா?"

"தெரியாது; சுபேதாரை எவ்வளவோ கெஞ்சிக் கேட்டுப் பார்த்தும் பிரயோசன மில்லாமல் போய்விட்டது. லீலாஜீவை இதே திண்டிவனம் மாளிகைக்கு வந்ததாகத் தாங்கள் சொன்னீர்களே, அன்று கூட நான் சுபேதாரை தனியாகச் சந்தித்து எனது உண்மைக் கணவன் யார்? எனது திருமணத்தின் மர்மம் என்ன? என்பவைகளைக் கேட்டறியவே சென்றிருந்தேன்.''

"சுபேதாருக்கு நீ ஏதேனும் கடிதம் எழுதியிருந்தாயா?"

"ஆம், அன்று மாடியை விட்டுக் கீழிறங்குவதற்கு முன் நான் சுபேதாருக்குக் கடிதம் கொடுத்தனுப்பினேன்.''

"நூலேணி யாருடையது?"

"சுபேதாருடையது"

"லீலாஜீவை என்பவள் யார்?

" என்னுடைய தலையை அவள் கிள்ளிவிட நினைப்பதாகவும், அவளைப் பழிதீர்க்காத பக்ஷத்தில் நான் வைகுண்டம் போவது நிச்சய மென்றும் சுபேதார் சொல்வதைத் தவிர எனக்கு வேறொன்றும் உண்மையாகத் தெரியாது ! "

" கறுப்பாடையில் வந்தவள்— ? "

" லீலாஜீவைதான். சுபேதார் கொடுத்ததாக ஒரு பொய்க் கடிதம் கொண்டுவந்து என்னைக் கொல்லச் சதி செய்தாள். காரணமின்றி என் மீது அவள் தாபம் கொண்டிருப்பது எல்லாவற்றிலும் போச்சரியமா யிருக்கிறது "

" நமது இரகஸியக் கலியாணத்தைப் பற்றித் தாம்பரம் குடும்பத்தாருக்கு ஏதேனும் தெரியுமா ? "

" தெரியும். மதனசுந்தரம் சுபேதாருக்கு அந்யோந்யம் வேண்டியவன். ராமச்சந்திரம் பிள்ளைக்கும் சுபேதாருக்கும் சமீபத்தில் மனஸ்தாபம். அப்படியிருந்தும் மதன சுந்தரமும் சுபேதாரும் அந்தரங்க சிநேகம் வைத்துக் கொண்டிருந்தார்கள். மதன சுந்தரத்துக்கு என்னைக் கொடுத்துவிட வேண்டுமென்று அத்தானிடமும் பொன்னுருவியிடமும் சிபார்சு செய்து கொண்டிருக்கிறார்."

" பொன்னுருவியா ? யார் அது ? "

" எனது தமக்கைக்கு சுவர்ணம்பா ளென்றும், பொன்னுருவி யென்றும் இரண்டு பெயருண்டு ! "

" ஓகோ ! சுபேதார் மகேந்திரனை மேஜர் மகேந்திரன் என்றும் அழைப்பதுண்டாக்கும்."

" உண்டு. "

" மதனசுந்தரத்தை மணக்க நீ உடன்படவில்லையா ? "

" இல்லை, மதன சுந்தரத்தை நான் மணக்க உடன் பட்டால், சுபேதார் திரண்ட ஆஸ்தியைப் பரிசாகப் பெறுவதோடு லீலாஜீவையையும் நிர்ப்பலப்படுத்த முடியுமென்றும் அவர் சொல்கிறார்."

" லீலாஜீவை இந்திரலிங்கத்துக்குங்கூட வைரிதானே ? "

" அவர்கள் இருவருக்கும்தான் லீலாஜீவை முதல் வைரி ! இரண்டாவது எனக்கு ! மூன்றாவது தங்களுக்கு — "

"தாம்பரம் ராமச்சந்திரம் பிள்ளையைக் கொன்றவன் சுபே தார் மகேந்திரனல்லவா ?"

"கடவுளுக்குத்தான் தெரியும். நாங்கள் அன்று இரண்டு மணிக்கு மோட்டாரிலேயே சென்னைக்குப் போய்விட்டோம் !"

"நீ விவாகம் செய்யப்பட்டிருக்கிறாய் என்பதை யறிந்தும் மதனசுந்தரம் உன்னை மணக்க உடன்பட்டானா ?"

"ஆம்"

"ராமச்சந்திரம் பிள்ளையின் அசம்பாவித மரணத்தைப் பற்றி மதனசுந்தரமோ ஞான ரத்னமோ கிலேசமடைய வில்லையா ?"

"அளவிட முடியாத வருத்தம்தான்"

"உனது ரகஸிய மணத்தைப்பற்றி உனது அத்தானுக்கோ சகோதரர்களுக்கோ பெற்றோர்களுக்கோ உண்மையாகவே ஒன் றும் தெரியாதா ?"

"அக்கா தெரிவித்திருந்தாலொழிய அவர்கள் அறிய மார்க்க மில்லை"

அன்று ஜனகத்தின் அறைக்குட் சென்று தினசரிக் குறிப்பை யும் மகேந்திரன் கடிதத்தையும் பார்த்த போது மற்றொரு காடு முரடான கடிதமும் இருக்கக் கண்டேன். அக்கடிதத்தைப் பற்றி பின்பு விசாரித்துக் கொள்ளலாமென்று விட்டுவிட்டேன்.

"உன் திருமண விஷயத்தைப்பற்றி லீலாஜீவைக்கு ஒன் றுமே தெரியாதா ?"

இந்தச் சமயத்தில் யாரோ கதவிடிக்கும் சத்தம் கேட்டபடி யால், இத்துடன் சம்பாஷணையை நிறுத்திவிட்டு மாடியைவிட்டுக் கீழிறங்கிச் சென்றேன். தெருக் கதவைத் திறந்தவுடன் தந்திச் சேவகன் தந்தியைக் கையில் கொடுத்தான்.

சில உண்மைகள் வெளியாகிவிட்டன. உடனே புறப்பட்டு வரவும் — டாக்டர் மேனன்

என்று தந்தியில் விஷயம் காணப்பட்டது. ஜனக குமாரி யிடம் விஷயத்தைச் சொல்லி விடை பெற்றுக்கொண்டு சென்னைக் குப் பிரயாணமானேன்.

31. ஆச்சரிய மருந்து.

மேனன் தனது ரசாயனசாலை (laboratory) யில் ஆழ்ந்த சிந்தனையுடன் அமர்ந்திருந்தார். என்னைக் கண்டவுடன், "வாரும் வாரும் உம்மைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்" என்று சொல்லி ஒரு ஆசனத்தை யிழுத்துப்போட்டு அமரச் சொன்னார்.

"**எ**ன்ன சங்கதி உண்மை யென்ன?" என்று நான் ஆர்வத்துடன் வினவினேன்.

"அன்று தங்கசாலை வீதியில் ஜனககுமாரியை நான் முதன் முதல் பார்த்த போது அவள் இறந்து போய் விட்டதாகவே தீர்மானித்தேன். புத்தக அறையின் நிகழ்ச்சியைக் கேட்கவிட்டு ஜனககுமாரியை மறுபடியும் பரிசீலித்தேனல்லவா? அப்பொழுது தான் அவள் இறக்க வில்லை யென்று தெரிய வந்தது. கண்களின் இமைகள் கெடாம லிருந்ததை யறிந்தேன். உண்மையாக இறந்தவரின் கண்களுக்கு நேரே நம் விரலை நிறுத்தி அசைத்தால், நம் விரலின் பிரதிபிம்பம் அந்தக் கண்களில் விழாது. இதயத்தில் அல்லது கண்டத்தில் அல்லது லலாடத்தில் உயிரானது ஸ்தம்பித்திருந்தால் கண்களின் பார்வை கெடாமல் பிரதி பிம்பத்தைக் காட்டும். அல்லது கருவிழிகள் மேலேறிச் செருகியிருக்கும். இந்த இரண்டுவித பரிசோதனைகளையும் விஷந் தீண்டப் பெற்றவர்களுக்கு அவசியம் செய்ய வேண்டும். சுவர்ணம்பாள் விஸ்தரித்த கதையைக் கேட்டபின்தான் விஷ சம்பந்தமான விபத்தா யிருக்குமோ வென்று நினைத்து ஜனகத்தையும் பரிசோதித்தேன். அப்பொழுது ஜனகத்தின் கண்களின் ஒளி கெட்டதாகத் தெரியவில்லை யாதலின், அவள் சாகவில்லை யென்று நிச்சயித்துச் சாதாரண விஷ முறிவு மருந்தைக் (Antidote of poison) கொஞ்சம் இன்ஜெக்ஷன் செய்து விட்டுப் புத்தக அறையைப் பரிசோதிக்கத் தொடங்கினேன். **நரம்பேறு விஷம் (Neurotic poison)** என்றும், **அசயமேறு விஷம் (Narcotic poison)** என்றும் விஷத்தில் இருவிதம் உண்டு. அசயமேறு விஷமாவது ஆகாரம் உட்கொண்ட பின் பிரக்ஞை யிழப்பித்துக் கொல்லும். நரம்பேறு விஷமாவது தோலின் மூலமாக அல்லது நரம்பின் மூலமாக உட்சென்று மூளையைத் தாக்கி நாளம்—அவயவங்களைத் தாக்கிக் கொல்லும். அபின் கஞ்சா

முதலியவை அசயமேறு விஷத்தைச் சேர்ந்தவைகள். பாம்பு தேள் முதலிய ஜந்துக்கள் கடிப்பதனு லுண்டாவது நரம்பேறு விஷம். நாம் புத்தக நிலையத்தில் அடைந்த விஷமானது நரம்பேறு விஷத்தைச் சேர்ந்ததாகும். அசயமேறு விஷங்களையே நாம் வேறு விதமாகவும் செய்யலாம். எப்பேர்பட்ட ரகஸிய விஷ மருந்துகளையும் முறிய வைக்கக்கூடிய உயர்ந்த மருந் தொன்றை ஜெர்மனி வைத்தியர் ஒருவர் கண்டு பிடித்தார். அந்தச் சிறந்த மருந்தைத் தான் நான் அன்று நம் மெல்லோருக்கும் உபயோகித்தேன்.

புத்தக நிலையத்தின் கதவுப் பிடியில் ஏதேதோ சில பொருட்கள் மணற்போல ஒட்டிக்கொண்டிருந்ததை பூதக் கண்ணுடி மூலம் கண்டேன். அவற்றைக் கைப்படாமல் கொண்டுவந்து பரிசைஷ செய்தேன். வழக்கம்போல் கந்தக திராவகப் (Sulphuric acid) பரிசைஷயை முதன் முதல் செய்தேன். அந்தப் பரிசைஷயில் எவ்வித மாறுதலும் உண்டாகவில்லை. பைக்ரோமேட் ஆப் பொட்டாஸ் (Bichromate of potash) என்னும் மருந்தை யொரு துளி கலக்கவும், அம் மணற்போன்ற வஸ்துவிலிருந்து பச்சை ஊதா சிவப்பு முதலிய வர்ணங்கள் தோன்றின. 'ஸ்ட்ரிக்னியா' (Strychmia) என்னும் மருந்தை பரிசைஷ செய்யும்பொழுது இதே மாதிரியான நிறங்கள்தான் உண்டாகும். எனவே, வசநாபியைப் போன்றதொரு விஷ மருந்தாக இருக்கவேண்டுமென்று தீர்மானித்தேன். மேற்படி மணல் போன்ற விஷ மருந்தைத் தவளை ஒன்றின் மீது வைத்தேன். தவளை இரண்டு விநாடியில் இறந்துவிட்டது. இதைப்பற்றி இந்திய வைத்திய நூற்களில் ஆராய்ந்தேன் ஒன்றுந் தெரியவில்லை" என்றுர் மேனன்.

"ஆதிகாலத்தில் வசநாபி (Strychnia) அல்லது பச்சநாபியை திரவகப் பொருளாய்ச் செய்து குறைந்த அளவில், எங்காவது வெளியூர்ப் பிரயாணம் செய்யும் பொழுது கதவைப் பூட்டிப் பூட்டின் மீது பூசிவிட்டுப்போவார்களாம். திருடர்கள் யாராவது பூட்டையோ கதவுப் பிடியையோ தொடுவார்களாளுல், நாம் அன்றடைந்ததைப் போலவே நோயுற்றுப் பயந்து ஓடிவிடுவார்கள். குறைந்த அனுபானத்தில் உபயோகப்படுத்தாவிட்டால், அது மனிதனைக் கொன்றே விடும். இதே முறையில்தான் புத்தக நிலையத்தின் கைப் பிடியில் விஷ திரவப் பொருளை அதிகமாகத் தடவி

ஜனகத்தைக் கொன்றுவிட சூழ்ச்சி செய்யப்பட்டிருந்தது. நல்லதிர்ஷ்டவசத்தால் நாம் போய்ச் சேர்ந்தோம்"

"கழுத்தை நெருக்கி மூச்சைத் திணறச் செய்து தாடையை அழுத்திப் பற்களைக் கிட்டிப் பேசவிடாமற் செய்து, காலிலிருந்து தலைபரியந்தம் மரக்கச் செய்யும் குணம் வசநாபிக்குண்டு. இதைப் போலவே வெவ்வேறு வகையில் சொல்லக்கூடிய அசயமேறு விஷங்கள் பல இருக்கின்றன. ஊமத்தை (Datura) எட்டிக்கொட்டை (NuxVomica) நேர்வாளம் (Crotom) முதலியவைகள் மேற்படி இனத்தைச் சேர்ந்தவைகள். மேலே ஆப்பிரிக்காவில் உற்பத்தியாகும். 'காலபார் பீன்' (Calabar been) என்பதும் இந்த ரகத்தைச் சேர்ந்த விஷமாகும். புத்தகநிலையத்தின் கதவிற் தடவப் பெற்றிருந்த விஷம் மேலே சொல்லப்பட்ட இந்த வகையைச் சேர்ந்த தென்பதில் ஐயமில்லையாயினும், அது இன்னதுதான் என்று என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை."

"காட்டு மரவட்டையை பஸ்பம் செய்து எந்த அங்கத்தில் தடவுகின்றேமோ அந்த விடம் ஒரு முகூர்த்தம் வரையில் சுரணையே இல்லாமல் மரத்துப் போய்விடும் என்று நத்தப்பள்ளம் டாக்டர் S. வைத்யலிங்கம் கூறுகிறார்."

"நமக்குப் பாதத்திலிருந்து மரத்து வந்ததல்லவா? அதனால் அந்த பாஷாணம் மரவட்டைக் கலப்பாயிருக்குமோ என்று சந்தேகித்தேன் ஆராய்ச்சியில் அதுவும் இல்லை யென்று தெரிந்தது."

"கடைசியாக பாவியா (Pavia) அரண்மனையிலிருந்து இப்பொழுது பிரிட்டிஷ் மியூஸியத்தில் (British Museum) இருக்கிறலத்தின் ஏட்டுச்சுவடி (Latin treatise) யிலிருந்து நான் சில விஷமருந்தின் தன்மைகளைப்பற்றிக் குறித்துவந்த குறிப்பை எடுத்துப் பார்த்தேன். தமிழ்க் கலைகளைப்பற்றித் தமிழ் பாஷையில் படித்து மண்டையை உடைத்துக் கொள்வதைவிட தமிழிலிருந்து லத்தீனில் ஏறி இருக்கும் உண்மைகளை மேற்படி பாஷையில் படித்துத் தெரிந்துகொள்வது மிகச் சுலபம் அல்லவா?"

"இரவு பகலாகச் சிந்தித்த பின்பு அந்த விஷம் 'வயனா பீன்' (Vayana Bean) என்று தெரிய வந்தது. 'வயனா பீன்' என்பதற்குத் தமிழில் என்ன சொல்வதோ தெரியவில்லை. வயனா

பின் என்பது முதன் முதல் அராபியர்களால் கண்டுபிடிக்கப்பட்டு, அவர்கள் அனுபவத்திலிருந்தது. மேற்படி அராபியர்கள், ஸிரியாவையும், வட ஆப்பிரிக்காவையும், கெய்ரோ (Cairo) நகரைத் தலை நகராகக்கொண்டு அரசாண்ட பாத்திமித்ஸ் (Fatimites) என்னும் க்ஷத்திரிய வம்ஸத்தைச் சேர்ந்தவர்கள். அத்தகைய க்ஷத்திரிய வம்சத்தினரைப் பிற்காலத்தில் சாலதீன் சுல்தான் (Saladin Sultan) என்னும் முகம்மதிய அரசன் தோற்கடித்து வெருட்டி அரசாட்சியைத்தான் கைக்கொண்டான். கி. பி. 1189-லிருந்து 1199 வரையில் இங்கிலாந்தில் அரசு செலுத்திய ஒன்ருவது ரிச்சர்ட் (Richard I, the Lion Heart) மன்னருக்குப் பரம சத்துருவாக விருந்தவன் சாலதீன் என்பது சரித்திரக் கூற்று!''

"அப்படியானல் பத்து—பதினேராவது நூற்ருண்டிலேயே வயனு பீன்ஸ் என்னும் விஷ மருந்து கண்டுபிடிக்கப்பட்டு விட்டதா?''

"ஆம், அராபி, எகிப்து, இத்தாலி முதலிய விடங்களில் மூன்றையே சென்று வியாபித்தது. இதனுடைய குண மென்ன வென்ருல் ஏடுத்தவுடன் சீதளத் தாக்காகத் தாக்கிப் பயத்தைக் கொடுக்கும். எதிரியின் சொற்களுக்குக் கீழ்ப்படியச் செய்யும்; பயங்கரமான மனப் பீதியும் நரம்புவெட்டும் மரமரப்பும் பலமிழத்தலும் அறிவிழத்தலும் செய்து கடைசியாகக் கொன்றுவிடும். இதே மாதிரி நாம் அன்று அனுபவித்தோமா இல்லையா?''

"ஆம். பிரத்யக்ஷம் இதேமாதிரிதான்!''

"ஆகவே, புத்தகநிலையத்தில் வயனு பீன்ஸ் என்னும் விஷத்தையே பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறதென்ற முடிவுக்கு வந்தேன். வயனு பீன்ஸ் இந்தியாவில் இருக்கிறதா? அதற்குத் தமிழில் ஏதேனும் பெயர் இருக்கவேண்டும். இரண்டாவது அது இந்தியாவிலிருந்து அராபிக்குப் போயிருக்க வேண்டுமேயல்லாது, அங்கிருந்து இங்கு வந்திருக்கமுடியாது; என்று ஒரு தனியான முடிவுக்கு வந்தேன். பிறகு, இலங்கையில் கண்டி என்னும் ஸ்தலத்தில் மூலிகை ஆராய்ச்சி செய்து வரும் புரொபசர் ஹோப்பர் (Prof. Hofer) என்பவருக்கு இதைப்பற்றி எழுதினேன். அதற்கு அவர் எழுதிய பதில்:—

அன்பார்ந்த டாக்டர் மேனனுக்கு :—

1929ம் வருஷம் ஜனவரி மாதம் ஒன்றாந்தேதி நாங்கள் கண்டிக் காட்டில் தென்கிழக் கோடியில் ஒரு குடிசை இருக்கக் கண்டோம். நிரந்தரமான காட்டில் தைரியமாக வசிக்கும் பேர்வழி யார் என்று அறிய அவாக் கொண்டு குடிசையை நோக்கிச் செல்லும் பொழுது, எங்கள் வேட்டை நாய் விரைந்து எங்களுக்குமுன் ஓடி குடிசையைச் சமீபத்தது. குடிசைக்கு முன்னால் ஒரு சிசாவில் ஏதோ ஒரு திரவப் பொருளை சூரிய ஸ்புடம் செய்திருந்தது. எங்கள் நாய் அந்தச் சிசாவை கீழே தள்ளிவிடவும் அந்தத் திரவப் பொருள் நாயின் மீது கொஞ்சம் தெரித்தது. அடுத்த விநாடியில் கீழே விழுந்து இறந்து போயிற்று. நாங்கள் ஆச்சரியத்துடன் துரிதமாகச் சென்றோம். இதற்குள் சுமார் 30 வயதுடைய பெண் மகள் குடிசையிலிருந்து வெளியே வந்தாள். நாங்கள் சிசாவைத் தொடப் போகும் சமயம், அதைத் தொடக் கூடாதென்று சொல்லித் தடுத்து விட்டாள். ஏனென்று கேட்டதற்கு, கொடிய விஷத் திராவகமென்றும் மனிதரை வெகுசீக்கிரம் கொன்று விடுமென்றும் எடுத்துச் சொன்னதோடல்லாமல், அந்த திராவகம் செய்யத் தகுந்த விஷச் செடியையும் எங்களுக்குக் காட்டினாள். மாதிரிக்கு இலையும் காயும் அனுப்பியிருக்கிறேன் பார்த்துக் கொள்க. கடந்த சில மாதங்களாக அந்தப் பெண்மகள் அந்தக் குடிசையில் வசிக்கக் காணோம். முதன் முதல் அவளை நாங்கள் படம் பிடித்தோம். அந்தப் படத்தில் ஒரு காப்பியும் இத்துடன் அனுப்பியிருக்கிறேன்.

புரபஸர்—ஜோபர்

குறிப்பு :—மேற்படிச் செடி பிரிட்டிஷ் மியூசியத்திலுள்ள லத்தீன் சுவடியில் கூறுகிற வயன்ஞ என்னும் செடியின் இலட்சணத்தைப் பெற்றிருக்கிறது.

“இம்மாதிரியான பதிலை நான் பெற்றவுடன் நான் அடைந்த சந்தோஷத்திற்கு அளவிருந்திருக்குமென்று நினைக்கிறீரா?” என்றார் டாக்டர் மேனன்.

அது கேட்டு நான் பேராச்சரியமடைந்து கடிதத்தோடு வந்தப் படத்தைக் காட்டும்படி வற்புறுத்தினேன். டாக்டர் மேனன் பெட்டியைத் திறந்து சட்டத்தில் (Mount) ஒட்டாத போட்டோக் காப்பி ஒன்றை யெடுத்துக் காட்டினார். அதை

வாங்கிச் சில நிமிஷம் இமை கொட்டாமல் நோக்கிக் கொண்டிருந்தேன். யார் அப்படத்தில் அவள்தான்—லீலாஜீவை! லீலாஜீவையை நான் தத்ரூபம் இண்டிவனத்தில் பார்த்ததையும், மறுபடியும் மறுபடியும் நான் மேற்படி விஷ நோய்க்கு இலக்கானதையும் மேனனுக்கு எடுத்துச் சொன்னேன்.

"அப்படியானால் இப்படம் லீலாஜீவையினுடையது தானே?" என்றார் மேனன்.

"சந்தேக மில்லாமல்—"

"லீலாஜீவை எங்கே குடியிருக்கிறாள் தெரியுமா? பல்லாவரத்தில் ஒரு அழகிய பங்களாவில். அவளுடைய பங்களாவில் வயன்றோ செடி பயிர் செய்யப் பட்டிருக்கிறது!"

"எப்படி?" என்று என்னை யறியாமலேயே ஆச்சரியத்தால் கூவினேன்.

"ஆம். அவளை நான் நேரில் சந்தித்தேன். அவள்தான் கழப்பாறையில் வந்து ஜனககுமாரியைக் கொல்ல முயன்றாள்! ஏதோ என்கையில் ஒப்புவித்த ரகஸ்யத்தைக் கூடிய வரையில் கண்டுபிடித்து விட்டேன். இனிமேல் அவளைத் தண்டிக்க வேண்டியதோ கண்டிக்க வேண்டியதோ உமது பாடுபத்து. இனி என் வேலையை கவனிக்கப் போகிறேன். நீர் உடனே போய் மற்ற வேலைகளைக் கவனியும். காலத்தை வீணாக்க வேண்டாம்!" என்றார் மேனன்.

"அப்படியானால், சென்று வருகிறேன். தங்கள் மாணவனாகிய என் பேரில் இவ்வளவு பற்றுக் கொண்டு அளவற்ற சிரமம் எடுத்துக் கொண்டதற்கு நன்றி செலுத்தவும் ஊழியம் செய்யவும் கடமைப் பட்டிருக்கிறேன்." என்று சொல்லிக் கொண்டு டாக்ஸியில் ஏறியுட்கார்ந்து வெகு துரிதமாக வீடு நோக்கிச் சென்றேன்.

32. மர்ம விளக்கம்

பல்லாவரத்திலுள்ள லீலாஜீவையைக் கண்டு பிடித்துப் போலீஸார் வசம் ஒப்புவிக்க வேண்டுவது என் கடமையாய்ப் போயிற்று. ஆதலின், போலீஸ் இன்ஸ்பெக்டர் புண்ணியகோடி முதலியாரிடத்தில் விஷயங்களை யெல்லாம் சொல்லிப் போலீஸ் வீரர்கள் சகிதமாக மாலை ஆறு மணிக்குப் பல்லாவரம் செல்வ தாக முடிவு செய்திருந்தேன்.

அன்று தினம் எதிர்பாராதவிதமாக ஜனககுமாரி எனது இல்லத்திற்கு வந்து சேர்ந்தாள். தெய்வநாயகம் பிள்ளை, சுவர் ணம் முதலியவர்கள் நான் வந்ததற்கு மறுநாளே சென்னைக்கு வந்துவிட்டதாக ஜனகம் தெரிவித்தாள்.

பல்லாவரம் செல்லவேண்டுமென்று ஜனகத்தினிடம் கூறிய பின் தானும் வரவேண்டும் என்று பிடிவாதம் செய்தாள். விவரம் ஒன்றும் சொல்லாமல் அவளையும் அழைத்துச்செல்ல உடன்பட் டேன்.

சரியாக 5-45 மணிக்கு ஜனகம் உள்பட பல்லாவரத்துக்குப் புறப்பட்டோம். தனியாக ஓரிடத்தில் எங்கள் காரை நிறுத்தி னோம். போலீஸார் சகிதம் பச்சை மாளிகையை யடைந்து நான்குபுறமும் போலீஸ்காரர்களை நிறுத்தினோம். பச்சை மாளி கையின் முன் தாழ்வாரத்தில் பெரிய 'டூம்' மின்சார விளக்கு எரிந்துகொண்டிருந்தது. தெருவாயிற் கதவு ஒருக்கணித்திருந் தது. புண்ணியகோடி முதலியாரையும் வெளியே இருக்கும்படி சமிக்கை செய்துவிட்டு ஜனகத்தின் வலக்கையை எனது இடக் கையால் பற்றிக்கொண்டு வலக்கையில் ரிவால்வரை மறைத்து வைத்துக்கொண்டு மாளிகையின் உட்புறம் புகுந்தேன்.

மெலிந்து வளர்ந்த ஒரு ஸ்திரீ ஒரு பிரப்பு நாற்காலியில் அமர்ந்து, தாடையில் கையை வைத்துக்கொண்டு விசனத்தோடி ருந்தாள். அருகே இருந்த மேஜை மீது சில சாமான்களும் புஸ்த கங்களும் கிடந்தன. தலைக்கு மேல் மின்சார விளக்கு பிரகாச மாக எரிந்துகொண்டிருந்தது. திடீரென்று பிரவேசித்த எங் களைக் கண்ட அவள் அஞ்சிப் பின்வாங்கி வெருண்ட நோக்கு டன் எங்களைப் பார்த்தாள். மூன்று நிமிஷம நாங்கள் யாரும் ஒன்றும் பேசவில்லை. நல்லுணர்ச்சி பெற்றவுடன் அந்த ஸ்திரீ

மேஜை மீது தயாராக வைத்திருந்த ரிவால்வரை எடுத்து எங்கள் முகத்துக்கு நேரே நீட்டினுள். அவளுடைய முகம் கொடூர நிலையை அடைந்தது. சற்று நேரம் நான் தாமதித்திருந்தால் சுட்டுவிடுவாள்.

"போ வெளியே! போ! போ! போ! போ!" என்று படபட வென்று கோபத்துடன் துடித்தாள் அவள்.

நான் எனது கைத் துப்பாக்கியை அவளுக்கு நேரே பிடித்தேன். ஜனகத்தின் பயம் ஒருவாறு தீர்ந்தது. லீலாஜீவையின் மனத்தில் அச்சம் பலமாகக் குடி கொண்டது.

"லீலாஜீவை ——! ஜாக்கிரதை! எங்களைத் தெரிகிறதா? உனது சதியாலோசனைகள் வெளிப்பட்டு விட்டன. எங்கள் இருவரையும் கொலை செய்வதற்கு நீ முயன்ருயல்லவா? அதன் காரணத்தை யறியவே நாங்கள் இங்கு வந்திருக்கிரும்! சீக்கிரம் சொல்!" என்று சீறினேன் நான்.

"நீ சொல்வது விளங்கவில்லை——! சரியாகச் சொல்!" என்று அவள் அலக்ஷியமாகப் பேசினுள். சொல்லில் கோபத்தின் வேகம் நிறைந்து காணப்பட்டது.

"நீ எங்கள் உயிரை வாங்குவதற்குப் பல முறை முயன்ருய். இல்லை யென்று மறுப்பதில் பயனில்லை. வயன்ரு என்னும் விஷ மருந்தினுல் நீ எங்களை எமலோகம் அனுப்பிவிட நினைத்தாய்! இலங்கை கண்டிக்காட்டிலிருந்து அம்மருந்தை நீ கொண்டுவந்திருக்கிருய்!" என்று நான் மேலும் கோபத்துடன் உரைத்தேன்.

லீலாஜீவையின் முகம் சடக்கென்று மாறிவிட்டது. துக்கம் பரிபூரணமாக முகத்தில் குடிகொண்டது. வயன்ரு விஷத்தை அவள் உபயோகிப்பதாக அறிகிருேம். ஆனுல், அந்த ராட்சசப் பிறவின் உருவமே விஷமாக விருக்கும் பொழுது, அவள் மற்ருெரு விஷத்தைத் தேடி யடைந்தது ஆச்சரியமே! வாசுகி, அனந்தன், தக்கன், சங்கபாலன், குளிகன், பதுமன், கார்க்கோடகன் என்று அஷ்ட நாகங்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிருேம். அதன் பயங்கரமான ரூபத்தையோ உத்கிருஷ்டமான விஷத்தைப் பற்றியோ நாம் அறிய மாட்டோம். ஆனுல், அட்ட நாகங்களும் ஒன்ருய்ச் சேர்ந்து ஒரு அழகிய பெண் ரூபம் எடுத்து வந்து அதோ நிற்கிறது!

"ஜன — கம், உன்னைக் கொல்ல வேணுமடி, நசுக்க வேணுமடி!" என்று லீலாஜீவை ரௌத்ராவேசத்துடன் கர்ஜித்துப் பல்லைக் கடித்தாள். கண்களை ஒருமாதிரியாக உருட்டி விழித்தாள்.

மெலிந்த மனசையுடைய ஜனகம் என்னபாடு பட்டாள்! ராஜாளிக்குப் பயந்து மனம் பதைத்தோடும் வெண் புறாவைப்போல ஜனகம் என்னைத் தழுவிக்கொண்டாள். லீலாஜீவையைப் போன்றதொரு பெண்மணி இந்தத் தமிழ் நாட்டுக்கு உரிமையுடையவளாயிருப்பாளென்று நான் நம்பவே இல்லை. கைத் துப்பாக்கியை அவள் முகத்தை நோக்கி நெருக்கிப் பிடித்துக்கொண்டு,

"லீலா, லீலா ஜாக்கிரதை! அடுத்த நிமிஷம் மாண்டே போவாய்! ஜனககுமாரியை நோக்கி நெருங்காதே! உண்மையை உடனே கக்கு!" என்றேன் நான்.

"மனிதா! சிறையிலிருக்கிறவள் விலங்குக்கா பயப்படுவாள்! வாயை மூடு! என்னிடமிருந்து நீ ஒன்றையும் தெரிந்துகொள்ள முடியாது!" என்றாள் லீலாஜீவை.

"எல்லா உண்மையும் உனக்குத் தெரியும்!'

"அந்தக் குறமுழிச் செருக்கி சொல்லிவிட்டாள்——!" என்று சொல்லி ஜனகத்தை ரௌத்ராகாரத்துடன் நோக்கினாள்.

"உன் செய்கையே உன்னைக் காட்டிக் கொடுத்து விட்டது! வேறொருவரும் ஒன்றும் சொல்லவில்லை. நீ இப்பொழுது எல்லா அந்தரங்கங்களையும் சொல்லாத பக்ஷத்தில் என்னாகுந் தெரியுமா! போலீஸாரின் முன்னால் நீ வாக்கு மூலம் கொடுக்கும்படி ஏற்படும்!" என்று நான் பயமுறுத்தினேன்.

"பயமுறுத்தப்படுவதற்கு லீலாஜீவையா ஆசாமி?" என்று அந்த விஷப் பெண் ஆர்ப்பரித்தாள்.

"நீ கொலைசெய்ய முயன்றாய்! உன்னை எனக்குப் போதுமான அளவு தெரியும்! தமம், இமம், தூமம், வாலுதம், சாக்ரம், இரத்தம், அழல் என்னும் சப்த நரகங்களுக்கும் அஞ்சாமலும் சர்க்கார் சட்டத்திற்குச் சிறிதும் பயப்படாமலும் தீவிரமான பாதகச் சிந்தனையுடைய பெண்பேயென்று நான் அறிந்திருக்கிறேன். ஆனால், பரஸ்பரம் நீ எனக்குக் கீழ்ப்படிந்து பதில் சொல்லுவாயானால், எத்தனையோ விதத்தில் நன்மை பெறக்கூடுமென்று நம்புகிறேன்!" என்று இனமாக வார்த்தையைக் கொடுத்தேன்.

"எப்படி?"

"எங்களைப் போலவே சுபேதார் மகேந்திரனை நீ சத்துரு வாய்ப் பெற்றிருக்கிறாய். எனக்கும் எனது மனைவி ஜனகத்திற்கும் எதிரிடையாக அனந்த சதியாலோசனைகள் நிகழ்கின்றன. முழுது மறியாவிட்டாலும், ஒரு கோடியாவது அறிந்திருக்கிறோம்" என்றேன் நான்.

"உனது மனைவி—யா! ஜனகம்? — ஓ!" என்று புருவத்தை மேலே சுழித்து உருட்டி விழித்தாள்.

"முக்காலும் உண்மை! ஜனகம் எனது மனைவிதான். ரகசியங்களை அறிவதற்காக நான் உன்னிடம் வந்திருக்கிறேன். எல்லா குட்டுகளையும் உடைத்தெரியாமல் மூடி வைக்க நீ விரும்பும் பக்ஷத்தில், தாமதமின்றிக் கைது செய்யப்படுவாய்!" என்று தன்னம்பிக்கையோடும் வீரத்தோடும் உரைத்தேன்.

லீலாஜீவையின் முகம் செத்தது. கால்களும் கைகளும் நடுங்கின. உண்மையாகிய சத்திய வொளிமுன் தமோ சொரூபமாகிய பாவம் கட்டுப்பட்டதைப் போல லீலாஜீவை எனது ஜீவசக்திக்குக் கட்டுப்பட்டுக் கீழ்ப்படியத் தொடங்கினாள்.

சுமார் கால் மணி நேரம் இடையறாத அமைதி!

"லீலாஜீவை, நீ இதுவரையிற் செய்த தீவினைகளை நான் மன்னித்து விடுகிறேன். நீ சிறைக்குச் செல்லாமல் தப்பவேண்டுமென்றால் எனக்கு நேரான பதிலை சீக்கிரம் சொல்!" என்றேன் நான்.

லீலாஜீவை தழுதழுத்த குரலில் ஆரம்பித்தாள்.

"எனது தகப்பனார் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு கிராமத்தில் பிறந்தவர். எனது தாய் சிங்கள ஜாதியைச் சேர்ந்தவள். **தாமோதரம் பிள்ளை** என்னும் என் தந்தை சைவக் குடும்பத்தைச் சேர்ந்தவராயினும், சிங்களப் பெண்ணை கலியாணம் செய்து கொண்டு சிங்கள மதத்தை அனுஷ்டித்தார். எனக்குச் சுமார் பன்னிரண்டு வயதிருக்கும்பொழுது என் தந்தையும் தாயும் காலரா வினால் இறந்துபோய்விட்டார்கள். நான் சுபேதார் இந்திரலிங்கம் வீட்டுக்கு வேலைக்காரியாக அமர்ந்து வயிறு கழுவத் தொடங்கினேன்."

"யார், இந்திரலிங்கமா?"

"இந்திரலிங்கம் பிள்ளை யென்று நீங்கள் நினைத்திருக்கிற பேர்வழியல்ல; வேறு ஆசாமி ஒருவரை நான் குறிப்பிடுகின்றேன். சில வருஷங்களுக்குப் பின் நான் மனுஷியானேன். மனுஷியான ஓராண்டுக்குப் பிறகு சுபேதார் இந்திரலிங்கம் பிள்ளை என்னை அந்யோந்யமாக நேசித்தார். ஏற்கனவே அவருக்கு விவாகம் செய்யப்பட்டிருந்த போதிலும் நான் அவரை இச்சித்தேன். எங்களுக்குள் சம்பந்தமேற்பட்ட சில வருஷங்கள் வரையில் அவர் என்னைச் சட்டப்படி மணப்பதாகச் சொல்லிக்கொண்டு வந்தார். முழுதாக ஐந்து வருஷங்கள் வரையில் அவர் என்னிடம் அன்பு பாராட்டி வந்தார். இதற்கிடையில் எனக்குக் குழந்தை குட்டிகள் ஏற்படாமலிருந்தது ஆண்டவன் புண்ணியமே,".

இந்திரலிங்கம் என்பவர் தமிழ் சாஸ்திரங்களில் அதிகப் பற்றுடையவர். **வளையாபதி** என்னும் ஏட்டுச் சுவடி யொன்றை அவர் வெகுநாளாகத் தேடிக்கொண்டிருந்தார். இன்னும் சில ரகஸிய மருத்துவச் சுவடிகளைப் பற்றியும் ரகஸியமாகத் தேடி வந்தார். ஒரு நாள் ஒரு சந்யாசி வைத்திருந்த மூட்டையைத் திருட்டுத்தனமாக அவிழ்த்துப் பார்த்து கிழிபட்ட ஒரு **பாதி கடிதத்தை** அபகரித்துக்கொண்டார். அக்கடிதத்தின் மூலமாகப் பொதிய மலை யென்று சொல்லப்படும் **திருக்குற்றலம் மலைக்குச்** சென்று **வளையாபதி** என்னும் ஏட்டுச் சுவடியையும் **அகத்தியம், பரதசேனுபதியம்,** **இசை நுணுக்கம்,** முதலிய ஏட்டுச் சுவடிகளையும் இன்னும் பல அரிய பெரிய **கலைஞான** ஏட்டுச் சுவடிகளையும் கொண்டு வந்தார்.

"இருபது முப்பது கண்ணடி பீரோக்கள் நிறைய பழைய ஏட்டுச் சுவடிகளை நிரப்பி வைத்திருந்தார். ஆனால், சில முக்கிய ஏட்டுச் சுவடிகளையும் வளையாபதியையும் இருப்புப் பெட்டியில் வைத்துப் பூட்டி வைத்திருந்தார். பொழுதன்றைக்கும் குக்குடபுடம், நாகபுடம், கஜப்புட அஜப்புடம் முதலிவைகள் இட்டு மருந்து முடித்துக் கொண்டே இருப்பார். பல சந்யாசிகள் அவரிடம் வந்து போவதுண்டு. அவர் நடந்து வரும் மாதிரியிலிருந்து **ரசவாதம்** அல்லது ஏதேனும் ரகஸிய மருந்தைக் கண்டு பிடிப்பதாக, நான் அறிந்தேன். பரஸ்பரம் அன்பாக விருக்கும்

பொழுதும் மேற்படி விஷயங்களைப்பற்றி அவர் ஒன்றும் என்னிடம் சொல்வதில்லை."

"ஐந்து வருஷங்களுக்குப் பின் என்னை அவர் பாராமுகம் செய்து வெறுக்கத் தொடங்கினார். கண்டபடி திட்டுவதும் அடிப்பதும எனக்கு மகா இம்சையாயிருந்தது. உபத்திரவம் தாங்க மாட்டாத நான், இந்திரலிங்கம் பிள்ளை தன் உயிர் போலப் பாதுகாத்து வந்த **சல்லியகரணி, சந்தானகரணி, சமனியகரணி, மிருதசஞ்சீவினி,** என்னும் நான்கு வைத்தியச் சுவடிகளையும் **வனையாபதி**யையும் அபகரித்துக்கொண்டுகண்டிக் காட்டுக்கு ஓடிவிட்டேன்."

"கண்டிக் காட்டுத் தென் கீழ்த்திசையில் ஒரு குடிசையமைத்துக்கொண்டு கிழங்கு காய்கறி முதலியவைகளையே தின்று சில நாட்கள் ஜீவித்திருந்தேன். அச்சமயம் மேற்கண்ட நான்கு வகையான மருத்துவச் சுவடிகளையும் ஆராய்ச்சி செய்ய எனக்குச் சாவகாசம் கிடைத்தது. **சல்லியகரணி** யென்பது ஆயுதங்களால் ஏற்படும் ரணத்தை சொஸ்தம் செய்வதைப்பற்றியும் ஆப்ரேஷன் செய்யும் முறைகளைப்பற்றியும் கூறிற்று. **சந்தானகரணி** யென்பது ஒடிந்து முறிந்துபோகும் அவயங்களை மறுபடியும் ஒட்டச் செய்யும் வைத்திய முறையைப்பறறி விளக்கமாகக் கூறிற்று! **சமனியகரணி** யென்பது குழிபறிக்கும் எல்லாவிதமான இரணநோய்களையும் தீர்க்கும் மருத்துவ முறையைப்பற்றிக் கூறியது! ஆனல் மேற்கண்ட மூன்றிலும் நான் பிரத்யக்ஷமான ஆராய்ச்சி செய்ய விரும்பவில்லை. **மிருதசஞ்சீவினி** யென்பது மனிதரைச் சாகச் செய்யும் விஷ மருந்துகளைப்பற்றியும், அதற்கு முறிவு மருந்துகளைப் (Antidote) பற்றியும் விரிவாகச் சொன்னதோடல்லாமல், எந்த நோயைப் பெற்று யார் ஒருவர் இறந்து போனலும் அவரை எழுப்பத்தகுந்த மருத்துவ முறைகளைப்பற்றியும் சொல்லிற்று!" என்றாள் லீலாஜீவை.

ஜனகம் ஆச்சரியத்துடன் லீலா ஜீவையைப் பார்த்ததைப் போலவே, நானும் பேராச்சரியத்துடன், அவளை வியந்து நோக்கி, "ஏ! நிஜமாகவே இப்படி யொரு தமிழ் வைத்தியம் இருக்கிறதா?" என்றேன்.

"ஆம். உண்மையாகவே இப்பொழுதும் இருக்கிறது! மிருதசஞ்சீவினி விவரமாகக் குறித்துச் சொல்லிய ஒரு ரகஸிய

மூலிகையினால், ஒரு திராவகம் செய்து உயிர் வருக்கத்தைச் சாகும் படிச் செய்ய நான் சக்தி பெற்றேன். மேற்படி மருந்தின் உதவியி னால் அநேக காட்டு மிருகங்களைக் கொன்றேன். இதன் பிறகு, 1922-ம் வருஷத்திலிருந்து இந்திரலிங்கம் பிள்ளையை இம் மருந்தி னால் கொன்று பழி தீர்க்கவேண்டுமென்று சபதம் செய்துகொண் டேன். அநியாயமாக எனது கற்பை யழித்து என்னை ஒன்றுக் கும் உதவாமல் செய்துவிட்ட அவரைக் கொலைசெய்ய எனது மனம் பரிபூரணமாகத் துணிந்துவிட்டது!" என்றாள் லீலாஜீவை.

"ஆச்சரியம். நீ பெண் பிள்ளையாயிருந்தும் இவ்வளவு தைரியம் எப்படி வந்தது? இந்திரலிங்கம் பிள்ளை என்பது யார்?" என்றேன் நான்.

"சுபேதார் மகேந்திரன் என்று நீங்கள் நினைத்திருக்கிற பேர் வழிதான் இந்திரலிங்கம் பிள்ளை!"

"அடே, மகேந்திரம் பிள்ளையா இந்திரலிங்கம்! பேஷ்! அவரா உன் புருஷன்?" என்றேன் நான்.

"ஆம். 1925-ம் வருஷம் ஜூன் மாதம் இந்திரலிங்கம் பிள்ளை சுபேதார் வேலையிலிருந்து ரிட்டயர் ஆனார். ரிட்டயர் ஆன ஒரு வருஷத்துக்குள் நான் அவர் வீட்டில் தீ வைத்துக் கொளுத்தி யதால், அவருடைய செல்வமும் ரொக்கப் பணமும் ஏட்டுச்சுவடிக ளும் எரிந்துபோய், ஒட்டாண்டியாகப் போய்விட்டார். இந்தச் சமயம் பிரபாகர அடிகள் என்று ஒரு திருட்டுச் சாமியார் இந்திரலிங் கத்துக்குச் சிநேகமாயினான். பிரபாகரன் வேஷம் சம்பந்தப்பட்ட வரையில சாமியே தவிர உண்மையில் படுலே போக்கிரி ஆசாமி! பெரிய பெரிய பிரபுக்களிடமும் கனவான்களிடமும் அணுகியிருந்து சமயம் பார்த்துத்திரண்ட ரூபாய்களைக் கொள்ளையடித்து வருபவன். பிரபாகரனைச் சேர்ந்த இந்திரலிங்கம் பிள்ளையும் மேற்படி வேலையில் இறங்கிவிட்டார். பழைய வைத்திய சாஸ்திரங்கள் மூலமாகவே அவர்களும் சில அந்தரங்கமான மருந்துகளைக் கண்டு பிடித்து மனிதர்களை இம்சித்து வந்ததாக நான் அறிந்தேன்."

"பிரபாகரன் என்பவன் கை தேர்ந்த கொலைகாரனாதலின், ஜமீன்தார் போலவும் மிட்டாதார் போலவும் வேஷமிட் டுக் கொண்டு பெல்ஜியம், இங்கிலாந்து, அமரிக்கா முதலிய தேசங்களிலும் சென்று சூறையாடிச் சூறையாடி வெகு சீக்கிரம் பெரிய

மோசடிக்காரனுன். இந்திரலிங்கம் பிள்ளையைச் சதிசெய்யச் சில சமயம் நான் முயன்று தவறிவிட்டபடியால் நானே அவனுடைய எதிரியாக இருக்கிறேன் என்பதை அவன் அறிந்து என்னைக் கொல்ல வழி பார்த்துக்கொண்டிருந்தான். 1928-ம் வருஷம் மார்ச்சு மாதம் இந்திரலிங்கம் கண்டிக் காட்டிலுள்ள எனது குடிசையில் தீ வைத்துவிட்டான். ஆதலின், நான் மறைத்து வைத்திருந்த சல்லியகரணி, சந்தானகரணி, சமனியகரணி, மிருதசஞ்சீவினி, வளையாபதி, ஆகிய நூற்களும் தீக்கிரையாகி யொழிந்தன!" என்றாள் லீலாஜீவை.

"அடடா! அவைகள் எரிந்தா போய்விட்டன?" என்றேன் நான்.

"1928-ம் வருஷமுதல் எங்களுடைய ரகஸிய போராட்டம் மிக மிக மும்முரமாகவும் சிக்கலாகவு மிருந்தது. மேற்படி வருஷம் நான் இந்தியாவுக்கு வந்துசேர்ந்தேன். திருக்குற்றாலத்திலுள்ள அகஸ்தியாஸ்ரமத்தில் சில காரணங்களை முன்னிட்டுத் தங்கியிருந்தேன். கொழும்பில் நான் வைத்துவந்த ஒற்றாள் உடனே அங்கு வரும்படி எனக்குத் தந்தி கொடுத்தது. திடீரென்று நான் போவதற்கு முடியவில்லை."

"அதற்குப் பிறகு 1929-ம் வருஷம் இந்த பங்களாவை விலைக்கு வாங்கிக்கொண்டு இதிலேயே வசித்து வருகிறேன். கடந்த ஒரு வருஷத்துக்குள் எத்தனையோமுறை இந்திரலிங்கம் பிள்ளை தப்பிப் பிழைத்திருக்கிறான். இவ் வருஷம் சில மாதங்களுக்கு முன் இந்திரலிங்கம் பிள்ளை எழும்பூர் ஸ்டேஷனில் ரயிலேறுவதைக் கண்டு பின் தொடர்ந்தேன். தாம்பரத்திலிறங்கி நளராஜ பவான் என்னும் காப்பி ஹோட்டலில் தங்கினான். சுமார் ஒன்பது மணிக்குக் கல்யாணபவனத்துக்குப் போய்த்திரும்பினான். மற்றோர் குடிசைக்குள் போய் நுழைந்தான்; மறுபடியும் கல்யாணபவனத்துக்குச் சென்றான். அங்கே, ஒரு சின்னஞ் சிறு பெண்மணி ரகஸியமாக வந்து அவனுடன் பேசிக்கொண்டிருந்தாள்!"

"அந்தப் பெண் நான்தான்!" என்றாள் ஜனகம்.

"தெரியும்! உங்கள் சம்பாஷணையை நான் சரியாகக் காது கொடுத்துக் கேட்க முடியவில்லை. ஆனால், உங்கள் இரண்டு பேரையும் கொன்றுவிடுவதென்று தீர்மானித்து நீங்கள் வரும் வழியில்

ருந்த குட்டையின் பாலத்து இரும்புக் கைப்பிடியில் விஷ திராவகத்தைத் தடவி விட்டு வந்துவிட்டேன். ஆனால், என்னுடைய உத்தேசம் தவறிவிட்டதென்பதைப் பத்திரிகை மூலமாக அறியப் பெற்றேன். உங்களுக்குப் பதில் நிரபராதியான ராமச்சந்திரம் பிள்ளை இறந்தார்!" என்றாள் லீலாஜீவை.

"ராமச்சந்திரம் பிள்ளை கொல்லப்பட்டது உன்னால்தானா?" என்று நான் ஆச்சரியத்துடன் வினவினேன்.

"மெய்யாகவே என்னைக் கொலைகாரி யென்று சொல்ல உங்களுக்கு அதிகாரமுண்டு! ஆனால், நான் ஒன்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்துவிட்டது!" என்றாள் லீலாஜீவை.

"எங்கள் கல்யாண ரகஸியம் என்ன என்பதைப்பற்றி உன்னால் ஒன்றும் சொல்ல முடியாதா?" என்றேன் நான்.

"எனக்கெப்படித் தெரியும்? இந்திரலிங்கத்துக்கும் பிரபாகரனுக்கும் நான் வைரி. அவர்கள் என்னைக் கொன்றுவிடச் சமயம் பார்த்தார்கள். தாம்பரம் கொலை சம்பவத்துக்குப் பிறகு, தங்கசாலை வீதியில் ஜனகத்தைக் கொல்ல முயன்றேன். ஏனெனில் ஜனககுமாரி இந்திரலிங்கத்தின் சோரநாயகி யென்று நான் தப்பாக அறிந்து வைத்திருந்தேன். எனவே, சோரநாயகனும் சோரநாயகியுமாக என்னைக் கொல்ல முயற்சிப்பதாக நினைத்து அவர்களிருவரையும் நான் கொல்ல முயன்றேன்!" என்றாள் லீலாஜீவை.

"பேஷ்! நன்றாக இருக்கிறது கதை! ஜனககுமாரியை எப்படிக் கொல்ல முயன்றாய்?"

"இந்திரலிங்கம் எழுதியதைப் போல ஒரு பொய்க் கடிதம் எழுதிக்கொண்டு சென்று தந்திரமாக அவளுடன் பேசியிருந்துவிட்டு விஷத்திராவகத்தை புத்தகநிலயத்தின் கைப்பிடியில் தடவிவிட்டு வந்துவிட்டேன். நான் வரும்பொழுது இவள் மூர்ச்சித்து விழுந்துவிட்டாள். டாக்டர் மேனனின் திறமையினால் ஜனகம் பிழைத்துக்கொண்டு எனக்கு ஆசாபங்கத்தை ஏற்படுத்தினாள். மேனன் வந்து வைத்தியம் செய்வதற்கு நீரே காரணமாயிருந்தபடியால் உம்மையும் கொல்ல முயன்றேன்!" என்றாள் லீலாஜீவை.

"திண்டிவனத்தில்தானே!" என்றாள் ஜனகம்.

"ஆம், நான் வந்த சமயம் நீங்கள் இருவரும் உங்கள் அறைகளில் காணப்படவில்லை. ஆதலின் படுக்கையில் விஷ திராவகத்தை விட்டுவிட்டு வந்துவிட்டேன்!"

"எப்படி நீ வெளியே போனாய்?"

"நூலேணி யொன்று ஏற்கனவே தொங்கிக் கொண்டிருந்தது. இதன் வழியாக இறங்கிவந்து ஜனககுமாரியைத் தேடினேன். காணப்படவில்லையாதலின் நான் போய்விட்டேன்" என்றாள் லீலாஜீவை.

"அன்று தினம் நாங்கள் அவ்வளவு அதிகமாய்க் கஷ்டப்படாததற்குக் காரணமென்ன?"

"அவசரத்தில் மருந்து குறைந்த சொட்டாக விழுந்திருக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் நீங்கள் இருவரும் இறந்திருக்கவேண்டும். ஆனால், உங்கள் இருவரையும் தப்பெண்ணங்கொண்டு சதி செய்ய முயன்றதற்காக இப்பொழுது வருந்துகிறேன். உங்கள் மன்னிப்பையும் கோருகிறேன்" என்றாள் லீலாஜீவை.

"எல்லா விஷயங்களும் அநேகமாய் தெளிவாயின. எங்கள் கலியாண மர்மம் மட்டும் தெளிவுபடவில்லை. பிரபாகரனும் இந்திரலிங்கமும் எங்கிருக்கிறார்களென்று உனக்குத் தெரியுமா!" என்றேன்.

"அ[illegible]ாய், இந்திரலிங்கம் என்று மாறு பெயர் வைத்துக்கொண்டிருக்கும் பிரபாகரன் இதே மாளிகையில் என்னால் சிறைப்படுத்தப்பட்டிருக்கிறான்" என்றாள் லீலாஜீவை.

"உண்மையாகவா?" என்று நான் ஸ்தம்பித்துப் போனேன்.

"உண்மைதான். இங்கே வாருங்கள்" என்று சொல்லி எங்களைப் பின்கட்டுக்கு அழைத்துச் சென்றாள்.

---

33. தீயவர் முடிவு

லீலாஜீவையிடமிருந்த அச்சமெல்லாம் பஞ்சாய்ப் பறந்து விட்டது. இப்பொழுது அவள் ஒரு சாதாரணமான பெண்மணி போலவே தோன்றினாள். பின் கட்டின் ஓர் அறையை அவள் திறந்தாள். அறையினுள் இந்திரலிங்கம் கையைத் தலையில் வைத்துக்கொண்டு விசனத்துடன் அமர்ந்திருந்தான். கதவைத் திறந்த போது அவன் அண்ணாந்துப் பார்த்தான். சடக்கென்று முகம் வெளுத்து வில விலத்துப் போனான்.

"ஹோ—! நீயா? நீங்களா?" என்று கோபத்துடனும் அச்சத்துடனும் கேட்டான்.

"ஆம்; மனிதா சில விஷயங்களைப் பற்றி உன்னிடம் பேச வேண்டியிருக்கிறது" என்றேன் நான்.

"ஆ! இந்தச் சண்டாள ஸ்திரீ காட்டிக் கொடுத்தாள்" என்று லீலாஜீவை மீது பாயச் சென்றான் இந்திரலிங்கம்.

"இந்திரலிங்க மென்று பொய்ப் பெயர் வைத்துக்கொண்டு திரியும் பிரபாகரக் கள்வனே! முன்னெச்சரிகை யில்லாமல் நான் இங்கு வரவில்லை. நான்குபக்கமும் போலீஸ்காரர்கள் சூழ்ந்திருக்கின்றனர். தாமதமின்றி உண்மையைச் சொல். மீறி ஏதேனும் செய்வாயானால், நீங்கள் இருவருமே கைதி செய்யப்படுவீர்கள்!" என்றேன் நான்.

"எனக் கொன்றுந் தெரியாது!" என்று சொல்லிக்கொண்டு சட்டைப் பையில் ரகஸியமாகக் கையை விட்டான். சட்டைப்பையில் ரிவால்வார் இருக்கிறதென்பதை நன்கறிந்து கொண்டேன்.

"ஏ! கையை வெளியே எடு! எங்கள் கல்யாணத்தின் மருமத்தை உடனே சொல்! உன்னிடம் கைத் துப்பாக்கி யிருக்கிறதென்பது எங்களுக்குத் தெரியும்!" என்று என் கைத் துப்பாக்கியை அவனது முகத்துக்கு நேரே நீட்டினேன். இந்திரலிங்கத்தின் முகம் வெளுத்தது. அச்சம் தாண்டவமாடிற்று.

லீலாஜீவை வெறித்துப் பார்த்தாள். இந்திரலிங்கம் பெட்டியில் பாம்படங்குவதைப்போல அடங்கினான்.

"சொல்லிவிடு! சொல்லிவிடு!! உன் உயிர் தப்பவேண்டுமானால் சீக்கிரம் சொல்லிவிடு" என்று உருட்டி நோக்கினாள் லீலாஜீவை.

"நான் கடந்த நான்கு மாதமாக சும்மாவிருக்கவில்லை. இரவும் பகலும் இடையறாமல் உழைத்துக்கொண்டு வருகிறேன். நீ எத்தகைய மனிதனென்பதை நீர அறிந்திருக்கிறேன். சீக்கிரம் உன் வாயினாலேயே எல்லாவற்றையும் சொல்லி மன்னிப்பு பெற்றுக் கொள்!" என்று அதட்டினேன் நான்.

"அறிந்திருந்தால் எதற்காக வற்புறுத்துகிறாய்?" என்று பதிலுக்குக் கேட்டான் அந்த உக்கிர நாகன்.

"இல்லை. அது போதுமானதாயில்லை. எதையும் மறைக்க முயல்வதில் பயனில்லை. எல்லா உண்மைகளையும் உன் வாயினாலேயே கேட்கவேண்டும்!" என்றேன் நான்.

"முடியாது!"

"இதோ பார்! பொலீஸ்காரர்களை ——"

"இல்லை, வேண்டாம். நான் சொல்லச் சொல்கிறேன். ஏ, சொல்லய்யா உண்மையை ——" என்றாள் லீலாஜீவை.

ஒரு நீண்ட நிசப்தம் நிலவியிருந்தது. இந்திரலிங்கம் லீலாஜீவையை நோக்கித் திரு திருவென்று விழித்தான்.

இந்திரலிங்கம் ஆத்திரம் தொண்டையை அடைக்க இயல்புக்கு விரோதமான நூதன குரலுடன் பேசத் தொடங்கினான்.

"என் தந்தை கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தராய் இருந்தார். வெகு இளமையிலேயே நான் பத்தாவது வகுப்பு வரையில் படித்து முடித்துவிட்டேன். எனக்குத் தமிழ் சித்தர்களின் கலைஞானங்களில் அந்த வயதிலிருந்தே பிரியம் அதிகமாயிருந்தது. ராமலிங்கசுவாமிகளைப்பற்றி அக்காலத்தில் வியந்து வியந்து பேசுவார்கள். வடலூருக்கு வெகு பேர் போய்வந்தார்கள். சரியாக எனக்கு இருபது வயதிருக்கும்பொழுதே, யோகாசனங்கள் யோகாப்பியாசம் முதலியவைகளில் நல்ல பழக்கங்களை உண்டாக்கிக் கொண்டேன். எனது முப்பதாவது வயதில் நான் சந்யாசியாக வெளிக்கிளம்பிவிட்டேன்"

"யாழ்ப்பாணத்துக்குச் சென்றபின் கஞ்சா அபின் முதலியவைகளை அதிகமாய்ச் சாப்பிட்டும் அப்பியாசம் உண்டாகிவிட்டது. பின்னும் சில நாளில் ஜின், அராக், ஒயின், பிராந்தியிலிருந்து சாதாரண கள் வரையில் கணக்கு வழக்கில்லாமல் குடிப்பதற்கு

வந்துவிட்டது. ஆரம்பத்தில் சூன்யமாகக் காணப்பட்ட உலகம் அப்பொழுது சகலசம்பத்துக்களும் நிறைந்த இந்திரலோகம் போல எனக்குத் தோற்றியது. பிறகு, சாதாரண திருட்டு முடிச்சவிழ்ப்பு முதலிய தொழிலை ஆரம்பித்து வெற்றிகரமாய் நடத்திவந்தேன். ஒரு சந்யாசி மறைப்புமை வைத்திருந்தார். இவருடன் பழகி அதை அபகரித்த பின்னர் கொள்ளையடிப்பதற்கு வெகு இலகுவாகப் போய்விட்டது ''

'' 1925ம் வருஷத்திலிருந்து இந்திரலிங்கம் பிள்ளையின் நட்பு எனக்குக் கிடைத்தது. இச்சமயம் மறைப்புமை என்னிடமிருந்து காணமற் போய்விட்டபோதிலும் வயன்று என்ற லத்தீன் விஷ மருந்து திராவகத்தினல் பெரும்படியான கொள்ளையடிக்க முடிந்தது. கொழும்பு அம்பாள் பாங்கியில் முப்பத்தையாயிரம் பவுன்களை கொள்ளையடித்தோம். பினங்கு சரஸ்வதி கஜானவில் எழுபத்தையாயிசம் பவுனை அபகரித்தோம். இவைதான் எங்கள் பெரிய திருட்டு! இதைக் குறித்து நாளதுவரையில் போலீஸார் எங்களைத் தேடி வருகின்றனர். ஆனல். நாங்கள் செய்யும் ஆடம்பர வாழ்க்கையாலும், போடும் விசேஷ வேஷத்தினலும், போலீஸார் எங்களை நெருங்க அஞ்சினர். நாங்கள் வீலாஜீவைக்குப் பயந்தோமே யொழிய கவர்ன்மெண்டாருக்குப் பயப்படவில்லை !'' என்றான் இந்திரலிங்கம்.

''பேஷ்! பெரிய ஆசாமிகள்! அப்புறம், எங்கள் விவாக ரகஸியமென்ன?'' என்றேன் நான்.

'' நாங்கள் பொய்க்கையெழுத்துச் (Forgery) செய்வதிலும் கெட்டிக்காரர்களாயிருந்தோம். எங்களால் அநேக லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனிகள் (Life Assurance Companies) மோசம் செய்யப்பட்டிருக்கின்றன. தாம்பரம் ராமச்சந்திரம் பிள்ளையின் மனைவி ஞானரத்தினம் இந்திரலிங்கத்தின் பேச்சுவார்த்தைகளில் மயங்கியிருந்தாள். ஆதலின், அவளும் எங்களுக்குக் காரணமின்றி ரகசியமான உதவிகள் செய்துவந்தாள்.''

''சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் ஜனககுமாரி என்னும் ஒருத்தி பங்கஜலோசன லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனியின் பாலிஸிதாரியாயிருந்தாள். அவள் இறந்துவிட்டதாக நாங்கள் நிரூபித்துப் போர்ஜரி செய்தால் ஐம்பது லக்ஷம் ரூபாய் ரொக்கமாகப் பெறுவோம். ஆதலின், தெய்வநாயகம் பிள்ளையின் மைத்துனியாகிய

ஜனககுமாரி சென்னை புரசவாக்கம் ஐரோடில் நிகழ்ந்ததொரு கல்யாணத்துக்கு வந்த சமயம், தனது பந்துக்கள் அவளைப் பார்க்க விரும்புவதாகப் பொய்யுரை கூறி தந்திரமாக கந்தப்ப முதலித் தெருவுக்கு அழைத்துவந்து வயன்ரு விஷத்தைக்கொண்டு மயங்கச்செய்துவிட்டான்."

"பிறகு, ஒரு வேலைக்காரியைவிட்டு உன்னை அழைத்துவரச் செய்தான். நீ பணத்திற்கு ஆசைப்பட்டு இறந்துகொண்டிருக்கும் ஒரு பெண்மணியை ஒப்புக்கொண்டாய். கல்யாணம் செய்யவேண்டிய அவசியம் டாக்டர் சர்டிபிகேட் வாங்கவேண்டுமென்னும் நோக்கத்திற்கே தவிர வேறில்லை. வெறும் ரூபாயை மாத்திரம் லஞ்சம் கொடுத்து டாக்டர் சர்டிபிகேட் கேட்டால் ஒரு சமயம் ஆபத்தாக முடியுமென்று நினைத்து, இறக்குந் தருவாயிலுள்ள தன் பெண்ணை மணக்க அவன் கூறினன். எங்கள் எண்ணம் பூர்த்தியடையவில்லை. விஷத்தினுல் இறக்கச் செய்து பிடித்த புகைப்படத்தை டாக்டர் சர்டிபிகேட் இல்லாமல் அஷ்யூரன்ஸ் கம்பெனிக்கு அனுப்ப முடியவில்லை!"

"நீ சொல்லும் புகைப்படம் இதுதானு!" என்று நான் ஜேம்பாத்தில் ரகஸியமாக எடுத்துவைத்திருந்த புகைப்படத்தைக் காட்டினேன். அதைப் பார்த்து எல்லோரும் ஆச்சரியப்பட்டனர். இந்திரலிங்கம் அஞ்சிப் பின் வாங்கினன்.

"லீலாஜீவையைச் சந்தித்தேன் என்று எழுதிய ஒரு துண்டுக் கடிதம் அன்று தினம் ஜனகத்தின் தலைமாட்டிலிருந்ததே அதென்ன?"

"அது எங்கள் ஒற்றனுல் அனுப்பப்பட்டது!"

"சுவர்ணம்பாளுக்கு ஏதேனும் ரகஸியம் தெரியுமா!" என்றேன் நான்.

"வயன்ரு விஷத்தின் மாற்று மருந்தை இன்ஜெக்ஷன் செய்து ஒரு வண்டியில் வைத்துத் தங்கசாலைக்குக் கொண்டு போய்விட்டு, சுவர்ணத்திடம் லீலாஜீவை யென்னும் ஒரு பெண்மணியால் ராஜேஸ்வரன் என்னும் டாக்டருக்கு ஜனககுமாரி ரகஸியமாக மணம் செய்யப்பட்டாள். காரணம் தெரியவில்லை" என்று ஒரு போடு போட்டுவிட்டு ஜனககுமாரியின் கையில் அணிவித்த உனது மோதிரத்தையும் கழற்றி அவளிடம் கொடுத்துவிட்டு இந்திரலிங்கம் திரும்பிவிட்டான். இதன் காரணமாகவே, சுவர்ணம் லீலாஜீவை

யென்றாள் அல்லும் பகலும் பயங்கொண்டிருந்தாள். தாம்பரத்தில் கொலை நடந்ததிலிருந்து சவர்ணம் பயம் காரணமாக சித்தப்பிரமை பிடித்தவள் போலிருந்து வருகிறாள். இந்திரலிங்கத்தின் வார்த்தை ஜனககுமாரிக்குத் திகிலையும் விசனத்தையும் அளித்தது" என்றான் இந்திரலிங்கம்.

"ஜனகம், திண்டிவனத்தில் உனது டிராயரில் ஒரு செந்தமிழ் மொழியில் எழுதிய கடிதம் வைத்திருந்தாயே, அது எது?" என்று வினவினேன், நான்.

"அக்கடிதம் சுபேதார் என்னிடம் கொடுத்துப் பத்திரமாக வைத்திருக்கும்படிச் சொன்னார். அதைத் தங்களிடம் காட்ட வேண்டுமென்றுதான் கொண்டுவந்தேன், மறந்துவிட்டேன்" என்று சொல்லி முந்தானையில் முடிந்து வைத்திருந்த மேற்படி கடிதத்தை அவிழ்த்துக் கொடுத்தாள். அக்கடிதத்தை எடுத்து பிரபாகரனென்னும் இந்திரலிங்கத்தினிடம் கொடுத்து "இக்கடிதத்தின் பொருளென்ன?" என்று வினவினேன்.

"ஓ! இது பழைபர் கோவில் மகாலிங்கம் பிள்ளையிடமிருந்து களவு செய்த கடிதமல்லவா?" என்றான் இந்திரலிங்கம்.

"யார்—? மகாலிங்கம் பிள்ளையா? என்னுடைய தகப்பனல்லவா, அவர்!" என்றாள் ஜனகம்.

"ஆம், மகாலிங்கம் பிள்ளை இக்கடிதத்தை ஆச்சாள்புரம் அம்பலத்தரசம் பிள்ளையிடமிருந்து மறைமுகமாக எடுத்துக்கொண்டு வந்தாராம். அம்பலத்தரசம் பிள்ளையும் மகாலிங்கம் பிள்ளையும் மைத்துனர்கள். இந்தக் கடிதத்தாலேயே அவர்களுக்குள் மனஸ்தாபமேற்பட்டதாக மகாலிங்கம் பிள்ளை சொன்னார்!"

"ஓகோ!" என்றேன் நான். இந்திரலிங்கம் பிள்ளை சொல்லும் உண்மையை நோக்கிச் சவர்ணம் என்னிடம் தெரிவித்த விஷயம் யாவும் நிஜமாக வருவிக்கவேண்டுமென்று நிச்சயித்தேன்.

"இந்தக் கடிதத்தின் ரகஸிய மென்ன?" என்று உசாவினேன் நான்.

"இக்கடிதத்தின் மேற்பாகம் காணப்படவில்லை. இல்லாவிட்டாலும் இக்கடிதத்தின் உதவியைக் கொண்டு திருக்குற்றாலம் ஜயருவின்

குக் கீழ் அமைந்திருக்கும் அகத்தியர் குகையிலிருந்து சில அருமையான சகிய ரசவாத நூற்களையும் வைத்திய நூற்களையும் இன்னும் பல அரிய இயந்திர நூற்களையும் எடுத்தோம்!"

"அவைகள் எங்கே?"

"அவைகள் அனைத்தையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து ஹங்கேரியிலிருந்து வியன்னாவில் வாசம் செய்து வரும் பிரபல டாக்டர் பிரீபில் என்பவரிடம் அறுபதினுயிரம் பவுனுக்கு விற்று விட்டோம்!"

"அட பாவிகளே! இப்படித்தான் தமிழர்களின் கலை ஞானங்கள் தொலைகின்றன! சண்டாளனே! ஏன் இப்படித் தேசத்துக்கும் கிராமத்துக்கும் சமூகத்துக்கும் துரோகம் செய்தீர்கள்! ஒரு குலம் நன்மையடைய ஒருவனைக் கொல்லவேண்டுவதும், ஒரு கிராமம் நன்மையடைய ஒரு குலத்தை அழிக்கவேண்டுவதும், ஒரு தேசம் நன்மையடைய ஒரு கிராமத்தையே அழிக்க வேண்டுவதும் இன்றியமையாததா யிருக்கும் போது, தேசத் துரோகியாகவும் கொடிய கொள்ளைக் காரனுகவு மிருக்கும் உன்னைச் சும்மாவிடுவது பெரும்பாவம்!" என்று நான் ஆத்திரத்துடன் பேசினேன்.

இதுவரையில் பொறுத்துக் கொண்டிருந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் புண்ணியகோடி முதலியாருக்கு இதற்குமேல் பொறுக்க முடியவில்லை போலும்! போலீஸ் கான்ஸ்டபிள்களுடன் உள்ளே பிரவேசித்து விட்டார். போலீஸ் சிப்பந்திகளைக் கண்ட லீலாஜீவையும் இந்திரலிங்கமும் நடுங்கினார்கள். போலீஸ் இன்ஸ்பெக்டர் அருகில் நெருங்கிவருவதற்குள் பிரபாகரன் திடீரென்று கைத் துப்பாக்கியால் சுட்டுக்கொண்டு கீழே வீழ்ந்தான்., எல்லோரும் அவனிடம் ஓடிப்போய், குண்டு எங்கு பாய்ந்தது என்று கவனித்துக் கொண்டிருந்தோம். அச் சமயம் லீலாஜீவையும் ரிவால்வரினுல் தற்கொலை செய்துகொண்டு மாண்டாள். இந்திரலிங்கம் என்ற பிரபாகரனை உடனே சாகவில்லை. அவனை சுபேதார் மகேந்திரன் என்ற இந்திரலிங்கம் எங்கே என்று விசாரிக்கும் பொழுது, ஜூலை பன்னிரண்டாந் தேதி இரவு அகஸ்மாத்தாக வயன்ற விஷத்தினுல் அதிகமாகத் தாக்குண்டு, மாற்று மருந்தை உபயோகிப்பதற்குள் இறந்து விட்டதாக அவன் கூறிவிட்டு உயிர் துறந்தான்.

பிரபாகரன் லீலாஜீவையிடம் எப்படிப் பிடிபட்டான் என்பது அவனுடைய தினசரிக் குறிப்பிலிருந்து தெளிவாக விளங்கிற்று.

மேற்கண்ட இருவருடைய மரணத்தைக் குறித்து வருந்துவதா? அல்லது மௌனமாக இருந்துவிடுவதா? என்பது நேயர்களின் ஆலோசனையின் பேரிலேயே செய்யவேண்டியிருக்கிறது.

மற்ற எல்லா நடவடிக்கைகளையும் புண்ணியகோடி முதலியார் எடுத்துக்கொண்டார். கூப்பிடும் பொழுது சாட்சிகளாய் ஆஜராக ஒப்புக்கொண்டு நாங்கள் இருவரும் அவரிடம் விடை பெற்றுக்கொண்டு பச்சை மாளிகையை விட்டு வெளியே வந்தோம்.

மோட்டாரில் ஏறிச் சரியாக பத்தரை மணிக்கெல்லாம் தங்கசாலை வீதிக்குப் போய்ச் சேர்ந்தோம். ஜனகத்தைக் காணாமல் கவலைப் பட்டுக்கொண்டிருந்த சுவர்ணமும் [illegible] தெய்வநாயகம் பிள்ளையும் முகமலர்ந்து எங்களை வரவேற்றனர்.

“என்ன தம்பி, தங்கள் வீட்டிற்கு ஜனகம் வந்திருந்தாளா?” என்று உசாவினார் தெய்வநாயகம் பிள்ளை.

“ஆம்” என்று சொல்லிக்கொண்டே நாற்காலியிலமர்ந்தேன்.

“என்னிடம் சொல்லிக்கொண்டுதானே ஜனகம் ராஜேஸ்வரர் வீட்டுக்குப் போனாள்” என்றாள் சுவர்ணம்.

“அத்தானைப் பாராமல் ஜனகத்திற்குப் பொழுது போகவில்லை போலிருக்கிறது” என்று தெய்வநாயகம் பிள்ளை புன்னகை செய்தார். பல சம்பாஷணைகள் புரிந்த பின் சாப்பாட்டிற்குச் சென்றோம். சாப்பாட்டுக்குப் பின், பல்லாவரத்தில் நிகழ்ந்த சம்பவங்களையும், டாக்டர் மேனன் கண்டுபிடித்திருந்த விஷயங்களையும் எல்லோருக்கும் விவரமாக விளக்கிச் சொன்னேன். தெய்வநாயகம் பிள்ளையும் சுவர்ணமும் ஆச்சரியப்பட்டனர்.

மைலாப்பூர் எனது பங்களாவுக்கு நான் சென்றபொழுது மணி 12 ஆயிற்று.

34. குடும்ப க்ஷேமம்

மறுநாள் மாலை 6-மணிக்கு தெய்வநாயகம் பிள்ளை வீட்டுக்குச் சென்று உள் முகப்பைக் கடந்து தலையை நிமிர்த்தினேன்.

“நல்ல வேளை இதோ வந்துவிட்டார்” என்றார் தெய்வநாயகம் பிள்ளை.

“தம்பி” என்று ஒரு பெண்குரல் கூவிற்று. எனது கண்களை எனது கைகள் துடைத்துக் கொண்டிருந்தன. மீண்டும் அவைகள் கூர்ந்து நோக்குவதற்குள், “நீ எப்படி அம்மா இங்கு வந்தாய்?” என்று என் வாய் அவசரமாக ஒரு கேள்வியைக் கேட்டது. கண்கள் சாவகாசமாய் எனது அருமை அன்னையை இமை கொட்டாது நோக்கி ஸ்தம்பித்துப் போயின.

அங்கிருந்த மற்ற உறவினர்கள் என்னையே வெறிக்க வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தனர். ‘தம்பி’ என்று என்னை அழைத்த எனது அன்னை எனது அருகில் ஓடிவந்து “அதோ பார் உன்னுடைய அத்தை!” என்று சொல்லி இரத்தின ஜமுக்காளத்தில் கம்பீரமாய் அமர்ந்திருந்த ஒரு ஒற்றை நாடி பெண்மணியைச் சுட்டிக் காட்டினாள். அந்தப் பெண்மணி என்னைப் பார்த்துப் புன்னகை செய்தாள். “இதென்னடா விந்தை! அத்தையாவது ஆட்டுக் குட்டியாவது!” என்று நான் திகைப்படைந்தேன்.

“ராஜேஸ்வரா தெரியவில்லையா? நீ என்ன செய்வாய்! ஐந்து வயதில் பார்த்த ஒருத்தியை இப்பொழுது பார்ப்பதென்றால் யாருக்குத்தான் அடையாளம் தெரியும்?” என்று திருவாய் மொழிந்தாள் அத்தை.

“இன்னும் சற்று நேரம் நீ இங்கே வராதுவிட்டிருந்தால், நாங்கள் எல்லோரும் மைலாப்பூருக்கு வருவதாகத்தான் இருந்தோம்” என்றார் பெரிய நாற்காலியில் கன்னங்கரேலென்று சாய்ந்து கிடந்த ஒரு பூதப் பிரகிருதி. அந்தப் பெரிய கனபாடி மனிதரை நான் பார்த்ததே இல்லை. என்னை அவர் தெரிந்து கொண்டுதான் பேசுகிறார். நான் சிறிது நேரம் அவரையே உற்றுப் பார்த்தேன்.

“என்ன தம்பி, ரொம்ப ஆச்சரியமா இருக்கா? கிட்ட இருந்து பழகினாத்தானே தெரியும். நான் கிடக்கிறேன் ராஜ பாணத்திலே” என்றார் அதே கனபாடி.

"தம்பி ராஜு, அவர்தான் உனது மாமா மகாலிங்கம் பிள்ளை. உன் அத்தையின் கணவர். அதோ அவர்கள் உனது அத்தை மேனகசௌந்தரத்தாச்சி" என்று தெய்வநாயகம் பிள்ளை அறிமுகம் செய்தார்.

ஒரு உயர்ந்த ஆசாமி கழுக்கு முழுக்கென்று நெருப்பைக் குளிப்பாட்டிய நிறத்துடன் நின்றுகொண்டு என்னையே உற்றுப் பார்த்தார். ராமன் அல்லது லெட்சுமணன் இந்த இருவர்களில் யாரேனும் ஒருவர் அவரைப் பார்த்திருந்தால் ராவணனுடைய தம்பியோ வென்று வில்லை வளைத்திருக்கக் கூடும். அவனுக்கும் பக்கத்தில் எனது அத்தையைப் போலவே ஒடிந்து விழுந்த சவலைப் பேர்வழி ஒருவன் உட்கார்ந்திருந்தான். இன்னொருவன் மாஞ்செவலையாக திருப்பதிக்கு முடி வளர்த்துவிட்டு உட்கார்ந்திருந்தான். இவர்களை நான் கூர்ந்து கவனிப்பதை அறிந்த எனது மாமா,

"என்ன முழிக்கிறாய்? அவர்கள் நம்முடைய குழந்தைகள்தான். அவன் கங்காதரன்! அவன் சபாபதி! அந்தச் செவலையான் சிவப்பிரகாசம்!" என்று அவர்களை அறிமுகப் படுத்தினார்.

குழந்தைகள், முழிக்கிறாய், செவலையான், முதலியவைகளெல்லாம் யாழ்ப்பாணத்து இலக்கணத் தமிழ்ச் சொற்களாயிருக்க வேண்டும்.

திரிவித தமிழர்களாய்க் காட்சியளித்த எனது அருமை மைத்துனர்கள் என்னைப் பார்த்துப் புன்னகை புரிந்தனர். புன்னகைகள் கூட யாழ்ப்பாணத்து நாகரிகத்தின்படியேதான் பூத்தன.

"உங்களைப்பற்றிச் சில மாதங்களுக்கு முன்னமேயே விசேஷித்துப் பேசியிருக்கிறேன்!" என்று கங்காதரனைப் பார்த்து நான் ஆங்கிலத்தில் சொன்னேன்.

"ஓஹோ! அப்படியானல் எங்களை நன்கு தெரியுமென்று சொல்லுங்கள்!" என்றார் கங்காதரம்பிள்ளை.

"ஏண்டா தம்பி உனக்கெப்படித் தெரியும்?" என்றாள் எனது அன்னை.

"தெரியும் அம்மா ஜனகம் சொல்லியிருக்கிறாள்!" என்றேன் நான்.

"அண்ணீ, விஷயம் உங்களுக்குத் தெரியுமா —?" என்று எடுத்தாள் எனது அத்தை. அதற்குள் தெய்வநாயகம் பிள்ளை கண்ணைக் காட்டினார்.

"என்ன —?" என்றாள் எனது தாயார்.

"உங்கள் மருமகன் மருமகள்களைத் தெரிகிறதா என்று கேட்டேன்" என்று அத்தை பேச்சை மாற்றிவிட்டாள்.

"இந்த அவலப் பிறப்புகளோடு எனக்குப் பேசிக் காலங்கழிக்க மனம் இல்லை. ஜனகம் பேச வேண்டும். அந்த சொற்களின் இனிமையையும், வர்ணிப்புகளோடு கோக்கப்பட்ட அர்த்த புஷ்டியையும் கேட்க வேண்டும். இந்த ஜாம்புவான்களோடும் தசக்கிரீவர்களோடும் ஜனகம் எப்படிப் பிறந்தாளோ தெரியவில்லை. அது கிடக்கிறது, எனது மைத்துனர்களும் மாமாவும் அத்தையும் எங்கே வந்தார்கள்? எனது அம்மா எப்படி இங்கேவந்தாள்? எல்லாம் வியப்பாக விருக்கிறதே. கேட்டுவிடுவோம்" என்று கருதிய நான்,

"ஏனம்மா, மாமா அத்தை ஆகிய இவர்களையெல்லாம் நீ எங்கே சந்தித்தாய்? மைலாப்பூருக்கு வராமல் இங்குவர என்ன காரணம்?" என்றேன் நான்.

"இருபது வருஷங்களுக்குப் பின்னால், உன் அத்தைக்கு கண் தெரிந்தது! அவர்கள் பிறந்த ஊருக்கு உன்னைத் தேடிவந்தார்கள் —?"

"என்ன? ஆச்சாள்புரத்துக்கா? ஆச்சரியம்! ஆனால், காலம் யோக காரகனுடைய காலமாயிருந்தால் எல்லாரும்தானே தேடிக் கொண்டுவந்து உறவு கொண்டாடுவார்கள். இன்னும் கொஞ்சம் என் பேர் பரவினால், காட்டூர் மாமாகூட மருமகனைத் தேடிக் கொண்டு வந்து 'டௌரி'யோடு பெண் தருவதாகச் சொல்லுவார்!" என்று எனது அன்னையின் தம்பியுடைய குண விசேஷத்தைப் பற்றி ஒரு அழுத்து அழுத்தினேன்.

"அடே யப்பா தம்பிக்கு லௌகிகத்தில் கொஞ்சம் ஞானம் சூன்யமாகவிருக்கு மென்றல்லவோ நினைத்தேன். ஹூம்!" என்றார், இதுவரையில் மௌனமாக விருந்த தெய்வநாயகம் பிள்ளை.

"அதை யேன் கேட்கிறீர்கள். '**தக்ஷகஸ்ய விஷம் தம்ஷ்ட்ரா ஸர்வாங்கம் துர்ஜனே விஷம்;**' என்று சொல்வதற்குப் பதிலாக ஸர்வாங்

கம் ராஜேஸ்வரே விஷம் என்று சேஷு வீட்டம்மா அடிக்கடி சொல்லித் தம்பியைப் பரிகசிப்பாள்!" என்று என தன்னை சொன்னாள்.

"அதென்ன அக்கா சமுஸ்க்ருதம் மாதிரி இருக்கிறதே, உங்களுக்கு அது வருமா?" என்றார் மகாலிங்கம் பிள்ளை.

"அதற்கு அர்த்தம் என்ன அண்ணி?" என்றாள் எனது அத்தை.

"பாம்புக்குப் பல்லில் விஷம் ராஜேஸ்வரனுக்கு உடம்பெல்லாம் விஷம்! என்றர்த்தம்" என்றாள் அன்னை.

எல்லோரும் நகைத்தனர்.

இந்தக் கூட்டத்தில் இரண்டு உருப்படிகளை மட்டும் காணவில்லை. அதனால் என் மனம் அவ்வளவு சந்தோஷமாகவு மில்லை. இந்தக் கண்கள் சாதாரணம் ஜடந்தானே? இவைகள் ஏன் இப்படி ஜனகத்தைத் தேடுகின்றன. பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன் முடியவில்லை.

"ஜனகம் எங்கே காணோம்?" என்று தெய்வநாயகம் பிள்ளையை நோக்கி வினவினேன்.

"ஜனகம் யார் தெரியுமாடா தம்பி?" என்றாள் என்னுடைய சொந்த அம்மா.

"யார்?"

"உன்னுடைய சொந்த அத்தை இதோ இருக்கிறார்கள் பார்! இவர்களுடைய புதல்வி! உனக்கு மச்சினி!" என்றாள் எனதன்னை.

"மச்சினி யில்லை. அம்மா, ஜனகம் ராஜேஸ்வரனின் மச்சினியல்ல; மனைவி!" என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினார் தெய்வநாயகம் பிள்ளை.

"ஆமாம் மனைவியாக ஆகவேண்டியதுதானே; ஆனால், கடவுள் சித்தமும் லபியின் கருணையும் எப்படி இருக்கிறதோ?" என்றாள் அன்னை.

"இல்லை அம்மா, ஜனககுமாரி ராஜேஸ்வரனின் அக்கினி சாட்சியாக மாங்கல்யதாரணம் செய்யப்பட்ட மனைவி!" தெரியாதா உங்களுக்கு — ?" என்றார் தெய்வநாயகம் பிள்ளை.

எனது அன்னையைத் தவிர அங்கிருந்த வேறெருவருமே ஆச்சரியப்பட வில்லை. எனக்கு மாத்திரம் எனது அன்னையைப் போலவே போரச்சரியம் உண்டாயிற்று. என் தெரியுமா? ஜனகம் எனது மனைவி யென்று கன்னிசழியாதவளாக மதிக்கப்படும் அவளைச் சொல்லும் பொழுது, மற்றவர்கள் ஏன் ஆச்சரியப்பட வில்லை? இதுவேதான் எனதாச்சரியம்.

"என்ன தம்பி விளையாடுகிறீர்கள்?" என்றாள் அன்னை.

"அம்மா நான் உண்மையைச் சொல்லுகிறேன். எதிர்பாரா விதமாக பந்துக்கள் யாரிடமும் சொல்லிப் பேசாமல் திடீரென்று தங்கள் குமாரனுக்கும் ஜனககுமாரிக்கும் திருக்கழுக்குன்றம் ஸ்ரீ சுப்ரமண்யசுவாமி சந்நதியில் விவாகம் நடைபெற்று விட்டது!'

"நம்பவே முடியவில்லை!"

"அண்ணி வாஸ்தவந்தான்! நமக் கெல்லாம் தெரியாமல் மைத்துனனும் மைத்துனியுமாக விவாகம் செய்துகொண்டனர்!" என்று சொல்லி என்னைப் பார்த்துப் புன்னகை செய்தாள் அத்தை. எனதன்னை என்னை வெறிக்கப் பார்த்தாள்.

"அத்தை இந்த ரகஸியம் உங்களுக் கெப்படித் தெரியும்?" என்று நான் அத்தையைக் கேட்கும்போதுதான் அம்மாவின் சந்தேகம் பலப்பட்டது.

"சுபேதார் இந்திரலிங்கம் பிள்ளை காலையார் கோவிலிலிருந்து உனது மாமாவுக்கு உன் கல்யாண விஷயத்தைப்பற்றி விரிவாக ஒரு கடிதமெழுதி, ஐம்பதினுயிர ரூபாவுக்குச் செக் அனுப்பி அதை ஜனகத்துக்கும் ராஜேஸ்வரனுக்கும் கொடுத்துவிடும்படி எழுதியிருக்கிறார். மாமா உடனே எங்களுக்கு கடிதமெழுதி நாங்கள் எல்லோருமாகப் புறப்பட்டு ஆச்சாள்புரம் வந்து அண்ணியை அழைத்துக் கொண்டு இங்கு வந்துசேர்ந்தோம்!" என்றாள் அத்தை.

என்ன வியப்பான செய்தி! மேஜர் இந்திரலிங்கம் மகாலிங்கம் பிள்ளைக்கு உண்மையைத் தெரிவித்திருப்பதோடு ஐம்பதினுயிரம் ரூபா நன்கொடை கொடுத்திருக்கிறுரே ஏன்?

"கடிதம் எப்பொழுது எழுதினுன்?" என்றேன் நான்

"கடிதம் இதோ இருக்கிறது, படித்துப் பாருங்கள் !," என்று சொல்லி மகாலிங்கம் பிள்ளை என்னிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தார். அதை வாங்கி எனக்குள்ளேக் கேட்குமாறு படித்தேன்.

சென்னை
5 உ ஜூலை 1930.

அன்பார்ந்த மகாலிங்கம் பிள்ளைக்கு,

இத்துடன் ஐம்பதினாயிரம் ரூபாய்க்கு மீனாம்பிகா பாங்கியின் 'செக்' இருக்கிறது. இந்த ரூபாய்களைத் தங்கள் புதல்வி ஸ்ரீமதி ஜனககுமாரிக்கும் அவளது கணவன் ஸ்ரீமான் ராஜேஸ்வரனுக்குமாகக் கொடுத்துவிடுக. லீலாஜீவை யென்ற ஒரு பெண்மணியானவள் ஜனககுமாரியை ராஜேஸ்வரனென்பவனுக்குத் திருக்கழுக்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் ரகசியமாகத் திருமணம் செய்து கொடுத்துவிட்டாள். ரகசிய மணம் ஏன் செய்வித்தாள் என்பதைத் தெரிந்து கொள்ள முடியவில்லை. பின்னர் விசாரிக்கும் பொழுது டாக்டர் ஏ. ராஜேஸ்வரன் (எம். பி.பி.எஸ்.) என்பவன் தங்களுடைய மைத்துனர் அம்பலத்தரசம் பிள்ளையின் குமாரன் என்று தெரிகிறது. தங்கள் மூத்த குமாரி ஸ்ரீமதி சுவர்ணமே மேற்படி விஷயத்தை ஒப்புக் கொள்ளுகிறாள். நெற்றியிலுள்ள ஒரு மச்சத்தைக் கொண்டு ராஜேஸ்வரனை சுவர்ணம்பாள் நன்கு தெரிந்து கொள்ள முடிகிறதாம். லீலாஜீவையைப் பிடித்து மேற்படி மர்மக் கல்யாணம் செய்வித்ததற்குப் பரிகாரமாக ரூபா ஐம்பதினாயிரம் வாங்கி 'செக்' அனுப்பி யிருக்கிறேன். ஜனககுமாரியும் ராஜேஸ்வரனும் பரஸ்பரம் ஒருவருக் கொருவர் காதலிப்பதாகத் தெரிகிறது. ஆதலின், மர்மமாகச் செய்யப்பட்டாலும் ஒரு ரத்த பாத்தியமுள்ள மாப்பிள்ளைக்கே அவளை விவாகம் செய்யப்பட்டிருக்கிறதாதலின், நீங்களும் உங்கள் பந்துக்களும் மேற்படிக் கல்யாணத்தை **அங்கீகரிப்பீர்களென்று நம்புகிறேன்.** நான் வருகிற **ஜூலைமாதம் பதினைந் தேதி புதன்கிழமை** காலை 8-30 மணிக்குப் **பம்பாயைவிட்டுப்** புறப்படும் மெயிலில் வெளிதேசம் செல்ல விருக்கிறேன். பன்னிரண்டாந் தேதியே சென்னையை விட்டுப் புறப்பட்டு விடவேண்டும். அதற்குள் தாங்கள் வரமுடிந்தால் வருக. மற்றவை நேரும்பொழுது.

தங்கள்
பழைய நண்பன்,
சுபேதார். ஜி. இந்திரலிங்கம்.

கடிதத்தைப் படித்து முடித்தவுடன் என் அன்னை அம்புஜாட்சி யின் முகம் பிரகாசமடைந்தது. அந்தப் பிரகாசமான வதனத்தில் பூரணச் சந்திரனிடம் தோன்றுகிற மருப்போல, ஏதோ ஒரு கவலைச் சுழியும் கலந்திருந்தது. இந்தச் சமயம் பொன்னுருவியும் ஜனக மும் உள் கட்டிலிருந்து வந்தனர். சுடர் விட்டுப் பிரகாசிக்கும் மின்சாரதீபத்தின் ஒளி என் அருமந்த மனைவி ஜனகத்தின் சௌந்தர்ய வதன ஒளியின் தேஜஸைப் பதின் மடங்கு எடுத்துக் காட்டிற்று. மலர்ந்த இனிய முகத்தில் அந்தப் புன்னகை எவ்வ ளவு வனப்பையும் கௌரவத்தையும் பெறுகின்றது!

“வாருங்க வாருங்க! இருக்கிற ஜோக்கத்தைப் பார்த்தால் இங்கு வந்து நாழியாகிறதாகத் தெரிகிறதே! தங்கள் மாமா அத்தை மைத் துனர் எல்லோரையும் பார்த்தீர்களா? எங்கள் மாமி கூட வந்திருக் கிறார்கள்! எல்லோரும் தங்கள் மனைவியையும் தங்கையும் பார்த்து ஆசி கூற வந்திருப்பதாகத் தெரிகிறது!” என்று பரிகசித்தாள் சுவர்ணம்.

எல்லோரும் உரத்துச் சிரிக்காமல் உதட்டை பசைத்தார்கள். ஜனகம் அன்பு தவழ என்னை நோக்கிப் புன்னகை செய்தாள்.

“நடந்தவரையில் சரி, ஆனால், எல்லோரும் பார்க்க எடுக்கமுடி யாமல் காரியம் முடிந்திருக்கிறது. அதுதான் கொஞ்சம் வருத்த மாயிருக்கிறது” என்றாள் அம்புஜாட்சி.

“அதைப்பற்றி என்ன? '**போது மென்ற மனமே பொன் செய்யும் மருந்து**' திருமண முறை பிரம மணத்தைச் சேர்ந்த தென்றாலும் **காந்தர்வக்கருத்து** தம்பதிகளிடம் இருப்பதாகத் தோன்றுகிறது. பிரமம், பிராஜாபத்தியம், ஆருடம், தெய்வம், காந்தர்வம், அசுரம், இராட்சசம், பைசாசம் என்று சொல்லப்படும் விவாக வகைகளில் காந்தர்வக் காதல் மணம்தான் விசேஷமாகச் சொல்லப்படுகிறது!” என்றார் தெய்வநாயகம் பிள்ளை.

“அவரவர்கள் கொடுத்து வைத்ததுதானே கிடைக்கும். வீண் ஆசைப்பட்டு என்ன செய்வது? '**பாக்யம் பலதி ஸர்வத்ர நவித்ய நச பௌருஷம்**' என்றபடி எவ்வளவு படிப்பும் எவ்வளவு அழகும் இருந் தென்ன, அதிர்ஷ்டம் வேண்டாமா?” என்று என்னுடைய அன்னை அம்புஜாட்சி உரைத்தாள்.

"சமஸ்கிருதம் என்ன தங்களுக்குத் தண்ணீர்ப் பட்டபாடாக வருகிறதே! ஏன் தமிழில் ஒரு பாட்டு அகப்படவில்லையா உங்களுக்கு?" என்றார் தெய்வநாயகம் பிள்ளை.

"எல்லாம் தையமுந்தம்மா சிகைஷ! சமஸ்கிருதத்தில் பெண் பிள்ளையாயிருந்தும் நல்ல படிப்பு. காளிதாஸன் காவியத்தை எடுத்துக் கொண்டால், பின்னு பின்னென்று பின்னி வாங்குவாள். குஸ ?ம குஸாமோத்பத்தி நசதிரிசயதே' என்ற காளிதாஸனின் மர்மமான கேள்விக்குச் சாதாரணம் ஒரு மிளகாய் அறைக்கிற பெண் பதிலளித்ததைப் பற்றிச் சொல்லும் பொழுது, நாக்கில் ஜலம் ஊறும்!" என்றாள் எனதன்னை.

சிவப்பிரகாசம், கங்காதரன் ஆகிய இருவரும் நாங்கள் பேசிக் கொண்டிருப்பதைக் கவனிக்கிறார்களோ இல்லையோ கடவுளுக்குத் தான் தெரியும். கங்காதரன் நாவல் பைத்தியம் பிடித்தவர் போலிருக்கிறது. ஒரு இங்கிலீஷ் நாவல் கையிலிருந்தது. சிவப்பிரகாசம் உத்தியோக வேட்டையில் ஆர்வமுடையவர்போல் தோன்றினர். கையில் உள்ள கெஜட் புஸ்தகத்தை ஊன்றிக் கவனித்துக் கொண்டிருந்தார்.

மூன்றாவது மைத்துனர் மட்டும் கொஞ்சம் விழிப்பான பேர்வழி. நாங்கள் பேசுவதை ஆழ்ந்து கவனித்ததோடன்றி இடையிடையே தன் அபிப்பிராயத்தை வெளியிடும் நோக்கத்துடன் வாயை வாயைப் பிளந்தான்.

"மணி ஒன்பதாச்சே" என்றார் எனது மாமா.

"ஆம். எல்லோரும் சாப்பாட்டுக்கு எழுந்திருங்கள். கல்யாணச் சாப்பாடல்லவா?" என்றாள் சுவர்ணம்பாள்.

35. இசுசுகம்

அன்றிரவு மணி பத்தடித்தது. அனைவரும் தத்தம் படுக்கையில் ஆழ்ந்த நித்திரை போய்க்கொண்டிருந்தனர். ஏப்பரல் மாதம் பனூறாந் தேதி முதல் நாளது ஜூலை மாதம் பதினைந்தாம் தேதி வரையில் எனக்கு நிகழ்ந்தவை அனைத்தும் ஒன்றன்பின் ஒன்றாக நினைவுக்கு வந்தன. எத்தகைய ஆரம்பம்! எத்தகைய முடிவு! எல்லாம் சிவன் செயல்!

எனது தோழன் கோபாலன் விசேஷ வைத்திய படிப்புக்காக லண்டன் போயிருக்கிறான். அவனுக்கு என்றென்றும் நன்றி செலுத்த நான் கடமைப் பட்டிருக்கிறேன். பாவம், பெண்புத்தி பின்புத்தி யென்று ஞானரத்தனம் தனது கெட்ட நடவடிக்கைகளால் போலீஸாரின் கையில் அகப்படுவதற்கு முன் வைகுண்ட பதவியை அடைந்தாள். மதனசுந்தரம் இருக்குமிடமே தெரியவில்லை.

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்

என்ற வள்ளுவரின் வாக்கு பொய்யாகுமா? பலவாறு எனது சிந்தனைகள் பாவிக்கொண்டிருந்த சமயம் கையில் பசும் பாலுடன் தோன்றினாள், ஜனகம்.

"அத்தான்" என்று சொல்லி பின் பகுதியைச் சொல்லத் தழதழத்தாள். அச்சொல் ஒன்றே என்னை மகிழ்விக்கப் போதுமானதாயிருந்தது. காதல் மயக்கம் கண்ணைச் சுற்றியது.

"நீங்கள் எங்கே படுக்கப் போகிறீர்கள்?" என்று கேட்டாள் ஜனகம். நான் பதிலிறுக்க வில்லை.

"மாடியில் காற்று ஜிலு ஜிலுவென்று வீசுமே! அங்கு படுத்துக் கொண்டால்——?" என்று மீண்டும் எடுத்துச் சொன்னதின் பேரில் என் தலை அசைந்தது. இருவரும் மாடியை அடைந்தோம்.

படங்களாலும், பலவகைச் சித்திர விசித்திரங்களாலும் அலங்கரிக்கப் பெற்ற அழகிய அறையொன்றில் வெல்வெட் பஞ்சணை, கொசுவலையுட்பட ஒரு கருங்காலி கட்டில் கிடந்தது. அழகிய மேஜையும் நாற்காலிகளும் புத்தக பீரோக்களும்கூட கிடந்தன. மேஜைமீது பலவிதமான கனிவர்க்கங்களும் சிற்றுண்டி வகைகளும்

வைக்கப் பெற்றிருந்த புஷ்பங்களின் நறுமணம் கம்மென்று வீசிற்று.

என்று அன்புள்ள ஜனகம் நாற்காலியில் அமர்ந்தாள். ஈரேழு லோகங்களிலும் வியாபித்திருந்த அழகு முழுவதும் திரண்டு வந்து ஒரு பெண்ணாக அவதரித்திருக்கும் ஜனகத்தைப் பற்றி நான் என்ன சொல்லுவேன்! ஞானமோ மோக்ஷமோ அடைவதற்காக முயலும் இடதீர சௌந்தரிய புருஷன் ஒருவன் தீர்ந்த அழகி ஒருவளைத் தேடி யடைய முயல்வானாயின்—, எல்லாச் சம்பத்துக்களையும் பெற்று ஞான மோக்ஷமும் அடைவானென்பதிற் சந்தேகமே இல்லை. வேற்று மனிதனிடம் ஒன்றுமே இல்லை. குலத்தின் கௌரவத்தையும் தேசத்தின் கௌரவத்தையும் வாழ்க்கையின் சீலத்தையும் காப்பதற்குச் செலுத்தும் சக்தி, வாழ்க்கைத் துணைவிகளையே சார்ந்திருக்கிறது.

இடுக்கண்கால் கொன்றிட வீழுமடுத் தூன்றும்
நல்லாள் இலாத குடி.

என்று திருவள்ளுவர், மனைவியை அடைதலின் பெருமையைப் பற்றி எவ்வளவு அழகாகச் சொல்லுகிறார்.

“அத்தான், இந்த சின்ன இருதயத்தில் எவ்வளவுபெரிய உணர்ச்சிகள் உண்டாகின்றன?” என்று ஜனகம் சொல்லிக் கொண்டே ஒரு நாரத்தம் பழத்தை உரித்து வெள்ளித் தட்டின் மீது எடுத்து வைத்தாள். பாவம்! ஜனகத்தைச் சூழ்ந்து மூடியிருந்த நாணமாகிய கவசத்தை எங்கே காண்போம்?

கடலன்ன காம முழந்து மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில்

என்ற லட்சணம் ஜனக குமாரியிடம் நிறைந்து காணப்பட்டது. **குடும்ப வாழ்க்கையே எல்லாப் புருஷார்த்தங்களிலும் மிகச் சிறந்தது** என்னும் உண்மை எனக்குத் தெற்றென விளங்கிற்று.

“கற்பின் சிரோமணியே! எல்லாம் சிவபெருமானின் செயல்! அவரே நமக்கு எல்லாவிதமான இன்பங்களையும் கொடுத்தருள்கிறார். நேர்ந்ததை மகிழ்ச்சியோடு அனுபவிக்க வேண்டுவது நம் கடமை!” என்றேன் நான்.

“பதியே, திருவள்ளுவர் நூற்றி இருபத்தேழாம் அதிகாரத்தில், ஏழாவது பாட்டைச் சொல்கிறாரே, அதற்கென்ன பொருள்?” என்றாள் ஜனககுமாரி.

ஞாபக மறதியில் சிறிதுநேரம் நான் மௌனமா யிருந்தேன்.

"நினைவுக்கு வரவில்லையா? ஆம். ஆங்கில பாஷையைப் பெரிதாக நினைத்து விரும்பிப் படிப்பவர்களுக்குத் தமிழோ வேறு தாய் நாட்டு மொழியோ எப்படி ஞாபகம் வரப்போகிறது?

> புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்கொல்
> கண்ணன்ன கேளிர் வரின்

இதுதான் நான் தங்களுக்கு ஞாபகப்படுத்திய பாட்டு" என்றாள் ஜனககுமாரி.

நேயர்களே, என்ன அருமையான குறிப்பு. வெறும் ஜட சொரூபங்களைக் கட்டிக் கொண்டு வாழ்வதைவிட ஒன்றுவது ஆச்ரயத்தை வகிப்பது நலம். அல்லது ஜனகத்தைப் போன்ற இனிய குணங்கள் வாய்ந்த சிறந்த பெண்மணிகளை மனைவியாகப் பெற வேண்டுமென்று உங்களுக்குத் தோன்றவில்லையா?

நான் மேற்கண்ட குறள்மணிக்கு எப்படி அர்த்தம் சொல்லப் போகிறேன் தெரியுமா? ஹூம், சொல்லவே முடியாது. உங்களிடம் சொல்லவே மாட்டேன். ஏனெனில், அதுதான் சிதம்பர ரகசியம்.

"கண்மணி! ஜனகம், என்னைவிடச் சிறந்த பூஜாபலனைச் செய்தவனே கிடையாது. ஆனந்தத்தின் சிகரத்தில் கொடி கட்டி ஜெயங்கொண்ட பிரதாப வீரன் நான் ஒருவன்தான்! உன்னிடம் நான் பெறக்கூடிய சுதந்தரத்துக்கு எவ்வளவு சிரமத்தைமேற்கொண்டிருக்கிறேன் என்பது எனக்கும் கடவுளுக்குந்தான் தெரியும். சப்தலோகங்களிலும் நிகரில்லாத கற்பின் திலகமாகிய நீ எனது மனைவி! எனது மனைவியிடத்தில் நான் பெறக்கூடிய சுதந்தரத்தை இழந்திருந்தேன். அந்தச் சுதந்தரத்தை யடையவே இவ்வளவு கஷ்டமாயிருக்கிற தென்றால், முப்பத்தாறு கோடி ஜனங்களும் இழந்திருக்கும் சுதந்தரத்தைப் பெறுவதென்றால் எவ்வளவு கஷ்டங்களை மேற்கொள்ள வேண்டும்!" என்றேன் நான்.

"பதியே! தாங்களே சிறந்த தேச பக்தர்! இந்தச் சயனக்கிரகத்தில் கூடத் தங்களுக்குத் தேசத்தின் பாசம் குமுறுகின்றதே! இத்தகைய சிறந்த தேசப் பற்றுள்ள மார்பிலே வெற்றிமாலை இல்லாவிட்டாலும் ஒரு ரோஜா மாலையாவது போட வேண்டுமே!" என்று சொல்லி எழுந்து சுவரில் மாட்டியிருந்த அழகிய ரோஜா மாலை யொன்றை எடுத்துவந்து எனது கழுத்தில் போட்டுவிட்டு, கரைபுரண்ட கங்கையின் பிரவாகம் போலப் பொங்கியெழும் காதல் நிறைந்த கண்களால் என்னை நீண்டு அன்போடு நோக்கிப் புன்னகை பூத்தாள்.

இன்பத்திற்கு இன்ப முண்டானால், அதை அனுபவித்து சொன்னவன் என்னைத் தவிர வேறிருக்க முடியாதென்பதை வற்புறுத்திச் சொல்கின்றேன்.

"காதலி! வாய்ப்பதற்கரிய இனிய நாயகி! அந்த அமிர்த பானத்தைக் கொஞ்சம் சொரிய மாட்டாயா?" என்று என் மனைவியை நான் இறுகத் தழுவி ஆலிங்கனம் செய்து அவளது வசியக் கண்களைப் பார்த்தேன்.

"அமிர்தபானமா?" என்று மதிமயங்கி அறிவு கலங்கி ஆனந்தத்தில் திளைத்திருந்த ஜனகம் கேட்டாள்.

"இதழமுதம்! இதழமுதம்!!" என்று ஐம்புலனும் ஒடுங்கி நின்ற பரமானந்த நிலையிற் கூறி ஜனகத்தினிடம் பெறத் தக்க இனிய இதழமுதத்தைப் பெற்று ஆனந்தக்கடலில் திளைத்திருந்தேன்.

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்

என்று முத்தத்தின் தன்மையைப் பற்றி நாயனார் கூறியிருக்கிற விஷயத்தை நான் இன்று பிரத்யக்ஷம் கண்டேன். முத்தம் முத்தமே!

அமிதமாக அமுதருந்தியபடியினால் ஜனகம் மதி மயங்கி ஆனந்த வாருதியில் அமிழ்ந்து எனது மார்பின் மீது துவண்டு கிடந்தாள். பஞ்சணையில் அமரச் செய்து சிரமபரிகாரம் செய்து கனிவர்க்கங்களை அவளுக்கு ஊட்டினேன்.

அன்று ஜனககுமாரி தனியே சயனத்திருக்கப் பயந்தாள் என்பதைமாத்திரம் உங்களுக்குச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். மனைவியின் பயத்தைப் போக்கி நிர்பயத்தையும் ஆனந்தப் பரவசத்தையும் வேண்டிய அளவு சமர்ப்பிக்க வேண்டுவது புருஷனின் கடமையல்லவோ? எனது நெஞ்சிற் பொங்கிக் கொண்டிருக்கும் புனிதமான எண்ணத்தைப் பூர்த்தி செய்யவே, ஜனககுமாரிக்கு ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா அந்த பயத்தை யுண்டாக்கினாரென்று நம்புகிறேன். பாசபந்தமற்ற ஜனகத்திற்கு ***பார்யா** [illegible]ண்டம் **பிரத[illegible] சய்யா** என்ற நீதிசாஸ்த்ரப் பிரயோகம் செய்யவேண்டிய அவசியம் என் பொழுதுகளில் எப்பொழுதுமே ஏற்படுவதில்லை யென்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன். ஆனந்தம் பரமானந்தம் ஆனந்தப்பரவசம் என்றெல்லாம் அடுக்கினீர்களே அதென்ன என்று என்னை கேட்கிறீர்கள்! இக்கேள்விக்கு நானோ ஜனககுமாரியோ பதில் சொல்வோமென்று நினைக்கவேண்டாம். மனைவி புருஷனிடத்திலும் புருஷன் மனைவியிடத்திலும் பிரத்யக்ஷமாகக் கேட்டுத் தெரிந்து கொண்டு அந்த ஆனந்த சாகரத்தில் நீடூழிகாலம் நீங்களும் மூழ்கி இன்பம் அடைவீராக!

சுபம்!

03:9
மறைமலை அடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY